ജ്ഞാനക്കണ്ണി ഉദയം

O-2 M5HS,N
N12
148558

369

உ

நளாகினியும், அவிஜயம்.

ஓர் நவீன நாடகம்.

ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு.

369
T-12

PUBLISHED BY

M. V. PRESS AND BOOK DEPOT

VEPERY, MADRAS.

விலை அணா 14.

1912.

Copyright Registered.

O-2MSH5,N
M12
148558

கிராமமுன்சீப்களுக்கு வேண்டிய

		ரூ.	அ.	ப.
க்ரிமினல் ரிஜிஸ்டர்	1-க்கு	0	5	0
சிவில் ரிஜிஸ்டர்	1-க்கு	0	5	0
வாலண்டர் (பாரம்)	50-க்கு	0	6	0
சிவில் பிரதிவாதி சம்மன்	100-க்கு	0	5	0
சிவில் சாட்சி சம்மன்	100-க்கு	0	5	0
கிரிமினல் சாட்சி சம்மன்	100-க்கு	0	5	0
குற்றவாளி சம்மன்	100-க்கு	0	5	0
டிக்கிரி நிறைவேற்ற ஆட்சேபனை செய்ய பிரதிவாதிக்கு நோடீசு	100-க்கு	0	5	0
வக்காலத்துநாமா	50-க்கு	0	6	0
பிரஸ்பட்டு (நிறைவேற்ற) மனுபாரம்	50-க்கு	0	6	0
ஜப்தி கட்டளை பாரம்	100-க்கு	0	5	0
பிராது பிளெயிண்டு பாரம்	50-க்கு	0	6	0
வாக்குமூல பாரம்	50-க்கு	0	6	0
சிவில் குவார்டர்லி பாரம்	50-க்கு	0	6	0
சிவில்வாதிக்கு மறுவாயிதா நோடீசு	100-க்கு	0	5	0
ஏல இஸ்தியார்	50-க்கு	0	6	0
பஞ்சாயத்து மெம்பருக்கு நோடீசு	100-க்கு	0	5	0
கிரிமினல் வாதிக்கு மறு ஈரங்கி நோடீசு	100-க்கு	0	5	0
இரசீது கைச்சாத்துப் 12 - பக்கமுள்ளது	1-க்கு	0	0	6
டிஷ " நூறுபுக் மொத்தமாகவாங்கினுல்	100-க்கு	2	8	0
பைண்டு புக்	1-க்கு	0	4	0

தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.	ப.
இரத்ந விமானம்	0	14	0
தாரு சுகாசுவம்	0	14	0
நளாகினி விஜயம்	0	14	0
உஷாபரிணயம்	0	1	0
ஹிந்துமதப் பிரசங்கம்	0	2	0
இல்லறம் நல்லதா துறவறம் நல்லதா? ...	0	1	0
நடுவேனிற் கனவு	1	0	0
நெப்போலியன் சரித்திரம்	0	2	0
நூர்ஜிகான் என்னும் டில்லி ராணியின் சரித்திரம்	0	4	0
சோமகாந்தன்	0	10	0
மோகனசுந்தரி	0	4	0
சுசீலா	0	10	0
சிபிச்சக்ரவர்த்தி	0	1	0
பத்தசந்திரிகா	0	12	0

கிரந்த புத்தகங்கள்.

யஜுர்வேத சந்தியாவந்தனம்	0	1	0
...ர்வேத அமாவாசைத் தர்ப்பணம் ...	0	1	0
...ர்வேதாந்ஹிகம்	0	6	0
ருக்வேத அமாவாசைத் தர்ப்பணம்	0	1	6
போதாயன அமாவாசைத் தர்ப்பணம் ...	0	1	0
யஜுர்வேத உபாகர்மம்	0	2	0

தமிழ்ச் சட்டங்கள்.

சகலவிவகாரமும் பலவித தஸ்தாவேஜுகளின் நகல்களடங்கிய புது விவகாரசிந்தாமணி ...	2	4	0
பெரிய ஹிந்து லா	1	8	0
ரெவினியூ லா	1	8	0
ஜில்லா உயர்ந்தது	3	0	0
ஷெடியூல் மட்டபதிப்பு	2	8	0
தேவஸ்தானம் சத்திரம்முதலிய தர்மசொத்துக்களின் ஆக்ட்	0	8	0
கர்ணம் டெக்ஸ்ட்	1	4	0
கிராமமுன்சீப் ஆக்ட்...	1	4	0
கிராமச் சுகாதாரம்	0	2	0
ஸ்டாம்பாக்ட்	0	10	0
நில ஆக்கிரமிப்பு (என்குரோச்மென்ட்) சட்டம்	0	4	0
காலநிர்ணய சட்டம்	0	8	0
ரெஜிஸ்ட்ரேஷன் சட்டம்	0	8	0
கிரிமினல் லா	2	8	0
மகம்மதியன் லா	2	4	0
ஜமீனிலுள்ள நிலங்களைப்பற்றிய சட்டம் ...	1	4	0
பினல்கோட் சட்டம்	2	8	0
டிரான்சுபர் ஆப் பிராபர்டி ஆக்ட்	0	10	0
இந்துதேசத்து கண்டிராக்ட் ஆக்ட்	1	0	0

இன்னும் அநேகவிதமான நாவல்கள் இருக்கின்றன. விலாசம் தெரிவிக்கிறவர்களுக்கு கியாட்லாக்கு இனமாய் அனுப்பப்படும்.

☞ மேற்கண்ட புஸ்தகம் அல்லது பாரங்களுக்கு தபால்சார்ஜ் பிரத்தியேகம் கொடுக்கவேண்டும்.

மதுகரவேணிவிலாசம் புஸ்தகசாலை,
கெங்காதரேசுவரர் அக்கிரகாரம்,
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

நாடகம் நெ. 3.

நளாகினி விஜயம்.

ஓர் நவீன நாடகம்.

369
1-12

இஃது

ஆர். சுப்பிரமணிய சாஸ்திரிகளால்

இயற்றிப்

பிரசுரஞ்செய்யப்பட்டது.

மதுகரவேணிவிலாசம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

1911.

இதன் விலை அணா 14.

1991
8.94.ஜி2

PRINTED AT THE M. V. PRESS, VEPERY, MADRAS.

148588
சென்னை-600 008

30 JAN 1912
MADRAS.

உ

விநாயகர் துணை.

நளாங்கினி விஜயம்.

முகவுரை.

0-2 MSH 5,11 112

கதையின் வரலாறு.

இப்பூமண்டலத்தின்கண் மிக நீர்வளம் நிலவளம் குடிவளம் பயிர்வளம் பொருந்திய காஸ்மீரதேசத் திறைவனான இந்திரவர்மன் தனது மந்திரியான சுமதியுடன் செங்கோலோச்சி தனதின்னுயிர்க் காதலியாய பத்மாவதியுடன் இல்லறம் நடாத்திவருகையில், மந்திரிக்கும் தனக்கும் புத்திரில்லாக்கவலையினால் நவீன சூழ்ச்சிசெய்து இராஜ்யத்தை மற்ற மந்திரிகள்பால் ஒப்புவித்து வனம்சென்று சாக்ஷாத் கைலைநாதரைக்குறித்து அருந்தவமியற்றுகையில் அத்தவத்திற்கிரங்கி காளகண்டன் கருத்துவந்து அரசனுக்கு ஓர்பெண்மகவும் மந்திரிக்கோர் ஆண்மகவும் உதிக்குமென ஓதிக்கரைய, அரசனும் மந்திரியும் சந்தோஷத்தோடு இராஜ்யம் நன்னறி மிகுந்த பக்தியுடன் காலங்கழிப்ப, சந்திரசேகரனருளினால் அரசனுக்கு ஓர் பெண்ணும் மந்திரிக்கோர் புத்திரனும் உண்டாக, அரசன் சந்தோஷித்து தன் பெண்ணுக்கு நளாங்கினியென்றும் மந்திரிகுமாரனுக்கு சுந்தராங்கன் என்னும் பெயரும்வைத்து நாளொருமேனியாக வளர்ப்புழி இருமதலையரும் ஐந்துபருவத்தினராக, அரசனும் அமைச்சனும் யோசனைபுரிந்து அந்நகரத்தில் கல்வியில் தேர்ந்துள்ள விசுவநாத சாஸ்திரி என்னும் உபாத்தியாயரிடம் கல்விபயில அவர்களை ஒப்புவித்தனர்.

அரசிளங்குமரியும் மந்திரியின் மைந்தனும் மிக நேயம் பாராட்டி கற்றுவருகையில் இருவரும் தக்க பருவத்தாராயினதாலும் கல்வியில் தேர்ச்சியடைந்ததாலும் அரசனானவர் குலாசாரப்படி தன் குமாரத்தியை நூதனமாகிய ஓர் அந்தப்புரத்திலிருத்த, மந்திரி குமாரன் இராஜகுமரியின் பிரிவாற்றாது தன் அன்புள்ள தாதிமூலமாய் இராஜகுமரிக்கு லிகிதம் ஒன்று வரைந்தனுப்ப, அன்னவளும் மந்திரிகுமாரனது வியோகதுக்கமுற்றவளாகையால் லிகிதத்தை கண்டவுடன் மந்திரி மைந்தனுக்கு பதில்லிகிதமனுப்ப, அதையுணர்ந்த மந்திரிமைந்தன் லிகிதத்தில் கண்டவண்ணம் குறிப்பிட்ட அந்தரங்கஸ்தானத்தில் இருவரும் சந்தித்து உரையாடி இருவரும் சேர்ந்து நகரத்தைவிட்டு நீங்கக்காலம் ஏற்படுத்திக்கொண்டு, அவ்விதமாகவே அன்று இரவு பதினொன்றுநாழிகைக்குமேல் இருவரும் சேர்ந்து நகர்நீங்கி காடுமார்க்கஞ்சென்று, மறுநாள் உதயத்தில் அவ்வனத்திலுள்ள தடாகத்தில் பசியாற்றிக் கொண்டு இருவரும் காந்தருவமாகக்கூடி, பின் அரசகுமரி வழிநடந்த சிரமத்தால் களைப்புற்று மந்திரிகுமாரன் மடியில் தலைவைத்து சயனித்துத்துயில, அக்காலையில் அவ்வனத்தில் உள்ள புலியொன்று மடியில் படுத்திருக்கும் அரசகுமரிமீது பாய பதுங்கும் திறனறிந்த மந்திரிகுமாரன் அன்னவளது அனந்தலெழுப்பாது மெதுவாக தலைக்குபரமாய் மணலைக்குவித்து மடிமீதிருந்த தலையை அதன்மீதிருத்தி தனதுடைவாளை உருவி அம்மிருகத்தை வதைக்கச்செல்ல, அம்மிருகம் மந்திரிமைந்தனைக் கண்டதும் ஓட ஆரம்பித்ததால் அதை துரத்திச்செல்ல, அப்புலியானது வெகுதூரஞ்சென்று பின் மந்திரிகுமாரனால்வதைப்பட, உடன் மந்திரிமதலை திரும்பி தன் நாயகிபால் வருவதற்கு வழிதெரியாமல் காடெல்லாம் காலயர்ந்துபோக நடந்து துக்கித்து இனி தனதின்பநாயகியைக்காண இயலாதென அவ்வனத்தின்கண் அன்று இரவை வருத்தமா

ய்ப்போக்கி மறுநாளும் தேடிக்காணாது அயர்ந்து இப்பிரபஞ்ச ஆசையை ஒழித்து காவிவஸ்திரந்தரித்து தேசாடனம் செய்யச் சென்றனன்.

வனத்தில் சயனித்திருந்த அரசகுமரியெழுந்து தனது நாயகனைக்காணாது தியங்கி மயங்கி தனது புத்திகோசரத்தால் வியோகத்தை உணர்ந்து தன்னகர்செல்ல மனமிலாது, தன் நாயகனது உடுப்பையெடுத்து தான்தரித்துக்கொண்டு ஆண்பிள்ளைபோல் உருமாறி குதிரையேறி மனஞ்சென்றவழி பரிநடத்திச்செல்லும் அமையத்து, குச்சரதேசத்தரசன் மகனான வசுந்தரனும் அவனது தோழனும் மந்திரிகுமாரனுமான மித்திராவசு என்பவனும் சேர்ந்து அவ்வனத்தில் வேட்டைக்குவந்தவர் ஆண் உடையோடிருக்கும் நளாகினியைக்கண்டு ஒருவருக்கு ஒருவர் ஆண் பெண்ணென்று தர்க்கித்து சமீபத்தில் இருவருஞ்சென்று வரும்புரவியை நிறுத்தி "யாரென" வினவ, அதற்கு மாறுவேஷம்பூண்ட நளாகினி தான் மகததேசத்து அரசன்மகன் என்றும் தனதுபெயர் வீரசுந்தரன் என்றும் தான் தேசாடனஞ்செய்யச் செல்வதாயும் புகல, அதில் அரசகுமாரன்மட்டில் பெண் எனவே நிச்சயஞ்செய்து காமுகனாகி பலாத்காரம்செய்யில் புருடனாக இருப்பின் நிராநிந்தைக்கிடமாவதுமன்றி அவமானமும் கிடைக்கும், ஆகையால் நகரத்துக்கழைத்துச்சென்று எவ்விதமேனும் பரீட்சித்தறியலாமென துணிவுகொண்டு பெயர் வேறுகொண்ட நளாகினியுடன் இதமொழிபகறி தன்னாட்டிற்குவரவேண்டினதால் அவள் சம்மதிக்க, மூவருமாக தனது நாட்டிற்சென்று நளாகினியை நூதன அரண்மனையிலிருத்தி சகல சவுக்கியங்களையும் செய்துவந்து ஒருநாள் தனது குருவின் மாதாவான நாகம்மாள் என்னும் விப்பிர ஸ்திரீயை அரசகுமாரன் வணங்கி தன் மனதிலுள்ள சந்தேகத்தை தெரிவிக்க, அன்னவள் மொழிந்த சூழ்ச்சியின்படி நீராடவேண்டியும் நளாகினி மறுக்க, வேட்

டைக்கு நாளை செல்வோமென அரசகுமரன் புகல அதற்கு நளாகினி ஒத்துக்கொண்டு இரவில் வனம்சென்று அவ்வனத்திலுள்ள வேடர்களுக்கெல்லாம் மேன்மையான பரிசளித்து அன்னவர்களுடன் வேட்டையாடி மிருகங்களை வதைத்து, அடுத்தநாள் அரசகுமரன்பால்மொழிந்தான். பின் அரசகுமரன் சில நடனமாதர்களை அழைத்து தானும் மந்திரிகுமாரனும் தனது நூதன நண்பனான நளாகினியும் இருந்து நர்த்தனகானங்களைக்கேட்டு அகமகிழ்ந்து சயனிக்கச்செல்லும் அமையத்து, அரசகுமாரன் மிக வனப்புடைய ஓர் நடனமாதை நளாகினிபால் சயனிக்க அனுப்ப, அன்னவள்வந்து நளாகினியைப் பணிந்து தனது காமவிடாய் தணிக்கவேண்ட, நளாகினி யோசனைபுரிந்து அன்னவளை குளிர்ந்த பார்வையினாலும் சாதுர்ய மொழிகளாலும் ஏமாற்றி தனது ஆபரணங்களையெல்லாம் அளித்து அரசகுமாரன் கேட்கில் அணைந்ததாக நிச்சயமாய் தெரிவிக்கும்படி பணித்தனுப்ப, அரசகுமாரன் மறுநாள்காலையில் அம்மாதை வினவ அவள் ஒரு போக்காக மொழிய, மறுபடி அரசன் நளாகினியை மதுபானம் செய்ய அழைக்க நல்லதென ஒப்புக்கொள்ள எல்லோரும் அன்று இரவு மதுபானம்செய்கையில் இராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் மிகக்குடித்து மயக்கம்கொள்ள நளாகினி சாப்பிடுவது போல் பாவனைசெய்து குடியாமலிருந்ததினால் மயக்கமிலாது இருந்து அவர்கள் மயக்கம்கொண்டவுடன் அவர்களில் அரசகுமாரனது ஒருபக்கத்து மீசையையும் மந்திரிகுமாரனது குடுமியையும் அறுத்துக்கொண்டு ஒருவருமறியாமல் குதிரையேறி சிந்துநாட்டிற்குச்சென்று அங்குள்ள ஓர் விப்பிர ஸ்திரீயின் வீட்டில் தங்கி அதைவிட்டுப்போக மனமில்லாது அந்நகரத்தின் கடைவீதியில் ஓர் கடையொன்றுவைத்து வியாபாரம்செய்துகொண்டிருந்தாள்.

MADRAS

இப்படியிருக்க அந்நாட்டரசன் மகள் இந்திரலேகையென்பவள் தனதுசகிமார்களுடன் ஸ்நானஞ்செய்யச் சென்றவள்கடைவைத்திருக்கும் நளாகினியைக் கண்ணுற்று ஆடவனென ஆவல்கொண்டு தனது அந்தப்புரம்சென்று காமவிகாரம்கொள்ள, தாதிமார் களைப்பையகற்றிகாரணம் வினவ, இந்திரலேகை தான் ஸ்நானம்செய்யப்போனதாகவும் அவ்விடத்தில் கடைவைத்திருந்த சுந்திராங்கனைக்கண்டாவல் கொண்டதாகவும் அதுமுதல் தன்மனம் ஊசலாடுவதாயும் தான் கண்ட சுந்தராங்கனை விவாகம்செய்விக்கிறவரையில் தன்மனம் ஒன்றிலும் நாட்டம்கொள்ளாதென்றும், அப்படியே விவாகம் செய்விக்காவிடில் தன்னுயிர் நீப்பதுண்மையென்றும் புகன்றாள். தாதியர் அம்மொழியை அரசன்பால் பகர அரசன் மந்திரியோடும் தனதுநாயகியோடும் ஆலோசித்து முடிவில் அந்த நளாகினியை அழைத்துவந்து அவளது மனவிருப்பத்தின்படி மணஞ்செய்வித்து அந்தப்புரம் அனுப்ப, அன்றிரவு இந்திரலேகை மன்மததாபத்தால் மயங்கிநிற்க, நளாகினியானவள் தனது புத்திகோசரத்தால் எவ்வளவோ சொல்லியும் கேளாது மறுக்க, பின் நளாகினி தனது சாதுரியவசனத்தாலவள்மனதைத் தேற்றி தான் சொல்லப்புகும் காரியத்தை வெளியிடலாகாதென பிரமாணம்செய்வித்து தனது பூர்வோத்திரங்களை மொழிந்து தன் நாயகரது வரவை எதிர்பார்த்திருப்பதாகவும் அதுவரை நீயும் எந்தனைப்போல் ஜாக்கிருதையாய் இருக்கப்பணித்து தன்னுடைய பிரத்தியக்ஷ சுவரூபத்தைக்காட்டி அவள் மனதை தன்பால் திருப்பி சந்தோஷப்படுத்தி அந்நாட்டில் சுகமாயிருக்கையில், அது காலைசபைக்கு எழுந்தருளிய அத்திரிமகாருஷியினது வாக்கியப்படி அரசன் தன் மருமகனாகிய நளாகினிக்கு முடிசூட்டி தானும் தன் மனைவியும் வானப்பிரஸ்தாசிரமம் வகித்து வனம்செல்ல, புதிய அரசன் பகற்பொழுதெல்லாம் சிம்மாதனத்திருந்து

இராக்காலத்தில் ஒருவருமறியாது இந்திரலேகையுடன் அந்நகர்ப்புறத்துள்ள உத்தியான வனம்சென்று அவ்விடமுள்ள மண்டபத்தில்வீற்றிருந்து தங்கள் நாயகன் இதுகாறும் வாராத விஷயத்தைப்பற்றி துக்கிப்பதும் பகலில் சிம்மாசனாதிபதியாக இருந்து அரசியற்றுவதுமாய் இருக்கையில், ஒருநாள் இரவில் அவ்வுத்தியானவனம்சென்று துயரடைந்திருக்கையில், அவண் மந்திரிகுமாரனான சுந்தராங்கன் தான் தரித்த வைராகிவேஷத்தோடு அவ்வுத்தியானவனம் வந்திருக்க அன்னவரைக்கண்ணுற்ற இராஜவேடம்புனைந்த நளாகினியும் அவரது பத்தினியான இந்திரலேகையும் பணிந்து தாம் யாது காரணம்பற்றி இவண் வந்ததென வினவ, தான் ஒரு கொடியைத் தேடிவந்ததாக தெரிவிக்க அவரது வார்த்தையாலும் அங்கலக்ஷணத்தாலும் நளாகினி தனது நாயகரென உணர்ந்து அந்நந்தவன காவற்காரர்களை அழைத்து அப்பைராகியை மந்திரிவசம் ஒப்புவித்து இவரை நன்றாயலங்கரித்து தனது அந்தப்புரத்துக்கு அழைத்துவரும்படி யான் தெரிவித்ததாக தெரிவிப்பாயெனப்பணித்து, பெரியவரே! தாம் நாடிவந்த கொடி இந்நகரில்கிடைக்கும் இந்தகாவலன்பின் சென்று அவன் சொற்படிகேளுமெனப் பகர்ந்தனுப்பி, இந்திரலேகையைப்பார்த்து நாளைய தினம் நீ ஸ்நானம்செய்து மணக்கோலம்போல் அலங்கரித்துக்கொள், நீ எந்தனை எவ்வெண்ணத்தால் விவாகம்செய்யக்கருதினையோ அவ்வெண்ணம் நாளை இரவு நிறைவேறுமெனத்தெரிவித்து, அன்று மறுநாள் பகற்பொழுதையெல்லாம் கழித்து இரவுவந்தவுடன் தனது அந்தப்புரத்தில் இந்திரலேகையுடனிருக்க, அவண் மந்திரியானவர் சுந்தராங்கனை இராஜகோலத்தோடழைத்து வந்துவிட்டுவிடைபெற்றுச்செல்ல, உடனே அவருக்கு நளாகினியும் இந்திரலேகையும் பணிய, அன்னவர்களை அவராசீர்வதித்திருக்க, நளாகினி அன்னவரது பூர்வோத்திரத்தை வினவி தன் நாயகர் என

உணர்ந்து துக்கித்து அன்னவர்பாதத்தில்விழுந்து துயருற்று, பின் தன்வேடத்தைமாற்றி சுயரூபத்துடன் வந்திக்க, சுந்தராங்கன் நிகழ்ந்தவற்றை வினவி சந்தோஷங்கொண்டு இந்திரலேகையின் விர்த்தாந்தத்தையும் உணர்ந்து எல்லோரும் அன்றிரவு சுகித்திருந்தனர்.

பின்னர் உதயத்திலெழுந்து அரசவேடம்பூண்டு சுந்தராங்கனையும் அழைத்துக்கொண்டு இந்திரலேகையுடன்கூட சிம்மாதனம் நண்ணி மந்திரி குடிகள் முதலானவர்களைத்தருவித்து சாதுரியமாக சுந்தராங்கனை அரசனாக்க மொழிந்து தன் வரலாற்றையும் மொழிந்து எல்லோருடைய சமாதானத்தின்பேரில் சுந்தராங்கனுக்கு முடிசூட்டி பின் அவ்வரசை மந்திரிபால் ஒப்புவித்து விடைபெற்று மூவருமாக சில சைனியங்களுடன் காஸ்மீரதேசம்வர, இதற்குமுன்னமேயே அந்நகரத்தரசனும் மந்திரியும் தன் புத்திரி புத்திரன் முதலியோரது வியோகத்தால் துயரடைந்திருந்தவர்கள் இவர்களது வரவை கேட்டு எதிர்சென்றழைத்துவந்து வரலாறுகளை வினவி சுபமுகூர்த்தத்தில் சுந்தராங்கனுக்கு நளாகினியையும் இந்திரலேகையையும் மந்திர பூர்வமாக விவாகம்செய்வித்தலோடு சுபமாக நாடகம் முடிகின்றது.

இந்நாடக பாத்திரங்கள்.

புருஷர்கள்.

இந்திரவர்மன்.—காஸ்மீர தேசத்தரசன் - நாளாகினியின் தகப்பன்.

சுமதி.—ஷை அரசனது மந்திரி - சுந்தராங்கனின் தகப்பன்.

சுந்தராங்கன்.—இந்நாடகத்தலைவன்.

விசுவநாதசாஸ்திரி.—உபாத்தியாயர் - நளாகினிக்கும் சுந்தராங்கனுக்கும் கற்பித்த குரு.

வசுந்தரன்.—குச்சர தேசத்தரசன் மகன்.

மித்திராவசு.—ஷை தேசத்து மந்திரி குமாரன்.

விவேகசாதுரியன்.—சிந்து நாட்டரசன் - இந்திரலேகையின் தகப்பன்.

அத்திரி.—ஓர் மகாருஷி - விவேகசாதுரியனுக்கு உபதேசம் செய்தவர்.

திடவான்.—சிந்துநாட்டரசனின் மந்திரி.

வீரசுந்திரன்.—நளாகினியின் மறு பெயர்.

ஸ்தீரீகள்.

பத்மாக்ஷி.—காஸ்மீர தேசத்தரசன் மனைவி - நளாகினியின் தாய்.

சுகுணவதி.—சிந்து நாட்டரசன் மனைவி - இந்திரலேகையின் தாய்.

நளாகினி.—காஸ்மீர தேசத்தரசன் மகள் - சுந்தராங்கனின் மனைவி. இந்நாடகத்தின் தலைவி.

விலாஸவதி
மந்தகமலு } தாஸிகள்.

சந்திரவதனு
நீலாயதாக்ஷி } குச்சரநாட்டிலுள்ள விலைமாதர்கள்.

இந்திராவதி.—நளாகினியின் சகி.

நாகம்மாள்.—குச்சரநாட்டிலுள்ள ஓர் வீப்பிரஸ்திரீ.

மீனாட்சி.—சிந்து நாட்டிலுள்ள ஓர் சோற்றுக்கடை வைத்திருப்பவள்.

இந்திரலேகை.—சிந்து நாட்டரசன் மகள் - சுந்தராங்கனின் இளையமனைவி.

மதிவதனு.—மேற்படியாளின் சகி.

இந்நாடகத்தின் இடையேவருபவர்கள் வேட்டைக்காரர், நந்தவனகாவற்காரர், பரமசிவம், பைராகி.

நாடகம் நிகழ்ந்தவிடம்.

காஸ்மீரதேசத்திலும் அந்நகர் புரத்துள்ள காட்டிலும் குச்சரநாட்டிலும் சிந்துநாட்டிலும் அந்நாட்டின் வெளிப்புறத்துள்ள உத்தியானவனத்திலும்.

நளாகினி விஜயம்.

பிரஸ்தாவனை.

நாந்தி.

சூத்திரதார் பிரவேசம்.

గో గజవాహన భోజన భక్షాత్ ఉద్భవ పక్షవిపక్షజ శత్రోః ।
వాహనవైరికృతాసన జుష్టా మామిహ పాతు జగత్రయ తుష్టా ॥

கோகஜவ்ாகன போஜன பக்ஷாத்
உத்பவ பக்ஷவிபக்ஷஜ சத்ரொ:
வாஹந வைரிக்ருதாஸநஜுஷ்டா
மாமிஹபாது ஜகத்ரய துஷ்டா.

என்ற சுலோகத்தை படனஞ்செய்துகொண்டு சூத்திரதாரன் பிரவேசம்.

சூத்திரதாரன். — யாம் இச்சபைபோன்ற பல சபைகளில் அநேகநாடகங்களை பாத்திரரூபமாக காட்ட அதைக் கண்ணுற்ற சபையோர்கள் ஆனந்தங்கொண்டனரென்று நமக்குத்தெரியுமாயினும் இன்று நவீனமான ஓர் நாடகத்தால் அவையிலுள்ளவரது அகமகிழ்விக்க விருப்புற்றனன். ஆயின், அவ்விஷயத்தைப்பற்றி நமது நாயகியுடன் சூழ்ச்சி செய்து ஒரு நவீனஏற்பாடு செய்வோம்.

ஆரியே. சிறிதிவண் வருதி

நடி.—ஆர்யா! தாம் என்தனை யழைத்தகாரணம் யாது?

சூத்திரதாரன்.—ஆரியே! இன்று நமது ரங்கஸ்தலத்தையும் அவண் கண்ணமர்ந்த அவையோர்களையும் அவலோகனம் செய். ஏதோ புதுமையை விரும்புவதாகத் தோற்றவில்லையா. ஆகையால் அன்னவர்களை சந்தோஷிப்பிக்க ஓர்

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS

நவீனநாடகம் நிரூபணம்செய்யக்கருத்துவந்து நின்னிடம் ஆலோசிப்ப இவணழைத்தனன்.

நடி.—ஆர்யா! இதற்கு யோசனையேன், இது விஷயத்தைப்பற்றி முன்னரே நீரும் நானும் சூழ்ச்சி செய்து சுப்பிரமணியசாஸ்திரியாரால் நிரூபணம் செய்யப்பெற்ற "நளாகினி விஜயம்" என்ற ஓர் சரித்திரத்தை இன்று இவண் நிரூபணம் செய்யலாகாவோ.

சூத்திரதார்.—ஆரியே! நல்ல சமயத்தில் ஞாபகப்படுத்தினாய்; அவர் எப்பேர்ப்பட்டவர் தெரிவாயோ (பாடுதல்)

கன்னலோங்கக் காவிரியாய் கிருஷ்ணராயப் பதிவதிந்தோன்,
நன்னயஞ்சேர் ராமையர் நற்றவத்தாலீன்ற தர்மபுத்திரன்,
இன்னலில் குணமுடையோன் ஏற்றவற் கீயும்வள்ளல்,
சொன்னயமுட னவின்றனன் சுப்பிரமணிய சாஸ்திரியாரம்மா.

ஆகையால் அன்னவரால் இயற்றப்பெற்ற "நளாகினிவிஜயம் என்னும் நாடகம் சிறப்புற்றதே, அதை இன்று இவண் நிரூபணம் செய்யலாகும்; நீ துரிதமாக நேபத்தியத்திலிருந்து கொண்டு பாத்திரங்களை தயாரித்து கானம் செய், நான் இதோ வருகின்றேன்.

நடி.—ஆர்யா! அவணுருக செல்கின்றேன்.

(நடிநிட்கிரமித்தல்.)

சூத்திரதார்.—அன்பர்காள்! இன்று யான் நிரூபணம் செய்யப்புகும் நாடகம் :நவரஸாலங்காரத்துடனாகியது. அதற்கு என்னிடம் அஷ்டரஸங்கள் இருக்கிறது. ஹாசிய ரஸம் ஒன்று குறைவாயிருக்கிறது ஆகையால், ஹாசியபுருஷனையெதிர்பார்க்கிறேன்.

விதூஷகன்.—ஆஹா! யானே இவண் வருகையில் இந்தவிடமானது நிரம்ப மனோகரமாய் தோற்றப்படுகிறது; யாதெ

னப்பார்ப்போம். இவ்விடம் யாரோ ஒரு புருஷோத்தமர் நிற்கிறார், அவரை வந்திப்போம், அகம் விதூஷகன் நமோநம:

சூத்திரதாரர்.—மித்திரா நமோநம:

விதூஷகன்.—எது தாம் இவ்விடம் விஜயம்செய்தது?

சூத்திரதாரர்.—நண்பா! இவண் ஓர் நவீனநாடகத்தை இத்தினம் நிரூபணம்செய்வதாக ஆரம்பித்ததில் நவரஸபரிதமான நாடகத்தில் அஷ்டரஸங்கள் என்னிடம் நிறைந்துளது; ஹாஸ்யரஸம் ஒன்று குறைந்ததினால் நின்னைபிரார்த்தித்தனன். ஆகையால் இன்று நடத்தப்போகும் நளாகினிவிஜயம் என்னும் நவீனநாடகத்துள் குறைவுள்ள ஹாஸ்யரஸத்தை நீ சம்பூர்ணம் செய்வாயென நினைக்கின்றேன்.

விதூஷகன்.—பூஜியரே! தமது நோக்கத்தின்வண்ணம் நடக்க சித்தமாயிருக்கிறேன், கதையின் பிரதம ஆரம்பத்தை தெரிவிக்கக்கோருகின்றனன்.

சூத்திரதாரர்.—மித்திரா! பிரதமத்தில் காஸ்மீர தேசாதிபதியான இந்திரவர்மன் தன் மந்திரியான சுமதியுடன் இராஜிய விசாரணைசெய்து பின் புத்திரனில்லாக் குறையால் கவலையுற்று தவம்செய்யப்புகும் சமயமாகையால் நீ இவணிருந்து காலமறிந்து ஹாசியரஸ சம்பூர்ணம்செய்துகொண்டு ஜாக்கிரதையாக இரு. வேண்டிய சமயங்களில் யான் உனக்கு சந்தேக நிவர்த்திசெய்கின்றேன்.

விதூஷகன்.—அப்படியே.

(சூத்திரதாரர் நிட்கிரமித்தல்.)

முதல் அங்கம்.

முதற்களம்.

இடம்—இந்திரவர்மன் சபாமண்டபம்.

பாத்திரங்கள்—இராஜன் - மந்திரி.

இந்திரவர்மன்.—சேவகா! யான் இவண்வந்து வெகுநேரமாகியும் ஏன் இன்னம் அமாத்திய சிரேஷ்டர் வரவில்லை. சீக்கிரஞ் சென்றழைத்துவா.

சேவகன்.—ஆக்ஞா மகாராஜ்.

சுமதி.—சேவகா! நமதரச சமுகம் எவ்விதமிருக்கிறது.

சேவகன்.—தங்களது வரவையே எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

சுமதி.—இராஜசிம்மமே! அமாத்தியன், வந்தனம் செய்கிறேன்.

இந்திரவர்மன். — கல்யாணம்பவது. அமைச்சரேறே! வீற்றிரும். தாம் இதுகாறும் தாமதமான காரணம் யாது?

சுமதி.—பூபாலா! பார்த்திபர் பகுதியளிக்கும் காலமின்றாகையால், அவற்றை விசாரித்தும், இராஜாங்க விஷயத்தில் குடிகளின் இருப்பை கிஞ்சித்து விசாரிக்கும் துறையிலிருந்தமையாலும் சுவல்ப காலஹரணமாயிற்று, மன்னிக்கவேண்டுகின்றேன்.

இந்திரவர்மன்.—நல்லது மந்திரி! உலகில் "நாவிஷ்ணு பிருதுவிபதி" என்ற சுருதிவாக்கியப்பிரகாரம் விஷ்ணு அம்சத்தையடைந்து பிர்ம்மாவின் புஜத்தினின்றும் உண்டானவர்களாகிய க்ஷத்திரியர்கள், ஓர் நாட்டிற்கரசனுகி ஒற்றைக்கொடை, வெற்றிக்கொடி, ஜயமுரசு, மங்கலவாத்தியம், துஸ்ஸரமாகியபடை, விஸ்தாரமாகியகுடி, செழிப்பாகியபயிர், நீதி

தெரிந்த மந்திரி, சேதியறிந்த தந்திரி, மீதிலுயர்ந்த மதில், செடிநிறைந்தசைலம், வெற்றிமாலை, வேலாயுதம், கரி, பரி, தேர், காலாள், முதலியவைகளைகொண்டு மாநீதியாக இராஜ்யபரிபாலனம் செய்யவேண்டுமன்றோ. ஆகையாலும் "வானோக்கிவாழு முலகெலாங் கோனோக்கிவாழுங்குடி." என்னு முதுரை நீதியின்படி இவ்வுலகமெலாம் வானத்தைப்பார்த்திருக்கின்றது. ஏனெனில் "விசும்பிற்றுளி வீழினல்லால் மற்றாங்கே பசும்புற்றலை காண்பரிது" என்றபடி, ஆகாயத்திலிருந்து ஒரு மழைத்துளியாவது பூமியில் விழாவிடின் பூமியில் பசுமையானபுற்களின் தலையைக் காண்பரிது. ஆனதால் பூமியானது மழைக்காக வானத்தைப்பார்ப்பதும் பூமியிலுள்ள குடிகள் அரசனை எதிர்பார்ப்பதும் இயல்பு. ஏனெனில், அரசன் நன்னீதிவானாயின் தன்னரசுக்கு கீழ்ப்பட்ட குடிகளில் முதல்வர்ணாசிரமத்தாராகிய பிராமணோத்தமர்கள் தங்களது கர்மானுஷ்டானங்களில் தவறாமலும், உத்தம யக்ஞங்களைச்செய்வதினால் அமரேசன் அகமகிழ்ந்து மேகங்களுக்கு கருணையுடனாக்ஞையளிக்க அதன்படி மேகங்கள் பூமியில் வருஷித்து, குடிகளினது பயிர் நன்றாய் செழித்து வளர்ந்து பலன்தருகின்றது. ஆகையால் அவ்விப்பிரசிரேஷ்டர்கள் இயற்றும் யாகாதி கிருத்தியங்களுக்கிடையூறிலாது பாதுகாப்பது அரசனது கடமை. ஆகையால், நமது நகரத்திலுள்ள நான்குவர்ணாசிரமத்தார்களும் அவரவர்கள் கர்மானுஷ்டானங்களில் கிஞ்சித்தும் தவறாதிருக்கின்றனரா.

சுமதி.—அண்ணலே! அவனியில் அரசரெனப் பெயர்பெற்றவர் ஒன்றாகிய கடவுளினது திருவடியை மனதினிருத்தி, இம்மை மறுமை என்னும் இரண்டினது தன்மையுணர்ந்து, சாத்துவீக ராஜஸ தாமஸமென்னும் முக்குணங்களில் நன்னிலைகணின்ற சாத்துவீகத்தன்மையை அதிகமாகக்கொண்டு சாம. கான பேத தண்டமென்கிற சதுர்வித உபாயத்தையும்

அறம் - பொருள் - இன்பம் வீடென்னும் நால்வகைப்பொருளையுமறிந்து மந்திரிகள் - புரோகிதர் சேனாதிபதியர், தூதர், சாரணர், என்னும் அரசர்க்குப் பொருந்திய கூட்டம் ஐந்தையும்பெற்று, படை-குடி-பொருள் - அமைச்சு - நட்பு - அரண் என்னும் அறுவகைப்பொருளையும் தேர்ந்து, நாவல் - இறலி-குசை கிரவுஞ்சம் - புஷ்கரம் - சாகம் - சால்மலீகம் மென்று சொல்லக்கூடிய சப்ததீவுகளும் தன்னாணையில் நடக்க, இராஜாங்கம் - மக்கள்சுற்றம் - பொன் - மணி - நெல் - வாகனம்- அடிமை என்னும் அஷ்ட ஐசுவரியத்தையும்பெற்று, கீழ்விதேகம் - தென்விதேகம் - மேல்விதேகம் - வடவிதேகம் - கீழ்விரேபதம் - தென்விரேபதம் - மேல்விரேபதம் - வடவிரேபதம். மத்திமகண்டம் என்னும் நவகண்டத்திற்கும் அதிபதியாகி செங்கோல் - மலை - ஊர் - நாடு - மாலை - யானை - புரவி - அரசு - கொடி - அரண்-என்னும் தேசாங்கத்தையும் வகித்து, கங்கை - யமுனை - சரஸ்வதி கோதாவரி - சிந்து - கிருஷ்ணா- காவேரி - பிரபாகை - சரயு - வேதவதி - பிரயசம் முதலிய பதினொரு திவ்விய நதிகளிலும் ஸ்நானம்செய்து அவற்றின் கரைகளில் அன்னசத்திரமியற்றி சோடசமகாதானத்தையும் செய்து தர்மதேவதை நான்குபாதத்தில் நடக்க மாதம் மும்மாரிபொழிய மனுநீதிமுறை குன்றாது செங்கோலோச்சும் தமது மகிமையினால் (బ్రాహ్మణోऽస్య ముఖమాసీత్) என்ற சுருதி வாக்கியப்படி பிர்ம்மாவின் முகத்தினின்றும் உத்பவித்த பிராம்மணர்கள் தீயின்முன் ஜபமும் நெருப்பின்முன் தவமுமியற்றி கர்மானுஷ்டானதத்பரர்களாகவும், இரண்டாவது வம்சத்தாராகிய க்ஷத்திரியர் தமது ஆக்ஞைக்கு அஞ்சி கப்பம்முதலியவைகளை காலாகாலத்தளித்தும் யுத்தமுறையில் முன்வைத்தகாலை பின்வாங்காது போர்புரிந்து வெற்றிபெற்று விஜயலட்சுமியை யடைந்தும், மூன்றாவது வர்ணாசிரமத்தாராகிய வைசியர்கள் மேற்கூறிய இருவம்சத்தார்களுக்கும்

கீழ்ப்படிந்துகொள் முதலுக்குமேல் அதிகலாபம் இச்சியாமல் திராசுமுனைகோணாமல் வியாபாரம்செய்துகொண்டும், நான்காவது வர்ணாசிரமத்தார்களாகிய சூத்திரர்கள் மேற்கூறிய மூன்றுவர்ணாசிரமத்தார்களுக்கும் கீழ்ப்படிந்து பசுவினங்கள் காத்துப் பயிர்த்தொழில்புரிந்து அதில்வரும் தானியத்தை 6 பங்குசெய்து ஒருபங்கை தமக்குக் காயமாகவும் ஒருபங்கை விதைமுதலுக்கும் ஒருபங்கை தம் போஜனத்திற்கும் ஒரு பங்கை தேவதைகளுக்கும் ஒருபங்கை பிதுர்களுக்குமாக அளித்துக்கொண்டு தர்மசீலராய் நடந்துவருகிறார்கள். அன்றியும் தாமோ,

தாக்ஷிண்யம் ஸ்வஜநெ தயாபரிஜநெ
சாட்யம் ஸதா துர்ஜநெ ப்ரீதிஸாதுஜநெ
நயொநிருபஜநெ வித்வத்ஜநெ சார்ஜவம்
சௌர்யம் சத்ருஜநெ க்ஷமாகுருஜநெ
காந்தாஜநெ த்வஷ்டதா யெசைவம்
புருஷா:களாஸு குசலாஸ்தெஷ்வேவலொகஸ்திதி:

என்ற சுலோகத்தின்வண்ணம் நடப்பதால் தமது நகரத்தில் யாதொருகுறைவுமில்லை மகாராஜ்.

இந்திரவர்மன்.—அமைச்ச சாக்ஷாத் பரமாத்துமாவின் கருணையின்மையால் நாம் இருவரும் "அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி" என்னும் சுருதிப் பிரமாணத்திற்கு ஆளாகி மிக்க கவலையுற்றிருக்கிறோம் அன்றோ? அதற்கின்னது செய்வதென ஸ்திரப்படுத்துவதற்கு யாதொருவழியும் காணாது தவிக்கிறேன் என்செய்வோம்.

சுமதி.—அரசேறே! உண்மையே "புத்திரனில்லா அன்னம் புழுவுக்குச்சமம்" என்றபடி நாம் உண்ணும்போஜனமும் வீணே; "அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என்ற நீதியின்படி எவ்வளவுபொருளை அடைந்திருப்பினும் பரமாத்துமாவின் கருணை நம்மீதில்லாததால்

நமக்கு இதுகாறும் புத்திரப்பேறில்லாது பரிதவிக்கநேரிட்டது; ஆகையால் அண்ணலே! நாம் இருவரும் சாக்ஷாத் கறைக்கண்டனைக்குறித்து அரியதவமியற்றி புத்திரப்பேறடையவேண்டும்; ஆனதினால் பரமாத்துமாவைக்குறித்து தவமியற்றச் செல்வோமென எண்ணினேன், தமது கருத்து யாதோ தெரிகிலேன் மகாராஜ்.

இந்திரவர்மன்.—அமாத்தியவர்யா! தமது நாட்டத்தின்படியே தவம்செய்யச்செல்லக் கருத்துவந்தனன்; ஆகையால் யான் என் பத்தினியினது அந்தப்புரம்சென்று அன்னவளது விடைபெற்றுவருகிறேன், தாம் பிரயாணத்திற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

(இராஜன் நிட்கிரமித்தல்.)

இரண்டாவது களம்.

இடம்—அந்தப்புரம்,

பாத்திரங்கள் பத்மாக்ஷி - சகி, இராஜன்.

பத்மாக்ஷி.—சகி விலாஸவதி ஏதோ நாதர் இன்று இன்னம் வரக்காண்கிலேன், தவிர உலகத்தில் நான் எடுத்த ஜன்மம் வீணே, ஏனெனில் காலாகாலத்தில் ஓர் குழந்தையைப் பெற்று சீராட்டி பாராட்டி தாராட்டி வளர்க்கும் பாக்கியம் பெறுமலும் மக்கள் அளைந்தசோறுண்ணு பெரும்பாவியாகினேன். நாதரும் அதுவிஷயத்தைப்பற்றி இதுவரையும் கவனித்தாரில்லை, யான் என்செய்வேன்!

விலாசவதி.—அன்னையே! தமது மனதில்கொண்ட துக்கம் தீரவேண்டுவதுதான்; ஆயின், அதற்கு பரமாத்துமாவின் கருணையிருந்தாலொழிய நம்மால் செய்துகொள்ளக்கூடும் பரிகாரம் யாதுளது, அது விஷயத்தைப்பற்றி தாமும் தமது

நாதரும் துயருறுவதில் பயன்யாதொன்றுமில்லை; ஏனெனில், "அவனின்றியோரணுவும் அசையாதன்றோ" ஆகையால் துயருறாதிருப்பாய்.

(இராஜன் பிரவேசித்தல்.)

இந்திரவர்மன்.—சேவகா! நாயகியினது சமயம் எவ்வாறிருக்கிறது.

சேவகன்.—தமது வரவை எதிர்பார்த்திருக்கிறார்கள் மகராஜ்.

பத்மாக்ஷி.—காந்தா! நமஸ்கரிக்கின்றேன்.

இந்திரவர்மன்.—கல்யாணம் பவது.

(இருவரும் உட்காருதல்)

பத்மாக்ஷி.—நாதா தமது முகாரவிந்தமானது எனது அந்தப்புரம் வரும்போதெல்லாம் அலர்ந்த தாமரைமலருக்குச் சமானமாயிருக்குமே! இன்று அப்படிக்கில்லாது சந்திரனைக் கண்ட கஞ்சமலர்போலிருக்கக் காரணம் யாது?

இந்திரவர்மன்.—பிரியரமணீ! உன்யூகம் உண்மைதான். "அடுத்தது காட்டும் பளிங்குபோல் கடுத்தது காட்டும்முகம்" என்ற நீதியின்வண்ணம் நினது புத்திகூர்மையால் எனது முகவாட்டத்தை உணர்ந்தாய்; நின்னுடன்மொழியாது வேறுயாருடன் உரைக்கப்போகின்றேன் காதலி. நானும் அமைச்சருமாக இருந்து இராஜகாரியங்களைப்பற்றி ஆலோசித்திருக்கையில் "வாழையடி வாழையாய் இன்னான்மகன் இன்னானென்று" எனக்குப் பின்னிருந்தரசாள ஒருவரும் இலரேயெனும் கவலையுற்று மந்திரியுடன் சூழ்ச்சிசெய்து யானும் அவரும் தவம்செய்யச்செல்வதாய் நிச்சயம்செய்து நின்பால் விடைபெற அவாக்கொண்டு இவணடைந்தனன். காதலி! சீக்கிரம் விடையளிப்பாய்.

பத்மாக்ஷி.—நாதா! யானும் அதைப்பற்றி மிகத் துயருற்றிருந்தேன் ஆகையால் யானும்கூடவே வருகின்றேன்.

இந்திரவர்மன்.—சுவர்ணகாந்தி! ஆண்மக்கள் அருந்தவஞ் செய்யுமமையத்து அரிவையர் அருகிருப்பான் "பகர்ச்சி மடவார் பயில நோன்பாற்றல் திகழ்ச்சிபெறு நெஞ்சத் திட்பம் நிகழ்ச்சிபெறும்" என்றபடி மன உறுதியற்று தவம்கெடும் என்பதில் ஐயமிலது, அதை உணர்ந்துதான்

"நடந்தாளிக்கன்னி மாராஜகேசரி நாட்டிற்கொங்கை
குடந்தையானசைய ஒப்பிலாயதுண்டு கொற்றவரும் [லாம்
துடர்ந்தார் சன்னியாசிகள் யோகம்விட்டார் சுத்தசைவரெல்
மடந்தானடைத்துச் சிவபூசையும் கட்டிவைத்தனரே"

என்றுகூறியிருக்கிறார்; ஆகையால் எவ்விதமிருப்பினும் நீ அருகில்இருப்பின் என்மனம் அந்திவண்ணன்பாதத்து பற்றுதலில்லாதகனும்; அப்படியாயின் நாமியற்றும் தவம் அபலமாய்விடுமன்றோ! ஆனதால் கண்மணி எந்தனுக்கு விடையளித்து நீ இவணிருந்து மற்ற மந்திரிகள் மூலமாய் இராஜகாரியத்தை நீதியாய் விசாரித்துக்கொண்டு சாக்ஷாத் உமையவளை நின் மனத்திருத்தி கவுரிநோன்பியற்றிவா. அப்படியிருப்பின் லோகமாதா மனமுவந்து நினக்கும், பரமாத்மா கருணையுவந்து எந்தனுக்கும் அனுக்கிரகிப்பார்; நாயகி எனக்கு சீக்கிரமே விடையளி.

பத்மாக்ஷி.—நாதா! தாம்கூறியதுண்மையே, அவ்விதமே யானிவணிருந்துகௌரிநோன்பியற்றிவருகிறேன், தாம்வனம் சென்று தவமியற்றி அருள்பெற்று வந்தெந்தனை யாதரிக்க கோருகின்றனன்.

இந்திரவர்மன். காதலி அப்படியேயாகுக. நான் சென்று வருகின்றேன்.

(இராஜன் நிட்கிரமித்தல்.)

பத்மாக்ஷி.—சகி விலாஸவதி எனது நாதர் சந்தானத்தைவேண்டி சதாசிவத்தைக்குறித்து தவமியற்றச் சென்றனர். நானோ அன்னவரது ஆக்ஞையின்வண்ணம் கௌரி நோன்பியற்றி பிரதிதினம் நாதர் வருமளவும் அன்னவளை பூஜிக்கவேண்டும். ஆகையால் சீக்கிரஞ்சென்று பூங்காவில் பூக்கொய்து பூஜிக்கச்செல்வோம் வா.

விலாஸவதி.—தாயே தாம் முன்னே மொழிந்ததற்கு நான் விடையளித்தபடி தமது இன்ப நாயகர் தவத்திற்கேகினர். யாம்சென்று தமது விருப்பத்தின்படி மலர்கொய்வோம் வாருங்களம்மணி.

(இருவரும் நிட்கிரமித்தல்.)

மூன்றாவது களம்.

பாத்திரங்கள்—இராஜனும் மந்திரியும்.

இடம்—வனத்தின் ஓர்புறம்.

இந்திரவர்மன்.—அமாத்தியவர்யா! நாம் எனது அன்புள்ள பிரியநாகி யிடம் விடைபெற்றுவந்தனன். இனி கானகம் செல்லலாமன்றோ.

சுமதி.—அரசரேறே! தமது கருத்தின்படிநடக்க நான் தயாராக இருக்கிறேன் ஆயினும் நாம் இக்கோலத்தோடு தவமியற்றச்செல்ல எந்தனுக்கு விருப்பமில்லை, ஆகையால் முற்றுந்துறந்து மூவாசையையொழித்த முனிவரைப்போல் தவவேடம் புனைந்து செல்லவேண்டுமென நினைக்கிறேன், பின் தம் சித்தம்போல் நடக்க தயாராயிருக்கிறேன்.

இந்திரவர்மன்.—மந்திரி சிரேஷ்டா! தமது புத்தியை மெச்சினேன், அப்படியேசெல்வதில் யாதொரு சந்தேகமுமில்லை, தவவேடம்புனைந்து செல்வோம் வாருங்கள்.

இருவரும் நிட்கிரமித்து தவவேடம்புனைந்து செல்லல்.

இந்திரவர்மன்.—அமைச்ச! இவ்வனத்தைப்பார்த்தனையா! நெருங்கிய மரங்கள் சாகோபசாகையாய்த் தழைத்து சூரியகிரணமானது தன்னில் நுழையாவண்ணம் இருக்கிறது. இவ்விடமுள்ள பிரமரங்கள் அவ்விருக்ஷங்களிலுள்ள மலர்களில் நிறைந்த மதுவை பானஞ்செய்து ரீங்காரஞ்செய்வதெவ்வண்ணமிருக்கிறதெனில் சுமனஸர்க்களென பெயர்பெற்ற தேவர்கள் அமிர்தபானஞ்செய்து கறைக்கண்டனை ஸாமகானத்தால் துதிப்பதுபோலிருக்கிறது. மேலும் இவ்வனத்திலுள்ள பக்ஷிகள் எல்லாம் கீச்சிலிடுவது எவ்விதமிருக்கிறதெனில் சந்திரசேகரரது அளவிறந்த நாமங்களைச்சொல்லித் துதிப்பதுபோலிருக்கின்றது. மேலும் அவ்விருக்ஷங்களிலிருந்து உதிரும் மலர்கள் எவ்விதமிருக்கிறதெனில் கந்தருவர்கள் கற்பகவிருக்ஷத்தில் நிறைந்த மலர்களைக்கொய்து பசுபதியை அர்ச்சிப்பதுபோலுமிருக்கின்றது. ஆகையால் இவ்வனத்திலேயே நாம் இருந்து சாக்ஷாத் உமைபாகனை வெள்ளை ஏற்றுடையானை ஆனந்த நடனனை தவமியற்றலாமென நினைக்கிறேன். தமது கருத்து யாது?

சுமதி.—நிருபோத்தமா! தாம்கூறியதெல்லாம் பொருந்தியிருக்கிறது. நான் இவ்வனத்தை நோக்கியவுடன் இது தபோவனமென்றே உன்னினேன். யாது காரணமெனில் மேலா கிளிகளால் மரப்பொந்துகளில் சேர்க்கப்பட்ட நீவாரதானியங்கள் சிதரிக்கிடப்பதும், புங்கங்காய்கள் உடைப்பதால் எண்ணெய்க்கசிவுள்ள பாறைகளும், ரதசப்தத்தைக்கேட்டும் நிர்ப்பயமாய் நிற்கிற மான்களும், நனைந்த மரவுரியிலிருந்து சிந்தின ஜலத்தால் இழுக்கப்பட்ட கோடுகளோடுகூடிய நீர்நிலைகளின் பாதைகளும், ஹோமப்புகையால் மங்கின வர்ணங்களோடுகூடிய மரத்தளிர்களும், சமதரையாய் அறுக்கப்பட்ட நாணற்கட்டைகளில் அச்சமின்றி அங்குமிங்குந் திரிகிற மான்குட்டிகளும் இருப்பதைப்பார்த்தால் தபோவனமென்று தோன்றவில்லையா?

என்று காளிதாசர்சாகுந்தலத்தில் வர்ணித்தபடி இதை தபோவனமென மதித்தேன், அவ்விதமே தம்மனமும் நாட்டமுடைத்து, ஆகையால்இவணிருந்தே தவமியற்றல்நலந்தான்.

இருவரும் தவநிலைசேர்ந்து ஈசனை துதித்தல்.

இந்திரவர்மன்.—வஜகதீசா, லோகநாதா, கறைக்கண்டா, கலாதரா, கங்காதரா, உமாரமணா, பாவியேன் படும்பாட்டிற் கிரங்காயோ, பன்னகபூஷணா, பரமதயாளா, ஜடாதரா, மான்மழுதரித்தோனே! (பாடுதல்)

விண்ணே விண்ணுருவே விண்முதலே [ன்றன்
விண்ணுன்வெளியே யவ்வெளி விளங்கும்வெளியே யெ
கண்ணே கண்மணியே கண்ணொளியே
கண்ணுட் கலந்துநின்ற கதிரே யக்கதிரின்வித்தே
தண்ணே தண்மணியே மதியிற்பூத்த
தண்ணமுதே தண்ணமுத சாரமேசொற்
பண்ணே பண்ணிசையே பண்மயமே
பண்ணின்பயனே மெய்த்தவர் வாழ்த்திப் பரவுந்தேவே.

சொல்லவனே பொருளவனே துரியபதத்தவனே
தூயவனே நேயவனே சோதியுருவவனே
நல்லவனே நன்னிதியே ஞான சபாபதியே
நாயகனே தாயகனே நண்பவனே யனைத்தும்
அல்லவனே யானவனே யம்மையப்பா வென்னை
யாண்டவனே தாண்டவனே யருட் குருவேயெல்லாம்
வல்லவனே சிவகாமவல்லி மணவாளா
மன்னவனே யென்னவனே வந்தருள் கவினரந்தே.

ஜெகதீசா நாதா அடியார்கள் கருணைவாழ்வே நாயேன் செய்யும் தவத்திற்கிரங்கி எங்கள் மனக்குறை யகற்றுவாய் தேவ தேவா, ஓம் சதாசிவ ...... என்று தவஞ்செய்தல்.

(பரமசிவம் பிரவேசித்தல்.)

பரமசிவம்.—ஏ பக்தர்காள்! நீங்கள் செய்த தவத்திற்கு மனமுவந்து உங்களுக்கு பிரசன்னமானோம். நீங்களுக்கு யாது சங்கடம் நேரிட்டது, அதை யென்முன் கதனம்செய்வீர்களாகில், அதனின்றும் விமுக்தம்செய்வோம்.

(இருவரும் பரமசிவத்தைப் பணிதல்.)

இந்திரவர்மன், மந்திரி:—"ஏ லோகநாதா! சர்வ ஜீவ தயாபரா! அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா! தீனசரண்யா தமது அடிமைகளாகிய நாங்கள் நற்கதியடைய புத்திர பாக்கியமருளவேண்டும் ஜகதீசா.

பரமசிவம்.—ஏ தொண்டர்காள்! நீங்களது பக்திக்கு மெச்சினோம்; ஏ இந்திரவர்மா! நினக்கு மகா சவுந்தரிய வதியாய் புத்தியுக்திசாலியாய் ஒருபெண்மகவும், ஏ சுமதி! நினக்கும் சர்வலட்சண சம்பன்னனாய் மகாதீரனாய் வித்துவானாய் ஓர் ஆண் மகவும் அனுக்கிரகித்தோம்; நீங்கள் இருவரும் சந்தோஷத்துடன் நகரம் சென்று ஒருவருக்கொருவர் நேயம் பாராட்டி சம்பந்தஞ்செய்துகொண்டு சுகத்திலிருப்பீர்களாக. யாம் செல்கின்றோம்:

(பரமசிவம் மறைதல்.)

இந்திரவர்மன்.—அமைச்சா! அந்திவண்ணர் இவண் வந்து எனக்கு பெண்மகவும் நினக்கு ஆண் மகவும் ஜனிக்குமென வரமீந்தனர். அந்தோ, யெந்தனுக்கோர் ஆண்மகவனுக்கிரகிக்காது பெண்மகவனுக்கிரகித்தனர்; நான் மறுபடிவணங்கிகேட்பதற்கு முன்னமே காந்தனரே நான் ஏது செய்வேன்.

சுமதி.—இராஜ சேகரா! அதற்குத்தாம் வருத்தமடைய வெண்டுவதில்லை. ஏனெனில், சர்வாந்திரியான லோகநாதன் சகல மறிந்தவரானதினால்—"[illegible]" "புத்ராத் சதகுணம் புத்ரீ" என்னும் நியாயத்தின்படி தமக்கனுக்கிர

கித்திருக்கின்றனர், அது விஷயத்திற்கு நாம் வருத்தமடைய வேண்டுவதில்லை, திருப்தியுடன் நகரம்செல்வோம்வாருங்கள்.

இந்திரவர்மன்.—அமாத்யா! அரன்மொழிந்தது சத்தியமே. புத்திரன் பிறந்தகுலத்தைமட்டும் கரையேற்றுவன், புத்திரியோவெனில் உபயகுலத்தையும் விருத்திசெய்வள், ஆகையால் யான் துயரகன்றனன். நகரம் செல்வோம் வாருங்கள்.

(இருவரும் நிட்கிரமித்தல்)

நான்காவது களம்.

பாத்திரம்:—பத்மாக்ஷி, விலாசவதி, சகி, இந்திரவர்மன்.

இடம்:—இராஜஸ்திரீயின் அந்தப்புரம்.

பத்மாக்ஷி.—சகி விலாஸவதி! எனது நாதர் தவத்திற்குச் சென்று மூன்று சம்வத்ஸரமாகியும் இது காறும் வரக்காண்கிலேன்; ஜகதீசரது அருள்கிடைத்ததோ இல்லையோ அதுவும் தெரிகிலேன்; பகவானது அருளினால் ஆண்மகவைக்காட்டிலும் பெண்ணைப்பிறக்கில் அன்னவளை ஓர் அரசகுமாரருக்கீந்து அன்னவனை இவ்வரசுக்கதிபதியாகவைத்து விட்டால் எப்போதும் நமது மனதுக்குச் சந்தோஷமாக நேத்திரானந்தமாய் பார்த்துக்கொண்டிருக்கலாமென நினைக்கிறேன், கர்த்தாது கருத்தெவ்விதமோ அறிகிலேன்.

விலாஸவதி.—அன்னையே! மகா உத்தமதற்புக்கரசியாகிய தாம் மனதில் எண்ணுவது வீணாகுமோ, அப்படி அரனும் அனுக்கிரகிப்பர், தம் மனோரம் சந்தோஷமடைய அரசரும் இவண்வந்து நமக்கு தெரிவிப்பார், யாதொன்றுக்கும் கவலைபுறவேண்டாம்.

பத்மாட்சி.—சகி! இந்த ஏகாந்த கிருகத்தில் அதிர்ந்து நடந்து வருகிற சத்தங்கேட்கிறது. யாரென்று பார்?

விலாசவதி.— ஏ பூங்கொடியே! தவத்துக்குச்சென்ற அரசன், அதோ! வருகிறார்.

(அரசன் பிரவேசித்தல்.)

பரபரப்புடன் எழுந்து பத்மாக்ஷி நமஸ்கரித்தல்.

இந்திரவர்மன்.—பிராணப்பிரியே கல்யாணம்பவது, சுகுமாரியைப் பெற்றுவாழ்க.

பத்மாட்சி.—காந்தா! தாம் கானகம் சென்று கறைக்கண்டரைக்குறித்து அருந்தவம் புரிந்தீர்களா? கைலாசபதி கருணைசெய்தனரா, அதன் விபரங்களை யெல்லாம் அடியாள் கருத்துவக்ககருணையுடன் தெரிவித்து அடியாள் மனதை திருப்திசெய்விக்க வேண்டுகின்றேன்.

இந்திரவர்மன்.—ஆயிழையாளே! யாங்கள் அந்தி வண்ணரைக்குறித்து அருந்தவமியற்ற அண்ணலருள்சுரந்து பிரத்தியக்ஷமாகி எந்தனுக்கு ஓர் பெண்மகவும் மந்திரிக்கோர் ஆண்மகவும் உண்டாமென்று அனுக்கிரகித்து மறைந்தனர். எந்தனுக்கு ஆண்மகவளித்த விஷயத்தைப்பற்றி யான் துன்புறவில்லை, ஏனெனில் எவ்விதமாவது மக்களில்லா மலடனெனபெயர் வராது பெண்மகவாவது அனுக்கிரகித்தனரே என்னும் மகிழ்ச்சியை யடைந்தேன்; காதலி! நின்மனம் எவ்வாறோ தெரிகிலேன்.

பத்மாட்சி—ரமணா என் விருப்பம்போலவே விருபாக்ஷர் தமக்கனுக்கிரகித்திருக்கின்றனர்; எவ்விதமாயாயினும் தமக்கு எது பிரியமோ அதுவே எனக்கும் இஷ்டமென்பது தமக்கு தெரியாததோ? ஆகையால், நமக்கு யாதொரு குறைவுமில்லை; தாம் ஸ்நானஞ்செய்து நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்து போஜனஞ்செய்து அடியாள் அளிக்க விரும்பும் தாம்பூலமணிந்து அடவியில் அடைந்த சிரமந்தீர கிஞ்சித்து நேரம் ஹம்சதூளிகாமஞ்சத்தில் சயனித்துக்கொள்ளுங்கள். எழுந்திருங்கள் மகாராஜ்.

இந்திரவர்மன்.—என்கண்ணே! நின் விருப்பத்தின்படியே செய்கிறேன்.

(இருவரும் நிட்கிரமித்தல்.)

2–வது அங்கம்.

முதற்களம்.

பாத்திரங்கள்:—இந்திரவர்மன், சுமதி, பத்மாக்ஷி, சுந்தராங்கன், நளாகினி, விசுவநாதசாஸ்திரி.

இடம்:—அரண்மனை.

பரமசிவனனுக்கிரகத்தால் இராஜஸ்திரீயும் மந்திரியினது பத்தினியும் கர்ப்பவதியாகி மந்திரிமனைவி ஒரு புத்திரனையும் இராஜன் மனைவி ஓர் பெண்ணையும்பெற, அன்னவர்களில் மந்திரிகுமாரனுக்கு சுந்திராங்கன் என்றும் இராஜகுமாரிக்கு நளாகினியென்றும் பெயரிட்டுவளர்த்த, இருவரும் ஐந்துவயதினராக அரசன் அவர்களுக்கு வித்தியாப்பியாசஞ்செய்விக்கக் கருதி மந்திரியை அழைத்துவரச்செய்தான்.

சுமதி.—லோகபாலா! என்னையழைத்த காரணம்யாது? உத்திரவுக்கு எதிர்பார்க்கிறேன்.

இந்திர்வர்மன்.—அமைச்ச! அகிலலோகநாதராகிய பரமாத்துமாவினது கருணையினால் நமக்கு ஓர் ஆண்மகவும் எந்தனுக்கோர் பெண்மகவும் ஜனித்து அவர்களும் ஐந்துபருவத்தராயினர். தக்கவயதில் யான் அவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்கக் கருதினேன். ஏனெனில்,

மானிடருக்கு வித்தியாதனம் அறிவு,மேன்மை, சுகம், கீர்த்தி மரியாதை, ராஜசமூகங்களில் பூஜ்யதை இவைகளையுண்டாக்குவதுடன் விதேசங்களில் காப்பாற்றுகிற தேவதையும், பந்துவும், சினேகிதனும் அதுவே; வித்தியாதனத்தை திருடர்கள்

அபகரிக்கமுடியாது; வித்தையில்லாதவன் விலங்குக்குச் சமானமென்று ஆன்றோர் வாக்கியமிருப்பதால் கல்விக்குநிகரான பொருள் ஒன்றுமிலது. ஆகையால் அமாத்திய சிரேஷ்டா! தமது கருத்து யாது?

சுமதி.—மகாராஜ் பூர்வஜன்மத்தில் யான் எந்தத்தவமியற்றினேனோ தமது பரிபூர்ணகிருபை என்மீது உண்டாயிருக்கிறது. நமது சித்தத்திற்குத்தோன்றும் சத்காரியங்களில் மறுத்து கூறுவதற்கு ஏதுளது?

குஞ்சியழகும் கொடுந்தானை கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்பரம் என்னும் நடுவுநிலைமை யறியும்
கல்வியழகே யழகு.

என்று மூதுரையிருப்பதினால் குழந்தைகளுக்கு கல்விபுகட்ட தமது இஷ்டம்போல்செய்ய தயாராக இருக்கிறேன்!

இந்திரவர்மன்.–மந்திரிவர்யா! நமது பாலர்கள் துரிதமாய் கற்றுக்கொள்ளும்படி செய்விக்க போதனைசக்திவாய்ந்த உபாத்தியாயர்கள் நமது நகரத்தில் யாவருளர்.

சுமதி.—அண்ணலே! அயனது நாவிலமர்ந்த நாமகள் தானோ என சங்கிக்கவல்ல வித்வச்சிரேஷ்டராகிய விசுவநாதசாஸ்திரி யென்பவர் நமது நகரத்திருக்க நாம் வேறு யேன் யோஜனைபுரியவேண்டும்.

இந்திரவர்மன்.—அமைச்ச அப்படியா! ஆயின் அன்னவரை அதிதுரிதமாய் இவண் அழைப்பிப்பதுடன் தமது புத்திரசிகாமணியையும் அழைப்பியுங்கள். யானும் எனது கண்மணியான நளாகினியை அழைப்பிக்கின்றேன். சேவகா! துரிதமாக அந்தப்புரம்சென்று எனதாருயிர்க்காதலியை என் கண்மணி சகிதம் யானழைத்துவரச் சொன்னதாக அழைத்துவா.

சுமதி.—சேவகா! நீ துரிதமாக நமது அரண்மனை சென்று எனது குமாரன் சுந்தராங்கனை அழைத்துக்கொண்டும், விப்பிரர் வீதியில் மிக கியாதியுடன் பாடசாலை வைத்திருக்கும் விசுவநாதசாஸ்திரி என்பவரையும் அரசர் அழைத்து வரச்சொன்னதாக அழைத்துவா.

இரண்டாவது களம்.

பாத்திரம். பத்மாக்ஷி, விசாலாக்ஷி, நளாகினி.

பத்மாட்சி.—சகி விசாலாக்ஷி! கண்மணி நளாகினி எங்கே காணோம்.

விசாலாட்சி.—அன்னையே! எனது குமாரனுடன் விளையாடிக்கொண்டிருந்தாள்; இதோ வந்துவிட்டாள்.

நளாகினி.—அன்னையே! அடியாள் நமஸ்கரிக்கின்றேன்.

(நமஸ்கரித்தல்.)

பத்மாட்சி.—என் கண்ணுட்டி வா என்மடியில் வீற்றிரு; நீ இதுவரை எவண் சென்றிருந்தாய்; எந்தனைமறந்தாயா?

நளாகினி.—தாயே! நான் விலாசவதியின் மகன் சுந்தரவதனுடன் விளையாடிக்கொண்டிருந்தேன், இப்பொழுதுதான் அவன் தன்வீட்டுக்குப் போயினன் நான் இவண் வந்தேன்.

சேவகன்.—அன்னையே! வந்தனம்செய்கின்றேன். (நமஸ்கரித்தல்.)

பத்மாட்சி.—கல்யாணமுண்டாகுக, சேவகா யாது விசேஷம்?

சேவகன்.—தாயே! மகாராஜாவானவர் தங்களையும் தங்கள் திருக்குமரியையும் சபைக் கழைத்து வரச்சொன்னார்கள்.

பத்மாட்சி.—சேவகா என்ன விசேஷம்?

சேவகன்.—மாதா அது ஒன்றும் எந்தனுக்குத்தெரியாது. மந்திரியும் மகாராஜாவும் ஏதோ ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள்; உடனே மகாராஜாவானவர் ஒருசேவகனை யனுப்பி மந்திரிகுமாரரை அழைத்து வரும்படி பணித்து தங்களை யழைத்து வரும்படி எந்தனுக்காக்ஞாபித்தார்கள்; இதைத்தவிர வேறு ஒரு சங்கதியும் எந்தனுக்குத் தெரியாது.

பத்மாட்சி.—அப்படியே வருகிறேன் நீ செல். கண்மணி நினது பிதா உன்னையும் எந்தனையும் அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார்களாம், யாம்செல்வோம் வா கண்ணே.

மூன்றாவது களம்.

பத்மாட்சி.—காந்தா நமஸ்கரிக்கின்றேன்.

நளாகினி.—பிதா நமஸ்கரிக்கின்றேன்.

இந்திரவர்மன்.—பிரியசகி! வீற்றிரு.

கண்மணி நாளாகினி என் பிள்ளைக்கலிதீர்த்த பெருமானே வா என் மடியில் வீற்றிரு.

சுந்தராங்கன்.—மகாராஜ்! நமஸ்கரிக்கின்றேன்.

பிதா! வந்தனஞ்செய்கின்றேன்

மாதா! வணங்குகின்றேன்.

சுமதி.—வத்ஸா கல்யாணம்பவது. சமீபம்வா!

விசுவநாதசாஸ்திரி.—ஆசீர்வாதம் அநந்தகோடி விபவமகிலாண்டகோடீஸ்வரம், வீசுங்கீர்த்திப் பிரதாபஞ்சதிலகம் விற்பன்ன சத்யம்பேசும் ராஜவர்க்கமகுடபிரபுடகசூரியோதயம், வாசம் நித்திய ராஜாராஜேந்திர விஜயம் வாழி இந்திரவர் மேசுவரம்.

மங்களானிபவந்து, அமாத்தியவர்யா! சுபம்பவந்து.

இந்திரவர்மன்.—பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

பத்மாக்ஷி.—பெரியவரே! வந்திக்கின்றேன்.

நளாகினி.—குருமகராஜ் பணிகின்றேன்.

சுமதி.—விப்பிர குலோத்தமா! தெண்டனிடுகின்றேன்.

சுந்தராங்கன்.—ஆசாரியவர்யா! அடிபணிகின்றேன்.

விசுவநாத சாஸ்திரி.—சர்வம் மங்களானிபவந்து. இராஜ குல சிகாமணி என்னை அழைத்தகாரணம் யாது?

இந்திரவர்மன்.—பிரபோ! ஆசனத்திலமருங்கள் தெரிவிக்கின்றேன். பூசுரோத்தமா தங்களது ஆசாரகர்மானுஷ்டானங்கள் எல்லாம் சரிவர நடந்து வருகின்றதா?

விசுவநாதசாஸ்திரி.—லோகேசா! நினதுசெங்கோல் மகிமையினாலும் மந்திரியினது விசாரணை நீதியாலும் யாதொன்றும் குறைவில்லாமல் நடந்து வருகின்றது மகாராஜ்.

இந்திரவர்மன்.—பிரபோ எந்தன் அருமை புதல்விக்கும் மந்திரியினது செல்வக்குமாரனுக்கும் வித்தியாப்பியாசம் செய்விக்கக்கருதி தம்மை அழைத்தனன்.

சாஸ்திரி.— இராஜன்! உசிதம்! உசிதம்!! வனெனில், தனது குமார்குமரிகளுக்கு ஜனங்கள் செல்வப்பெருக்கினால் எவ்வளவு ஆபரணங்கள் அணிந்து அழகு செய்தபோதினும் பிரயோஜனமிலது.

பிற்காலத்தில் குழந்தைகள் தக்கபருவத்தையடைந்து,

அள்ளிக்கொடுக் கின்றசெம்பொன்னும் ஆதரவாய்
கொள்ளிக்கும் பட்டகடனுக்கும் என்னைகுறித்ததல்லால்
துள்ளிதிரிகின்ற காலத்திலென் துடுக்கையடக்கி
பள்ளிக்குவைத்திலனே தந்தையாகிய பாதகனே!

என்பதுபோல், தமக்கு ஓர்குறைவு உண்டாகும். ஆகையால் தாம் முன்னரே ஜாக்கிரதையுற்றீர்கள். ஆனதால் தமது சித்தத்தின்வண்ணம் சாக்ஷாத் சாரதையின் அனுக்கிரகத்தாலும் தமது செல்வக்குமாரிக்கும், மந்திரிகுமாரருக்கும் வித்தியாப்பியாசம் செய்விக்கிறேன் மகராஜ்.

இந்திரவர்மன்.— பூசுரோத்தமா! தாம் அறியாதநீதி யென்னவிருக்கிறது. தமக்கு அதிகமாகத் தெரிவிக்கவேண்டுமென்பதில்லை, வித்தியாப்பியாசம் செய்விக்க நல்லநாள் சுப நக்ஷத்திரம் மங்களகரமான லக்கினம் முதலானவைகளைப்பார்த்துச் சொல்லுங்கள்.

பிரியசகி பத்மாக்ஷி! நமது செல்வகுமரிக்கு வித்தியாப்பியாசம் செய்விப்பதில் நினக்கு சந்தோஷம்தானே.

பத்மாக்ஷி.—காந்தா! தாம் கருத்துவந்து செய்யும் காரியத்திற்கு என்றாவது நான் விகாதம் சொன்னதுண்டோ.

இந்திரவர்மன்.— அரிவையே! அப்படியன்று, இருப்பினும் நின்மனதின் விருப்பத்தை யான் அறிந்துகொள்ளும்படி வினவினேனேயன்றி நான்.வேறாக நினைத்து கேட்கவில்லை.

பத்மாட்சி.—ரமணா! தமது சித்தம்போல கண்மணிக்கு வித்தியாப்பியாசம் செய்விப்பதில்எந்தனுக்குமிக்கானந்தமே.

சாஸ்திரி.—இராஜசேகரா! “சுபஸ்யசீக்ரம்” என்றபடி இன்றே நல்லநாள் சுபநக்ஷத்திரம் லக்கினயோக காரணங்களும் நன்றாயிருக்கின்றன.

இந்திரவர்மன்.— கண்மணி நளாகினி! நீ இதுமுதல் உபாத்தியாயனை வணங்கி கீழ்ப்படிந்து அன்னவரால் கற்பிக்கப்படும் நீதிகளைக் கற்றுணர்ந்து சீக்கிரமே கலாவதியாகவேண்டும்.

நளாகினி.—பிதா! தமது கருத்தின்படி நடந்துகொள்கிறேன்.

இந்திரவர்மன்.—வத்ஸா சுந்தராங்கா! நீயும் நளாகினியும் இவ்வுபாத்தியாயரிடம் நன்றாக சாஸ்திரங்களை யோதிவருவதிலும் நீயும் நளாகினியும் பிரியாவிடையாய் சினேகித்து சீக்கிரமே கல்விக்களஞ்சியமாகவேண்டும்.

சுந்தராங்கன்.—பிரபோ! அவ்விதமே நடந்துகொள்கிறேன். சகி நளாகினி நீயும் நானும் நமது மாதாபிதாக்களது ஆக்ஞையின்வண்ணம் இவ்வுபாத்தியாயரிடம் நீதிகளையுணர்ந்து கல்விச்செல்வத்திற்கு கர்த்தாவாகவேண்டுமென்றோ? நாம் இருவரும் உபாத்தியாயரை வணங்கி அன்னவரது ஆசீர்வாதத்தைப்பெற்று அன்னவர் இல்லிற்கேகுவோம்.

நளாகினி.--தோழா! தாம்கூறியது எனக்கு மெத்த ஆனந்தம். தம்முடைய நட்பு எந்தனுக்கு கிடைத்ததானது என் முன்னோர்களும் யானும் செய்த தவப்பேறேயன்றி வேறல்ல; ஆனதால் என்னின்னுயிர்தோழா! தமது கருத்தின்படி நாம் இவ்வுத்தமகுருவைப் பணிவோம் வாருங்கள்.

பிரபோ! சுந்தராங்கன் நமஸ்கரிக்கின்றேன். ஆர்யா! நளாகினி பணிகின்றேன்.

சாஸ்திரி.— குழந்தைகாள்! மங்களமுண்டாகுக. நாம் நமது கிரகத்தைநாடிச் செல்வோம் வாருங்கள்.

பூபாலா! குழந்தைகளை அழைத்துச்சென்று உபதேசம் செய்வித்து தக்க நீதிவந்தர்களாக செய்விப்பதுடன் மற்ற கலைகளிலும் தேர்ச்சிபெறச் செய்விக்கின்றேன்.

இந்திரவர்மன்.—பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

பத்மாக்ஷி.— விப்பிரகுலோத்தமா! நமஸ்கரிக்கின்றேன்.

சுமதி.—பிராமணோத்தமா! அபிவந்தனஞ்செய்கிறேன்.

சுபமுண்டாகுக பூபாலா! சுபம் பவது மந்திரி! பட்டமகிஷி! தீர்க்க சுமங்கிலியாக சுபுத்ரர்களையடைவாயாக.

எல்லோரும் நிஷ்கிரமித்தல்.

3-வது அங்கம்.

முதற்களம்.

பாத்திரம்—அரசன் - மந்திரி.

இடம்—இராஜமாளிகை.

இந்திரவர்மன்.—அமைச்ச! தமது குமாரனும் எனது புதல்வியும் பத்துவருடகாலமாக பள்ளியில்பயின்று மிகத் தேர்ச்சியடைந்தனர். அன்றியும் எனது குமரியானவள் மங்கைப்பருவத்தனளாயினள்; இனி ஆடவருடன் சேர்ந்து கல்வி கற்க இயலாது, ஆகையால் அன்னவளை நூதனமாக அமைக்கப்பட்டிருக்கும் அரண்மனையில் அவள் பருவத்திற்கேற்ற தோழிமார்களுடன்கூட வைக்கவேண்டியதவசியமாகையால் தினது மைந்தனையும் எனது குமாரியையும் பாடசாலையினின்றும் துரிதமாக அழைத்துவரும்படி சேவகர்களுக்கு ஆக்ஞாபனம்செய்யுங்கள்.

சுமதி.—மகாராஜ் தாம் பகறியது உண்மைதான். இருவரும் தக்க கல்விமான்களாயினர், பருவமும் வந்துவிட்டது. ஆகையால் தமது மனதின்படியே செய்யவேண்டுவது உசிதம் தான். இதோ அவர்கள் இருவரையும் அழைப்பிக்கின்றேன். சேவகா! நீ துரிதமாக நமது நகரத்திலுள்ள விசுவநாத சாஸ்திரியாருடைய பாடசாலையில் பயின்றுவரும் அரசகுமரியையும் எனது குமரனையும் துரிதமாக அரசர் அழைத்துவரச் சொன்னதாக அழைத்துவா.

சேவகன்.—ஆக்ஞாமகாராஜ்.

இரண்டாவது களம்.

பாத்திரங்கள்—நளாகினி - சுந்தராங்கன்.

சேவகன்.—சேவகன் பாடசாலைக்குள் நுழைந்து, பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

நளாகினி.—(சேவகனைக் கண்டதும்) சேவகா! எங்கே வந்தாய்?

சேவகன்.—தாயே! தங்களையும் மந்திரி குமாரரையும் அரசர் அழைத்துவரச்சொன்னார்.

நளாகினி.—என்னடா விசேஷம்?

சேவகன்.—அது ஒன்றும் எனக்குத் தெரியாது; இராஜரும் மந்திரியும் ஏதோ ஆலோசித்துக்கொண்டிருந்து தங்களையழைத்துவரச்சொன்னார்கள்.

நளாகினி.—நல்லது சேவகா நீசெல் நாங்கள் வருகிறோம். தோழா சுந்தராங்கா! எனது பிதா தம்மையும் எந்தனையும் அழைத்துவரச்சொன்னதாக சேவகன்வந்து தெரிவித்தானல்லவா. அரசராணைப்படி சீக்கிரம் போவோம்வாருங்கள்.

சுந்தராங்கன்.—(பிரமைகொண்டு ஒன்றும் பேசாதிருந்ததுடன் பெருமூச்செறிதல்)

நளாகினி.—நண்பசிகாமணி! நான்மொழிந்ததற்கு மறுமொழி புகலாது பெருமூச்செறிய காரணம் யாது?

சுந்தராங்கன்.—சகி நளாகினி வேறொன்றுமில்லை, இனி உந்தனைப்பார்க்கவும் உந்தனுடைய நாமதேயத்தைச்சொல்லி சந்தோஷமாயழைக்கவும் நின் அமிர்தினுமினியமொழிகளை கேட்கவும் இயலாதகாலம்வந்ததே என்செய்வேனென துன்புற்றதன்றி வேறொன்றுமிலது.

நளாகினி.—என தன்புநிறைந்ததோழா! ஏது இன்று இதுகாறும் பகராத மொழிபகர்ந்தனை; அதற்குக்காரணம் யாது, நின்னைவிட்டு யான் பிரிவனோ. அப்படிநேரில் என் உயிர் ஒரு இமைப்போதும் எனது உடலிற்தரிக்குமோ, நீ அப்படி நினைத்ததற்கு காரணம்யாது?

சுந்தராங்கன்.—ஓ என்மனங்கவர்ந்த மங்கைப் பருவ ரதியே! "நீ இன்னமும் சங்கதி உணரவில்லைபோலும், நினது பிதா நின்னையும் எந்தனையும் அழைத்த சங்கதியை இதுசமயம் ஆலோசிக்கில் நீ அடைந்த மங்கைப்பருவத்தையுணர்ந்த நின் பிதா இனி நீ மணம்முடியும்வரை ஆடவருடன் உரையாடலாகாவென அந்தப்புரத்து நிருத்தவேண்டியே" என நினைக்கிறேன். அப்படியாயின் என்கெதி என்னமாயாகுமென்று நீ நினைக்கிறாய்?

நளாகினி.—தோழா! அதற்குள் அப்படி ஒன்றும் இராதென நினைக்கிறேன். ஒருக்கால் அப்படியேயாயின் நீஎனது அரண்மனைக்குவர தடையேதுளது.

சுந்தராங்கன்.—எ பிரியநதோ! நன்றுமொழிந்தனை! நீயோ அரசகுமரி, யானோ மந்திரிகுமாரன், அப்படியிருக்க நின்னை நின்சகிகள் சகிதம் அந்தப்புரத்திலமர்த்திடில் அவ்விடம் யான் எவ்விதம்வர அனுகூலப்படும் நன்றாயாலோசித்துப்பார்.

நளாகினி.—ஆ எனதாசைக்கிளியே! நீ அப்படி நினையாதே; அப்படியே யென்னை நிர்ப்பந்தத்திற்குள்ளாக்க என் மாதாபிதாக்கள் விரும்புவார்களாகில் நான் நின்னைப்பிரிந்து ஒருக்ஷணம் உயிர்வைத்திரேன். ஏனெனில், ஒருகாரியம் உளது, அதுயாதெனில் அதை நின்னிடம் தெரிவிப்பதில் எந்தனுக்கு லஜ்ஜையொன்றுமில்லை. தம்மையான் அழகுள்ள ஆடவரென எக்காலத்து அறியும் அறிவுபடைத்தேனோ அதுமுதல் தங்களை நாதராக அடைய அவாக்கொண்டு அல்லும் பகலும் என்னகத்திடை அந்திவண்ணனை ஆராதித்துக்கொண்டிருக்கிறேன், ஆகையால் நிர்ப்பந்தம் ஏற்படில் இன்னகர்நீங்கி மறுநகரடைந்தாவது நாம் சுகித்திருக்கலாம், தாங்களொன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

சுந்தராங்கன்.—எனதன்பிற்கிசைந்த ஆசைப்பெண்மணியே! நான் எண்ணியபடியே நீயும் என்மீது மனம்வைத்தனை. அதுவும் யான் இயற்றிய நோன்பின்பலனே. ஆகையால் காலஹரணமாகின்றது, இச்சங்கதி ஒருவரும் அறியாது நம்மிருவர் மனத்திற்குபட்டில் பூட்டியிருக்கவேண்டும். செல்வோம்வா.

(இருவரும் நிட்கிரமித்தல்)

மூன்றுவதுகளம்.

பாத்திரங்கள்—இந்திரவர்மன், சுமதி, நளாகினி, சுந்தராங்கன்.

இந்திரவர்மன்.—அமைச்ச! எங்கே இன்னும் நமது பாலர்கள் வரக்காண்கிலது?

சுமதி.—மகராஜ்! அதோ வருகிருர்கள்.

(நளாகினியும் சுந்தராங்கனும் பிரவேசித்தல்.)

நளாகினி.—பிதா! நளாகினி நமஸ்கரிக்கின்றேன். மந்திரிவர்யா! நமஸ்கரிக்கின்றேன்.

சுந்தராங்கன்.—வேந்தா! சுந்தராங்கன் வந்தனம்செய்கின்றேன்.

இந்திரவர்மன்.—கண்மணி நிகர் பெண்மணியான நளாகினி! இதுவரை நீ படித்த சாஸ்திரங்களால் தக்க அறிவை அடைந்தனையென்பது எங்களுக்குப் பிரத்தியக்ஷமாகத் தெரிந்தது. கண்ணே இப்பொழுது நீ மங்கைப்பருவத்தினளாயாயினையன்றோ, இனி ஆடவருடன்கூட படிப்பதும் ஆடவர்நிறைந்த அவையின்கண் பிரவேசிப்பதுந் தகுதியன்று, நினக்குவற்ற மாளிகையொன்று நூதனமாக புதுக்கப்பட்டிருக்கின்றது, அம்மாளிகையின்கண் நின்கருத்தின்படி நடக்க வல்ல சேடியர்களும் தாதியர்களும் சகிகளும் பலருளர், அவர்களுடன் சேர்ந்து சந்தோஷமாய் விளையாடிக்கொண்டும், படித்துக்கொண்டும், வாத்தியங்களை வாசித்துக்கொண்டும் களிப்புற்றிரு.

நளாகினி.—எனதன்புள்ள தந்தையே! தாம் எந்தனுக்கு மொழிந்தது உண்மையே. ஆயினும் இவ்வளவுநாள் என்னுடனிருந்த எனதாருயிர்தோழனை சுந்தராங்கனை கொஞ்சகாலமாவது என்னுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்க சம்மதிக்காவிடில் என்மனம் மாறுமோ?

இந்திரவர்மன்.—கண்ணே நிஜந்தான். சுந்தராங்கன் நின் மனமோகந் தோழன் என்பதில் ஐயமிலது. அவன் நின்னுடன் உரையாடிவருவதிலும் ஒன்றும் குற்றமில்லை; ஆனாலும் உலகம் என்னசொல்லும், என்னநினைக்கும். அது நிராவசைமொழியாய்விடும், ஆனதால் நினக்கு மணமுடியும்வரை அப்படி இருப்பின் பிறகு சுந்தராங்கனுடன் சதா சம்பாஷித்துக்கொண்டிருக்கலாம்.

நளாகினி.—பிதா நன்றுமொழிந்தீர்கள் "ஊருக்குப்பால் குடிப்பதா நம் உடம்புக்குப் பால்குடிப்பதா" ஆலோசித்துப்பாருங்கள்? தமக்கிஷ்டம்போல் இருக்கிறேன்; தோழா சுந்தராங்கா நம்மைப்படைத்த பரமசிவத்தின் கருத்தென்னவோ, நாம்இருவரும் கலந்துரையாட மனமுவக்குமோ அறிகிலேன். தோழா துயரின்றி வருங்காலத்தை யெதிர்பார்த்திரு, நான் அரண்மனைசெல்கின்றேன். பாடசாலையில் நாம் இருவரும் படித்த நம்மனமோகத்த சகி பிரிந்தனளேயென வருந்தி மறந்துவிடாதே, துயருருதே, மயங்காதே, நீ தியங்காதே என்மனமோகந் நேயா சென்றுவருகிறேன்.

(நளாகினி நிட்கிரமித்தல்.)

இந்திரவர்மன்.—அமைச்ச! நளாகினியின் புத்திசாதுரியத்தைப் பார்த்தனையா, ஆ! நன்று இனி அரைக்ஷணம்

நிறுத்தலாகாது விவாகத்தை சீக்கிரமே முடித்துவைக்க வேண்டும்.

சுமதி.—மகராஜ் அப்படிச்செய்வதுதான் உத்தமம்.

சுந்தராங்கன்.—பிரபோ! ஐந்துவயதுமுதல் இணைபிரியாது நேசித்துவந்த நளாகினியெனும் தமதாருயிர்ப்புதல்வியை இன்றுபிரித்ததினால் என்மனம் ஆறுமோ? என்மனதிற்கு நீங்காத துயரமேதவிற வேறொன்றுமிலது. மகராஜ் சீக்கிரமே விவாகத்திற்கெத்தனம் செய்யுங்கள். பூபாலா! யான்சென்று வருகிறேன்.

(எல்லோரும் நிட்கிரமித்தல்.)

நான்காவதுகளம்.

பாத்திரங்கள்— சுந்தராங்கன், மதிவல்லப னென்கிற தோழனும்.

சுந்தராங்கன்.—தோழா என்மனதிலுள்ள துயரத்தை யென்னென்று மொழிவேன்?

மதிவல்லபன்.—நண்பா! வருத்தமென்ன, குழக்கட்டை தின்னச்சொன்னால் உனக்கு வருத்தந்தான்.

சுந்தராங்கன்.—தோழா நன்றுமொழிந்தனை. எப்பொழுதும் நினக்குப் போஜனத்தின்மேலேயே நினைவாகையால் அவ்விதமொழிந்தனையோ?

மதிவல்லபன்.—நேசா வாஸ்தவம்; நீ மனவியாகூலத்தால் ஆகாரம் செல்லாது வாயுபக்ஷணம் செய்கின்றதால் நினக்கு வருத்தமாகத்தான் இருக்கும்.

சுந்தராங்கன்.—எனதாருயிர் நண்பா! சங்கதி ஒன்றுளது, அதை இனி நின்னிடம் மொழியாவிடில் என்மனவியாகூலம் தீரும்வழியிலது. ஆகையால் யான்சொல்வதை

கொஞ்சம் கருத்துடன் கேள். யாதெனில் இந்நகரத்தரசன் புதல்வியான நளாகினி ஐந்து வயது முதல் என்னுடன் படித்துவந்தது ஞாபகம் இருக்கிறதா? அன்னவளை இப்பொழுது அவளது பிதா பிரித்து அரண்மனையில் இருத்தினர். அது முதல் அவளது அழகிய முகத்தையும் அமிர்தமொழுகும் வார்த்தையையும் கேளாதபாவியாக இருக்கின்றேன், அதனால் என் மனம் மிகத்துயருறுகின்றது, இதற்கென் செய்யலாம்?

மதிவல்லபன்.—நேசா! எனக்கு ஒரு காரியம் தோன்றுகிறது, அன்னவெனில், நாம் இப்படியே அன்னவளது அந்தப்புரம் சென்று அவள் காலில் விழுந்து காப்பாற்றும்படிவேண்டிக்கொண்டால் நின்மனம் வருத்தமடையாது.

சுந்தராங்கன்.—சகே நீ மொழிந்தது உசிதமே, ஆயினும் யான் அவ்விடம் செல்லகூடாதென அரசரது உத்தாவாயிருக்கின்றதே யென் செய்வேன்.

மதிவல்லபன்.—மித்திரா! எனக்கு மனதில் ஒருயுக்தி தோன்றுகிறது, யாதெனில் இப்படி நாங்கள் நிஜ சரீரத்துடன்சென்றால் தானே சேவகர் கின்னத்தகைவார்கள், அதற்கு ஒரு தந்திரம் இருக்கிறது; நாம் ஒரு பெரிய கல்லை கட்டிக்கொண்டு ஆற்றில் விழுந்தால் இந்த ஜன்மம் போய் காற்றுருவுண்டாகும், அப்பொழுது ஒருவரும் நம்மைபார்க்கவொண்ணாதாகையால், எப்பொழுதும் நளாகினியுடன் சம்பாஷித்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கலாம்.

சுந்தராங்கன்.—மூடா நன்று மொழிந்தனை. அப்படி ஜீவனைவிடுக்கில் பிசாசஜன்மமல்லவோ லபிக்கும்; துஷ்டா நினக்கு நான் சொல்வதில் மனமில்லாவிடில் சொல், பிராணனையாவது விட்டுவிடுகின்றேன்.

மதிவல்லபன். சகே! ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், நளாகினி விஷயத்தில் அந்தரங்கமாக என்தனால் செய்யக்கூடி

யது ஏதாவதுளதெனில் தெரிவித்தால் யான் செய்யத் தயாராக இருக்கிறேன்.

சுந்தராங்கன். — தோழா! இதுசமயத்தி லல்லவோ நீ உயிர்த்தோழன் என்பதை நிலை நிறுத்தினாய்? ஒருகாரியம் செய்யவேண்டும். இந்தக்கடிதத்தை யெப்படியாவது நளாகினியிடமாவது அன்றேல் அவளது ஆருயிர்சகியான இந்திராவதி யிடமாவது கொடுத்துப் பதில்வாங்கிவரவேண்டும். (ஒரு கடிதத்தைக் கொடுத்தல்.)

மதிவல்லபன்.—நேயா! நீ நினது அந்தப்புரம் செல், நான் பதில் கடிதம் பெற்றுவருகிறேன். (மதிவல்லபன் நிட்கிரமித்தல்.)

சுந்தராங்கன்.—(மனதிற்குள்) ஏ நளாகினி! நீ என் புத்தியினைக் கலக்கிவிட்டனை, படிப்பினைப்பறக்கவடித்தனை, இப்பிரதிவியில் யான் பிரியம்வைக்கும் பொருள் உன்னையல்லாது வேறுயாதுளது? ஹா என்மனங் காதலென்னும் ஊழிக் காற்றால் தாக்குண்டு நிலைகுலைகின்றதே என்செய்வேன்.

(பாடுதல்,)

மானிடையுற்றாய்மதியே
கூனிடையுற்றாய்குறியாய்
வானிடையுற்றாய்மதியை
யேனிடையுற்றாய்இசையாய்.

(பரிக்கிரமித்தல்.)

ஐந்தாவது களம்.

பாத்திரங்கள் நளாகினி இந்திராவதி.

நளாகினி.—சகி இந்திராவதி! யென்ஜன்மம் விருதாவாயிற்றே, என் செய்வேனடி. முற்காலத்தில் இப்படி காராக்கிரகத்துக்கொப்பான அந்தப்புரத்தில் அடைத்துவைக்கிற வழக்கமில்லை. அக்காலத்தில் ராஜகன்னிகைகள் எதேச்சையாய்

வெளியில்போவதுடன் தங்கள் மனதுக்கிசைந்த நாயகனைத் தாங்களே தேடி மாலையிடுவது வழக்கம். எனக்கு இந்த அந்தப்புரவாசம் அருவருப்பாயிருக்கிறதே.

இந்திராவதி.—தோழி ஏன் அவ்விதம் மொழிந்தனை? நினக்கோ இப்பொழுதுதான் மங்கைப்பருவம் வந்திருக்கிறது, நீ எமது அரசருக்கு ஒரே அருமைப்புதல்வி, மகாராஜரும் தமது தாயும் நினக்கு சீக்கிரமே விவாகம் செய்யவேண்டுமென யோஜித்துக்கொண்டிருக்கிறார்கள். விவாகத்திற்கு பிறகு தங்கள் நாயகருடன் வெளியே போகலாமே.

நளாகினி.—சகி எனக்கு யாரை விவாகம் செய்விக்கிறதென யோஜித்திருக்கிறார்கள்?

இந்திராவதி.—தோழி எத்தேசத்து அரசகுமாரரையாவது தான் விவாகம் செய்விப்பார்கள்.

நளாகினி.—அவர்களெல்லாம் என்மனதுக்கிசையாது.

இந்திராவதி.—தோழி பின் நீ யாரை வரித்திருக்கிறாய்?

நளாகினி.— நீ என்னுயிர்த்தோழியாகையால் சொல்கிறேன் கேள். என்னுடன் கூடவே படித்து என்மனதைக் கவர்ந்த சுந்தராங்கனைத்தவிர வேறு ஒருவர் மீதும் விருப்பமிலது சகி

இந்திராவதி.— (மனதிற்குள் அவனுனக்கு வாய்த்தால் உன்னதிர்ஷ்டந்தான்.) சகி அவன் உண்மையில் அழகு வாய்ந்தவன் தான். உனக்கு சரியான இணைதான். ஆயினும், அவன் நின்பிதாவினது உத்தரவிற்கு கீழ்படிந்து நடக்கும் மந்திரி குமாரன்றோ.

நளாகினி.—அதைப்பற்றி நமக்கென்ன?

இந்திராவதி.—சரியான சம்பந்தமில்லையென்று ஜனங்கள் இகழ்வார்கள்.

நளாகினி.—(மனதிற்குள்) இவள் அபிப்பிராயத்தை யறியாமல் என் எண்ணத்தை சொல்லக்கூடாது. (பிரகாசமாக) ஏ இந்திராவதி! நன்றாயிருக்கிறது. ஏதோ அவனைப்பற்றிப் பேச்சு வந்ததினால் அழகுவாய்ந்தவனென்று கூறினேன், மற்று அவனை யான் மணக்கவேண்டுகிறேனென்று நீ நினைத்தது மிகவும் ஆச்சரியமே.

இந்திராவதி—அப்படியாயின் நான் நினைத்தது பிழையே; அவை யெல்லாமிருக்கட்டும், அவர் நின்னுடன் அநேககாலம் கூடிப்படித்தவர்தானே அறிவும் அவர் வடிவத்திலும் படிப்பிலும் சிறந்தவர் என்பதற்கு ஐயமில்லை. தவிர அவரும் உன் மீதில் காதல் கொண்டிருக்கிறார்போல் தோன்றுகின்றனர்.

நளாகினி.—சகி அவனிடத்தெனக்கன்பில்லையே.

இந்திராவதி.—அப்படியானாலென்ன, உன்னையவர் விரும்புகிறார்.

நளாகினி—தோழி அவன் காதலை இதுவரையும் வெளியிட்டிலனே நீ எப்படியறிந்தாய்?

இந்திராவதி.—தோழி எப்படியா அறிந்தேன், மேற்சாம்பற் பூத்த நெருப்பன்றோ தூண்டின் மிக்கு எரியும்.

நளாகினி.— அப்படியானால் நீ எவ்விதத்தாலறிந்தாய்?

இந்திராவதி.—சகி நேற்றுக்காலை மந்திரியின் பெண்சாதியிடம் போய் பேசியிருந்து திரும்பும் சமயத்து அவன் எதிர்ப்பட்டனன். அப்பொழுது அவன் முகக்குறியாலறிந்தேன். ஆ! ஆ! சகி மறந்து விட்டேன், உனக்கிந்த கடிதத்தை யாவனோ ஒருவன் கொடுத்துப்போனான்.

நளாகினி.—(கடிதத்தை வாங்கிக்கொண்டு) நளாகினிக்கு யாரெழுதி யிருக்கலாம்.

இந்திராவதி.—அது தான் பிரித்துப்பார்த்ததும் தெரியும்.

நளாகினி.—யார் உன்னிடம் கொடுத்தது சொல்லடி? விசாரியாமற் கடிதம் வாங்கலாமா?

இந்திராவதி.—சுந்தராங்கர் நண்பரான மதிவல்லபன் நளாகினியம்மா எங்கேயென்றதும் யான்தானென்று சொல்லி அவன் கொடுத்த கடிதத்தை வாங்கி வந்தேன், உன் பெயரால் வாங்கியதற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

நளாகினி.—ஆ இந்திராவதி! நல்லதாய்க்கிழவியாயினையடி. (பாடுதல்).

உன்னை யென்னரணமாக
வுன்னி நின்பாலென்று
மன்னிய வன்பூண்டு
வரம்பிலா மகிழ்ச்சியார்ந்தே
னன்னியர் வந்தெதிர்க்கு
மமயத்தி லென்னைநீயன்னோர்க்
கொன்னுற நலியக்காட்டிக்
கொடுத்திட நன்றுநன்றே.

பரபுருஷர் கொடுக்கும் கடிதத்தையோ வாங்குவது, என்னுடைய மங்கைப்பருவத்திற்குக் கேடிழைக்கின்றாய், உன்னைப்போலல்லவோ எனக்கிரண்டுதோழியர் வேண்டும், இக்கடிதத்தைக்கொடுத்தவனிடம் திருப்பிவிடு. (கடிதத்தை இந்திராவதி மீது எறிதல்.)

இந்திராவதி. — காதலன் கடிதத்தை வாங்கியதற்கோ இப்படி கோபிப்பது! நன்றாயிருக்கின்றது.

நளாகினி. — நான் காதலித்ததைக் கண்டவள்போல் பேசுகிறாயே சரிதான்போடி.

இந்திராவதி.— (தனக்குள்) பிரசித்தஞ் செய்யாதிருக்க வேண்டுகின்றாயோ, நன்று அப்படியே செல்கின்றேன்.

(இந்திராவதி நிட்கிரமித்தல்,)

நளாகினி.—(சிறிது நேரம் சும்மாவிருந்து பிறகு பெருமூச்செறிந்து) ஆயினும் அக்கடிதத்தை யான் பார்க்க மிகவும் விரும்புகின்றேன், என் செய்கிறது. என்ன பைத்தியகாரியாகினேன், அவளைத்திரும்பவும் அழைத்துயான் செய்தகுற்றத்திற்காக மன்னிப்புக்கேட்டுக்கொள்வதை விட வேறு அவமானமில்லை. என்ன புத்தியற்றவளாயிருக்கின்றாள். யான் யுவதித்தன்மையுற்றவளென்று சிறிதும் நினைத்தாளல்லளே. காதல் விஷயத்தில் மங்கையர் மறுப்பனவெல்லாம் விரும்புவனவென்று உணர்ந்தாளல்லளே - தன் காதலுற்றவனைக் குறித்து வேறுயாராவது ஏதேனும் சொன்னால் மங்கையர் நாணுறுவது சுபாவமன்றோ. சீ பாழுங்காதலே! உன்னால் என்ன புத்தியீனமாய் எனது உயிர்த்தோழியென்று கூடப்பாராமல் கோபித்துக்கொண்டேனே, எவ்வளவுவஞ்சகமாய் என்மனம் சந்தோஷத்தையடைந்திருப்ப முகம் கோபத்தைமேற் கொண்டது. முகம் அகத்தினிகழும் எண்ணங்களை வெளியிடுமென்கிறார்களே, அது பச்சைப்பசும் பொய்யே, என்னருமைத்தோழி! இந்திராவதியை யழைத்து யான் மன்னிப்புக்கேளாவிட்டால் என் மனமாறாது. ஏ தோழி இந்திராவதி! சகி இந்திராவதி!

(இந்திராவதி பிரவேசித்தல்.)

இந்திராவதி.—சகி நளாகினி! எதெற்காக கூப்பிட்டீர்கள்.

நளாகினி.—தோழி இந்திராவதி என் மீது என்ன அவ்வளவு கோபம்.

இந்திராவதி.— அப்படி யொன்றுமில்லை (கடிதத்தை நழுவவிட்டுப் பின்பு அதைக்குனிந்தெடுத்தல்.)

நளாகினி.—என்ன குனிந்தெடுத்தாயே.

இந்திராவதி.—வேறொன்றுமில்லை, என் கையினின்றும் விழுந்த கடிதத்தை யெடுத்தேன்.

நளாசினி.—கடிதம் யாருக்கு?

இந்திராவதி.—எனக்கன்று.

நளாகினி.—பின் யாருக்கு, உனக்கன்றாயின் அவ்விடத்திலேயே போட்டுவிடுகிறது தானே.

இந்திராவதி.—அம்மா அஃதவ்விடமிருக்கலாகாது, அன்றிப்பார்க்ககூடாதவர்கள் ஒருக்கால் பார்க்கும்படி நேரிடும்.

நளாகினி.—சகி! உன்காதலன் எழுதிய கடிதமோ? அப்படிச் சொல்கின்றாய்.

இந்திராவதி.—தோழி! என் காதலர் எழுதிய கடிதமாயின் நீ ஏன் பார்க்கலாகாது இதோபார். (கடிதத்தை கொடுத்தல்)

நளாகினி.—(கடிதத்தை வாங்கியுற்று நோக்கி) அந்தக் கடிதமா சீ! இந்த தரித்திரம் இன்னம் துயர்விளைவிப்பதற்காகவோ? (கிழித்தெரிதல்).

இந்திராவதி.—(தனக்குள்) அம்மம்மா இந்த இடமெல்லாம் குப்பையாயிற்றே. (கடிதக்கிழிகளை எடுத்தெரிய எத்தனித்தல்.)

நளாகினி.—(கோபத்துடன்) அவை யெல்லாமப்படித் தானிருக்கட்டும் நீ போ.

இந்திராவதி.—(தனக்குள்) பெண்கள் தங்கள் இச்சையை சுலபமாக வெளிவிடுகிறதில்லை. இப்போது இப்படித்தான் கோபிப்பாள். இன்னமொரு கடிதம் வந்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்.

(இந்திராவதி நிட்கிரமித்தல்.)

நளாகினி.—(சிறிது ஆலோசித்து) என்னகோபம், தத்துவசாஸ்திரிகள் கோபத்தை யொருவித பைத்திய மென்கி

றீர்களே, அஃது உண்மைதான். ஓ பழிகாரக் கரங்களே! என்ன நீங்கு விளைவித்தீர்கள், காதலன் உயிர்க்காதலன்-எழுதிய கடிதத்தையோ கிழிப்பது? ஆம், "பெண்களுக்குப் பின்புத்தி யென்கிறீர்களே" அது மிகவும் உண்மையே - நன்று யான் கிழித்த பிழைக்காக இவ்வொவ்வொரு துண்டுகளையும் எடுத்து முத்தங்கொண்டு கண்ணில் ஒற்றிக்கொள்வேன். (ஒரு துண்டையெடுத்து) இதோ யார் "என் பிரியமுள்ள நளாகினி" யென்று எழுதி யிருக்கின்றது. பிரியமுள்ளவளோ யான். பகைமையுற்றவள். ஓ நளாகினி நீ செய்த பிழைக்காக இதோ உன்பெயரை காலாலுதைத்துத் தள்ளுகின்றேன். (அவ்விதமே செய்தல்) மற்றொரு துண்டை யெடுத்து ஆ! ஆ! அனங்கனம்பு பாய்ந்த சுந்தராங்கா என்றிருக்கிறது. என்தலைவா, என்னுயிர்நாதா, பிராணேசா, அம்புப்புண்ணேறுற்றாய், என் கண்மலர் அக்காயத்தை யாற்றட்டும், (கண்ணி லொற்றிக்கொள்ளுதல்) அப்படியும் ஆறுமற்போனால் என் அதரத்தின் பரிசத்தாலேனும் ஆறட்டும் (முத்தங்கொடுத்தல்) என்ன துர்பாக்கியமுடையவளாகினேன். (வேறொரு துண்டெடுத்துக்கொண்டு) இதோ "காந்தட்காதத்தாய்" என்று வரைந்துளது, காந்தட்கரமோ இது கரங் கொலைப்பாதக கட்கமன்றோ (வேறொருதுண்டெடுத்து) என்னருமைக் கண்ணாளனது நாமம் இரண்டு மூன்றுதர மெழுதியிருக்கின்றது. (சிறிது காற்றி லசைதல்) ஏ வளியே! இவ்வாறு இத்துண்டுகளைப் பறக்கச் செய்து ஏனென் விரகாக்கினியை வளர்க்கின்றாய்? ஆகா மறந்தேனே உன் றன்மையதுவே யன்றோ, நீயும் காமத்தீபகப் பொருள்களுள் ஒன்றன்றோ (பாடுதல்)

ஒருவன்றன் குணகுணங்களனைத்தினையு
நன்றாக வுணரவேண்டின்
மருவுமவன் குழுவினது குணங்களினா
லறிகவென மாந்தர்சொல்வா

ரருந்தலைவர்ப்பிரிந்தவரை வாட்டுதற்குந்
தென்றனீயமிழ்தமென்னும்
யொருவருநற்றமிழுடனே பிறந்துமேனோ
வருத்துமியல்புணர்ந்தவாறே.

(வேறொரு துண்டை யெடுத்துக்கொண்டு) இதோ ஒரு முழுவரி யகப்பட்டது. "நளாகினி நின்மீது நாட்டங்கொளாலாகில் காதற்கடலகத்தழுந்திய சுந்தராங்கா! உனக்கென்ன கெதியிருக்கின்றது. ஓ நளாகினி! நீ என் நாதன் நாமத்தருகே இருத்தல் தகாது. (சிறிது கிழித்தெடுத்தல்.)

(இந்திராவதி பிரவேசித்தல்.)

இந்திராவதி.—அம்மா யான்வீட்டிற்குச் செல்லும்அமையத்து உனது அருமைத்தாய் தனதாண்மைக்கு உந்தனை வரும்படி கட்டளையிட்டனர்.

நளாகினி.—ஆயின் இதோ போகலாம் வா.

இந்திராவதி.—அம்மா இக்கடிதத் துண்டுகள் இப்படித்தானோ இங்கு கிடக்கவேண்டும்.

நளாகினி.—ஆனா லெடுத்தப்புறப்படுத்து.

(இந்திராவதி யெடுத்தெறிதல்.)

இந்திராவதி.—சரி போகலாம் வா.

நளாகினி.—எனதாருயிர்த் தோழி! எனதாசைக் கண்ணாளர் எந்தனுக்கு எழுதியலிகிதத்துக்கு எனது பதல் கடிதத்தை எப்படியாவது ரகசியமாய் சுந்தராங்கனிடம் கொடுத்து வா, யான் செல்கிறேன்.

இந்திராவதி.—தோழி! முன் நான் கடிதங்கொடுத்ததற்கு என்னை வெறுத்து நிரம்ப கோபித்துக்கொண்டனையே?

நளாகினி—எனதாருயிர் தோழி! நான் செய்த குற்றத்தைப்பொறுத்து இது சமயம் என்னைக்காப்பற்ற வேண்டும்.

இந்திராவதி.—தோழி! நீ முன் சங்கோசப்பட்டு உன் எண்ணத்தை வெளியிடாதது பெண்களுக்குள்ள சுபாவந்தான்; ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், நின்மனதின்வண்ணம் முடித்து வைக்கிறேன், நீ செல் நான் போய் வருகிறேன்.

(எல்லோரும் நிட்கிரமித்தல்.)

ஆறாவது களம்.

இடம்—மந்திரியின் கிரகம்.

பாத்திரங்கள் - சுந்தராங்கன், இந்திராவதி.

சுந்தராங்கன்.—(மனதிற்குள்) ஆ யானென்செய்வேன், என் மனதைக்கவர்ந்த காதலியாய நளாகினிக்கு யான் நிருபமெழுதினேனே, அதற்கு யாதொரு மறுமொழியும் வரக்காண்கிலேன், ஐயோ! என்மனம் அவளது கருவிழித்தோற்றத்தால் மிகக்காதல்கொண்டுவருந்துகின்றது. மன்மதனோ இது தான் சமயமென எந்தனை வாட்டிநிற்கிறான்; ஐயோ! நேற்று இரவு யானடைந்த துயரத்தை என்னென்று மொழிவேன்.

மந்தமாருதம், குயிலின்சப்தம் முதலிய மகாபாபிகளது சேர்க்கையினால் அரவின்வாய்ப்பட்டதேரைபோல் மயங்கி தியங்கி அறிவிழந்து எப்போது உதையமாகுமென் எதிர்பார்த்திருந்தேன்; ஆனால் யான் எவ்விதத்துன்பமுறினும் நளாகினி அதைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்பதென்ன! அவசியமா? அவளோ மேன்மை பொருந்திய அரசகுமாரி, யானோ அன்னவரது ஆக்ஞையின் வண்ணம் ஏவல் புரியும் மந்திரியின் குமரன், எனது யோக்கியதையும் அன்னவள் மேன்மையையும் ஆலோசிக்கில் அஜகஜாந்திரமன்றோ? அன்னவள்மீது யான்கொண்டகாதல்போல் அவளென்மேல் கொள்ளாளாகில் யான் கொண்ட விரக சோகத்தினால் உயிர் துறக்க

சென்னை-600 008.

வேண்டுவதல்லது மீளும் வழியே[illegible]ன்று மிலது. ஆனால் பாடசாலையைவிட்டு நீங்கும் அமையத்து எந்தனையே மணப்பேனென எனக்காறுதல் மொழிந்தனள், ஆயின் அவ்வண்ணமே நளாகினி ஞாபகத்துடன் எந்தனையே மணப்பாளென யான் நினைப்பது வீணே, உயர்குலபெண் மகளிரது நோக்கம் ஒருவாறு நிதானிக்கவல்லதல்ல, ஆயினும் நளாகினி சொன்னசொல் மறவாள் எனத் துணிபுகொண்டிருக்கிறேன், தெய்வச்செயல் எப்படியோ.

(இந்திராவதி பிரவேசித்தல்.)

சுந்தராங்கன்.—யார் தோழி இந்திராவதியா? ஏது இவ்வளவு தூரம் இவண்வந்தது, நளாகினி சுகமாக சந்தோஷத்துடன் நின்னைபோந்த சகிமார்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறாளா?

இந்திராவதி.—சுந்தராங்கா! நளாகினி சவுக்கியமே, ஆனால் நீ அனுப்பிய விகிதமானது அவளை அவளது தோழிகளுடன் விளையாட இடம் கொடுக்கவில்லை, அவளதைப்பார்த்ததுமுதல் யாரைக் கண்டாலும் சீரிச்சீரிப் பேசுகிறாள். ஆனாலும் அவள்நினக்கு ஒருவிகிதம் அளித்தாள் இதோபார். (கடிதத்தைக் கொடுத்தல்.)

சுந்தராங்கன். — கடிதத்தைக்கண்டதும் மிக்கக்காதலுடன் இந்திராவதி சமீபத்திலிருப்பதை மறந்து கடிதத்தைப் படித்தல். என் அன்புள்ள நளாகினி! நின்முகத்தின் செவ்வியைக்கண்டு மயங்கிய யான் இத்திருமுகத்தின் செவ்வியால் எவ்வாறாகுவேன். உன் தாமரைக்கரத்தாலெழுதிய கடிதமன்றோ இது? இதைமுத்தங்கொள்வேன். (அவ்வண்ணமே செய்தல்) என்னபயன், மனத்தின் எண்ணங்களை வெளியிட்ட அக்கரத்தையே என்று பற்றித் தகுந்தகைம்மாறு செய்வேன், ஓகாதற்கிளியே நளாகினி! (பாடுதல்).

திங்களையே முகங்கொண்டு மழையதனைத்
தலைகொண்டு திரியுமன்னன்
மங்கையர்களுங் கணையேன் பங்கயத்தோன்
அங்கமெலாமலர்க ளென்ன.
செங்கையினாற் படைத்திட்டு மனமொன்றை
யிரும்பென்னச் சிலையதென்ன
வெங்களைத்தான் வருந்திடற்குவன்மையுறப்
படைத்தனனோ வினியென்செய்கேம்.

ஆரிழையாளே! நின்மனம் எவ்வாறோவென சங்கிப்பதற்கு நினது தோழி மொழிந்ததை யுற்றுநோக்கில் அவ்விதம் நினைப்பது பெரும்பிழையே, ஆயினும் பிரியசாதகி! நீ இன்று இரவு பத்துநாழிகைக்குமேல் ஒருவருமறியாது நினது கன்னிமாடம் வரும்படி வரைந்தனையே, அவ்விதமே யான் வரும் அமையத்து நீதனித்திருப்பையோ, நின்சகிமார்களெல்லாம் சமீபத்திலிருப்பார்களே! ஆயின் எவ்விதமும் யான்வருகின்றேன், எந்தனுக்கு நினது சந்திர பிம்பமுகதரிசனத்தையும், அமிர்தத்தினு மினிய வசனத்தையுமாவது அளிக்காவிடில் அநியாயமாக நினது அன்புள்ள தோழனாகிய யான் அந்த கன்றன்பதியடைவதில் ஆட்சேபனை இலது. பைங்கொடியே! இனிதாமதிக்க எந்தனால் முடியாது, என்செய்வேன்.

(மூர்ச்சித்தல்.)

இந்திராவதி.—ஆ! இது வென்னவிந்தை! நளாகினிபட்டபாட்டையும் அவளது வார்த்தைகளையுங் கேட்டு இவண் வந்து சுந்தராங்கனிடம் விகிதம் கொடுக்க அன்னவன்யானிருப்பதையும் மறந்து மொழிந்த காதல்வசனங்களையும்அவன் மூர்ச்சித்ததையும் பார்த்தால் நளாகினி கிஞ்சித்து தேறுதலடைந்தவளென எண்ணக்கூடியதாக இருக்கிறது; இது சமயம் நாம் சும்மா இருக்கலாகாது, இவனதுகளையைமாற்றி எப்படியாவது இன்று இரவு அஸ்தமித்தவுடன் இவ்விருவ

ரையும் ஒருவருக்கொருவர் நேரில் சந்தித்து சம்பாஷிக்கும்படி செய்யாவிடில் நன்றன்று, ஆகையால் இவன் மூர்ச்சையை தெளிவிக்கின்றேன்.

(சைத்தியோபசாரஞ்செய்து மூர்ச்சைதெளிவித்தல்)

இந்திராவதி.—ஏ சுந்தராங்கா! என்ன நினதுநிலைமை பரிதாபமாக இருக்கிறது; ஐயோபாவம் கிலேசப்படாதே, நீ நளாகினியின் விகிதப்படி அஸ்தமித்தவுடன் கன்னிமாடம்வரில் நின்மனதின்படி சகலத்தையும் முடித்துவைக்கிறேன், நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே; நின்மனதை திடப்படுத்திக் கொள், யான்சென்று வருகிறேன்.

(இந்திராவதி நளாகினியிடம்செல்லல்.)

நளாகினி.—சகி இந்திராவதி யான் நின்பாலளித்த கடிதத்தை எனதாசைநேசரான சுந்தராங்கரிடம் அளித்தனையா, அவர் விடையேதாவதளித்தனரா?

இந்திராவதி.—நீ என்பாலளித்த விகிதத்துடன் சுந்தராங்கன் அரண்மனைசெல்லும் அமையத்து அவர் நின்மீது காதல்கொண்டு மிகத் துயருற்றிருந்தனர்; நின்கடிதத்தை அன்னவரிடமீந்ததும் அவர் அதை வெகு அன்போடு வாங்கி முத்தமிட்டுப் பிரித்துப்பார்த்தவுடன் முன் அன்னவர் நினக்களித்த கடிதத்தை யான் நின்னிடம் அளிக்க நீ முனிவுடன் அக்கடிதத்தை கிழித்தெறிந்து பின் ஒவ்வொரு துண்டையுமெடுத்து எப்பாடுபட்டாயோ அதைவிட ஆயிரமடங்கதிகமாய் பரிதவித்து மூர்ச்சையாகினர்; உடன் அவரது மூர்ச்சைதெளிவித்து தக்க தைரியமொழி பகரிவந்தேன்; நீ அவருக்கு எழுதிய விகிதப்படி இன்று இரவு அவசியம் அவர் இங்ஙனம் வருவர்; நீ மயங்காதே, அவர் விடையளிக்க சக்தியற்றவராயிருந்ததனால் பதில் ஒன்றும் மொழியவில்லை.

நளாகினி.—(மனதிற்குள்) அவர் எவ்வளவு அன்பாயிருக்கிறார். நான் பதட்டமாய் கடிதத்தை கிழித்தேன்.

(பிரகாசமாய்.)

அன்னை நிகர்த்த ஆருயிர்த்தோழி! இனி உன்னுடன் உண்மை மொழியாது மறைத்துவைப்பதில் யாதும் பிரயோஜனமிலது; நான் அவரை இவண்வரும்படி அழைத்தது எதற்கெனில், என்பிதாமாதாக்கள் என்மனமறியாது வேறொருநாயகனுக்கு எந்தனை மணம்செய்விக்ககருதியிருக்கிறார்கள். என்மனமோ சுந்தராங்கனிடம் அடிமையாயிற்று, இச்சங்கதி அவர்களறியில் எந்தனை நிந்திப்பதுமன்றி இராஜகெர்வத்தால் சுந்தராங்கனை வதைப்பார்கள்; அப்பொழுது என் பிராணன் நிற்கவறியாது. இதையெல்லாம் ஆழ்ந்து யோஜித்து ஒருமுடிவுசெய்தனன்; அது யாதெனில் சுந்தராங்கனை இன்று இரவு இவணழைத்து எனதாசைப்பெருக்கத்தை மொழிந்து அன்னவருடன் மறுதேயம்நண்ணி காந்தர்வ மணம்செய்துகொண்டு சுகித்திருப்பின் என் மாதாபிதாக்கள் உதயத்திலெந்தனைக்காணாது எங்குந்தேடி யாங்களிருக்கும் நகரம்வந்து எங்கள் அன்னியோன்னியத்தைக் கண்ணுற்று சுந்தராங்கனை வதைப்பின் நமது ஏக புத்திரியானவள் விதவையாவள், அதனால் நமக்கு நீங்காதுக்கமாமென எண்ணி சந்தோஷத்தோடு இவணழைத்துவந்து சுந்தராங்கனுக்கும் எந்தனுக்கும் விவாகம்செய்விப்பார்கள். அன்றேல், வேறுவழியிலது; நினக்கு எப்படித்தோன்றுகிறது.

இந்திராவதி.—தோழி வாஸ்தவம், காலதேசவர்த்தமானத்தை நன்குணர்ந்திருக்கின்றாய்; அதற்கு நான் வேண்டிய ஒத்தாசைசெய்கிறேன்; நீ கவலையையொழி, என்னை வேறாக நினையாதே.

(இருவரும் நிட்கிரமித்தல்.)

ஏழாவது களம்.

இடம்.—நளாகினியின் அரண்மனை.

பாத்திரங்கள்.—சுந்தராங்கன், நளாகினி, இந்திராவதி.

சுந்தராங்கன்.— ஆ எனது ஆருயிற் காதலியாய நாளாகினிவரைந்தனுப்பிய லிகிதத்தின்வண்ணம் இன்று அவளது அரண்மனைசெல்லவேண்டுமென்றோ; இப்பொழுது சூரியன் மறைந்து 3 நாழிகையாயிற்று, காரிருள்சூழ்ந்தது, இதுசமயம் ஒருவருமறியாது அவ்வரண்மனை நாடிச்செல்கின்றேன்.

(சுந்தராங்கன் நிட்கிரமித்தல்.)

நளாகினி.—தோழி இந்திராவதி! இப்பொழுது அஸ்தமித்து 3 நாழிகையாயிற்று, அஞ்சனத்துக்கொப்பான இருள் சூழ்ந்தது, மற்ற சேடியர்களை அநேக போக்குகள்மொழிந்து அவரவர் வீட்டிற்கனுப்பிவிட்டேன், சுந்தராங்கர் ஒருக்கால் என்மீதுள்ள ஆசைப்பெருக்கினால் சீக்கிரமேவந்து நமதரண்மனை வாயலில்நிற்க அதைச் சேவகர் அறிந்து அரசருக்குத் தெரிவிப்பின் என் காதலருக்கு அவசியம் ஆபத்துநேரிடும். ஆகையால் நீ எந்தன்மீது கருணைசெய்து அரண்மனைவாயலில் நின்றுகொண்டிருந்து அன்னவர்வந்தவுடன் வெளியில் நிற்கவையாமல் உடனே இவணழைத்துவா.

இந்திராவதி.—நளாகினி நீ துயர் அடையாதே, இதோ நான் சென்று நினது ஆசைநாயகரை ஒருநொடியில் அழைத்துவருகிறேன்.

(இந்திராவதி நிட்கிரமித்தல்.)

(சுந்தராங்கன் பிரவேசித்தல்.)

இந்திராவதி.—யார் இவ்விடத்தில்?

சுந்தராங்கன்.—இந்திராவதி! யான்தான் சுந்தராங்கன்.

இந்திராவதி.—சுந்தராங்கா! இந்த புடைவையை கட்டிக் கொண்டு முக்காடிட்டு நீ யாதொன்றும்பேசாது என்பின்வா.

சுந்தராங்கன்.— அப்படியேவருகிறேன். (புடைவையைக் கட்டிக்கொண்டு அந்தப்புரத்தில் பிரவேசித்தல்.)

நளாகினி.—பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

நமஸ்கரித்து லஜ்ஜையுற்று ஒருபுறமாய் ஒதுங்கிநிற்றல்.

சுந்தராங்கள்.—கல்யாணம் பிரியசகி (ஆசிர்வதித்து ஒன்றும் மறுவார்த்தைமொழியாது நளாகினியைப்பார்த்துக் கொண்டு வீற்றிருத்தல்.)

இந்திராவதி.—சகி நளாகினி! நீ கொண்டகருத்திற்கு இது அழகல்ல, இப்படி நிற்பது யாவருக்கும் நிந்தையையும் துயரத்தையும் வருவிக்குமென உந்தனுக்குத் தோற்றவில்லையா? என் லஜ்ஜையுற்று நிற்கிறாய்.

நளாகினி.—சகி! புருஷனென்று வந்துவிட்டால் லஜ்ஜை முன்னிற்கிறது. மேலும் நாம் உத்தேசித்த காரியவிஷயத்தில் என்மனம் ஏதோ ஒருவிதமாயிருக்கிறது,என்செய்வேன்.

இந்திராவதி.— சகி படைமுகத்தில் ஒப்பாரியுண்டோ? காரியத்தைப்பார், லஜ்ஜைக்குச் சமயமிதல்ல, பெரியோரறிய கூடும்போது வெட்கப்படலாம்.

நளாகினி.—(தைரியத்துடன்) எனதாருயிர் சுந்தராங்கா சவுக்கியமா?

சுந்தராங்கன்.— பெருமூச்செறிந்து, பிராணப்பிரியே! நினது கருணையினால் சுகமே.

நளாகினி.—தோழா! இதுசமயம் நாம் இருவரும் இங்கு சம்பாஷித்திருக்கும் காலமன்று, ஆகையால் தாம் துரிதமாக தமது கிரகஞ்சென்று இரண்டுகுதிரையும் தமது உடையைப் போல் ஆண்பிள்ளைகள் தரிக்கும் இன்னொரு உடையும் தயார் செய்துகொண்டு இந்நகரத்திற்கு மேற்றிசையிருக்கும் வனத்தின் ஓரமாயுள்ள சாவடியில்வந்திரும், யான் இரவு 15 நாழிகைக்கு அவ்விடம்வருகிறேன், தாமதிக்கவேண்டாம்.

சுந்தராங்கன். — (இந்திராவதியிருப்பது ஞாபகம் இல்லாது நளாகினியைக் கட்டிச்சேர்த்து முத்தமிடல்) நாயகி நினது உத்தரவின்வண்ணம் சென்று குறிப்பிட்டவிடத்தில் ஜாக்கிரதையாக இருக்கிறேன்; நீ தாமதியாமல் வந்துசேர வேண்டும்.

நளாகினி.—நாதா! சென்றுவாருங்கள். இந்திராவதி! கூடவேபோய் சமயம்பார்த்து முன்போல் வேஷமாறி வெளியிலனுப்பிவா.

சுந்தராங்கன்.—இந்திராவதி! நினது கருணையினால் யான் தன்னியனானேன், இதோ யான்சென்று என்னுசைக்கண்ணாட்டி மொழிந்த சாமான்களுடன் குறித்த இடத்தில் ஜாக்கிரதையாகபோய்ச் சேருகிறேன். நீ கருணைசெய்து அவளை இன்னல்லிருளில் ஒண்டியாகவிடாது கூடவேவரவேண்டும். சென்றுவருகிறேன்.

(சுந்தராங்கன் நிஷ்கிரமித்தல்.)

இந்திராவதி பிரவேசித்தல்.

நளாகினி.—சகி இந்திராவதி! நாதர் ஒருவருமறியாது சென்றனரோ?

இந்திராவதி.—சகி நளாகினி யாரும் அறியார். இவ்வளவு தந்திரம் நினக்குக் கற்பித்தவர்யாவர்.

நளாகினி.—சகி அது இருக்கட்டும், எனதாசை நாதருக்கு என்மீதிருக்கும் அன்பைப்பார்த்தனையா, இவ்வளவு அன்

புள்ள நாயகரைத்தவிர்த்து வேறு ஒரு புருஷரை மணம்புரிவ தென்றால் என்மனம் சம்மதிக்குமா?

இந்திராவதி.—தோழி நினக்கிசைந்தகாதலரவரே, அன்னவருக்கிசைந்த காதலி நீயே.

நளாகினி.—தோழி நன்று மொழிந்தனை. நான் எனது நாதருக்கு மொழிந்தவார்த்தையின்படி அவரிடம்போய்ச் சேருவதெப்படி சகி.

இந்திராவதி.—சகி நளாகினி ஒன்றுக்கும் யோஜியாதே, இரவு 15 நாழிகைக்குமேல் நீயும் யானுமாக குறித்தவிடம் செல்வோம்.

நளாகினி.—தோழி இந்திராவதி! இன்றுபகலே அதற்கு வேண்டிய சங்கதிகளை முடிவு செய்துவைத்திருக்கிறேன். நாழிகை என்னவாயிற்றுப்பார்.

இந்திராவதி.—தோழி இப்பொழுது நாழிகைசற்றேறக் குறைய 15 நாழிகை இருக்கும் என்பதில ஐயமில்லை, நகரத்திலும் ஜன இரைச்சல் அடங்கிப்போய் விட்டது, செல்வோம்வா.

நளாகினி.—என்னின்னுயிர் பாங்கி! அதோவைத்திருக்கும் மூட்டையொன்றைமட்டில் எடுத்துக்கொள், ஜகதீசன் தீனையான என் மீது கருணையுவந்து நகர்சுற்றி வரும் சேவகர் காணாது குறித்தவிடம் கொண்டுசேர்க்கவேண்டும், புறப்படு.

(இருவரும் நிட்கிரமித்தல்)

சுந்தராங்கன்.—ஜகதீசா! நின் கருணையென்மீது பூரணமாயிருத்தல் வேண்டும்; யானோ எனதாசை நாயகியின் உரையின்படி இரண்டுபரிகளும் இரண்டு ஆறுடையுடன் நளாகினி குறித்த இடத்திற்கு என் மாதா பிதாக்களுங் கூட அறியாது செல்கின்றேன். நகரில் காவலர் ஒருவரும் எந்தனைக்காணாது அருள் புரியவேண்டும், அப்படிக்காணுவாராயின் இருபரியுடன் செல்லக்காரணம் யாதெனப்பிடித்து அரசசமுகம்விடுப்பர், யானும் உண்மையைச்சொல்லநேரிடும். அது எந்தனுக்கு நீங்காப்பழியை விளைவிக்கும். சகலத்திற்கும் நீரே துணை செய்யவேண்டும்.

சுந்தராங்கன் வனத்தோரம் இருக்கும் மண்டபம் அடைந்து குதிரையைக்கட்டி.

சுந்தராங்கன்.—ஆ! இது யென்னவிந்தை, நாம் ஒருவரும் காணாது கறைக்கண்டர் கருணையினாலிவ்விடம் அடைந்தோம், இன்னமும் நாளாகினி வரக்காண்கிலேனே, ஓகோ ஒருக்கால் அவள் இவண்வரும்பொழுது சேவகர் யாராவது குறுக்கிட்டு அறிந்தனர்களோ, அன்றேல் அபலையானதால் நித்திரைபோய்விட்டனளோ, அன்றேல் இக்காரிருளில் எப்படி செல்வதென நின்றுவிட்டனளோ, அன்றேல் அவளது சங்கதி மாதாபிதாக்களுணர்ந்து மிகுந்தகாவலியற்றினரோ, பேதைக்கென்ன ஆபத்துநேர்ந்ததோ, ஒன்றும் அறிகிலேனே, அன்றியும் யான் இவண் வந்திருப்பதை சேவகர் காண்பராயின் இந்நல்லிருளில் இவண்வரக் காரணம்யாதெனவினவில் யாம் மறுமொழிபுகல்வது யாது, ஒன்றும் தெரிகிலேனே, ஜகதீசா! அதோ யாரோ இருவர்வருவதுபோல் தோற்றுகிறது பார்ப்போம்.

நளாகினி.—சகி இந்திராவதி! என் நாதர் இவண் வந்திருப்பாரோ ஒருக்கால் வராவிடில் நான் என் செய்வது, திரும்பி அரண்மனைக்கேகுவோ மென்கில் நடுவில் சேவகர் காணில் என்னும்; என்மனம் ஊசலாடுகிறதே.

இந்திராவதி.—சகி நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. அன்னவர் அவசியம் அவண் வந்திருப்பார்; ஏனெனில் அவர் நின்னைவிட உன் மீது மிகக்காதலுற்றவர் என்பது யானுணர்ந்ததே;

ஆகையால் நீ பணித்தபடியே ஜாக்கிரதையாக வந்திருப்பார் என்பதில் ஐயமிலது.

நளாகினி.—சகி இதோ மண்டபத்தருகிற் வந்துவிட்டோம், எனதாசைக்கண்ணாளர் வந்துவிட்டார் என்பதில் ஐயமிலது. ஏனெனில், அதோபார் இரண்டுபரிகள் கட்டப்பட்டிருக்கின்றது. பரிதாபம்! எப்பொழுதுவந்தனரோ என்னைக்காணாது ஏங்கினரோ அறியேன்; சகி செல்வோம் வா. காந்தா! ரமணா!

சுந்தராங்கன்.—கண்மணி காத்திருக்கின்றேன்.

நளாகினி.—ரமணா! இவண் சம்பாஷிக்க ஏற்ற இடமன்று, புரவிமீதூர்ந்து கொஞ்சதூரம்சென்று சம்பாஷித்துக் கொள்வோம்.

இருவரும் ஆளுக்கொரு புரவிமேலேறி, நளாகினி இந்திராவதியை பார்த்து, சகி இந்திராவதி! இனி நீ தாமதியாது நினது கிரகம்சென்று சயனித்திருந்து உதயத்து அரண்மனை செல். இதோ இந்த இரத்தினஹாரத்தைப் பெற்றுக்கொள்.

இந்திராவதி.—நளாகினி! நின்னை யான் மறுபடி எப்பொழுது காண்பது.

நளாகினி.—சகி! விசனப்படாதே கூடியசீக்கிரமே காணலாம், நீ செல், நாங்கள் செல்கிறோம்.

(இந்திராவதி நிட்கிரமித்தல்.)

சுந்தராங்கன்.—சகி பரியை எத்திசை செலுத்துவது ?

நளாகினி.—காந்தா! நமக்கு பாதைவழியேதேனும் உளதோ ? நம் மனம் சென்றதெல்லாம் மார்க்கமே.

சுந்தராங்கன்.—பிரியதமே! பரியை கூடவே என் பக்கல் நடத்திவா.

நளாகினி.—பிரபோ! உம்முடன்கூடி படித்ததால்தான் குதிரையேற்ற முதலிய யுத்தப்பயிற்சி பெற்றேன். அதனால் தமக்குச்சரியாக அசுவத்தை நடத்தச் சக்தியுற்றிருக்கிறேன். காந்தா! நாம் பிறந்த செல்வமென்ன வளர்ந்த பெருமையென்ன, நாம்இருவரும் இணைபிரியாதுபடித்தமேன்மையென்ன நம்மிருவருடைய காதலையுணராத யென்தகப்பன் நினைத்த எண்ணம் என்ன, ஜகதீசரது கருணையினால் நமதெண்ணத்தின்படி நம்முயற்சியின் முடிவென்ன, இதையெல்லாம் ஆலோசிக்கில் எந்தனுக்கு சிரிப்புவருகின்றது.

சுந்தராங்கன்.—பிரியகாதலி! நகைப்பிற்கிடமேது? நீயும் யானும் பாலியமுதல் பிரியாநேசரா யிருந்ததுபோலவே இது சமயமும் பிரியாதிருக்கிறோமே, இதுதான் உசிதம். அன்றியும் நினதுபெருமையை எடுத்துரைக்க நான்தரமன்று, ஏனெனில் நீயோ இராஜகுமாரி, மிகச் செல்வமுள்ளவள், அதிக லக்ஷணவதி, வித்தையில் சாரதை, புத்தியில் பிரகஸ்பதி, அவ்வளவு மேன்மையுற்ற தருணி. நின்பிதாவினது கருணையினால் காப்பாற்றப்பட்டவரான என் பிதாவினது ஏழ்மைத்தனத்தின் வண்ணம் யானும் ஏழையன்றோ? அப்பேர்ப்பட்ட ஏழையாகிய யான் மூடவன் கொம்புத்தேனுக்கிச்சித்ததுபோல் நின்மீது காதல்கொள்ள நீ உந்தனது பெருந்தகைமைக்கேற்ப எந்தனை கீழோனென இகழாது என் மனமகிழும்படி எந்தனுக் கனுக்கிரகித்த ஒரு விஷத்தைமட்டில் யான் எத்தனை ஜன்மமெடுப்பினும் மறக்கவல்லதன்று. பசும்பொன்னே! மற்றும் எந்தனைக் காப்பதும் நினதுகடமையே.

நளாகினி.-நாதா! நன்று செப்பினீர். எனது பிதா அரசராயிருப்பினும்(“அமைச்சரில்லா அரசு ஆப்பில்லாச்சகடுபோலழியும்”) என்று பெரியோர் உரைத்தவண்ணம் தமது பிதா இல்லாவிடில் அரசாங்கம் என்ன பேன்பாடடையும். அது

போல் நினது பிதா சமீபத்திலிருந்து காலதேசவர்த்தமானங்களை உணர்ந்து இடம் பொருள் ஏவல் என்பவற்றை யுணர்ந்து எனது பிதாவை நடத்திவராவிடில் என் பிதாவுக்கு யோக்கியதை யாதுளது. ரமணா! அப்பேர்ப்பட்ட உத்தமருடைய புத்திரர் தாமாகையாலும் கல்வியில் எந்தனைவிட தாம் உத்தமரானதாலும் இலட்சணத்திலும் உயர்ந்தவரானதாலும் எங்கே யெந்தனை வெறுத்து விடுவீர்களோவென நடுக்குற்று சிறு வயது முதற்கொண்டு தம்மீது காதல்கொண்டிருந்த யான் ஏதோ தெய்வகடாக்ஷத்தால் தம்மை நாயகராக வரித்தனன். ஆகையால் காந்தா! காரிழையின்மீது கருத்துவந்து எந்தனை ஆதரிக்கக் கோருகின்றனன்.

சுந்தராங்கன்.—ரமணி! நன்று மொழிந்தனை, நினது கல்வித்திறமையால் மொழிந்த உசித மொழிகளானது நினது குணத்தை வெளியிடுகின்றது. ஆயினும் இதோ சூரியனும் உதயமாகினன், யாமும் வெகுதூரம் நடந்து வந்துவிட்டோம், நமது நகரம் எத்திசையில் இருக்கிறதென்றுகூட நினைப்பதற்கில்லாது போய்விட்டது. ரமணி! இன்னும் கொஞ்ச தூரம் சென்று நமது விடாயைத் தணித்துக்கொண்டு சிறிது பொழுது நித்திரைசெய்து பின் யேதாவது ஒரு நகரை நாடிச் செல்வோம்.

நளாகினி.—எந்தன் மனமோகனா! அப்படியே செய்வோம். காந்தா! இப்பொழுது நாழிகை 10 ஆகிவிட்டது, சூரியகிரண உஷ்ணம் சகிக்கலாற்றவில்லை. இரவு முழுதும் நித்திரையின்மையால் சரீரம் ஏதோ ஒருவாறா யிருக்கின்றது யென்செய்வேன்.

சுந்தராங்கன்.— சோபனாங்கி! ஒன்றுக்கும் சஞ்சலப்பட வேண்டாம். மகா பாபியாகிய எந்தனால் உந்தனுக்கு ஒருவித உபகாரமில்லாவிடினும் துன்பமென்பது அதிகரித்தது. ஆயி

னும், இதோ இந்த தடாகத்திற் சென்று அனுட்பாற ஸ்நானம்செய்து புசித்துக் களையாறி பின் செல்வோம்.

(இருவரும் குதிரையை நிறுத்தி ஸ்நானஞ்செய்து உண்டு தாம்பூலந் தரித்தல்.)

சுந்தராங்கன்.—ஏ பிரியதமே! இது சமயம் என்மனம்...

நளாகினி.—காந்தா! அதென்ன பாதிவார்த்தையிலேயே நிறுத்திவிட்டீர்கள்.

ஓ! ஓ! யானுணர்ந்தேன், ஆ! எந்தன் நேச சரஸ விலாஸ சல்லாபகாந்தா! தம் மனவிருப்பம் எப்படியோ அப்படியே அடியாள் நடப்பதில் கிஞ்சித்தும் ஐயமிலது; ஆயின், இது பகற்பொழுதாயிற்றே. காமுகற்கு பகலிரவு யென்பதுண்டோ? அதிலும் இவ்விடம் நிர்மானுஷியமானவனம், ஆகையால், நாமிருவரும் காந்தருவமணமாக கூடிக் கலந்து இன்புறலாம்

(இருவரும் திரைமறைவில் செல்லல்.)

நளாகினி.—ரமணா! இன்றுவரை காதலென்பது உடலை வருத்துகிறதே அதனால் என்ன பயன் என சிறிதுகாலம் நினைத்திருந்தேன். இப்பொழுதுதான் அதன் பயனை உணர்ந்தேன். நாயகி நாயகபாவத்திற்கு இணையாக தேவேந்திர போகத்தையும் சொல்லலாகாது. பிராணநாதா! இரவுமுழுதும் நித்திரையற்றவளாயிருந்ததால் அதிகமதிமயக்கமாகின்றது, கிஞ்சித்து சயனித்துக்கொள்கிறேன்.

சுந்தராங்கன்.—அன்னைப்பெடே! இதோ என் மடிமீது தலைவைத்து சயனித்துக்கொள், உன் ஸ்பரிசத்தினால் உண்டாகும் இன்பத்தை யான் அனுபவித்துக்கொண்டிருக்கிறேன்.

(சுந்தராங்கன் மடியின்மீது நளாகினி சயனித்து நித்திரை செய்தல்.)

4-வது அங்கம்.

முதற்களம்.

சுந்தராங்கன்.—(மனதிற்குள்) என் கண்மணியின் இலட்சணங்களை நான் இதுவரை உற்றுநோக்கினவனல்லேன்; இன்று பார்க்குங்கால் ஆ! ஆ!! என்ன சுந்தரம், என்ன வடிவம், என்ன காந்தி; (பரபரப்பாக) ஆ! இதென்ன அபாயம்! அதோ ஒரு வேங்கை பதுங்குகின்றது, அது பதுங்குவதைப் பார்த்தால் எனது சுந்தராங்கியின்மீது பாய்வதற்கு வரும்போல் தோற்றுகிறது; புலி பதுங்குவதெல்லாம் பாய்ச்சலுக்கிடமன்றோ? அது பாய்ந்தபின் கொல்வோமெனிலோ ஒருக்கால் நம் கை தவறிப்போய் அப்புலி நமது நாயகியைக் கொன்றால் பிறகு நாம் ஜீவன் வைத்திருக்கப்போவதில்லை. ஆகையால் என் மடிமீது நித்திரைகொள்ளும் நாயகியின் நித்திரைக்கு பங்கம் வாராமல் இவ்விடத்தில் உள்ள மணலைக் குவித்து அவள் தலையை அதில் வைத்து என் உடைவாளால் அது பதுங்குமிடம் சென்று வதைத்துவிடுகிறேன். ஆம் அதுவேசரி.

நளாகினியின் தலையை யெடுத்து மணலை குவித்து அதன் மீது வைத்து புலியை நோக்கிச்செல்லுதல்.

சுந்தராங்கன்.—கொடும்புலியே! அஞ்சா நெஞ்சம்படைத்து ஆரணங்கைமடிமீது வைத்திருக்கும் எந்தன் ஆண்மையை எண்ணாது கொல்ல நினைத்த நின்மாமிசத்தை இவ்வனத்தின் கண்ணுள்ள காக்கை கழுகுகள் ஆனந்தமாய் உண்ணும் வண்ணம் உந்தனைக்கொன்று அவைகளுக்கு விருந்தளிக்கின்றேன் பார்.—

சுந்தராங்கன் வருவதைக்கண்ட புலி ஓட ஆரம்பிக்க இவனும் ஓடி இப்படி வெகு தூரம் சென்று கடைசியில் சுந்தராங்கன் கையினால் புலி மாணமடைய சுந்தராங்கன் திரும்புதல்.

ஆ! இதென்ன விந்தை! நாம் இந்தப்புலியைத்துரத்தி வந்த நோக்கத்தில் வந்த வழியை கவனித்தே னல்லேன். ஆ! ஜகதீசா! வழியோ தெரியவில்லை அரஹர பரமேசா! தீனதயாளா! யெப்பக்கம் நோக்கினும் பாதையென்பதில்லாது எங்கும் புல்லும் புதரும் முட்களுமாயிருக்கின்றதே யென் செய்வேன், ஜகதீசா! இதுவும் நின் சோதனையோ. அந்தோ! ஒரு நாழிகைக்கு முன் இனிஉந்தனைப்பிரிவதில்லை யெனஎனதாருயிர்க்காதலிக்கு யானுரைத்த வாக்கு சீக்கிரமே தவறுங்காலம் நேர்ந்ததே. என்ன ஆபத்துவரினும் இருந்த இடமிருந்து அவ்வாபத்தை நீக்கமுயலாது கானகத்துக்காதலியை கைவிட்டபாதகனைப் பார்க்கப்படாதென்றோ இரவியும் அபராப்தியில் ஆழ்கின்றனன். அந்தோ! என் கண்ணாட்டி யெவ்வாறாயினளோ, எப்பாடுபடுகின்றனளோ, எத்துயரடைகின்றனளோ, என்னைமதிகேடனென நினைத்தேங்கி கதறி அழுதனளோ, ஐயையோ தெய்வமே! இனி நான் எப்படி எனதன்புள்ள நளாகினியை காண்பேன், ஏ பிரயசகி! நினக்கு நேர்ந்த ஆபத்தை விலக்கி நின்னை சந்தோஷப்படுத்தலாமென எண்ணிய இப்பாதகன் பெருந்துயரத்துக்குள்ளாகி நின்னையும் மீளாதுக்கத்திற்குள்ளாக்கினேனே, அந்தோ! பேதையே! எப்பாடுபடுகின்றனை, எங்கு அலைகின்றனை, ஆ! ஆ! (மூர்ச்சித்து பின் எழுதல்) ஹா! சுந்தராங்கி நின்னைக்காணாது நான் உயிர்வைத்திருக்கலாமோ, ஐயையோ! என்மனம் ஆழிவாய் துரும்பு போல் அலைகின்றதே, நிலைகாணேனே, என்செய்வேன், நின்னை இப்பிறப்பில் திரும்பக்காணுவனோ, காணுவதும் சந்தேகமோ, ஐயோ ஜகதீசா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! இனியென்செய்வேன். (பாடுதல்)

யான்படும் பாடுசிவனே உலகர்நவிலும் பஞ்சுதான் படுமோ
சொல்லத்தான்படுமோ எண்ணத்தான்படுமோ
கான்படு கண்ணியில் மான்படுமாறு கலங்கி நின்றேன்
என் படுகின்றுயென் றிரங்காவிடில் என்செய்வேன்.

ஏ லோக நாதா! நினைசன்னியா என்மனம் ஒரு நிலைப் படவில்லையே, இருளும் சூழ்ந்ததே, வழியும் தெரிகிலையே, ஏ வனதேவதைகாள்! பெண்மணி நளாகினியை நீங்கள் தான் காத்தல்வேண்டும், ஏ பராசக்தியே நினது கருணையினால் நளாகினியை காத்தல்வேண்டும், யான் அசக்தனாகினேன், காரிகையாளே நளாகினி! யானென்செய்வேன், நின்னைவிட்டு எந்தனைப்பிரித்த தெய்வத்தையும் விதியையும் நொந்து அழுவனோ, அன்றேல் பரமசண்டாளனாகிய எந்தனை திரபுருஷனென எண்ணிவந்த நின்னுடைய விதியை நொந்தழுவனோ, நீ படும் துயரத்தை ஒருவாறு மனதிலுன்னிவருத்தமுற்று அழுவனோ, சுந்தராங்கி! இச்சமயம் என்னுயிர் நீப்பினும் நின்பாலடைய வழியொன்றுமிலதே, ஆ! என் செய்வேன், நங்கையே யென் மனமொத்த மங்கையே, எனக்காதரவளித்த நங்கையே, யான் என்செய்வேன் விதியே, என்னை இப்படி தவிக்கவிட்டாய் கொலை விதியே, நானிழந்தது பெண்ணிதியே, என் செய்வேன் ஆ! ஆ! (மூர்ச்சித்தல்)(பின்னெழுதல்) ஹா! உதயகாலமாயிற்றே, எனதாசை நாயகி இரவு முழுதும் எப்பாடுபட்டனளோ, எத்துயருற்றனளோ, எம்மிருகத்துக்கிரையாகினளோ, என் செய்கின்றளோ, உயிர் இருக்கிறதோ இல்லையோ, ஏ அபலை நளாகினி பெண்மணியே! நான் நின்னை கைவிட்டேனே தனியே, அந்தோ இனி யென்செய்வேன், இனியாவது ஓடித்தேடிப்பார்ப்போமென்றால் ஒரு கொடிவழிகூட புலப்படவில்லையே, பாழும் புவியே நான் உந்தனுக்குச்செய்த நலியென்னே, எந்தனை இப்பாடுபடப்பணித்தனை? ஐயையோ! தெய்வமே! இனி நான் நோவதில் பிரயோஜனமிலது, இனி காதலியைக் காணும் வழியிலது, ஆகையால் சுந்தராங்கியை இழந்த பின்

நாம் சுகத்தை இச்சிப்பதில் பயன்யாதுமிலது, உயிர்விடுவோமெனிலோ பிசாசஜன்மம்வரும் என்பதுதிண்ணம், அப்படியாயின் அது மிகத்துன்பம், ஆயினும் இனி உலக இச்சையை வெறுத்து காஷாயம்பூண்டு தேசாந்திரம்சென்று ஜீவாத்மா எப்பொழுது எவ்விடத்தே இச்சடலத்தைவிட்டு பிரிகின்றதோவென நாடுவதைத்தவிர வேறொன்றுமிலது. அந்தோ! இனி பிரலாபிப்பதில் பிரயோஜனம் யாதுளது. அப்படியே துறவரம்பூண்டு செல்கின்றேன்.

(சன்னியாசிவேடந்தரிக்க திரைக்குள் பிரவேசித்தல்.)

இண்டாவது களம்.

நளாகினி.—(துயிலெழுந்து) காந்தா! ரமணா! என்மனமோகனா! ஆ இதென்ன ஆச்சரியம்! எனது நாதரைக் காண்கிலனே, நாதரது துடையின்மீது யான் தலைவைத்திருக்க என் தலையை மலைக்குகையின்மீது வைக்கப்பட்டிருக்கின்றது, இதுவென்ன விந்தை. காந்தா! யென்தனைப்பரிகசிக்கின்றீர்களா, எந்தன் மனதைசோதிக்கின்றீர்களா? காதலா! நான் தமது சோதனைக்கு பாத்திரமோ, தீரவீரசிகாமணியாகிய தாம் அபலையான எந்தனை இப்படி பரிசோதிப்பது தகுமோ? ஏ சுந்தராங்கா! ஆ ஆஹா! காணுநாதர் எந்தனைப்பரிகசிப்பதற்காகச் சென்றவராயின் என் வார்த்தையைக்கேட்டதும் இதோ வந்தேன் காதலியென்பாரே, நோக்கில் ஏதோ இது பேரிடியாகத்தோன்றுகிறது, ஹா நாதா! எங்கொளிந்தீர், தமக்கு யான் என்னகுற்றம் செய்தேனென்று எந்தனை இப்படி தண்டனைசெய்வதற்காரம்பித்தீர். ஹா! எனதாசைக் கண்ணாளா! எங்குற்றீர், தமக்கு என்னசங்கடம் நேரிட்டது, ஆ எனதாசைக்கண்மணியே! மணியின் ஒளியே! ஒளியின் இன்பமே எங்குற்றீர், ஆ அகா ஜகதீசா! யான் என்செய்வேன், எந்தனை அபலையென்றும் இதுவன்றி யான் தனித்திரு

ந்தவளல்லவென்றும் தமது சித்தமறியாததோ! ஆ நாதா! இச்சமயத்தில், என்புத்தி மிகக் கலவிப்படுகின்றதே, ஆ ஜக தீசா! இது தமது சோதனையோ, தமக்கென்னகுறைசெய் தேன், இது வென்விதியோ, இதுவரையில் யான் ஒருபாரமும் அறியாது ஒருநாழிகைக்குமுன் அடைந்த இன்பத்தை நினை த்து ஆனந்தித்தேனே, அவ்விதமான வானந்தம்யானடைய லாகாவென எந்தனைச்சோதித்தீரோ, என்மனம்கவர்ந்த கண் ணாளா! எப்படி உயிர்தரிப்பேன், யான்செய்யும் கருமம் ஒன் றும் தோன்றவில்லையே, அந்தோ பாழும்தெய்வமே! என் னைப் பழிசெய்தனையே, ஐயையோ வென்செய்வேன். ஆ! ஆ! ஆ! நாதா, (மூர்ச்சித்தல்) (பின்எழுதல்) ஏ காந்தா! ரமணா! நான் எங்குசெல்வேன், என் உடல் பதருகின்றதே, என்மனம் தவிக்கின்றதே, என்மனமாறுமோ, என்னுயிர் உடலில் தரிக்குமோ காந்தா.

(உடன் மனந்தேறி.)

ஆ! நாம் என்ன பைத்தியகாரியைப்போல் ரோதனம் செய்துகொண்டிருக்கிறேன், வரும்விதி வழியில் நிற்பதுண் டோ, அந்தோ! எங்கேயோ வானம் இடிக்குமென்றிருக்கத் பாது வானம் என்றலையிலிடித்தது. அதற்கு நாம் வருந்துவ தில் பயனில்லை. நாதரது வியோகத்தால் உயிர் துறப்போ மெனிலோ பிசாசஜன்மம் நேரிடும், அதிலும் பிரயோஜன மிலது, நாதரும் நம்மைப் பிரியவேண்டுமென்கிற எண்ணத் துடன் பிரிந்தவராகத் தோற்றவில்லை, அவ்வித மிருப்பின் நமது காதலால் அவரடைந்த துன்பம் நாம் காணாததன்று, ஆகையால் அன்னவருக்கு ஏதோ ஆபத்து நேர்ந்து அவ்வாப த்தினால் பிரிந்திருக்கவேண்டும், அன்னவரும் எந்தனைப்போல் தவிப்பார் என்பதில் ஐயமில்லை. அவர் மகாநீதிமானாகையால் உயிர்துறவார், நாம்கொஞ்சம் கவனத்துடன் தேடுவோமாகில் அவசியம் நாதரைக்காணலாம். அதற்காக நாம் நம் நகரத்

தைநாடிச் செல்வதில் யாதொரு பயனுமில்லை, நீங்காத வசை யும் அவமதிப்பும் நேருமேதவிர பெருமையில்லை, அன்றேல், வேறு எந்த இடமாவது செல்வோமெனிலோ, இவ்வுருவத் துடன் சென்றால் நமக்கு பதிவிருதாதர்மபங்கம் வரும். ஆகையால் இதோ இவ்விடமிருக்கும் என் நாதரது ஆடை களை யணிந்து ஆடவனாக உருக்கொண்டு எதிர்ப்படும் நகரம் சென்று அவ்விடத்தில் ஏதாவது ஒரு தொழிலைச் செய்து இருப்போமாகில் பகவத் கடாக்ஷத்தால் பிரிந்த நாதரைக் காணலாகாதா, ஆம் அதுவேசரி அப்படியே செய்கின்றேன்.

ஆண் ஆடைகளையெல்லாம் அணிந்து நளாகினி குதி ரையின்மீதேறிச் செல்லுதல்.

நளாகினி.—இதோ யான் ஆணுருவம்தரித்தேன், எனது புத்தி சாதுரியத்தால் சமீபத்துள்ள ஏதாவதொருநகரம் செ ல்கின்றேன். எந்தனை யாராவது நின்பெயரென்னவெனில், வீரசுந்திரன் என்பேன். செல்கின்றேன்.

குச்சரதேசத்தரசன் மதலை வசுந்தரனும் மந்திரி குமாரன் மித்திராவசு என்பவனும் வேட்டைக் குவந்தவிடத்தில் வீரசுந்தரன் என மாறுபெயர் பூண்ட நளாகினியைக் காணுதல்.

வசுந்தரன்.—தோழா மித்திராவசு! நாம் இருவரும் இவ்வனத்தில் நெடுநேரம் வேட்டையாடி களைத்திருக்கின் றோம், இனி நாம் நமது நகரம் செல்வோம்.

மித்திராவசு.—தோழா! நன்று அப்படியேசெல்வோம். தோழா! அதோபார் யாரோ ஒரு இராஜகுமாரன் வருகின் றான்; அவன் எத்தேயத்தரசனோ விசாரிப்போம்.

வசுந்தரன்.—நண்பா! உற்றுநோக்கில் அவனது முக விலாஸத்தால் ஆண் அல்லவென நினைக்கிறேன்.

மித்திராவசு.—பின் யாரென்றானினாய்?

வசந்தரன்.— நேயா! முகவிலாஸத்தால் இராஜகுமாரியாய் இருக்கவேண்டுமென எண்ணுகிறேன்.

மித்திராவசு,—தோழா! நன்றுசொற்றனை, வீணாக அவமானம் அடையாதே. வருகிறவன் இராஜகுமாரன் என்பதில் ஐயமிலது.

வசந்தரன்.—மித்திரா! என்மனதில் நீ மொழிவது புலப்படவே இல்லை. ஸ்திரீயென்னும் பற்றுதலே அதிகமாக இருக்கிறது, அவனும் சமீபத்தில் வந்துவிட்டான், பராக்கிரமத்தால் உண்மை வெளிப்படுத்துகிறேன் பார்.

வீரசுந்திரன்.—ஹா! இதுயென்ன கஷ்டகாலமாக இருக்கிறது, இதோ என் எதிரில் நிற்கும் இரண்டு இளங்குமரர்களும் எந்தனையே குறிப்பாய் நோக்குகிறார்களே, என்ன நேருமோ, ஏதோ ஒன்றும் தெரிகிலேன், எதெற்கும் சாக்ஷாத் லோகநாதரே கிருபைசெய்யவேண்டும். ஏதாவது துஷ்கிருத்தியம் செய்வார்களாகில் கிஞ்சித்துநேரம் நாம் கற்ற போரைச் செய்துபார்ப்போம்.

வசந்தரன்.—மித்திராவசு! நீ கிஞ்சித்துக்காலம் பேசாதிரு. (வீரசுந்தரனைநோக்கி) யார் இவ்விடம்செல்வது, தாம் யார், தமதுநாடெது, தமது நாமதேயம் யாது?

வீரசுந்திரன்.— இராஜ சிரேஷ்டரே! நான் இருப்பது பகதராஜியம், என் பெயர் வீரசுந்திரன். என் பிதாவிடம் விடைபெற்று தேசாடனம்செய்யச் செல்கின்றேன்.

வசந்தரன்.—ஏ இராஜ குமாரா! இவ்விளம்பிராயத்தில் தேசாடனம்செய்ய நினதுபிதா சம்மதித்தனரா? நீ பேசுவது ஏதோ கபடமாகத்தோற்றுகிறது; உண்மையுரையாவிடில் இதோ இக்கட்கத்திற்கு நின்னை இரையாக்குவேன்.

(உடைவாளை உருவுதல்.)

வீரசுந்திரன்.—இராஜகுமாரா! நீ மொழிவது மிக்க வியப்புற்றதே, ஏனெனில் நீ அரசனும் மந்திரியும்போல் உருக்கொண்டு இவ்வனத்தின்வழியேவருகின்ற பாட்டைசாரிகளை அடித்துப் பறிக்கும் சோர சிகாமணிகள்போல் தோற்றுகிறது; சபாஷ் இதோ உங்கள் இருவர்களையும் இவ்வுடைவாளுக்கிரைகொடுக்கின்றேன்.

(உடைவாளை உருவுதல்.)

மித்திராவசு. — இராஜசிங்கமே! கோபிக்கவேண்டாம், தங்களது பராக்கிரமத்தைப் பரீக்ஷிக்கவேண்டிப் பகர்ந்ததன்றி, வேறு ஒன்றுமிலது, மன்னிக்ககோருகிறேன். தோழா வசந்தரா! நின்னைப்போலொத்த அரசகுமாரர்களை மரியாதையாய் அழைக்கவேண்டியிருக்க அதைத் தவிர்த்து குரோதம்பாராட்டுதல் சரியன்று, போகலாம்வா.

வசந்தரன்.—இராஜ சிங்கமே! என்னை மன்னிக்கவேண்டும். ஏதோ தங்களது பராக்கிரமத்தை சோதிக்கலாமென சொன்னதேயன்றி வேறொன்றுமிலது, நான்செய்த குற்றத்தை மன்னித்து என்னுடன் என்னகர்வந்து எந்தனை கண்ணியப்படுத்தவேண்டும்.

(வசந்தரன் வீரசுந்தரனைப்பணிதல்.)

வீரசுந்திரன்.—(மனதுக்குள்) இம்மன்னவன் நமதுமொழிக்கு அஞ்சி நமக்குப்பணிந்தனன். இதுசமயம் நாம் சும்மா இருக்கலாகாது, நமக்கு துணைசெய்ய கடவுள் ஒருவர் இருக்கிறார், ஆகையால் இவனை யாதரிப்போம். (பிரகாசமாக) ஏ இராஜபுத்திரா! நீசெய்த குற்றத்தை மன்னித்தோம், நின் வேண்டுகோளின்படி நினது அரண்மனைக்குவருவதில் ஐயமிலது, அவசியம் நின்னுடன்வருகின்றோம். ஆயினும் பெண்ணாசையால் புத்தி இழந்த பேதையர்போல் நின்னையொத்த ஆடவனாகிய எந்தனை பலமற்றவனென மதித்து புத்தி இழந்

தனை. நண்பா! இனி அப்படி நினையாது நின்மனதை திருத்திக்கொள், ஆயினும் என்னிடம் சம்பாஷித்ததுபோல் மற்றவரிடம் சம்பாஷிப்பையேல் நினக்கு நீங்காத அவமானமன்றோ? உத்தம க்ஷத்திரிய குலத்தில் ஜனித்தவர்கள் மானக்கேடு அடையில் உடனே உயிர் துறப்பான்றோ?

வசுந்தரன்—மகா உத்தமகுணசீல தோன்றலே! தமது கருணைமொழியை குரு உபதேசமாகக்கொண்டனன், தமது சத்தியமொழியின்படி என்னகரம்வந்து எந்தனை கிருதார்த்தனாகச் செய்யவேண்டும். செல்வோம் வாருங்கள்.

(எல்லோரும் நிட்கிரமித்தல்.)

மூன்றாவது களம்.

பாத்திரங்கள்:—வசுந்தரன் - நாகம்மாள்.

வசுந்தரன்.—(தனக்குள்) இது என்ன விந்தை, யான் வனத்தில் சந்தித்த இராஜகுமாரனைப்பார்க்கில் உருவத்திலும் தீரத்திலும் பெயரிலும் ஆடவனை ஒத்திருப்பினும் முகவிலாஸத்தால் உயர்ந்த பெண்மகளென என்மனம் ஊசலாடுகிறது. பெண்களுக்குள்ள அநேக அடையாளங்கள் இவனிடம் காணப்படுகின்றன. காதில் கம்மலணிந்தவடுவும், கையில் கங்கணந்தரித்திருந்தரேகையும், ஆயுதப்பிரயோகஞ்செய்வதால் அரசகுமாரர்களுக்கு காய்ப்பெடுத்து கடினமாயிருப்பதுபோலிராமல் மிருதுவாயிருக்கிற உள்ளங்கைகளும், தண்டை, கொலுசு, சிலம்பு முதலிய பாத அணிகளைத்தரித்திருந்த அடையாளங்களும் காணப்படுவதால் பெண்ணென்றே ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது. மேலும் கம்பீரமாயில்லாத அன்னநடையும், மிருதுவசனமும், ஸ்திரீகளுக்கே உரித்தானதல்லவா? இவைகளெல்லாம் இவனிடத்திலிருப்பதால் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் ஆடவர்க்குறிய தைரியம், சாகசம், அஞ்சாமை, கோபம் முதலியவைகளிருப்பது

டன் வாகனங்களிலேறி சவாரிசெய்வதிலும் வாக்குசாதுரியத்திலும் தேர்ச்சியடைந்திருப்பதால் ஸ்திரீகளின் கோஷ்டியிலிருந்து வெகுகாலம் பிரிக்கப்பட்டு ஆடவர்கூட்டத்தில் கலந்து வசித்திருக்கவேண்டும். ஜகதீசா! எவ்வளவுசொல்லியும் என்மனம் பெண் என்கிற பித்தம் ஒழிந்திலதே, ஆயினும் இதை ஒருவருடனும் ஆலோசியாது நமது குருவின் மாதாவான நாகம்மாளிடம்சென்று நமது மனக்குறையை தெரிவிப்பின் அன்னவள் நிவர்த்திசெய்வாள். அப்படியே செல்கின்றேன்.

(நாகம்மாள் கிரகத்துக்குயேகுதல்.)

நாகம்மாள்.—(தனக்குள்) அதோ! ராஜகுமாரன் தனியாகவருகிறான். சேவர் ஒருவரும் சமீபத்தில்காணோம். என்ன அவசரமோ எங்குசெல்கிறானோ? இதென்ன ஆச்சரியம்! நம்கிரகத்துக்குள் நுழைகிறானே. வரவேற்போம். பாலகா! "வருக," "வருக". இந்த பீடத்திலிரு.

வசுந்தரன்.—தாயே வந்திக்கிறேன்.

நாகம்மாள்.—கண்மணி நிகர்த்த காவலன்மைந்தா! தீர்காயுசாக இருப்பாயாக. நீ இதுசமயம் நமது இல்லத்தை நாடிவரக் காரணம்யாது? நின்முகம் வாடியிருக்கும் ஹேதுமென்ன? கண்மணி சீக்கிரம் தெரியப்படுத்து.

வசுந்தரன்.— அன்னையே! அடியேன் வேட்டைக்குச் சென்றவிடத்தில் ஒருபுருஷனைக் கண்ணுற்றேன்; அவன் உருவத்திலும் வார்த்தையிலும் நடைநொடி பாவனைகளிலும் ஆடவரைப்போலவே இருக்கிறான். ஆனால் முகவிலாசத்தால் பெண்ணென எண்ணி என்மனம் அவன்மேல் நாடுகின்றது. மதனனும் வாட்டுகின்றான், இதற்கென்செய்வேன்?

நாகம்மாள்.—வத்ஸா நீ மொழிந்தவைதக்கேட்க விந்தையாயிருக்கிறது. ஆயினும் ஸ்திரீஜாதிகளை நம்பவொண்ணாது,

ஐயோ! அவர்கள் மகாசமர்த்தர்கள். அதற்கு ஒரு யோஜனைசொல்கிறேன், யாதெனில் முதலில் நீராடலாம் வாருமென அழைத்து நீராடுகையில் விளையாட்டாக கட்டித்தழுவினும் சரி, அல்லது வஸ்திரபங்கம்செய்விப்பினும் சரி, இவ்விருவிதத்தில் ஒருவிதத்தினால் உண்மை உணரலாம். அப்படிக்கில்லாவிடில் வேட்டைக்குச்செல்ல சம்மதிக்கச்செய்து வேட்டைபுரியின் ஸ்திரீஜாதியாகில் நெடுநேரம் வேட்டைசெய்யாமல் களைத்துப்போவாள். அதிலறியலாம்; அன்றியும் நடனமாதர்களைத்தருவித்து சந்தோஷமாக இருந்து நர்த்தனகானஞ்செய்யச்சொல்லிப்பார்த்து பின் ஒருமாதை அன்னவனுடன் சேரும்படி அனுப்பி அவளால் உண்மையறியலாம் அன்றேல் மதுபானஞ்செய்வோமென சம்மதிக்கச்செய்து ஏராளமான மதுவுண்டு மதிமயக்கமாயிருக்குங்காலத்து பரிசோதனைசெய்தறியலாம். இந்த நால்வகை சோதனையில் எவ்விதமும் உண்மைவெளிப்பட்டு நின்மனம் சந்தோஷமடையும்; ஆகையால் குழந்தாய் நான்மொழிந்த உபாயங்களினால் நின்மனதை தேற்றிக்கொள். சென்றுவா கண்மணி.

வசுந்தரன்.—அன்னையே! அடியேன்மேல் விருப்புற்று மொழிந்தனவெலாம் நல்ல உபாயமே. ஆகையால் தாங்கள் கூறிய விஷயங்களில் ஏதாவது ஒருவிதத்தில் உண்மைதெரிந்துகொள்ளலாம். ஆனதால் யான் அவண்சென்று காரியத்தை முடிக்கின்றேன். மாதா! வந்தனம்செய்கிறேன்.

(வசுந்தரன் நிட்கிரமித்தல்.)

வசுந்தரன்.—ஆ! நமது குருவின் அன்னைமொழிந்தது உசிதமும் யுக்தியுமானதுதான். ஏதாவதொருவிஷயத்தினால் பரிசோதிப்போம், செல்கிறேன் வீரசுந்திரனிடம்.

(தோழா! நமஸ்கரிக்கின்றேன்.)

வீரசுந்திரன்.—நண்பா! மங்களமுண்டாகுக. உலகத்தில் நண்பர்கள் ஒருவருக்கொருவர் வந்தனம்செய்துகொள்வது அவ்வளவுபெருமையுடையதன்று, ஆயினும் நீ மனமுவந்து செய்த வந்தனத்தை பெற்றுக்கொள்கின்றேன்.

வசுந்தரன்.—தோழா! நீமொழிந்தது மிக்க ஆச்சரியமாயிருக்கிறது. ஆயினும் நண்பா நாம் இருவரும் மந்திரிமைந்தனை மித்திராவசுவுடன் மகாவியதிபாத புண்ணியகாலமானதால் ஆற்றில் நீராடச்செல்வோம் வாருங்கள்.

வீரசுந்திரன்.—என்னுயிர்த்தோழா! நான் தற்காலம் தாம் மொழிந்த வார்த்தையின்படி நடந்து தம்மனதை சந்தோஷிப்பிக்க இயலாத விஷயத்தைப்பற்றி அதிகம் விசனிக்கிறேன். காரணம்யாதெனில் எந்தனுக்கு நேற்றுமுதல் உடம்பு கொஞ்சம் அசவுக்கியமாக இருப்பதால் இன்று நீராடுவது உசிதமாகத்தோற்றவில்லை. ஆகையால் எந்தன்மீது மனவருத்தமுறாது இதுசமயம் தவிர வேறுமெந்த சமயம் நீராட அழைக்கினும் யான் தயாராய்வரக் காத்திருக்கிறேன்.

வசுந்தரன்.—நேசா! தாம் மொழிந்தவார்த்தையைக் கேட்க என்மனம் மிகப்பதறுகிறது. ஏனெனில் தமக்கு சவுக்கியமில்லையென்கிற சங்கதியை யான் இதுவரையுணராத பாதகனாகினேன். தோழா! நீர் ஸ்நானத்துக்கு வருவீர்களென்கிற நிச்சயத்தின்பேரில் ஆற்றுக்குச் சமீபத்திலுள்ள வனங்களில் வேடிக்கையாக வேட்டையாட ஏற்பாடுசெய்திருக்கிறேன். இன்று வேட்டையாடுவதை நிறுத்தி நாளையதினம் வீரர்களை வரச்செய்கிறேன். தாம் என்மீது கருணையுவந்து நாளையதினம் நாம் மூவரும் வனம்சென்று வேட்டையாடிவருவோம் வருகின்றீர்களா?

வீரசுந்திரன்.—தோழா! முன் என்னிடம் தாம் மொழிந்தவார்த்தையின்படி நடக்க இயலவில்லையேயென துன்புற்ற எந்தனுடன் மறுபடி வேட்டைக்குச்செல்வோமென மொழிந்தவார்த்தையைக்கூட மறுப்பில் எந்தனுக்கு யாதொரு

பெருமையுமிலது. ஆகையால், நேயா! தமது கருத்தின்வண்ணம் செல்வோம். அதற்குள் எந்தனுக்கு கிஞ்சித்து சவுக்கியமுண்டாகும். அப்பொழுது நாம் வேட்டையாடுவதில் சிரமமிராது.

வசுந்தரன்.—நேயா மிகச் சந்தோஷமடைந்தேன். இன்னொரு வேண்டுதல் உளது யாதெனில் இன்று நதியில் ஸ்நானஞ்செய்து நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்ட பிறகு ஆற்றங்கரையிலுள்ள நமது மோகனவிலாசமாளிகையில் இன்று முழுவதும் தாமதித்து இரவு அஸ்தமித்தவுடன் இந்நகரத்தில் வசிக்கும் தாசிகளில் மிக சவுந்தரியமும் புத்தி சாதுரியமுமுள்ள தாசி ஒருத்தியை அழைத்துவந்து நர்த்தனகானம் செய்யப்பணித்து சந்தோஷமாய் காலங்கழிக்கலாமென நினைத்து ஏற்பாடுசெய்திருக்கிறேன். உமக்காக எத்தனஞ்செய்த அந்த வேடிக்கையைப்பார்க்க தயவுசெய்து விஜயஞ்செய்ய சவுகரியப்படுமா?

வீரசுந்திரன்.—தோழா! தாம் எந்தன்மனம் சந்தோஷங்கொள்ளும்படி எண்ணிய யோஜனை நன்றே. ஆயினும் இன்று இரவு அயர்ந்து நித்திரைசெய்யவேண்டும். நாளையிரவு தமது சித்தம்போல் நடக்க தயாராக இருக்கிறேன்.

வசுந்தரன்.—தோழா! நான் மிக அகமகிழ்ந்தனன், தம் கருத்தின்படியே நாளைகாலை வேட்டை சென்று நாளைசாயந்திரம் நர்த்தனசந்தோஷங்களை அனுபவிப்போம். தாங்கள் கிஞ்சித்து விசராந்தியடையுங்கள்.

(வசுந்தரன் நிட்கிரமித்தல்.)

வீரசுந்திரன்.—ஹா! ஜகதீசா இதுவென்ன விந்தையாயிருக்கிறது, அரசகுமாரன் நாளையதினம் காலையில் வேட்டைக்குச்செல்லவேண்டுமென வற்புறுத்த யாமும் ஒப்புக்கொண்டோம், நாளைஉதயம் வந்தழைக்கில் யாம்செல்லாதிருக்

லாகாது, செல்லின் ஆடவருடன்கூடி வேட்டையாட நம்மால் இயலாது, நம்மை பரீக்ஷிப்பதற்கே அரசகுமாரன் இந்த ஏற்பாடு செய்திருக்கிறான், ஆனல். இது சமயத்தில் யான் இவனறியாது சென்றுவிடில் நமது வீரத்தன்மைக்கு அழகன்று, இவர்கள் இருவரையும் ஏதாவது ஒரு மானபங்கம் செய்தே செல்லவேண்டுமென என்மனதிற் குடிகொண்டிருக்கிறது. நம்மை பெண்மகளென அறியில் பலாத்காரம்செய்ய ஆரம்பஞ்செய்வான், அது பொழுது நமக்கு பதிவிருதாதர்ம பங்கம் வருவதன்றி மானக்குறைவு நேரும்; ஆகையால் இதற்கு ஓர் யோசனை செய்கிறேன் (கிஞ்சித்து ஆலோசித்தல்) ஆ! நன்று நாம் இன்று இரவு வனம்சென்று அவ்விடம் உள்ள வேடர்களுக்கு தக்க பரிசளித்து இரவில் தன்குகையில் படுத்திருக்கும் மிருகங்களை உதயத்திற்கு முன் வதைத்து ஒருபக்கல் குவித்து அரசகுமாரனது எண்ணத்தை நிவர்த்திசெய்யவேண்டும். இதுவே தக்கயோசனை, அப்படியேசெய்கிறேன். இப்பொழுது இரவு அஸ்தமித்து ஒரு ஜாமமாயிற்று, இதுவே நல்ல தருணம், ஆகையால் செல்கிறேன் வனத்தைநாடி.

(வனம்செல்லுதல்)

யாவர் இவ்விடம் வசிக்கும் வேடர்கள்.

வேடர்கள்.—அண்ணே! நமது நாட்டு ராசாரெண்டு நாளைக்கு முன்னே வேட்டையாடிப்போனவனங்க இன்னிக்கு இராத்திரி இங்கே வந்து ஏதுக்கு நம்மை கூப்பிடுறாங்க தெரியலையே.

மற்றொருவேடன்.—ஏ தம்பி! இராசா அனுச்சாக்க இரா வேட்டைக்கு வந்திருப்பாங்க, நமக்கு நல்ல காலம், போய் வேட்டையாடி ரும்ப இனும் வாங்கிக்கலாம், கூப்பிடா நம்ம ஆளுங்களே எல்லோரும் போவோம்.

ஏ வாங்கடா! வாங்கடா! பன்னிவலை, முசவலை, புலிவலை, கரடிவலை, எல்லாம் எடுத்துகினி.

வேடர்கள்—இதோ வந்திட்டோம் - ஏண்டா அண்ணே ராத்திரியில் கூப்பிட்டே.

வேடர்தலைவன்.—ஏலே நம்ம சின்ன ராசா ராத்திரி வேட்டைக்கு வந்திருக்காங்க, நாம் போய் உத்திரவு வாங்கிக்கிட்டு வேட்டையாடி இனும் வங்கலாம்.

(ஆம் எல்லாரும் போகலாம் வாருங்க)

வேடர்தலைவன்.—இராசாக்களே! அடிமைகள் கும்பிடுறோம்.

வீரசுந்திரன்.—ஏ வேடர்காள்! இது சமயம் நாம் இவ்விடமே இருப்போம். நீங்கள் எல்லோரும் வனத்திற்குள் சென்று மிருகவேட்டையாடி வதைத்த மிருகங்களை யெல்லாம் ஒரு பக்கம் கொண்டுவந்து மலைபோல் குவிப்பீர்களாயின் உங்களுக்குத்தகுந்த இனும் கொடுக்கப்படும்.

வேடர்தலைவன்.—மகா இராசாக்களே! இதோ பாக்குக் கடிக்கிறநேசகாலத்துக்குள் புலி, படி, கரடி, முயல், மான், காட்டெருமை, கட்டெரும்பு, ஈ, கொசு, தேனீ, பாம்பு, எலி, எல்லாம் கொன்று குமிச்சிடுறோம் வாங்கடாபயலே.

(வேடர்கள் வேட்டையாடி மிருகங்களையெல்லாம் வதைத்துக்குவித்தல்)

வேடர்தலைவன்.-இராசாராசாக்களே! உத்தரவுப்படி இதோ பாருங்கள் பெரிய மலைபோல குவிச்சிப்போட்டோம், எங்களுக்கு எசமாங்கள் இனும் கொடுக்கவேணும் மகராஜ்.

வீரசுந்திரன்.—வேடர்காள்! இந்தப்பொன் காசுநிறைந்த பையை சந்தோஷமாய் எடுத்துக்கொள்ளுங்கள்.

வேடர்கள்.—மகாராசா! எசமாங்க உத்திரவுப்படியே செய்கிறோம்.

வீரசுந்திரன்.—ஜகதீசரது கருணையினால் நாம் உத்தேசித்தவண்ணம் முடித்துக்கொண்டோம். இனி எது வரினும் பகவான்தான் துணை இருக்கவேண்டும். இப்பொழுது உதயமாக இன்னம் ஜாமநேரமிருக்கிறது, நமது விடுதியில் போய் சயனித்துக்கொள்வோம்.

(சயனித்துக்கொள்ளல்)

வசுந்தரன்.—ஆ என்மனமோ உலைவாய் மெழுகுபோல் உருகுகின்றது. இன்று எவ்விதமாவது வேட்டைக்கழைத்துச் சென்று பரீக்ஷித்து பெண்பிள்ளையாயின் என்மனோரதத்தை யெவ்விதத்தினாலாவது நிறைவேற்றிக்கொள்கிறேன்; செல்கிறேன் வீரசுந்திரனது விடுதிக்கு.

(வீரசுந்திரன் விடுதிசென்று நித்திரைசெய்பவரை எழுப்புதல்.)

இதென்ன விந்தை! கபாடபந்தன செய்யப்பட்டிருக்கிறது, இவ்விடமிருந்தே அழைப்போம், ஏ மித்திரா வீரசுந்திரா! தோழா! நேசா!

வீரசுந்திரன்.—துயிலெழுதல்.

வீரசுந்திரன்.—தோழா வசுந்தரா வா ஏது இன்று அதிகாலையில் இவண்வந்தது.

வசுந்தரன்.—நண்பா! ஏது இன்று அதிக நித்திரை, நாம் வேட்டைக்குச்செல்லவேண்டாமா?

வீரசுந்திரன்.—சபாஷ் தோழா! ஒருவர் தனக்கு ஏதாவது ஒரு இடைஞ்சல் நேர்ந்ததென தன் நேயனுடன் தெரிவித்துக்கொண்டால் அத்தோழனுடைய வாயுபார்த்து அவன் கூடச்சென்று அவனது அவ்விடையூறைவிலக்குவதோ வீரம்? தாம் என்னுடன் வனத்தில் துஷ்ட மிருகங்களதிகமாகி குடிகளிட்டபயிர்களை அழிப்பதாலும் நாமும்வனத்துக்குச்

சமீபம் போகநேர்ந்திருப்பதாலும் உதயம் வேட்டைக்குச் செல்லவேண்டுமென மொழிந்தீர்களன்றோ? யான் உடனே இரவில்சென்று காட்டைக்கலைத்து தன் தன் குகைகளில் பதுங்கி யிருக்கும் சிங்கம் புலி முதலிய மிருகங்களையும் காட்டானை காட்டெருமை, பன்றி, முயல், மான், முதலிய மிருகங்களையும் வதைத்து மலைபோற்குவித்து வந்து சயனித்துக் கொண்டேன். அதனால் இதுகாறும் நித்திரை செய்ய நேர்ந்தது, தமக்கு ஏதாவது சங்கையிருப்பின் இந்நகரத்திற்கு தென்கிழக்கு மூலையில் உள்ளவனத்தில் சென்று பார்த்து வாலாம்.

வசுந்தரன்.—நண்பா! நீ மொழிவதில் ஏதாவது எனக்குச்சந்தேகம் ஜனித்தாலன்றோ அவ்விதம் பரீக்ஷிக்கவேண்டுவது. நண்பா! அது போகட்டும் இன்று நர்த்தனகானங்கள் கிஞ்சித்து நேரம்பார்த்து ஆனந்திக்க தமது மனம் உவக்குமோ என ஆலோசிக்கின்றேன்.

வீரசுந்திரன்.—தோழா! அதற்குயாதொரு ஐயமிலது, அப்படியே ஆனந்திப்போம்.

வசுந்தரன்.—சேவகா! நீ துரிதமாக எனது தோழனை மித்திராவசு என்பவனுடைய கிரகஞ்சென்று யானழைத்து வரச்சொன்னதாக தெரிவித்தும் நமது நகரத்திலுள்ள விலைமாதர் வீதிசென்று அவ்விடத்திலுறையும் மாதர்களில் மகாலக்ஷணவதிகளும்கானநர்த்தனங்களில்கலாவதியையுங்கொண்டவர்களுமாகிய சந்தரவதனை நீலாயதாக்ஷி யென்னும் இருவர்களையும் நர்த்தனகானத்திற்குவேண்டிய பாத்திரங்களுடன் யானழைத்து வரச்சொன்னதாக அழைத்துவா.

மித்திராவசு.—தோழா! நமஸ்கரிக்கின்றேன். நண்ப சிகாமணியான வீரசுந்தரா! நமஸ்கரிக்கின்றேன்.

வீரசுந்திரன்.—கல்யாணம் தோழா! வீற்றிரு?

வசுந்தரன்.—சகே! சமீபத்தில் வீற்றிரு; நமது நண்பசிகாமணியானவீரசுந்திரருடைய மனங்களிக்க நர்த்தன கானம் செய்ய ஆக்ஞாபித்து அதை சிரவணம் செய்து ஆனந்திக்க சோரி விலைமாதரை அழைத்துவரப்பணித்தனன். ஆகையால் முன் நான் சொன்னபடி நீயும் கூட இருந்து ஆனந்திக்க வேண்டுகின்றேன்.

மித்திராவசு.—தோழா! கரும்புதின்ன கூலியா? அவ்விதமே வருகிறேன்.

வீரசுந்திரன்.—ராஜகுமாரா! தாங்கள் என்னிமித்தம் இம்மாதர்களை நர்த்தனகானம்செய்ய ஏற்பாடுசெய்து என் மனங்களிக்கச் செய்ததைப்பற்றி மிக்க வானந்தித்தேன். அவர்களுக்குப்பரிசாக இந்த முத்தாரத்தை அளிக்கிறேன்.

வசுந்தரன்.—மித்திரா! உமதிஷ்டத்தின்படியே செய்யுங்கள்.

(நர்த்தன கானம் முடிந்தபிறகு,)

வீரசுந்திரன் நிஷ்கிரமித்தல்.

(நாலாவது களம்.)

வசுந்தரன்.—ஏ-சந்திரவதனை! நினதுகானத்தைக் கேட்டென்மனம் மிக்க சந்தோஷத்தை யடைந்தது, ஆகையால் நீ ஒருகாரியம் செய்யவேண்டும். யாதெனில் நீ கானம் செய்கையில் எங்களுடன் நூதனமாக ஒருபுருஷன் வீற்றிருந்து உன்கானத்தால் பரவசப்பட்டு உனக்கு முத்தாரம் அளித்தானன்றோ? அன்னவன் விஷயத்தில் என்மனம் மிக ஊசலாடுகிறது. யாதெனில் உயர்குலமான அரசகுலத்தில் பிறந்த ஒரு பெண்மணியானவள் புருஷ ஆடை தரித்து உருமாறி யிருப்பதாகவே நினைத்து என்மனம் மிகபதைக்கின்றது; ஆகையால் நீ இன்றிரவு அவனிடம் சென்று அன்னவருடன்

கூடிக்கலக்க மிக்க அவாக்கொண்டவள்போல் அபிநயித்து சரசம் செய்யவேண்டும். அன்னவன் ஆணாகவேயிருந்து நின்னைக் கூடிகலக்கும் விஷயத்தில் அது சங்கதியை தெரிவிப்பின் நினக்கு அதிக வெகுமதி யளிப்பேன்; அன்றேல் யான் நினைத்தவண்ணம் பெண்மகளென எவ்விதமாகவாவது அறிந்து வந்துரைப்பின் நினக்குவேண்டிய பொருள்களளிப்பதுமன்றி நான் அன்னவளை விவாகஞ்செய்துகொண்டு அதன்பின் நின்னையும் எனது மரணகாலம்வரை கைவிடாது சுகாதிபோகங்களை கொடுத்து என்னுயிர் மனைவியாக நின்னை வைத்துக் கொள்வேன்; எப்படியாவது என் மனோரதம் நின்னால் நிறைவேற வேண்டும்.

சந்திரவதனா.—(மனதிற்குள்) என்னை உயிர்மனைவியாக வைத்துக்கொள்வதாயிருந்தால் மற்றொருவர்மேல் இச்சை வைப்பதேன்? காமவெள்ளத்தில் முழுகித்தவிப்பவன் அற்ப புல்லைக்கூடப் பிடித்துக் கரையேற முயல்வதுண்டு. நீ சொல்லும் இச்சகவார்த்தையை நம்பி மோசம்போவது தாசிகளல்ல. வஞ்சக ஸ்வரூபமாகப்பிறந்த நாங்களா உனக்கு வசியப்படுவது. (பிரகாசமாக) மகாராஜ்! ஏதொரு பெருங்காரியமென அடியாளுக்கு ஆக்ஞை யிட்டீர்கள்? தேவர்கள் நம்மைசோதிக்கவேண்டி மாயாரூபங் கொள்ளினும் எனது வதனத்தை அவலோகித்த மாத்திரத்தில் தமது மாயாசுவரூபங்கள் இன்னவையென எந்தனுடன்தெரிவித்து எந்தனுக்கு அடிமையாவார்கள். அன்றேல் தமது சித்தத்தின் வண்ணம் பெண் மகளே ஆணுருக் கொண்டிருப்பினும் எனது சாகசக்கியத்தால் அதையும் தெளிவாயறிந்து வந்து தமது சித்தத்தை சந்தோஷப்படுத்தி வைக்கிறேன். இதோ அன்னவரது அரண்மனை நாடிச் செல்கின்றேன், தாமிகச் சந்தோஷத்துடன் அரண்மனை செல்லுங்கள், தங்கள் மனோரதத்தை பூர்த்திசெய்விக்கிறேன், கவலை வேண்டாம்.

வசுந்தரன்.—பிரியரமணி சந்தரவதனா! சென்றுவா, ஜாக்கிரதை!

(வசுந்தரன் நிட்கிரமித்தல்.)

சந்திரவதனா வீரசுந்திரன் கிரகம் பிரவேசித்தல்.

மகாராஜ்! அடியாள் வந்தனம் செய்கிறேன்.

வீரசுந்திரன்.—சுபம்பவது சந்தரவதனா, வீற்றிரு. (மனதிற்குள்) இந்த அரசகுமாரனை வசுந்தரன் ஏதோ நான் பெண்ணென சந்தேகங்கொண்டு எப்படியாவது நம்மைப் பெண்மகளிரெனக் காணவேண்டி என்னென்னமோ சாகசக்கியஞ் செய்கின்றனன். இப்பொழுதுமகளை என்னை சோதிக்கவேண்டி எந்தனிடம் அனுப்பியிருக்கிறான். நன்று! அவன் தலைகுனிந்து வெட்கமடையும்படி செய்யாவிடில் யானும் நளாகினியா? (பிரகாசமாக) சந்தரவதனா! ஏது இன்று இந்த இரவு காலத்தில் இங்ஙனம் வந்தது, என்ன விசேஷம்?

சந்திரவதனா.—பிரபோ! தாங்கள் சபையில் வீற்றிருந்து அடியாளது கானத்தைக் கேட்டுக்கொண்டிருக்கையில் தமது முகவிலாசத்தாலும் கடைக்கண்பார்வையாலும் மந்தகாசத்தினாலும் தமது மேன்மைபொருந்திய தேஜஸினாலும் அடியாள் மன்மதன் வயப்பட்டு எந்தனைக்கொல்லாநிற்கின்றான். அப்பேர்ப்பட்ட சத்துருவின்கையிலகப்பட்டு வேடன் வலையிலகப்பட்ட மான்போல்விழிக்கும் அடியாளை பாதுகாக்கவேண்டும்; தங்களைசரணமென அடைந்தேன். (வந்தித்தல்.)

வீரசுந்திரன்.—சபாஷ் சந்திரவதனா! நினது கோமளமான சரீரம் இப்புழுதியில்படிவது நன்றன்று; எழுந்திரு காதலி! யானே உலகில் தன்னியனாகினேன். ஏனெனில் மங்காய்! நின்கானகாந்தம் எந்தன்மனதினை நின்வயப்படுத்தி யான்கொண்ட நினைப்பை மறக்கச்செய்தது. அக்காலையிலேயே நின்னைக்கலக்க மிக்க அவாக்கொண்டேன் எனினும், என்

ஆசைமுன்செல்ல அரசர் அவையாயிற்றென்பதும் மற்றொரு காரணத்தினாலுங்கொண்ட அவா பின்செல்ல யான் துயருற்று இவண்போந்தனன். மதிவதனமாதே! நின்வரவில் மிக அகமகிழ்ந்தனன். ஆயினும் சமயபேதத்தாலும் இடவித்தியாசத்தாலும் இதுசமயம் நினது மனோபாவத்தை யெப்படி திருப்திசெய்விப்பதென மிகவருத்தமுற்று அலைகடற்றுரும்புபோற் மிக்க கவலையுற்றனன்.

சந்திரவதனை.—பிராணேசா! நாம் சம்பாஷிக்கப்புகுங்கால் எந்தன்மனதுக்கோர் ஆறுதலும் அவ்வார்த்தையினது முடிவில் ஒருவித வருத்தமும் ஜனிக்கின்றது; ஏ சித்தஜனை வென்ற சிறந்த வடிவழகுள்ளவள்ளலே! அவ்விதம் சம்பாஷிக்காது என்மனம் துயருறும்படி இடமும் சமய காலவித்தியாசமும் ஒன்றுசேர்ந்ததென மொழிந்தீர்கள். யான் யென் செய்வேன்?

வீரசுந்திரன்.—பிரியசகி! துயருறாதே. ஆனால் உலகத்தில் ஜன்மமெடுப்பதே மிகப்பாவம், அதிலும் பெண்ஜன்மமெடுப்பது மிகப்பாவம். ஏனெனில், ரமணி இதுசமயம் நீ தாசியாக இருக்கிறாய், நின்ஜாதித்தொழில் நடத்தையானது ஓர் வரம்பற்றது; "அப்பன்வருவான் அதன்பின் மகன்வருவான் தப்புமுறையென்று தள்ளாதே" என்பதற்கேற்க நடக்கக்கூடியவிஷயம். அதிலும் நாம் எதுகாலம் இருப்பினும் மனிதருடைய ஆயுளும் வாழ்வும் ஒருநிலையல்ல; அன்றியும், "இப்பிறவிதப்பினால் எப்பிறவிவாய்க்குமோ எதுவருமோ அறிகிலேன்" என்றபடி இந்த ஜன்மம் தப்பினால் எந்தஜன்மம் வாய்க்குமோ? ஆகையால் நாம் இந்த ஜன்மத்திலேயே உசிதமாக நடப்பின் மறுஜன்மத்தில் மேன்மையான பதவியையடையலாம். அதற்கு நீ ருதுவானவுடன் எந்தநாயகனைச் சேர்ந்தாயோ அந்தநாயகனைத் தவிர வேறுநாயகனை இச்சித்தால் பாவம்வருமன்றோ! சுந்தராங்கி! ஆகையால் க்ஷணபங்

குரமான இச்சடலத்தை சாசுவதமென எண்ணலாமா? இவ்வளவு சங்கதிகள் இருக்க அசேதனமான அல்பசுகத்தைவிரும்பலாமா? மேலும் என்னைப்போன்ற ராஜகுமாரர்கள் பலர் தொட்டு உச்சிஷ்டப்படுத்தியதை புஜிக்கலாமா?

சந்திரவதனை.—மகாராஜ்! நாம் கற்றதையெல்லாம் காதல்கொண்ட காரிகையாளிடம் மொழிவதில் நியாயமோ? அன்றியும் வேசையற்காசை காசுமீதல்லால் வேறு பிரியமுண்டோ? நான் இன்று தம்மை அணைந்து சுகித்து எனதரசர்பால் செல்வேனாயின் என்மீது மிகுந்த களிப்புற்று யான் விரும்பும் தனம்கொடுப்பாரன்றோ? அதைவிட தாம் சொல்லும் நீதிகளால் எந்தனுக்கு என்ன பிரயோஜனம்?

வீரசுந்திரன்.—சபாஷ்! சந்திரவதனா! நீமொழிந்த வசனம் எனக்காச்சரியத்தைத்தருகின்றது. என்னைச்சேர்ந்திடில் அரசகுமாரன் எதற்காக நினக்குப் பரிசளிப்பது? அவராலனுப்பப்பட்டுத்தான் வந்தனையோ? அவர் நான் உன்னைக் கண்டு காமமுற்றேனென்று அனுப்பியிருக்கிறார். ஆனால் நானும் உன்னைக்கண்டு மையல்கொண்டது வாஸ்தவமாயினும் நியாயத்தைத் தவறவிடல் நியாயாதிபதிகளுக்கழகல்ல. மேலும், நாயகரைச்சேருவதெல்லாம் ஆசையாலன்று பணத்தினால்தான் என்று நின்குலாசாரப்படி மொழிந்தனை.

"தலைவாசல்நிற்பவள் தலைமயிர்கோதுவள் தையநல்லாள்
முலைமார்பைக்காட்டி வாவென்றழைப்பவள் முன்புவரில்
கலைதானிகழ்ப்பவள் கைப்பொருட்கேட்பவள் காசிலையேல்
தலைதான்வலிக்குது போபோவென் றேசியேதள்ளுவளே."

என்ற நீதியின்வண்ணம் விலைமாதர்க்காசை காசுமேலல்லது வேறிலது; ஆனாலும் நீ கற்புடையாளென்பதில் ஐயமில்லை, நினதரசகுமாரனை என்ன வெகுமதி கேட்கலாமென்று எண்ணிக்கொண்டிருக்கின்றனை.

சந்திரவதனா.—மகராஜ்! யான் கலாவதியாயினும் தம்மைப்போலொத்தவர்களால் பெருமைப்படுத்தப்பட்டாலும் சிறந்த வஸ்திராபரணங்கள் அணிந்திருப்பினும் அரசபத்தினிகளும் புத்திரிகளும் அணியும் ஆபரணங்களின்மீது நெடுநாளாக நாட்டம்வைத்திருப்பதால் தாங்கள் சபையில் ஈந்த முத்துமாலைக்கிணையான வேறு ஆபரணங்களை கேட்கலாமென அவாக்கொண்டனன்.

வீரசுந்திரன்.—பிராணப்பிரியே! சந்திரவதனா! நீ சத்தியம் மொழிந்தனை; இனி நின்பால் என்மனோபாவத்தைத் தெரிவியாதிருப்பது மிகப்பாவமன்றோ? சொல்கிறேன் கேள். நான் நின்வனப்பைக் கண்ணுற்று நின்னைச்சேர அவாக்கொண்டதற்கையமிலது. ஆயினும் நான் எனது நகரத்தைவிட்டுப் பூப்பிரதக்ஷிணம்செய்ய எப்பொழுது புறப்பட்டேனோ அதுமுதல் ஸ்திரீபோகத்தையும் சரீரசுகத்தையும் உத்தேசித்த காரியம்முடிந்து நகரத்திற்குதிரும்பி போகும்பரியந்தம் மனதில்கூட நினைப்பதில்லையென சபதம்செய்துகொண்டனன். அப்படிக்கிருக்க நின்னைக்கண்டதும் மோகங்கொள்ளினும் அதை ஒருவாறு மனதிலடக்கி இவண்வந்ததும் நீயும் தற்செயலாய் இவண்பிரவேசித்தாய். ஆயினும் நீ எனது மனதிற்கிசைந்த மதிவதனாளென்பதில் ஐயமிலது; அல்பசுகத்திற்காசைவைத்து உறுதி இழப்பதில் யாதொருபயனுமில்லை என்பது நினக்கு தெரிந்ததே. ஆகையால் ஏ உத்தமி! என்மீது கருணைபுரிந்து நீ விரும்பிய ஆபரணங்கள் இதைவிட மேலானதாக இருக்குமாவென கிஞ்சித்து அவலோகனஞ்செய்.

(தன் ஆபரணங்களையெல்லாம் காட்டல்.)

சந்திரவதனா.—மகராஜ்! இவ்வளவு ஆபரணங்கள் எங்கள் நகரத்தரசரது தேவியாவது இளையவரசர் பெண்சாதியாவது ஒருதினத்தில் ஒருநிமிஷங்கூட அணிந்ததுமில்லை, இந்நகரத்தில் கிடைக்கவும் கிடைக்காது.

வீரசுந்திரன்.—ஏ சுந்தராங்கி! இந்த ஆபரணங்களையெல்லாம் நினக்கு சொந்தமாகக்கொடுத்துவிடுகிறேன். இதை நீ இவ்விடத்திலேயே நன்றாக அலங்கரித்துக்கொள். உதயத்திலெழுந்து நீ வெளியேசென்றால் அரசகுமாரர் நின்னைக்கண்டதும் களிப்புற்று இராத்திரிநடந்த சமாசாரமென்னவென நின்னை வினவுவார்; அதற்கு நான் சேர்ந்து சுகித்துவந்தேனென மொழியில் இராஜத்துரோகமாகும். நான் சுகிக்கவில்லையென மொழியில் நினக்கு இராஜாக்கினைநேரும். ஆகையால் அவர் கேட்பதற்கு மறுமொழிகூறாது தலைகுனிந்து பூமியை கால்பெருவிரல் நகத்தினாற்கீறி நின்றால் "மவுனம்சர்வார்த்தசாதகம்" என்றபடி எவ்விதமென்கிலும் அரசகுமாரர் அர்த்தஞ்செய்துகொண்டு நினக்களிக்கும் வெகுமதியை பெற்றுச்செல். இது சங்கதியைப்பற்றி மன்னர் மைந்தன் என்னை வினவில் அதற்குத்தகுந்த மறுமொழிபகர்ந்து நின்னை மேன்மையாக மதிக்கும்படிசெய்துவிடுகின்றேன். இந்தக் காரியத்தினால் நின்பதிவிருதாதர்மத்திற்கு பங்கமில்லாமலும் நின் அவாவின்வண்ணம் ஆபரணங்களும் வெகுமதியும் கிடைப்பதாலும் என்விரதமும் காக்கப்பட்டு உனக்கு பேரும் புகழும் உண்டன்றோ? ஆகையால் இதோ இந்த ஆபரணங்களையெல்லாம் அணிந்துகொள்.

(ஆபரணங்களைக்கொடுத்து அணிந்துகொள்ளச்செய்தல்.

சந்திரவதனா.—பிரியாமணா! யான் மன்னர்மைந்தரால் தம்மைச்சேர்ந்து சுகமனுபவிக்கும்படி அனுப்பப்பட்டவளாயினும் யான் இதுவரையில் ஒருவருக்கும் துன்பம்செய்தவளல்லவாகையால் தம்மை பலாத்காரம்செய்யவும் அடியாளுக்கு மனம்வரவில்லை. தாம் மொழிந்ததும் உசிதமானவைக

ளாகவே இருக்கின்றன. ஆகையால் தமது கருத்தின்படியே இவ்வாபரணங்களை யானணிந்துகொண்டேன். உதயகாலமு மாயிற்று, அரசகுமாரர் எனதுவரவை யெதிர்பார்த்திருப்பார். பெண்களைக்கண்டவுடன் மயங்காத ஆடவரில்லை, அப்படி யாயினும் ஒரு ஸ்திரீயானவள் வலியவந்து எவ்வளவோ மொழிந்தும் இரவுமுழுதும்வேண்டியும் மனங்கலங்காத மன்னவர் தம்மைப்போல் ஒருவரையும் இவ்வவனியில் கண்டிலேன். பிரபோ! அரசகுமரர் தம்மை விளையாட்டாக வினவியபோதினும் தாம் எந்தனை சத்தியவதியாகமொழியவேண்டும். சென்றுவருகின்றேன். வந்தனம்செய்கிறேன் மகராஜ்!

(வந்தனம்செய்தல்.)

சந்திரவதனை நிட்கிரமித்தல்.

வீரசுந்திரன்.—தனக்குள் (இவ்வரசகுமாரன் நமது உண்மையை காணவேண்டி எவ்வளவோயுக்திகள் செய்கிறான்; கண்டுவிடிலோ நமக்கு எவ்விதமும் பதிவிருதா தர்மபங்கம் உண்டாகுமென்பதில் ஐயமிலது. இது வரையிற் கார்த்த ஜகதீசர் இனியும் காப்பாற்றுவாரென என்மனதில் துணிபுகொண்டிருக்கிறேன்; வ எனதாசைக்கண்ணாளா! நீ எப்பாடுபடுகின்றனையோ, நினது வியோகத்தால் யான் படும்பாடு நினக்குத் தெரியவராது, காந்தா! ஆயினும் நின்சரணாரவிந்த சகாயத்தால் இன்னமும் உயிர்விடாதிருக்கிறேன்; பின் நினது பரிபூர்ண ஆசீர்வாதமும் சாக்ஷாத் லோகநாதரது கருணையும் அடியாளுக்கென்னாளும் இருக்கவேண்டும். இனி அரசகுமாரன் ஒருக்கால் இவண்வருவான், ஆகையால் நான் நித்திரை செய்வது போல் அபிநயித்திருக்கிறேன், பின் நிகழும் வற்றைப்பார்ப்போம்.

(மஞ்சத்தில் சயனித்துக்கொள்ளல்.)

5 - வது களம்.

வசுந்தரன்.—(தனக்குள்.) இது யென்ன விந்தை! ஒரு வியக்தியை ஆண்பெண் என நிச்சயம் செய்வதற்கு எவ்வளவு சாகசக்கியம் செய்யினும் ஒன்றும் பயனில்லாது போகின்றதேதவிர என்மனம் திருப்தியடையும் வழியிலதே. ஆனால் சந்திரவதனைநேற்று இரவு அனுப்பியிருக்கிறேன், அவளால் ஒருக்கால் என்மனதிற் காருதலுண்டாகுமென நினைந்து காத்திருக்கிறேன். உதயமாகியும் இன்னம் வரக்காணிலேன், ஏதோ பார்ப்போம்.

(சந்திரவதனை பிரவேசித்தல்)

சந்திரவதனை. — மகராஜ்! நமஸ்கரிக்கின்றேன். (நமஸ்கரித்தல்)

வசுந்தரன். — (பரபரப்புடன் எழுதல்) சந்திரவதனை! நான் நின்வரவிற்காகவே இவண் இதுகாறும் காத்திருக்கிறேன். நீ நேற்று இரவு எனது ஆக்ஞாபனத்தின் வண்ணம் சென்றனையே, என்னசமாசாரம் சீக்கிரம் விளம்பு?

சந்திரவதனை.—(பேசாமல் தலைகுனிந்து நிலத்தைகால் பெருவிரலால் கீறிநிற்றல்.

வசுந்தரன்.—சந்திரவதனை! என்னவிசேஷம், மறுமொழி பகராது தலைகுனிந்துநிற்கிறாய்; இது ஸ்திரீஜாதிகளுக்குள்ள சுபாவமாகினும் நீவிலைபாதன்றோ? நின்பச்சைமொழியால் கேட்பவர்மனதைக் கலங்கச் செய்யும் குணமுடைய நீயும் இவ்வாறு மறுமொழி பகராது நிற்றல் தகுதியோ? ஆயினும் இராஜ குமாரனுயிற்றே என்னும் அச்சமோ? அவ்விதமிருப்பினும் சரிதானே சந்திரவதனை?

சந்திரவதனை.—(ஒன்றும் மொழியாது தலையசைத்தல்.)

வசுந்தரன்.—சந்திரவதனை! நன்று, நனக்கு நீ விரும்பும்

பொருள் அளிக்கும் வண்ணம் ஆக்ஞாபித்திருக்கிறேன், பெற்றுச்செல்லலாம்.

(சந்திரவதனா நிட்கிரமித்தல்.)

மித்திராவசு பிரவேசித்தல்.

வசுந்தரன்.—தோழா மித்திராவசு! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது! யான் வனத்தில் கண்டழைந்து வந்த ஆடவ உருவத்தை பெண்மகளென இன்னமும் என்மனம் சந்தேகிக்கின்றது; அதைச்சோதிக்கவே தாஸி சந்திரவதனாவை அனுப்ப அன்னவளும் மறுமொழிபுகல லஜ்ஜையுற்று ஒன்றும் சம்பாஷியாது "சரிதானே" என்று நான்வினவ தலையசைத்துச்சென்றனள். அதை யோசிக்குங்கால் அன்னவள் சுகாதிபோகத்தையடைந்தவளாகத் தோன்றுகிறது. அப்படியாயின் என்மனமட்டில் நிச்சயத்தையடையவில்லையே, இதற்கென்னபரிகாரம்?

மித்திராவசு.—நேசா! நீ மொழிந்தது ஆச்சரியமாயிருக்கிறது. தாசிகள் லஜ்ஜையற்றவர்களாயிருந்தாலும் தாங்கள் அடைந்த ரதிபோகங்களை புருஷருடன் செப்பத்துணிவார்களா? எப்பொழுது அவள் சம்பாஷிக்க லஜ்ஜையுற்றனளோ அப்பொழுதே அவள் சுகத்தை யடைந்தவளாகவேண்டும். அப்படியாயின் நின்மனம் உடனே நிச்சயங்கொள்ளவேண்டியிருக்க அப்படிக்கில்லாது இன்னமும் சந்தேகிக்கக்காரணம் ஒன்றுமிலது.

வசுந்தரன்.—நண்பா! நீமொழிந்தது உண்மைதான். ஆயினும் என்மனமட்டில் பெண்ணென்னும் சந்தேகத்தோடேயேயிருக்கின்றது. அன்னவர் இருக்கும் இடம் செல்வோம் வா.

(இருவரும் நிட்கிரமித்தல்,.)

தோழா மித்திராவசு! ஏது இன்னமும் கபாடபந்தனம் செய்திருக்கிறது, இவ்விடமிருந்தே அழைக்கிறேன். தோழா வீரசுந்தரா!

வீரசுந்திரன்.—(தனக்குள்) ஆஹா! மஹாபாபிகள் வந்துவிட்டார்கள், இன்று என்ன ஏற்பாடு செய்து வந்திருக்கிறார்களோ அறியேன், ஏது வரினும் ஜகதீசரே நமக்கு துணைசெய்யவேண்டும்.

(கபாடத்தை திறந்து) மித்திரர்காள்! "வருக" "வருக" வீற்றிருங்கள்.

வசுந்தரன்.—தோழா! ஏது இன்று இது காறும் துயின்றனை?

வீரசுந்திரன்.—புன்னகைகாட்டி, தோழா! நன்றுமொழிந்தனை. எனது நித்திரைக்குக்காரணம் நீயல்லது வேறொருவருமில்லை; தோழர்காள்! உலகத்தில் பெண்களைக்கூடவேண்டில் சந்திரவதனையை போன்றவளுடன் சேரவேண்டும். ஆஹா! என்னசுகம்! என்ன சுகம்! இப்பேர்ப்பட்ட சுகத்தையானனுபவிக்கச் செய்த உங்களுக்கு யான் வேறு யாதுகைமாறியற்றப்போகின்றேன்.

வசுந்தரன்.—நண்பா! ஏதோ யெந்தனைப்புகழ்கின்றாய்; நின்மனம் தேசாடனத்தால் வருத்தமுற்றிருக்குமென எண்ணிச்செய்ததே தவிர வேறொன்று மிலது; ஆயினும் என்மனதில் ஓர்விருப்பமுளது. அதை வெளியிடலாமோவென என்மனம்பதைக்கின்றது

வீரசுந்திரன்.—நண்பா! அது யென்ன விருப்பம், அதை வெளியிடுவாயாகில் அது யெவ்வாறிருப்பினும் உன்மனோபாவத்தைதிருப்திசெய்விக்கின்றேன். எந்தனுக்கு நீ இது வரை இயற்றிவரும் பெருமைக்கு அதுவாவது ஒரு பிரதி பலனாக இருக்கட்டும்.

வசுந்தரன்.—தோழா! மற்றொன்று மிலது. நீ நேற்று இரவெல்லம் சந்திரவதனா நிமித்தம் அதிக சிரமப்பட்டிருப்பதாக நின் முகத்தினாலும் சரீரத்தளர்ச்சியாலும் விசிதமாய்

தெரிகின்றது. ஆகையால் இன்று நாம் மூவருமாககிஞ்சித்து மதுபானம் செய்யலாமென கருத்துக்கொண்டனன். நின் மனம்யாது?

வீரசுந்திரன்--நேசா! நன்றுமொழிந்தனை. நீ மகாவிவேகசாலியென உணர்ந்தேன். ஏனெனில் நான் நேற்று சந்திரவதனுடன் வருத்தமடைந்தது உண்மையே. ஆனால் அது யெதினாலெனிலோ நின் மனதை திருப்திசெய்விக்கவேண்டுமென்றும், எவ்வாறிருப்பினும் நீ இராஜகுமாரனானதால் நினது ஆக்ஞையைத்தவிர்க்கக்கூடாதென்றும் எண்ணியே அல்லது வேறன்று. நான் இன்றுகிஞ்சித்து மதுபானம்செய்யவேண்டுமெனநினைத்தேன். ஆயினும் நீமனமொத்தநேசரானதால் அதேவிருப்பத்தை அடைந்தனை. ஆகையால் தோழா! இன்று அவசியம்மதுபானம் செய்யவேண்டும். அதற்கு யாதொரு தவக்கமுமிலது நண்பா.

வசுந்தரன்.—தோழா! சரி தயார் செய்கிறேன். ஜல்தியில் வரவேண்டும்.

வீரசுந்திரன்.— நண்பா நன்று, மதுபானம் செய்வது எதெற்காக? உத்ஸாகத்தின் பொருட்டன்றோ? அதில் போதையும் உளதன்றோ? பகலில் செய்தால் யாவராலும் நாம் பழிக்கப்படுவோம், ஆகையால் இன்று இரவில் அதேவிதமாக தம் கருத்தின்படி நடப்போம்.

வசுந்தரன்.—சபாஷ்! நண்பசிகாமணி! அங்ஙனமாகுக, யாங்கள் சென்று வருகிறோம்.

(இருவரும் நிட்கிரமித்தல்)

வசுந்தரன்.—தோழா மித்திராவசு! நான் இது வரையில் அன்னியர்களால் பரிசோதித்து பயனடையாதவனாகினேன். ஆகையால் இன்று மதுபானம் செய்ய ஒத்துக்கொண்டனன்.

அன்றோ? ஆகையால் அவன் சக்திக்கு மீறும்படி மதுவைக் கொடுத்தால் விழுந்து விடுவான், அது சமயம் நாம் நேரிலே பரீட்சித்தறிந்து விடலாம். இதுவே நல்ல யோஜனை, சீக்கிரம் மதுபானங்கள் தயார்செய் ?

மித்திராவசு.—அப்படியே செய்கிறேன் தோழா!

வீரசுந்திரன்.—(தனக்குள்) ஆஹா! இந்த மதிகேடர்கள் எந்தனை மத்தியபானம் செய்ய அழைத்தனரன்றோ? இதை யோஜிக்கும்பொழுது நமக்கு மதுவையளித்து நாம் போதையுற்றிருக்கும் அமையத்து நம்மை பரிசோதித்து உண்மையறிந்து நமது கற்பையழித்துவிடலாமென நினைத்தார்கள்போலும். நன்று! இனிநாம் இங்கிருத்தல் தகாது. இவர்களுக்கு அஞ்சியோடுவதும் அடாது. ஆகையால் அதற்குத் தகுந்த சூழ்ச்சிசெய்து அன்னவர்களைஏமாற்றி அவர்களை மானபங்கம்செய்து நாம் ஸ்திரீதான் என்று நன்குணரும்படிவிதமளித்து நமது கற்பு நிலையை காப்பாற்றிச் செல்லவேண்டும். நல்லது சேவகா! நீ துரிதமாக நகர்ப்புறம்சென்று தையல்வேலையில் வல்லவனான ஒருவனை ஒரு உடுப்புதைக்க வேண்டுமென்று நான் அழைத்ததாக ஜல்தியில் அழைத்துவரவேண்டும்?

சேவகன்.—ஆக்ஞாமகாராஜ்.

(தையற்காரன் பிரவேசித்தல்.)

தையற்காரன்.—தெய்வமே இன்னிச்கு நம்பளிக்கு யாதொருவேலையும் சிக்க இல்லே. நாம் என்னபண்ணாரது, பார்ப்போம் எவனாவது ஆம்பிடமாட்டானா.

சேவகன்.—ஏ தையற்காரா! நமது நகரத்திற்கு வந்திருக்கும் புதுமகாராஜா அவர்கள் ஏதோ ஒரு உடுப்புதைக்கவேண்டி உன்னை அழைத்துவரச்சொன்னார்கள், ஜல்திபுறப்படு.

தையற்காரன்.—ஏ சேவகா! கூலியென்ன கொடுப்பாங்க?

சேவகன்.—நீ கேட்டபடி கூலிகொடுப்பாங்க, ரொம்ப நல்லராஜா, ஜல்திபுறப்படு.

தையற்காரன் பிரவேசித்தல்.

வீரசுந்திரன்.—ஏ தையற்காரா! நீ மிகுந்த நாணயமாகவும் சுகமாகவும் சீக்கிரமாகவும் உடுப்புதைப்பாயா?

தையற்காரன்.—மகா ராஜாக்களே! இந்நகரத்தில் என்னைவிட வேறொருவரும் நாணயமாக தைக்கமாட்டார்கள். சீக்கிரமாக தைத்துதருகிறேன் பிரபோ!

வீரசுந்திரன்.—ஏ தையற்காரா! நாம் இன்று இரவு வேங்கைவேட்டைக்குச் செல்லப்போகிறோம் ஆகையால் தோலினால் நல்லநாணயமாகவும் அந்தச்சட்டை போட்டிருப்பதுவெளிக்குதெரியாமலும் இருக்கவேண்டும். அதற்கென்ன செலவு பிடிக்கும், கூலியென்ன கேட்கிறாய்?

தையற்காரன்.—பிரபோ! தோலால் தைப்பதென்றால்மிக கஷ்டமான அலுவல். தவிர தோல்விலையோ ரொம்ப ஜாஸ்தி. அப்படிக்கிருக்கினும். எப்படியிருந்தாலும்சரிதோலுக்கு 10 ரூபாய் தையற்கூலிக்கு 30 ரூபாய் ஆகநாற்பது ரூபாய் கொடுத்தால் தங்கள்மனம்போல செஞ்சுதாரேன்.

வீரசுந்திரன்.—சபாஷ் தையற்காரா! இதோ இந்த 10 ரூபாயையும் எடுத்துக்கொண்டுபோய் தோல்வாங்கிவா. வந்த பிறகு என்சந்தோஷம்போல் கொடுக்கிறேன்.

தையற்காரன்.—பிரபோ! தோலாவது பிறகுவாங்கி சட்டைசேஞ்சுக்கலாம், கூலியை கொடுத்துவிடவேணும்மகாராஜ்.

வீரசுந்திரன்.—சபாஷ்! தையற்காரா! இந்நகரத்தில் வேலை செய்யச்சொல்லி கூலி கொடுப்பதில்லைபோல் தோன்றுகிறது.

அதுவிஷயத்தை அரசர்பால்தெரிவிப்பினும் கேள்வியும் இல்லாதுபோல் தோற்றுகிறது.

தையற்காரன்.—மகாராஜ்! அந்தவவுத் தெறிச்சலே என் கேட்கிறீங்கோ (நாலுபக்கமும் சுற்றிப்பார்த்தல்) இந்த நகரத்து இளையராஜாவுக்கு நான் தச்சுக்கொடுத்த சட்டைக்கு கணக்குமில்லை, கூலி ஒருகாசுகூட கொடுப்பதுமில்லை, கேக்கப்போனா கத்தியை உருவிக்கிட்டு வாராங்க, நான் எப்படி பிழைக்கிறது மகாராஜ்!

வீரசுந்திரன்.—சபாஷ் தையற்காரா! அதுபோல் எங்களை நினையாதே. இதோ தோல்வாங்க 10 ரூபாயும் நீசிரமப்படுங்கூலி நாற்பதுரூபாயும் ஆக ஐம்பது ரூபாயளித்தோம். எடுத்துச்சென்று சீக்கிரமாய் இவ்விடம் ஒரு இமைக்குள் தோலுடன் வரவேண்டும். நீ எங்தனிடம் தெரிவித்தகூலிக்குமேல் பத்துரூபாய் நினக்கு இனாமாகக் கொடுக்கப் பட்டது. பின்னின்வேலை திறமைக்கும் துரிதத்துக்கும் தக்கபடி வேலை முடிந்தவுடன் இனாம் கொடுக்கப்படும்.

தையற்காரன்.—மகாராஜ்! இதோ ஒருநொடியில் வந்து ஒருநிமிஷத்தில் வேலையைமுடித்து தருகிறேன். சென்று வருகிறேன்.

கொஞ்சதூரம் வெளியில்போய் (தனக்குள்)

ஆஹா அகப்பட்டுகிட்டான் ஒருமுட்டாள் பயல், இரண்டணா பெறுமான தோலுக்கு பத்து ரூபாய் என்டு சொன்னேன்; நாலணா கூலிக்கு முப்பது ரூபாய் என்டுசொன்னேன்; பத்துரூபாய் சேர்த்து நாப்பதுரூபாய்கூலிக்கும் பத்து ரூபாய்தோலுக்கும் கொடுத்து இன்னம் இனாம்கொடுப்பதாக சொல்லிவிட்டான். இதோ ஒருநொடியில் தைத்துக்கொடுத்து வேண்டியவெகுமதியும் வாங்கிப்போடறேன். இன்னமே நான்

தையல்வேலைசெய்ய வேண்டியதில்லை தோலைவாங்கிக் கிட்டு வரும்போதே தைத்துக்கொண்டுவந்து விடுகிறேன்.

வீரசுந்திரன்.—சபாஷ்! வசுந்தரனது யுக்தியும் எனது முன் யோஜனையும் எப்படியாகிறதோ தெரியவில்லை. இன்னம் தையற்காரனைக்காணோமே.

(தையற்காரன் பிரவேசித்தல்.)

தையற்காரன்.—ராசாக்களே! தாங்கள் எங்கிட்டசொல்லும் போதே சட்டை இன்னவிதமாகத்தான் தைக்கவேணுமென்று ஊகித்துதைத்துவந்திருக்கிறேன் பாருங்கள். இந்தச்சட்டையை வேங்கைவேட்டைக்குச் செல்லும்பொழுது அதன் நகம் நமது பேரில் படாமலும் பட்டாலும் சரீரத்தில் படாமலும் இருக்கும்படியாயும் எவர்களையாவது மதுபானம் செய்வதில் வெல்லவேண்டுமானால் இந்தச்சட்டையின் ஒரு பாகத்து பொத்தானை உள்ச்சட்டையில் மாட்டிவிட்டால் நாம் சாப்பிடுவதாக அவர்கள் நினைக்கவும் நாம் சாப்பிடுவதெல்லாம் அந்ததோல் பைக்குள் விழுந்து நமக்கு மயக்கமில்லாதிருந்து பந்தயம் செயிக்கும்படியாயும் செய்திருக்கிறேன். இந்த தினிசில் இதைத்தவிறவேறுமாதிரிசெய்ய முடியாது. தங்கள் மனம்போல் இருக்கிறதா பாருங்கள் மகாராஜ்!

(சட்டையை கொடுத்தல்.)

வீரசுந்திரன்.—சபாஷ்! தையற்காரா நான் நின்வேலையை மெச்சினேன். நான் ஒரு காரியத்திற்காக செய்யும்படிதெரிவித்தேன். நீ மறு காரியத்திற்கும் உதவும்படி செய்தாய். அதிக சந்தோஷம். நினக்குவேண்டும் வெகுமதியைக்கேள் அளிப்பதில் தடையிலது.

தையற்காரன்.—மகாராஜாவே! எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம், தாம் அணிந்திருக்கும் முத்துமாலையைக்கொடுத்தால் சந்தோஷந்தான் மகாராஜ்!

வீரசுந்திரன்.—ஏ தையற்காரா! நினது குணத்திற்கும் வேலைத்திறமைக்கும் ஈதொரு பெரிய வெகுமதியன்று; ஆயினும் நின்விருப்பத்தின்படி முத்துமாலையை கொடுத்ததுடன் இதோ இந்த கடகத்தையும் பெற்றுக்கொள். சென்றுவரலாம்.

தையற்காரன்.—மகாராஜாக்களே! போயிட்டுவாறேன். சலாம்வருது. (தனக்குள்) முட்டாள் என்றால் இவனைப்போலொத்த மூடர்கள் ஒருவருமில்லை. நான் ஒன்றுகேட்க இரண்டுவித இனும்கொடுத்தான், போனால்போகட்டும், இன்னிக்கி நமக்கு நல்லகாலம், நாம் சீக்கிரம் வீட்டுக்குப்போவோம்.

(தையற்காரன் நிட்கிரமித்தல்.)

வீரசுந்திரன்.—சபாஷ்! தெய்வம் நமதுபங்கில் இருக்கிறதென்பதற்கு ஐயமிலது. நாம் எது விஷயத்திற்காக தோற்சட்டைதைக்க நினைத்தோமோ அதை சொல்வதற்குமுன் தையற்காரன் யுக்தியாய் செய்துமுடித்தளித்தான்; இனி பயமிலது; இவன் இனி அரைநிமிஷம் தங்கலாகாது; இன்று இரவில் அந்தச் சண்டாளர்கள் இருவரையும் மானபங்கம்செய்து நமது முன்யுக்தியையும் காண்பித்து அவர்களது புத்திதிருந்த ஓர் லிகிதம் ஒன்றுவரைந்துவைத்து உடனே இந்நகர்விட்டு நீங்கவேண்டும். சரி அவர்கள் காத்திருப்பார்கள், செல்வோம். (அவர்கள் இருக்கும் மணிமண்டபத்திற் கேகுதல்.)

ஆருவது களம்.

வசுந்தரன்—மித்திராவசு இருவரும் பிரவேசித்தல்.

வசுந்தரன்.—தோழா மித்திராவசு! இப்பொழுது சூரியன் அஸ்தமித்து ஒருஜாமப்பொழுதாயிற்றே; மதுபானம் செய்வதற்கு எல்லாம் தயார்செய்துவிட்டனையா?

மித்திராவசு.—சகலமும் தயார்செய்துவிட்டேன் தோழா! நமது நண்பர்வருவதும் நாம் ஆனந்திக்கவேண்டுவதுந்தான்பாக்கி.

வசுந்தரன்.—தோழா! ஏது இதுவரை வீரசுந்திரனைக் காண்கிலேன். ஒருக்கால் வாராமலிருந்துவிடுவானோ. சேவகனை அனுப்புவோமா?

(வீரசுந்திரன் பிரவேசித்தல்.)

வசுந்தரன்.—நண்பரேறே! இப்பொழுதுதான் தங்களைக் காணோமே, தங்களகம் வருவோமா என்று தோழனை மித்திராவசுவுடன் தெரிவித்தேன், அதற்குள் தாங்கள் வந்துவிட்டீர்.

வீரசுந்திரன்.—நண்பசிகாமணி! யானோ மிகுந்த சிரமம் அடைந்து அதைதீர்ப்பதற்கு தம்முடன் ஆலோசிக்க நோக்கங்கொண்டிருந்தவிஷயத்தைத் தாமே என்மனோபாவப்படி மதுபானம்செய்வோமெனதெரிவித்தீர்கள்; அப்படிக்கிருக்க எனக்கு மிகுந்த விருப்பமான மதுபானம் செய்வதைவிட்டு காலதாமதம்செய்வேனோ?

வசுந்தரன்.—சபாஷ் தோழா! செல்வோம்வா. நண்பா! இதோ பார்த்தீர்களா! இந்த மதுபான ! மிக்க மதுரமானது, இதை தாம் முதலில் அருந்தவேண்டும் தோழா!

வீரசுந்திரன்.—நண்பா! உண்மையே. இதுமாதிரி எங்கள் நகரத்தில் கிடைக்கவேகிடைக்கா. சபாஷ்! இதோ யான் அருந்தினேன், இதை தாங்கள் பானம்செய்யுங்கள்.

இப்படி வசுந்தரனும் மித்திராவசுவும் வீரசுந்திரனால் கொடுக்கப்பட்ட மதுவை அளவுக்குமிஞ்சி பானம் செய்து மதிமயக்கம்கொண்டனர். வசுந்தரனால் கொடுக்கப்பட்ட மதுவை வீரசுந்திரன் பானம்செய்வதுபோல் அபிநயித்து தனது தோற்பைக்குள் நிறப்பிக்கொண்டதால் மதிமயக்கமில்லாதிருந்தான்.

வீரசுந்திரன்.—சபாஷ்! இச்சண்டாளர்கள் இருவரும் மதுமயக்கங்கொண்டு இறந்தவர்கள்போல் கீழேவிழுந்தனர்.

இனி நாம் தாமதிக்கலாகாது; இச்சண்டாளனான வசுந்தரனது ஒருபக்கத்து மீசையையும் மித்திராவசு என்பவன் அவனது போதனைக்குட்பட்டதனால் அவனது குடுமியையும் இதோ கத்தரித்தேன். இவைகளை இந்த ஆதனத்தின்மேலேயேவைத்து மதுநிறைந்த இத்தோற்பையையும் மதிகேடர்களுக்கு அறிவுணர்த்த யான் வரைந்த இந்த லிகிதத்தையும் இதன் மேல் வைத்துவிட்டனம். ஆகையால் இனி நாம் இவண் தாமதிக்க ஒவ்வாது. ஆனதால் இப்பொழுது நல்லிருளாயிருப்பினும் அச்சமிலாது எனதுகற்பையும் என் நாயகரது வீரசவுரியத்தையும் கடவுளின் கருணையையும் துணையாகக்கொண்டுசெல்கின்றேன்.

பட்டணத்தைவிட்டு நீங்கி கானகஞ்சென்று,

(தனக்குள்) ஆஹா! இந்த நல்லிருளில் பரமாத்துமாவினது பெருங்கருணையை துணையாகக்கொண்டு பாபசண்டாளர்களைவிட்டு நீங்கி இவண்வந்தனன். உதயம்வரையில் அம்மகாபாவிகள் எழுந்திரார்கள். காலை எழினும் அவர்களடைந்த மானக்கேட்டைநினைந்து துக்கித்து பின் நம்மைத் தேடப்புறப்பட்டாலும் புறப்படுவார்கள். அதற்குள் நாம் ஏதாவது ஒரு நகரத்தையடைந்துவிடலாம். அன்றியும் யாம் இன்ன மார்க்கத்தில் செல்லுகிறோமென்று அவர்கள் எவ்வாறுணர்வார்கள்? எப்படியாயினும் இதோ நமக்குமுன் தோற்றுகிற இராஜ்யத்திற்குள்சென்று கூலிக்கு அன்னமிடும் கிரகத்தையடைவோம். யாரடா வனசரன்?

வனசரன்.—மகாராஜாக்களே! வந்தனம்.

வீரசுந்திரன்.—ஏ வனசரா! அதோ எதிரில்தோன்றும் நகரத்தின் பெயர்யாது? அதில் திரவியம்பெற்று அன்னமிடும் இடங்கள் எவ்விடத்திலிருக்கிறது?

வனசரன்.—மகாராஜ்! அதோதெரிவது சிந்துநாடு, அந்நகரத்தின் வடக்குவீதியில்தான் சோத்துக்கடை.

வீரசுந்திரன்.—சபாஷ்! இச்சிந்துநாடடைந்து ஓர் விடுதி வாங்கி அதில் சிலகாலம் வசிப்போம். தெய்வானுகூலத்தால் நமதுநாதர் வரமாட்டாரா ? செல்வோம்.

(சோற்றுவிடுதிக்கு செல்லல்.)

5-வது அங்கம்.

முதற்களம்.

மீனாக்ஷி.—வாருங்களையா! தம்மைப்பார்த்தால் மகாராஜாவின் குழந்தைபோலிருக்கிறீர், நிரம்ப பசியுடனிருப்பதாகதெரிகிறது, குதிரையை அந்தமரத்தில் கட்டிவிட்டு கைகால்களை சுத்தஞ்செய்துகொண்டு சாப்பிட வாருங்கள்.

வீரசுந்திரன்.—அன்னையே! எந்தனுக்குப் பசி அதிகமென்பதில் ஐயமில்லை. தவிர யான் கொஞ்சகாலம் இன்னகரத்திலிருக்க அவாக்கொண்டிருப்பதால் தாங்கள் எந்தனை அன்னைபோல் ஆதரிக்க கோருகின்றேன்.

மீனாக்ஷி.—அப்பனே! நின்மனதின்படி உந்தனது சொந்த கிரகத்தைப்போலவே சவுக்கியமாயிருக்கலாம்.

வீரசுந்திரன்.—தாயே! எனது போஜனத்திற்காக இதோ இந்த நூறுவராகனை வைத்துக்கொள்ளுங்கள். பின்னர் தங்களுக்கு அவசியமானபோது தனம் அளிக்கின்றேன்.

மீனாக்ஷி—(தனக்குள்) ஆஹா! இன்று நமதுகஷ்டம் விடியும்காலம்போலிருக்கிறது, அதனால்தான் இந்த மகானுபாவர் இவண்வந்தனர். இவரை நமது புத்திரன்போல் பாதுகாத்துவரலாம். கண்மணி! போஜனத்திற்கு எழுந்திரு.

168558

வீரசுந்திரன்.—போஜனம்செய்கையில் [illegible] காலம் போக்கின் யாதுபயனுளது? யான் [illegible] கடைவீதியில் ஓர் கடைவைத்து வியாபாரம்செய்ய கருதியிருக்கிறேன். தாயே! தமது கருத்துயாதோ அறிகிலேன்.

மீனாக்ஷி.—(மனதிற்குள்) கடைவைத்து வியாபாரஞ்செய்துகொண்டிருந்தால் நம்மிடத்தில் எப்போதும் புசித்துக்கொண்டு வேண்டியபொருள் அளிப்பான். (பிரகாசமாக.) கண்மணி! தடையென்ன அவ்விதமேசெய்யலாம்.

இவ்விதமாக அந்நகரத்தில் ஓர் கடைவைத்து வியாபாரம்செய்தல்.

0-2,815,15,11
1112

இரண்டாவது களம்.

சிந்துநாட்டிறைவனான விவேகசாதுரியனும் அவனது மந்திரியான திடவானும் பிரவேசித்தல்.

விவேகசாதுரியன்.—அமைச்ச! அகிலலோக நாயகரான சாக்ஷாத் ஜகதீசரது கருணையினால் இச்சிந்துநாட்டிற்கிறைவனாகினேன். அன்றியும் தமது விவேகமான உதவியினால் சரிவர ராஜ்யத்தை நடத்திவருகிறேன். நமது நகரத்திலுள்ள குடிகள் அனைவரும் சுகம்தானே மந்திரி!

திடவான்.—ஆரியா! தமது செங்கோலின் பிரபாவத்தினால் நகரத்திலுள்ள குடிகள் அனைவரும்சுகமே.

விவேகசாதுரியன்.—மந்திரி! நிரம்ப சந்தோஷம். இன்னொருகாரியம் தம்மிடம் தெரிவிக்க கருத்துக்கொண்டேன். யாதெனில், எனது அருந்தவப்புதல்வியான இந்திரலேகை நதியில் நீராடச்செல்வதால் நமது நகரத்திலுள்ள ஆடவர் யாவரும் அவரவர்தொழிலைவிட்டு வீட்டுக்குட் சென்று, வெளிவராமல் நமது குமரி நீராடி அரண்மனைக்குத் திரும்பி வந்து சேருகிறவரையில் வெகு ஜாக்கிரதையாக உள்ளே இரு

க்கவேண்டுமென்றும், உத்திரவுப்படி நடவாதவர்களுக்கு சிரசாக்கினை விதிக்கப்படுமென்றும் பறைசாற்றும்படி ஆக்ஞாபிக்கவேண்டும்.

திடவான்.—மகாராஜ்! தமது ஆக்ஞாபனத்தின் வண்ணம் செய்கிறேன், சேவகா! நீ துரிதமாக பறைசாற்றுவோனைக் கண்டு அரசன் மொழிந்தபடி இக்ஷணமே பறைசாற்றச் சொல்?

இருவரும் நிட்கிரமித்தல்.

பறைசாற்றுவோன் பிரவேசித்தல்.

பறைசாற்றுவோன்.—பறைமுழக்கி - எ ஆண்டைமாரே! நமது இராசாக்களுடைய அருமை மகளார் இன்னிக்கி காலை பத்துநாழிகைக்கு நீராடவேண்டி இராஜவீதிவழியாகச் செல்லுவதால் அவர்கள் திரும்பி அரண்மனைக்கு திரும்பும்வரையில் புருஷனாகப் பிறந்த குழந்தைமுதல் எல்லோரும் வெளியே வரக்கூடாது. அப்படி உத்திரவுமீறிவெளியேவந்தவர்களுக்கு சிரசாக்கினை விதிக்கப்படும்—விதிக்கப்படும்—விதிக்கப்படும்.

(பறை முழக்கல்.)

வீரசுந்திரன்.—ஆஹா! நாம் பிறந்த பெருமை யென்ன! ஒரு நிமிஷமாயினும் நமதுநாதருடன் நாம் சுகசல்லாபத்தை யடைந்த நேர்த்தியென்ன! இது சமயம் நாம் படும் அல்லல் என்ன! இதை யெல்லாம் யோசிக்கில் அன்று யெழுதியவன் அழித்தெழுதப்போவதில்லை என்பது உண்மையே. நாம் இது சமயம் இந்த சிந்து நாட்டைவந்தடைந்தோம், இனிவேறெவ்விடமாவது செல்வோமெனிலோ குச்சர நாட்டில் நமக்கேற்பட்ட ஒவ்வொருதீங்கையும் நினைக்கமனம் பதறுகிறது. ஆனால் இந்நகரத்தில் ராஜவீதியில் என் கடைவைத்தோமெனிலோ நாம் சுகமாக முப்பொழுதும் உண்டு அவ்வில்லத்திலேயே இருப்போமாகில் நமது காதலனைக்காணும் வழி

யாது? ராஜவீதியில் கடைவைத்தால் யாவரும் நம்மிடம் கொள்ளல் விற்றல் செய்ய்வருவார்கள். அவர்கள் மூலமாய் உளவறியலாம். அன்றேல் நமது நாதர் நம்மைப்பிரிந்த துயரத்தால் மனம் வேசாரிபைராகி வேடம் பூண்டு சென்றிருப்பினும் ஒருக்கால் அக்கடைவீதிக்கு வந்து ஏதாவது ஒரு பொருள்கொள்ளவாவது அன்றேல் பிட்சை யெடுக்கவாவது வருவார்; அப்பொழுது அறியலாகும். இன்னகரத்திலமர்ந்த மற்றவர்த்தகர் லாபத்தை வேண்டி வாணிபஞ்செய்வதால் நாம் அதுபோலல்லாது நமது கடையிலேயே சகலரும் வந்து வாணியஞ்செய்யும் வண்ணம் அவரவர்கள் எந்தெந்த சாமானை என்ன விலைக்கு கேட்கிறார்களோ அவ்விதமே அளித்து வந்தால் சகலரும் நமதிடத்திலேயே வாணிபம் செய்வார்களென உன்னிகடைவைத்தேன். அது போலவே மற்றவர்த்தகர்களுக்கு வாணிபம் இல்லாது சகலரும்நமதிடமே வர்த்தகம் செய்கிறார்கள். ஆனால் இதுவரை நமது காதலரை நாம் காணவும் இல்லை கண்டதாக தெரிவிப்பாருமிலர். அதனோடு இன்று இன்னகரத்தரசன் மகள் நீராடச்செல்வதாயும் அதற்காக ஆடவர்கள் ஒருவரும் வெளிவரக் கூடாதெனவும் பறை முழக்கினர். இது இராஜ நீதிக்கடாத வார்த்தை. ஆகையால் நாம் ஆடவருடை தரித்திருப்பதால் உத்திரவுப்படி நாமும் தலைமறைவாக இருக்கவேண்டுவதெனினும் அப்படிக்கில்லாது இக்கடையிலேயே இருந்து நடக்கும்காரியத்தைபார்ப்போம்.

மூன்றாவது களம்.

(இந்திரலேகையும் சகி மதிவதனையும் பிரவேசித்தல்)

இந்திரலேகை.—சகி மதிவதனை! நான் இன்னாட்டரசரான விவேகசாதுரியருக்கு மகளாக ஜனித்து சகல சாஸ்திரங்களும் கற்று இருப்பதில் என்ன பிரயோஜனமடி. சகி! வாசனையில்லாத காட்டுமுள் முருக்கம் பூப்போலல்லவோ இருக்கிறது.

மதிவதனா.—சகி இந்திரலேகை! என்ன அப்படி சம்பாஷிக்கிறாய்? நீ ஜனித்ததற்கென்ன, நின் கல்வித்திறமைக்குத்தானென்ன, நின் அழகுக்குத்தானென்ன குறைவு, ஏதோ ரொம்ப குறைவாக சொல்லுகிறாயே தோழி!

இந்திரலேகை.—தோழி! யான் ஒரு வார்த்தைசொல்ல தேர் அலங்கரிப்பது போல் வார்த்தைக்கு மேல்வார்த்தையாக அடுக்கடுக்காய் மொழிந்து விட்டனையே; நீ மொழிந்தபடி அவ்வளவு செல்வம் இருந்தும் என்ன பிரயோஜனம்? காட்டு முருக்கம் பூவானது பார்ப்பதற்கு நல்ல இலட்சணமாயும் மற்ற புஷ்பங்களைவிட மிகச்சிவப்பாயும் இருப்பதில் ஏதாவது வாசனையுண்டா? அம்மலரை யாராவது இச்சிப்பார்களா? அதுபோல் எனக்கு எவ்வளவுமேன்மையான குணலட்சணங்களிருந்தும். "மைநிறைந்தபொன்னிலும் கண்ணிறைந்தகணவனேமேல்" என்பது போல் தருணியாகிய எந்தனுக்கு ஒரு சுந்தராங்கனைமணம் செய்யாதிருப்பதால் இவ்வனப்பினால் என்ன பிரயோஜனம்? என் மாதாபிதாக்கள் எந்தனுக்கு விவாகம் செய்விக்கவேண்டுமென்கிற எண்ணமே இல்லாதவர்களாக இருக்கிறார்கள். நானெது காலபரியந்தம் இவ்வருஞ்சிறையிலிருந்து காலம் கழிக்க வேண்டுமோ? ஏதோ ஜகதீசர் என் தலையில் எவ்வாறெழுதினாரோ அப்படித்தானாகவேண்டும், அதைப்பற்றி நான் சொன்னதே தவிர வேறில்லை. ஆயினும் இதுசமயம் ஏன் அப்படி தெரிவித்தேனெனில் நான் நீராடச்செல்லவேண்டியதற்காக நகரத்தில் ஆடவர் ஒருவரும் வெளியிலிருக்கக்கூடாதென்றும் இருந்தால் சிரசாக்கினை செய்விக்கப்படுமென்றும் பறைசாற்றினதைக்கேட்டவுடன் அவ்விதத் துக்கம் ஜனித்தது. போகட்டும், இந்த சங்கதி நினக்கும் எந்தனுக்கும் தெரிந்ததாயிருக்கட்டும் வெளியிடாதே? நீராடச்செல்லகாலமாயிற்று, சேடியர்களைப்பல்லக்குத் தயார் செய்யசொல்?

மதிவதனா—சகி இந்திரலேகா! நீ இதுவரையில் இவ்வளவு துயரத்தை நின்மனதில் அடைந்திருப்பாயென எண்ணிலேன். உண்மைதான்! ஸ்திரீகளுக்கு ஆடவர் இன்பத்தைத் தவிரவேறு இன்பம் இவ்வவனியில் இல்லையென்பது வாஸ்தவந்தான்; அது "கரதலாமலகம்" போல்யானே நிதரிசனமாக அறிந்தது. ஆயினும் நீ துயருறாதே. இதை நின்மாதாவிடம் யுக்தியாயும் சமயோஜிதமாயும் தெரிவித்து நின்மனோபாவத்தை திருப்தி செய்விக்கிறேன். இப்பொழுது நீராடச்செல்ல சேடியர்கள் பல்லக்குடன் காத்திருக்கின்றார்கள், செல்வோம் வா.

இருவரும் நிஷ்கிரமித்தல்.

நாலாவது களம்.

குச்சரநாட்டிறைவனை வசுந்தரனும் மித்திராவசுவும் குடிமயக்கம் நீங்கி எழுதல்.

வசுந்தரன்.—(தனக்குள்) என்ன நாம் சுத்தமூடனாயினோம். நாம் வீரசுந்திரனைச்சோதிக்கவேண்டி அவனுக்கு ஏராளமான மதுவைக்கொடுத்துப் பானஞ்செய்யச் சொன்னோம். நமக்கும் அவன் கொடுத்த மதுவை ஏராளமாய்ப் பருகினதால் பிரக்ஞைதப்பி உத்தேசித்த காரியம் நிறைவேற சாத்தியமில்லாமற்போய்விட்டது. சரி மற்றொருதினம் அவனை மதுபானஞ்செய்ய அழைத்து அபரிமிதமான மதுவை உபசரித்து, உபசரித்துக்கொடுத்து பிரக்ஞைதப்பும்படி செய்து அவனை சோதனைசெய்யாமற்போனால் நான் இந்த மீசையை எடுத்துவிடுகிறேன். (மீசையை முறுக்கக்கையை கொண்டுபோதல்) ஆஹா! இதென்ன ஆச்சரியம்! ஒரு பக்கமீசை நறுக்கப்பட்டாற்போல் கட்டையாயிருக்கிறதே! நிலைக்கண்ணாடியிற் போய்ப்பார்ப்போம். சகே! மித்திராவசு என்ன தூக்கம்! எழுந்திரு? (கண்ணைத்துடைத்துக்கொண்டு மித்திராவசு எழு

தல்) தோழா மித்திராவசு! என்ன விந்தைபார்த்தனையா? எனது ஒரு பக்கத்து மீசைகத்தரிக்கப்பட்டிருக்கிறது. நமது தோழரான வீரசுந்திரனும் நம்மைப்போல் மதுபானஞ்செய்தவன்றோ, அவனையும் காணோமே இவ்விடத்தில். இது வென்ன விபரீதம்!

மித்திராவசு.—தோழா! நன்று மொழிந்தனை? நினது ஒருபக்கத்து மீசைபோனதாக மட்டிலன்றோ தெரிவித்தனை. எனது குடுமியும் அடியோடு கத்தரிக்கப்பட்டு இம்மேஜையின் மீதுவைத்திருப்பதுடன் கத்தரிக்கப்பட்ட நினது மீசையும் ஒரு தோற்பையும் ஒருலிகிதமும் வைத்திருக்கிறது பார்த்தனையா?

வசுந்தரன்.—நண்பா! இது வென்னமானக்கேடு! முதலில் அந்தலிகிதத்தையெடுத்து அதிலென்ன வரையப்பட்டிருக்கிறதென வாசித்துப்பார்? பிறகு மற்றவைகளைப்பற்றி ஆலோசிப்போம்.

மித்திராவசு.—நண்பா! யான் படிப்பதை சாவதானமாக கேள்? புத்தியைச்சிதறவிடாதே.

(மித்திராவசு கடிதத்தையெடுத்துப்படித்தல்)

இம்மகிதலத்திற்குத் திலகமெனவிளங்கும் குச்சர நாட்டிறைவனின் அரிய தவத்துதித்த வசுந்தரன் எனப்பெயர் பெற்ற மடையா! அன்னவனது தோழனும் மந்திரிகுமாரனும் மித்திராவசுவென்னும் பெயர்பெற்ற தூர்த்தா! நீங்கள் இருவருக்கும் வீரசுந்திரன் என காரணப்பெயர் பெற்ற நளாகினியெழுதும் நிருபம். துஷ்டர்காள்! விதியைநொந்து மதியுடன் காரணவிசேஷத்தால் ஆணுடை யணிந்து எனதன்புள்ள காதலரைத்தேடிவரும் பதிவிருதையான எந்தனை நீங்கள் அழைத்துவந்து பரிசோதித்து பதிவிருதா தர்மபங்கம் செய்ய நினைத்த மதிகேடர்களே! நீங்கள் யோஜித்தனுப்பிய

தாசிக்கிதமொழி பகறி உங்களை வஞ்சித்த தன்றியும், நீங்களது அவிவேகத்தால் தயார்செய்தமதுவைபானஞ்செய்யாது இவண் வைத்திருக்கும் தோற்பையிற் நிறப்பியும் உங்களை மோசஞ்செய்தேன். அன்னியமாதரை அடையவிரும்பும் ஆடவர்களுக்கு நிரபுநஷர்களைப்போல் இருபக்கத்து மீசை இருப்பது நலமல்லவென நினைத்து அரசகுமாரனான நினது ஒருபக்கத்து மீசையையும் நினக்கு சகாவாயிருந்த மித்திராவசுவினது சிகையையும் தரித்து இதோ வைத்திருக்கின்றேன். இனி இப்பேர்ப்பட்ட துஷ்கிருத்தியங்களுக்கு ஏற்படாது ஜாக்கிரதையாக இருந்து உங்களது ஆசைநாயகிகளுடன் சுகித்திருங்கள். வீணாசைகொண்டு இனி வாணாளைப் போக்கிக்கொள்ளாதேயுங்கள். இதை புத்திமதியாய்கிரகித்து குரு உபதேசமாக எண்ணி நடவுங்கள் மதிகேடர்காள்!

இங்ஙனம் நளாகினி.

வசுந்தரன்.—தோழா மித்திராவசு! பார்த்தனையா? ஒரு ஸ்திரீஜாதி மகாவல்லவர்களாகிய நம் இருவரையும் ஏமாற்றியதும் அன்றிமானபங்க மடையும்படி சிட்சையும் செய்தேகினள். அந்தோ! இதென்னவிந்தை. அப்பெண் மகளிரை நாயகியாக அடைந்த ஜன்மமன்றோ புண்ணிய ஜன்மம். ஆஹா! நமது கையிலகப்பட்ட கனியை அருந்தாது இழந்தேனே. எந்தனைப்போலொத்த மூடசிகாமணியும் உலகிலுளரோ? அந்தோ நமது ஆக்ஞையைவகித்த சந்திரவதனாள்கூட என்மட்டில் விரோதியாகினளே. ஆம் அவளைத்தான் நோவதில் யாது பயன்? அந்த நளாகினியென்னும் நாமங்கொண்ட நங்கை மகா தந்திரசாலியாய சந்திரவதனையைக்கூட தன்மனதின்படி திருப்பிக்கொண்டு தன்னையும் பெண்ணென தெரிவியாது மோசஞ் செய்தனளே. அவளன்றோ உத்தமபெண்மணி. இவ்விதம் நாம் மானபங்கப்பட்ட இது சமயம் சந்திரவதனை அழைத்து விசாரிப்பதும் நமக்கு மானபங்கமே. இனி

இன்னகரில் யாமிருப்பதும் நமது மரியாதைக்கு குறைவே. ஆகையால் மித்திராவசு! நாம் இப்பொழுதே இந்நகரத்தை நீங்கி மறுநகரடைந்து கிஞ்சித்துக்காலம் கழித்து வரலாமென்றும் அப்படி செல்லில் தனது நாயகனைக்காண ஆணுருவுடன் செல்லும் நளாகினி யென்னும் மாதை ஒருக்கால் நாம் சந்திக்கநேரினும் நேரும். அப்படி நேரிடில் அன்னவளை எவ்விதத்திலாவது நம்வசப்படுத்திக்கொள்ளலாம். அன்றேல் நம்மைச் செய்தமானபங்கத்துக்கு மாறாக அன்னவளை மானபங்கம் செய்து விடலாம். ஆகையால் நின்மனச்சம்மதியாது?

மித்திராவசு.—நேசா! நீ மொழிந்தனவெல்லாம் நன்றே. ஆனால் என்மனதில் ஒருபெண்மணியானவள் இவ்வளவு சாகசக்கியஞ்செய்து நம்மையேமாற்றி மானபங்கம்செய்து சென்றனளே யென்கிறதுயரமே வருத்துகிறது. ஆகையால் இனி நாம் இவண் இருப்பதும் நமக்கு இகழ்ச்சியல்லது புகழ்ச்சி இலது. ஆகையால் நினது யுக்தியின்படி இன்னகர்நீங்கிச் சில காலம் வேறிடம் இருப்பதே நலம். ஆகையால் இப்பொழுதே செல்வோம் வா தோழா!

இருவரும் முக்காடிட்டு வெளியே நிட்கிரமித்தல்.

ஐந்தாவது களம்.

இந்திரலேகையும் மதிவதனையும் பிரவேசித்தல்.

இந்திரலேகை.—தோழி மதிவதனை! இதோ பல்லக்கை தயாராக சேடியர் வைத்திருக்கின்றனர், நாம் நீராடச்செல்வோம் வா.

மதிவதனை.—தோழி அவ்விதமே செல்வோம்.

இந்திரலேகை நீராடச்செல்கையில் கடையிலிருக்கிற வீரசுந்தரனைக் கண்டதும் மையல்கொண்டு சிவிகையில் மூர்ச்சையுற, நதிக்கரையில் சென்றவுடன் மதிவதனை இந்திரலேகையின் மூர்ச்சையை அறிந்து

சிவிகையை திரும்ப அரண்மனை கொணர்ந்து அவளது மூர்ச்சையை தெளிவித்தல்.

இந்திரலேகை மூர்ச்சை தெளிந்தெழுதல்.

மதிவதனை.—சகி இந்திரலேகா! என்னவிசேஷம், நீராடச் சென்ற நீ மூர்ச்சையுறக் காரணம் யாது?

இந்திரலேகை.—தோழி! மற்றசேடியர்கள் எல்லாம் சென்று விட்டார்களா?

மதிவதனை.—சகி எந்தனைத்தவிர மற்றவர்கள் எல்லோரும் சென்று விட்டார்கள்.

இந்திரலேகை.—என்னின்னுருயிர்பாங்கி மதிவதனை! யானென்னமொழிவேன்? சொல்லவேண்டுமென்னும் அவாவும் அதிகம் இருக்கிறது, லஜ்ஜையாயும் இருக்கிறது ஆனால் நீ எந்தனை எப்படி பரிகசித்தாலும்சரி சொல்கிறேன் கேள். சகி நான் நீராடுவதற்காக சிவிகையேறி இரண்டு ஜன்னல்களையும் திறந்துவைத்துப்போனேனன்றோ? நீயும் கூடவேதானே வந்தாய், ஆனால் நீ கவனித்திருந்தால் எந்தனைவிட ஆயிரமடங்கு அதிகமாக மூர்ச்சித்திருப்பாய். நீ பார்க்கவில்லைபோலும். சிவிகை நமது இராஜவீதியிலுள்ள கடைவீதிமார்க்கமாகச் செல்லும்போது மற்றக்கடைகள் எல்லாம் மூடியிருக்க ஒரு கடைமட்டில் திறந்திருந்தது. அதில் சகி மிகவனப்புள்ள ஓர் ஆடவர் வீற்றிருந்தார். அவரைக்கண்டதும் ஆ சகி! (மூர்ச்சித்தல்.)

(மதிவதனையால் தேற்றப்பட்டு எழுந்து)

சகி என்மனம் அவர்பால் பூராவுஞ்சென்றது. தோழி! இப்பூவுலகில் அன்னவரைப்போன்ற ஆடவர்களைக்காண்பது மிக துர்லபமே. ஆகையால் அங்கஜனை அடிமையாக்கி என்மனதை அவலோகனமாத்திரத்தில் தன்வயப்படுத்திய அவ்வள்ளலை எந்தனுக்கு விவாகஞ்செய்வித்தாலாயிற்று, அன்றேல் என்ஜீவ

னைமடித்துவிடுவேன் என்பதற்கையமில்லது. தோழி! அவரைப் பார்த்தவுடன் மூர்ச்சையடைந்தேன் சகி.

மதிவதனை.—பிரியதோழி! நீ சஞ்சலப்படாதே. ஆனால் நின்தகைமைக்கும் நினது வடிவத்துக்கும் நீ இச்சித்ததுமட்டில் நன்றல்ல.

இந்திரலேகை.—தோழி! நீ மொழிவது உண்மையே. ஆயினும் கடையில் வீற்றிருந்த சீமானைப்போல் வடிவழகுடைய வள்ளலை இவ்வவனியில் காண்பதரிது. ஆகையால் தோழி! அவர் எவ்வாறிருப்பினும் எக்குலத்தவராயினும் அந்த சுகுமாரனை எந்தனுக்கு விவாகஞ்செய்வித்தாலாயிற்று, அன்றேல் என் ஜீவன் தரிக்காது. இது உண்மையே தோழி!

மதிவதனை.—சரி, நீ ஒன்றுக்கும் துயருறாதே, யான் நின் மாதா பிதாக்களிடம் தெரிவித்து நின் மனோபாவத்தை திருப்திசெய்விக்கிறேன். நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

(மதிவதனை நிட்கிரமித்தல்.)

ஆறாவது களம்.

சிந்துநாட்டரசன் விவேக சாதுரியனும் சுகுணவதியும்

பிரவேசித்தல்.

விவேகசாதுரியன்.—பிரியசகி! நமது இன்னுயிர்கண்மணியான இந்திரலேகை தனது தோழிமார்களுடன் உல்லாசமாயிருந்து வருகிறாளா?

சுகுணவதி.—நாதா! குழந்தை இந்திரலேகையென்பவள் மிகு உல்லாசமாயிருந்து வருகிறாள். ஆனால் அவளை இனி அப்படி வைத்திருப்பது நியாயமன்று. மங்கைப்பருவத்தனளாயினபடியால் அன்னவளெழிலுக் கிசைந்த நாயகனை அழைத்து வந்து விவாகம் செய்வித்தால் சதிபதிகளிருவர்களும் மிகு

உல்லாசமாக இருப்பதைப்பார்த்து நாம் ஆனந்திக்க இயல்பாயிருக்குமென நினைக்கிறேன்.

விவேகசாதுரியன்.—பிரியதயே! நன்று மொழிந்தனை? உண்மையே. நமதிளங்குமரி மங்கைப்பருவம் அடைந்தனள். இனிதகுந்த அரசகுமாரனைத் தேடி விவாகம் செய்விக்க வேண்டியதுதான். அப்படியே செய்கிறேன். பிராணப் பிரியே!

மதிவதனை பிரவேசித்தல்.

மதிவதனை.—பிரபோ! நமஸ்கரிக்கின்றேன். மாதா! நமஸ்கரிக்கின்றேன்.

வந்தனம் செய்தல்.

விவேகசாதுரியன்.—மதிவதனை! கல்யாண முண்டாகுக. என்னவிசேஷம்?

மதிவதனை.—மகராஜ்! அப்படிக்கொரு விசேஷமு மில்லை. ஆனால் சமுகத்தில் ஒரு சங்கதி விஞ்ஞாபனம் செய்யக் கருதினேன். தெய்வ சகாயத்தால் தாங்களும் மாதுஸ்ரீயும் சேர்ந்திருக்கிறீர்கள். நான் தெரிவித்துக் கொள்ளப் போகும் சங்கதியை தீர்க்காலோசனைசெய்து இருவரும் மனமொத்து முடிக்கவேண்டும். அன்றேல் தங்களது மனதுக்கு துக்கம் ஜனிக்கும் மகாராஜ்!

விவேகசாதுரியன்.—குழந்தை மதிவதனை! இதுயென்ன விந்தை! என்ன சமாச்சாரம் ஜல்தியில் தெரிவி?

மதிவதனை.—மகராஜ்! மற்றொன்றும் இல்லை. தமது அருமை திருக்குமரியானவள் நேற்றுமுதல் மன்மதன் வயப்பட்டு க்ஷணத்துக்கு க்ஷணம் அவள்படும் பாடு என் ஒருநாவால் எடுத்துரைக்கத் தரமன்று;

விவேகசாதுரியன்.— பெண்ணே! அது விஷயத்தைப் பற்றியே நீ இவ்விடம் வரும் சமயத்து யானும் காதலியும் சம்பாஷித்துக் கொண்டிருந்தோம். அதற்கேற்பவேயும் மொழிந்தனை. நன்று, இனி அரைக்ஷணம் தாமதிப்பதில்லை. இதுமுதல் விவாககாரியத்திற்கு எத்தனித்து சுலட்சணவந்தனை ஒரு அரசகுமாரனுக்கு துரிதமாக விவாகம் செய்விக்கிறோம். நீசென்று அன்னவளுக்கு தகுந்த தைரிய மொழிபுகன்று அவள் மனதை தேற்றிக்கொண்டிரு?

மதிவதனா.—மகாராஜ்! தாங்கள்மொழிந்ததுமேன்மையே. ஆயினும் அதில் மற்றொரு விசேஷமுளது. யாதெனில் தமது குமரிநேற்று நீராடச்சென்றவள் பல்லக்கிலேயே மூர்ச்சித்திருக்க யான் உடனே அவளை பல்லக்குடன் அரண்மனைக்கு கொண்டுவந்து தகுந்த சைத்தியோபசாரம் புரிந்து களையாற்றி நிகழ்ந்தவற்றை விசாரிக்கையில், இந்திரலேகை பெருமூச்செறிந்து ஈன சுவரமாய் எந்தனைப்பார்த்து "தோழி! நீராட இராஜவீதிவழியாகச்செல்கையில்" என்று சொல்லி உடனே மூர்ச்சித்தாள். நான் திரும்பகளையாற்ற பின்நீங்கி எழுந்து, தோழி! அந்த இராஜவீதியில் கடைவைத்திருக்கும் ஒருசுந்தராங்கனது எழிலைநோக்கி மயங்கினேன்; அன்னவனை எந்தனுக்கு விவாகஞ்செய்வித்தாலாயிற்று, அன்றேல் உயிர்துறப்பேனெனமொழிந்து; நாங்கள் என்னசொல்லியும் உண்ணாள், உறங்காள், எங்களுடன் விளையாடாள், ஆபரணம் பூணாள், ஏதோ தன்மனதில் தோன்றியதையெல்லாம் மொழிந்து கொண்டு மிகத் துயருறுகிறாள். இனி எங்களால் அவளைத் தேறுதல்செய்ய இயலா. நாங்கள் என் செய்வோம் மகாராஜ். மேலும் இராஜகன்னிகைகளுக்குள்ள வழக்கப்படி தங்கள் திருக்குமரி சுயம்பாகவே வரனை தேர்ந்தெடுத்திருக்கிறாள். அவள் மகா மேதாவியானதால் தன் வித்தைக்கும், புத்திக்கும் அழகுக்கும் அந்தஸ்துக்கும் சமானமான புருஷ

னைத் தான் இச்சித்திருப்பாள். தங்களுக்கு வரனைத்தேடுகிற சிரமமில்லாமலும், எதிர் ஜாமீன் கொடாமலும், விவாகவிஷயத்தில் தரகர்கள் செய்யும் மோசத்துக்கு உட்படாமலும், ஊரூராய் அலைச்சலில்லாமலும், புருஷர் மனையில் மாமிகள் நாத்திகள்செய்யும் கொடுமைக்கு உட்படாமல் எப்போதும் தங்கள் கிரகத்திலேயே வசிக்கக் கூடிய மாப்பிள்ளையைத் தேடியெடுத்திருக்கிறாள். இது விஷயத்தில் நாங்கள் விசாரித்தறியவேண்டிய தொன்றுமிராதென்று எண்ணுகிறேன் பிரபோ!

விவேகசாதுரியன்.—பிரிய சகி! இதென்ன விந்தையாயிருக்கிறது! மதிவதனா மொழிவதை நோக்கில் இந்திரலேகை மிகத்துயருறுகிறாள்போலிருக்கிறதே, கண்மணிவா குழந்தையைப் பார்த்துவருவோம்?

இருவரும் மதிவதனாவுடன் இந்திரலேகை அந்தப்புரம் வருதல்.

ஏழாவது களம்.

இந்திரலேகை மன்மததாபமுறல்.

இந்திரலேகை.—ஆஹா! மன்மதா! கோமளம் அபலையான என்மீது உந்தனுக்கு இவ்வளவுவருத்தந்தரக்காரணம் இல்லை. ஏனெனில் எந்தனைப்பார்த்தவுடன் நினக்கு பரமசிவத்தைக் கண்டதுபோல் இருக்கிறது. ஆகையால் பழைய பகையை மனதில்வைத்து வாட்டுகிறாய். ஏ அனங்கா! நீ என் மயிர்ப்பின்னலைப்பார்த்து ஜடையென்றும், கண்டத்தில் தாதிகளணிந்த கஸ்தூரியைப்பார்த்து காளகண்டமென்றும், எனது சிரோபாரத்திருக்கும் நறுமலரைக் கண்ணுற்று சிரசில்வளரும் சந்திரனென்றும், காம வெப்பத்தால் வெளுத்த என் சரீரத்தை பஸ்மோத்தூளிதமெய்யென்றும் நினைத்து வாட்டுகிறாயோ? வேண்டாம் இனி நான்தாளேன். ஐயோ! இதுசமயம்

என்சகிமார்கள்ஒருவரும்சமீபத்தில் இலரே யென்செய்வேன். பாழும் இரவே! நீ இன்னமும் தொலைந்தா யிலையே.

ஆழிவாய்ச் சத்தமடங்காதோ யான்வளர்த்த
கோழிவாய்மண்கூறு கொண்டதோ கங்குல்
தினகரனுந்தேரும் உருண்டதோ
பாதாளத்துள்.

(ஆஹா! என்செய்வேன் மூர்ச்சித்தல்)

விவேகசாதுரியன், சுகுணவதி, திடவானு மூவரும் பிரவேசித்தல்.

சுகுணவதி.—ஆஹா! என்கண்மணி இந்திரலேகா! நீ காமத்துயருற அறிந்தனையோ? அடியென்கண்ணே! யானும் நின் பிதாவும் இதுகாறும் உன்வருத்தத்தை உணர்ந்திலமே. கண்ணே என்கண்மணியே! அயருறாதே. நினக்கு இவ்வளவு வருத்தம் ஜனிக்க காரணம் யாது? நின்முத்தானவாய்திறந்து மறு உத்திரம் உரைப்பாய் என்பொன்மணியே!

இந்திரலேகை மூர்ச்சைதெளிந் தெழுதல்.

இந்திரலேகை.—என்னை அன்புடன் பெற்ற அன்னையே! யான் இன்னது செய்வதென என்மனம் நிலவரப்படவில்லையே, என்செய்வேன் அம்மா!

சுகுணவதி.—என் கண்ணே! கொஞ்சம் நினதுபுத்தியை ஸ்திரப்படுத்திக்கொள், உந்தனுக்கு இவ்வளவு துயரம் அதிசீக்கிரம் உண்டாகக்காரணம் யாது? அம்மணி!

இந்திரலேகை.—அன்னையே! நான் நீராடும்வண்ணம்சிவிகையில் இராஜவீதிசெல்லும் அமையத்து அவண் ஒருஉத்தம உருவிலி நிகர் ஆடவர் ஒருவர் கடைவைத்திருந்தனர். அன்னவரை யான்கண்டதும் என்மனம் தத்தளிக்கின்றது. யான் அன்னவரைச் சேராவிடில் என் உயிர்தரியாது அன்னையே!

சுகுணவதி.—நாதா! இதுவென்ன கோரம். உலகத்தில் "காமாதுராணாம்நபயம்நலஜ்ஜா" என்றபடி, உண்மையாக நமது குமரியிடம் நேரில் கண்டீர்களோ, இதுவென்னவிந்தை. இதற்கென் செய்வது காந்தா!

விவேகசாதுரியன்.—ரமணி! நன்று நமது கண்மணி யடையும் துயர் இருக்கட்டும். நான் இராஜவீதியில் நமதுகுமரி நீராடச்செல்கையில் ஒரு ஆடவரும் வெளிவரலாகாது, அப்படிவரின் உடனே சிரசாக்கினைசெய்யப்படும் என ஆக்ஞாபித்து பறைசாற்றிசொல்லி யிருக்க, ஆடவனொருவன் கடைவைத்திருக்கவாவது, என்று, பிராணப்பிரியே! நீகுழந்தையை தேற்றிக்கொண்டிரு, யான் கொலுமண்டபம் சென்று சங்கதி விசாரித்து நினக்கு தெரிவிக்கின்றேன்.

சுகுணவதி.— நாதா! நன்று, நாம் விசாரித்து நமது குமரிகண்டு காதலுற்ற ஆடவனை தமதாக்கினைப்படி சிரசாக்கினைசெய்யில் நமது குமரியை இழந்தோம் என்பது உண்மை. ஆகையால் தக்கபடி சீர்ப்படுத்தி சங்கதி தெரிவிக்கவேண்டும் காந்தா!

விவேகசாதுரியன்.— அப்படியே செய்கிறேன் காதலி! (சபைக்குவந்து) அமைச்ச! நேற்றுக்குமுந்தினநாள் நமது குமரி நீராடச்செல்கையில் இராஜவீதியில் ஆடவர் ஒருவரும் வெளிவரலாகாதெனப் பணித்தோமன்றோ? அப்படியிருக்க யாரோ ஒரு ஆடவன் கடைதிறந்துவைத்துக்கொண்டிருந்ததாக கேள்விப்பட்டேன். அவனைக்கண்டு விசாரித்து இவண் அதிசீக்கிரமாக அழைத்துவரவேண்டும்?

திடவான்.—மகாராஜ்! தமது ஆக்ஞைக்கு அஞ்சி யான்கூட வெளிவராதிருக்க கேவலம் ஒரு கடைவியாபாரம் செய்யும் ஆடவன் ஒருவன் கடைதிறந்து வைத்திருந்தானெனப் புகல்வது மிக்க ஆச்சரியமே. ஆயினும் அவனையான் எவ்விதம் அறிவேன் மகாராஜ்!

விவேகசாதுரியன்.—அமைச்ச! இத்தாதியானவள் அவ்வாடவனை தமக்கு குறிப்பிடுவாள்; ஆகையால் அன்னவனை இவண் அழைத்துவரவேண்டும்.

திடவான்.—ஆக்ஞா மகாராஜ்! மந்திரி நிட்கிரமித்தல்.

தாதியினால் அந்த கடைவைத்த ஆடவனை மந்திரி நோக்கல்.

திடவான்.—(தனக்குள்) ஆஹா! இது யென்னவிந்தை! இம்மகானைப்பார்த்தால் இப்பூதலம் முழுவதும் ஒரு குடையிலாளும் புரந்தரன்போலிருக்கிறான். என்ன காலவித்தியாசமோ இந்நகர்ப்போந்து வாணிபஞ்செய்ய வாரம்பித்தனன். இவனையும் இவன் வீற்றிருக்கும் கம்பீரத்தையும் நோக்கில் இவன் உத்தமக்ஷத்திரிய குலவள்ளல் எனத் தோன்றுகிறது. ஆயினும் சமீபம் சென்று சம்பாஷித்து உண்மையறிவோம். ஏ வாணிபஞ்செய்யும் உத்தமனே! சிறிதிவண் வருதி?

வீரசுந்திரன்.-(தனக்குள்) ஆஹா! நம்மை அழைப்பவரை ஆழ்ந்துநோக்கின் இந்நகரத்து அமைச்சன் போலும்தோற்றுகிறது. இவனே நம்மை அழைக்கிறான். யாமோ நாதனைத் துறந்து துறவிபோலாகினோம். ஆகையால் துறவிக்கு வேந்தன் துரும்பன்றோ? ஆனதால் இவணிருந்தே சம்பாஷித்து பின்நடக்கும் விஷயங்களைக் காண்போம். (பிரகாசமாக) ஐயா உத்தம சிகாமணியான அமைச்சரே! வந்தனம் செய்கிறேன். வாருங்கள் வீற்றிருங்கள்?

திடவான்.—ஆஹா! எவ்வளவு மரியாதையாக சம்பாஷிக்கிறான். நல்லது ஐயா தாம்யார்? தமது நாமதேயம்யாது? தாம் வசிக்கும் நகரம்யாது?

வீரசுந்திரன்.—பிரபோ! யானிருப்பது காஸ்மீரதேசம். எனதுபெயர் வீரசுந்திரன். ஏதோ காலவித்தியாசத்தால் இவண்வந்து கடைவைத்து வியாபாரம்செய்துகொண்டிருக்கிறேன்.

திடவான்.—ஐயா! தாம் எக்குலத்துதித்தவர்?

வீரசுந்திரன்.—பிரபோ! யான் உத்தம க்ஷத்திரியகுலத்தில் உதித்தவன்றான். என்காலவித்தியாசத்தால் என் மாதாபிதாக்களை நீங்கி இவண்வந்தேன்.

திடவான்.—பிரபோ! தாம் க்ஷத்திரியகுலமென மொழிந்தீர்களே, காஸ்மீரதேசத்தரசருக்கு தாம் ஏதாவது பந்துவாக இருக்கலாமோ?

வீரசுந்திரன்.—பிரபோ! உத்தமசிகாமணியான தாம் இவ்விதம் சம்பாஷிக்கலாகாது. யான் எனது பூர்வோத்திரத்தை ஒருவருடனும் மொழிவதில்லையென ஒரு காரணத்தால் விரதங்கொண்டேனாயினும் தமது பெருந்தன்மைக்காக இஞ்சித்து தெரிவித்தேன். மேன்மேலும் என்னை வினவாதிருக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

திடவான்.—ஆஹா! (மனதிற்குள்) இவனது வார்த்தையினால் உத்தமகுல ராஜசிகாமணியென நினைக்கின்றேன். உற்றது உரைக்க சம்மதித்திலர். ஆகையால் இஞ்சித்து குரோதத்துடன் சம்பாஷித்தால் இவனது பூர்வோத்திரம் அறியலாம். (பிரகாசமாக) ஏ திடவானே! நீ மொழிந்ததெல்லாம் உண்மையே. அரசரது ஆஞ்ஞையை நிராகரித்த நின்மனவலுவை ஆலோசித்தால் எனக்கு மிக்க ஆச்சரியமாயிருக்கிறது. காரணம் யாது?

வீரசுந்திரன்.—மகாராஜ்! நன்றுவினவினீர்கள்? யான் அப்படி ஒருபொழுதும் ராஜாக்ஞையைத் தவறிநடப்பவனன்றே?

திடவான்.—ஏ புருஷசிரேஷ்டா! இரண்டுதினத்திற்கு முன் இந்நகரத்தரசன்மகள் இவ்வழியாய் நீராடச்செல்லப் போவதாயும் அதுகாலை ஆடவர் ஒருவரும் வெளிவரலாகாவென்றும் அப்படி யாராவதுவரின் அவர்களை சிரச்சேதம் செய்யப்படுமென்றும் பறைசாற்றினது தமக்குத் தெரியு

மன்றோ? அப்படியிருக்க மற்றவர்கள் எல்லாம் கடைசாற்றி அரசரது ஆக்ஞையின்படி நடக்க, தாம்மட்டில் அவ்வாணைப்படி நடவாது தமது கடையை திறந்துவைத்திருந்ததுமன்றி தாமும் இருந்தகாரணம்யாது?

வீரசுந்திரன்.—பிரபோ! சிந்தித்து ஞாபகமாய் வினவவேண்டும். தாம்மொழிந்தது உண்மையே. அரசர் தாம் தெரிவித்தபடி பறைசாற்றுவது தகுதியல்லவே. ஏனெனில் அரசர் குடிகளுக்கு பிதாவன்றோ? அப்படியாயின் அன்னவர் வயத்துதித்த புதல்வர் குடிகளுக்கு சகோதரரும் புதல்வி சகோதரியுமாவார். அப்படியிருக்க சகோதரி நீராடச்செல்வதானால் சகோதரர்கள் ஏன் சுயேச்சையாயிருக்கலாகாது. ஆனால் இன்னகரத்தில் சகோதரிபாவம் இல்லாது ஆசைப்படுவதும் அப்படியே விவாகஞ்செய்வதும் வழக்கம்போல் காணுகின்றது. ஆனால் மிலேச்சர்கள்மட்டில் அவ்விதம் விவாகம் செய்வதென்றும் அதிலும் அண்ணன்மகளும் சித்தப்பன்மகளும் கூடிவாழ்வது வழக்கமென்றும் கேட்டிருக்கிறேன். இன்னகரத்திலோ அதைவிட இழிவாக உடன்பிறந்த சகோதரர் சகோதரிகள் விவாகஞ்செய்துகொள்வதென்பது எந்தனுக்குத்தெரியாது. அன்றியும் ஒருநகரத்தில் ஏழைகள் பலரிருப்பர். சிலர் தங்கள் அகத்திலுமிருப்பர் சிலர் இராமலுமிருப்பர். அகத்திலிருப்பவர் ஆணைப்படி இருப்பார்கள். வெளியே சென்றவர்களுக்கு இவ்வாணைதெரியாததால் தாங்கள் சென்றவேலையை முடித்து தம் இல்லத்திற்கு திரும்பிவரும் அமயத்து இராஜகுமாரி பிரவேசமாகில் உடனே ஆணைகடந்தனனென்று அன்னவனை வதைப்பது இராஜதர்மமாகுமா? அரசருக்கு தாம் நினைத்த அல்பகாரியத்தைமுடிப்பது ஓர் பெரிதா? அப்படியிருக்க அரசர் தமது செல்வக்குமரிகள் நீராட தமது உத்தியானவனத்தில் ஒரு தடாகம் நிர்மாணிப்பது பெரியகாரியமா? அது அரசருக்குத் தெரியாவிடினும் உத்தம

ராகிய தாம் அருகிருந்தும் அதைப்பற்றி மன்னவருக்கு எடுத்துரையாதிருந்தது தமது பெருங்குற்றமன்றோ? இவ்வளவுசங்கதிகளையும் இவ்வளவு குற்றங்களையும் செய்திருக்கிற தாங்கள் "ஒட்டகத்திற்கு தன்கோணல் தனக்குத் தெரியாதது போல்" எந்தனை இராஜாக்கினை கடந்ததற்கு ஏன் சிக்ஷை விதிக்கக்கூடாது என்று தாம்மொழிவது தருமசாஸ்திரத்திற்கும் அரசுரிமைக்கும் விரோதமன்றோ? மேலும் இவ்வகை காரணங்களால் ஏழைகளாகிய குடிகளை வருத்திடில் அவர்கள் துயரப்படுவது வீண்போமா மகராஜ்! ஏழைகள்விடும் கண்ணீர் அரசரது வாழ்நாளை வேருடனறுக்கும் கூரியவாளாயுதமன்றோ? இவ்வித நீதிகள் எல்லாம் தெரிந்ததாம் எந்தனை இப்படி பரிசோதிப்பது தகுதியா மகராஜ்!

விதூஷகன்:—(மனதிற்குள்) வீரசுந்திரா! அரசன் மகள் உனக்கு நிஜமாகவே சகோதரியாகப்போகிறாளென்பது நான்மட்டும் அறிவேன்.

திடவான்.—(தனக்குள்) ஆஹா! இவன் உத்தம க்ஷத்திரியகுல தோன்றல் என்பதில் ஐயமிலது. அவன்மொழியும் வசனங்களெல்லாம் நீதியாயும் சாஸ்திரோக்தமாயும் இருக்கிறது. இவருக்கு மறுமொழி பகர யாதொருவழியும் இலது. ஆகையால் இவரை நமதரசர்பால் அழைத்துச்செல்வோம். (வெளிப்படையாக) ஏ உத்தமகுலத்துதித்த வள்ளலே! தம்மனதை சோதிக்கப்புகன்றதல்லது வேறன்று. நான் வந்தகாரணம் யாதெனில் எனதரசர் தாம் தீரத்தையும் இலாபமிலாது வர்த்தகஞ்செய்யும் ஔதாரியத்தையும் ஏழைகளுக்கிரங்கும் உத்தமகுணத்தையும் கேள்வியுற்று தம்மை அவண்மனைக்கழைத்துவரும்படி ஆக்ஞாபித்தனர்! ஆகையால் ஏ உத்தமகுணவள்ளலே! அரசரது விருப்பத்தின்படி தாம் என்னுடன் கூடவேவந்து அரசரது மனைமகிழ நடக்கவேண்டுமாய் வேண்டுகின்றேன்.

வீரசுந்திரன்.—பிரபோ! தாம் என்னை அவ்வளவு பெருமைப்படுத்தல் தகாது. அன்றியும் என்னைப்போலொத்த ஏழைகளால் மன்னவர்களுக்கு நடக்கக்கூடிய உபகாரம் ஒன்றுமிலது. அன்றியும் வியாபாரஞ்செய்வதில் அரசரது ஆணைமீறி கொள்ளல் விற்றல்செய்வதில் கள்ளநிறை, கள்ளப்படி, குறைந்த அளவு, திருட்டுப்படி இவைகளை உபயோகிப்பவரும் திருட்டுச்சொத்து வாங்குபவரும் திருடர்களுக்கிடங்கொடுப்பவரும், இகலரசர்களுக்கு கொள்ளல் விற்றல்செய்பவரும், இராஜதுரோகஞ்செய்பவரும் அரசருக்கு அஞ்சவேண்டியதன்றி என்னைப்போல் கொள்ளவருபவர்கேட்கும் விலைக்கே விற்பனைசெய்வதும் கொடுக்கவருபவர் சொல்லும் விலைக்கேகொள்வதும் சரக்குகள்கொள்வதில் கொண்டுவந்திருப்பவர் யோக்கியதையை ஆராய்ந்துகொள்வதும் அரசருக்களிக்கும் பகுதியைகிரமப்படி காலாகாலத்தில் குறித்ததொகையை செலுத்திவருவதுமான நடத்தையிலிருக்கும் யான் அரசரிடம் வர யாதொரு காரணமிலது. எனக்கு ஏதாவது அவசியமிருப்பினும் சத்துருக்களால் துன்பம்நேரினும் அரசரவைக்கு வரவேண்டும். எனக்கு சத்துருக்களும் இல்லை, அரசரது அவையில் வேலையுமிலது. ஆகையால் யான் அவ்விடம்வருவதற்கு இதுசமயம் சரிப்படாது பிரபோ!

திடவான்.—ஆஹா! இவரது ஆண்மையும் வீரமும் நீதியும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. இவர்மொழியும் வார்த்தைக்கு யாம் பதிலுரைக்க இடமில்லாமல் சம்பாஷிக்கிறார். ஆனால் இவரைவிட்டுப் பிரியவேண்டுமே என்கிற வருத்தத்துடன் பிரியவேண்டியிருக்கிறது. தவிர வேறு ஏதேனும் சம்பாஷிப்பரோ எனில் நாம் மொழியும் வார்த்தைக்கு விடையளிக்கிறாரேயன்றி தானாக நம்முடன் ஓர் உரையும் ஆடவில்லை. அரசரும் நமதுவரவிற்கு எதிர்பார்த்திருப்பார். ஆகையால் விடைபெற்றுசெல்வோம். பிரபோ! தாம் நான் சொன்ன மொழிகளுக்கெல்லாம் தகுந்தவிடையளித்துவிட்

டீர்கள். மறுத்துரையாடவில்லை. அரசன் எனது வரவை எதிர்பார்த்திருப்பார் ஆகையால் யான்சென்றுவருகிறேன்.

வீரசுந்திரன்.—ஏழையாகியயான் மொழிந்தவார்த்தைகளில் ஏதேனும் குற்றம் இருப்பின் மன்னிக்ககோருகிறேன். சென்றுவாருங்கள், வந்தனஞ்செய்கிறேன்.

(வந்தித்தல்)

(மந்திரி நிஷ்கிரமித்தல்.)

விவேகசாதுரியன்.—ஆஹா! இதுவென்னவிந்தை! மந்திரி சென்றவர் இன்னம் வரக்காணவில்லையே.

(மந்திரி பிரவேசித்தல்.)

திடவான்.—பிரபோ! நமஸ்கரிக்கின்றேன் (வந்தித்தல்)

விவேகசாதுரியன்.—அமைச்ச, கல்யாணமுண்டாகட்டும். வீற்றிரும்? தாம்சென்றகாரியமென்ன, அவரை யழைத்து வராமல் திரும்பிய சங்கதி யென்ன?

திடவான்.—மகராஜ்! தமது ஆக்ஞையின்படி சென்று தாதியால் குறிப்பிடப்பட்ட மனிதனைக்கண்டுகேட்டேன். அவன் காஸ்மீரதேசத்தில் க்ஷத்திரியகுலத்தில் ஜனித்தவனென்றும், தன்பெயர்வீரசுந்திரன் என்றும், தான் தன்மாதாபிதாக்களின்மீது வெறுப்படைந்து இவண் கடைவைத்திருப்பதாயும், தாம் இராஜாக்ஞையை நிராகரிக்கவில்லையென்றும், அரசர் பறைசாற்றியது நியாய விரோதமென்றும், பலகாரணங்களுடன் மொழிந்த நியாய வார்த்தையைக்கேட்டு அன்னவரை இவண் அழைத்துவரலாமென அழைக்க, அதையும் பலநியாயங்களால் நிராகரித்து விட்டனர். அவர் மொழிந்த நீதிவார்த்தைக்குயான் மறுமொழி உரைக்க வழியிலாது விடைபெற்றுத் திரும்பி வந்தேன் மகராஜ்!

(சுகுணவதி பிரவேசித்தல்.)

சுகுணவதி காந்தா! நமஸ்கரிக்கின்றேன்.

விவேகசாதுரியன்.—சுபம்பவது. பிரியரமணி! என்னமிகுந்த பரபரப்புடன் இவணடைந்தாய், என்னசங்கதி?

சுகுணவதி.—ரமணா! யான் யென்சொல்வேன்? நமது கண்மணி படும்பாட்டை மகாபாவியாகிய யான் கண்ணால் காண சகிக்கவில்லையே! அன்னவள் காதலுற்ற ஆடவர் இன்னம் இவண் வரவில்லைபோல் தோற்றுகிறதே, இனி தாமதிக்கில் நாம் இச்சென்மத்தில் நமது குமரியைக் காணப்போவதில்லை, யானென்செய்வேன் நாதா!

விவேகசாதுரியன்.—காதலி! தயருறுதே? மந்திரியை அனுப்பி அழைத்துவரப்பணிக்க அன்னவர் மொழிந்த நீதிவசனங்களால் தடுத்துமொழிய வழியிலாது திரும்பி இப்பொழுதுதான் வந்தனர். பின்னரும் அவரையனுப்ப எண்ணினேன். அதற்குள் நீ மொழிவதை ஆலோசிக்கில் என்மனம் பதறுகிறது. ஆகையால் பிராணப்பிரியே! நீ அவ்விடம் சென்று கிஞ்சித்து தேறுதல் செய்துகொண்டிரு, இதோ யானே அவ்விடம்சென்று அழைத்துவருகிறேன், நீ சீக்கிரம் அந்தப்புரம்செல்.

(சுகுணவதி நிட்கிரமித்தல்.)

விவேகசாதுரியன்.—அமைச்ச! இதுவென்ன நமக்கு மிகுந்த அபாயத்திற்கிடமாயிற்று. நமது குமரியானவள் அந்த ஆடவரைக் கண்ணுற்று ஆசைகொண்டு அவள் படுந்துன்பம் சகிக்கலாற்றாததாக இருக்கிறது. ஆசைப்பட்டவள் உயர்குடியில்பிறந்த நம்மொத்த உத்தம அரசர்பால் ஆசைவைக்கலாகாதா? நான் எவ்விதஞ்சென்று அவ்வாடவனை அழைத்து வருவது மந்திரி?

திடவான்.—மகாராஜ்! தமது குமரி அவன்மீதுகாதல்கொண்டனள் என்பது பெரிதன்று; யானே அவருடன் சம்பாஷித்தபோது அவரது வனப்பினாலும் சாதுரிய மொழிகளாலும் அவரைவிட்டு நீங்கமனமிலாது வந்தனன் என்றால் குழந்தை இச்சைப்பட கேட்பானேன்? தாம் வேறு விதமாக நினைக்க வேண்டாம். அவர் தம்மைப்போல் உத்தமகுல வள்ளல்தான் மகாராஜ்!

விவேகசாதுரியன்.—அமைச்ச! எவ்விதமாயினும் நமது மொழியால் யான் உறுதியடைந்தேன். தாங்களும் என்னுடன் வாருங்கள், அன்னவரை அழைத்துவரலாம்.

திடவான்.—அப்படியே வருகிறேன் மகாராஜ்.

(இருவரும் நிட்கிரமித்தல்.)

விதூஷகன்.—அய்யா மளிகைக்கடை வீரசுந்திரரே! உமக்கு விவாகம் நெருங்கிவிட்டது. மாளிகையைவிட்டு மாளிகையில் நடக்கும் கல்யாணசந்தடியில் என் கச்சேரியை மறக்கக் கூடாது.

வீரசுந்திரன்.—விதூஷகா! ஏன் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறாய்? (பிறகு மனதிற்குள்) ஆஹா! இதுவென்ன விந்தை! நாம்விளையாட்டாக மந்திரியிடம் வாதாட இன்னகரத்தரசரும் மந்திரியும் வருகிறார்களே! என்ன ஆபத்துநேருமோ. ஏதோ அறிகிலேனே, “ஆறுநேரானமாமும் அரசரோடேறு மாறான குடியும் அழியும்” என பெரியோர் உரைத்திருக்கின்றனரே. இனி நாம் என்னசெய்வது? வருவது வந்தேதீரும், எதுவரினும் தைரியத்தைவிடலாகாது, ஜகதீசன் கருணை செய்வார், அரசரும் சமீபமாக நம்மையே நோக்கிவருகிறார், எதிர்சென்று அழைப்போம்.

இடத்தைவிட்டெழுந்து கொஞ்சதூரம் சென்று அழைத்தல்.

திடவான்.—மகாராஜ்! அதோ அந்தக்கடையில் இருந்து எழுந்தாரே அவர்தான் நாம் குறிப்பிட்ட சுந்தரன்.

விவேகசாதுரியன்.—ஆஹா! அமைச்ச! தாம் மொழிந்தது உண்மையே. சபாஷ்! என்னலக்ஷணம்! நான்பார்த்தவுடனே

என்மனம் மிகவாநந்தப்பட்டு இவ்விடத்தைவிட்டகலவும் மனமிலாது தடைப்பட்டுநிற்கின்றது. ஆகையால் இவ்வுத்தமரைக் கண்ணுற்ற எனது குமாரியான அபலை காதல்கொண்டனள் என்பது ஆச்சரியமல்ல. ஏ இந்திரலேகா! உன்னழகுக்கும் கவுரவத்துக்கும் வித்தைக்கும் தகுந்த புருஷனை இச்சித்தாய். சபாஷ் உன் புத்தியின் சாதுரியம் மெச்சத்தகுந்தது! ஆகையால் அவரை எவ்விதமாகவாவது அரண்மனைக்கழைத்துச் சென்று நமது குமாரிக்கு மணம்செய்விக்கவேண்டும்.

வீரசுந்திரன் பிரவேசித்தல்.

வீரசுந்திரன்.—அண்ணலே! வீரசுந்திரன் நமஸ்கரிக்கிறேன். (வந்தித்தல்) யான்செய்த பாக்கியவசத்தால் தாங்கள் எனது கடையைநாடி வந்தீர்கள். வீற்றிருங்கள் மகராஜ்!

விவேகசாதுரியன்.—சுலட்சண வீரசுந்திரா! யானெனது மந்திரியைவிட்டு தம்மை அழைத்துவரப்பணிக்க தாம் மறுத்தகாரணம் யாது?

வீரசுந்திரன்.—ஆதுலரைக் காப்பாற்றும் அரசே! அமைச்சர் எந்தனை அழைத்தது உண்மையே. அதை யான்மறுத்ததும் நிஜமே. ஏனெனில் காரியமில்லாமல் காவலர் அரண்மனையிற்செல்வது எதெற்காக என்பதைப்பற்றியேயன்றி வேறன்று பிரபோ!

விவேகசாதுரியன்.—ஏ வீரசுந்தரா! நீமொழிந்தது வாஸ்தவமாயினும் இந்நகரில் நின்னைப்போன்ற ஆடவர் பலர் இருக்க தம்மையழைத்தது காரணமில்லாதிருக்குமோ?

வீரசுந்திரன்.—வள்ளலே! வாஸ்தவம். எனது பஞ்சபூத சாக்ஷியாக யாதொருகாரியமும் நடத்தினவனல்லன். யானறியாது ஏதேனும் நடந்திருப்பில் இன்னகுற்றம்செய்ததற்காக நீ ராஜசமுகம் வரவேண்டுமென கட்டளையுடன் சேவகர் வரவேண்டிய நியாயமிருக்க, அவ்விதமிலாது அமைச்சர்வந்த

ழைப்பில் எந்தனுக்கு அவையில் காரியமில்லையெனப் புகன்றதன்றி வேறிலது மகாராஜ்!

விவேகசாதுரியன்.—நன்று. வீரசுந்திரா! காரணத்தைத் தெரிவிக்கில் நீ இராஜசபைக்குவரத் தடையேதேனும் உளதோ?

வீரசுந்திரன்.—உசிதமாயிருக்கின் அரசர் ஆணையைக் கடக்க வல்லவர்கள் யாவருளர்?

விவேகசாதுரியன்.—மதிமுகவள்ளலே! நீ ஒருகுற்றமும் செய்திலன் என மொழிந்தீரன்றோ? நீர் ஒரு ஸ்திரீஜாதியை இந்த இராஜவீதியோடு செல்கையில் பலாத்காரஞ்செய்து இம்சித்ததாகவும் அம்மடநல்லாள் சபித்து தனது இல்லம்சென்று மிகத்துயருறுவதாயும் அவளது ஜீவன் இதுவரை இருக்கிறதோ இல்லையோவென்னும் சந்தேகமாயிருக்கிறதென்றும் என்னிடம் தெரிவித்ததாலும் அதை விசாரிக்கவேண்டிய அவசரத்தாலும் தம்மை அழைத்ததன்றி வேறிலது.

வீரசுந்திரன்.—(தனக்குள்) ஆஹா! இம்மன்னவர் மொழிவதைப்பார்க்கில் வெகுவிந்தையாய் இருக்கிறது. நாம் இருக்கும் ஸ்திதி அவர்களறிந்துகொள்ளவில்லை. நம்மை ஆடவனென்றே மதித்து நம்மை அழைத்துப்போகவேண்டிய விஷயத்திற்காக இவ்விதம் மொழிந்தனர்போலும் தோற்றுகிறது. என்னகாரணத்திற்காக அழைக்கின்றனரோ அதுவும் தெரியவில்லை. ஆயினும் மாறுதல்மொழியலாகாது. ஆயினும் அவரது வாய்கொண்டே உண்மையைத் தெரிந்துகொண்டு பிறகு ஆலோசிப்போம். (பிரகாசமாக) மகாராஜ்! தாம்கூறியது மிக்க ஆச்சரியமாயிருக்கிறது. ஏனெனில் யான் தாங்களுரைத்தபடி யாதொரு துஷ்கிருத்தியங்களும் செய்தவனன்று. ஆயினும் செய்ததாகவே வைத்துக்கொள்வோம். அப்படியாயின் யான் அபராதியன்றோ? அபராதிகளை சிக்ஷிக்க

வேண்டுவது தமது கடமையே. அதற்கு தாமே நேரில் வரக் காரணமிலது. ஆகையால் இவைகளையோசிக்கில் என்மனங் கலவரப்படுகின்றது. உண்மையாக எந்தனை அழைக்கும் காரணத்தை தெரிவிப்பின் ஆக்ஞையின்வண்ணம் நடக்க காத்திருக்கிறேன் மகராஜ்!

விவேகசாதுரியன்.—(தனக்குள்) ஆஹா! இந்த உத்தம குணவள்ளல் ஏதோ கிஞ்சித்து வணக்கமாக ஒத்துக்கொண்டுரையாடுகிறான். நாம் லஜ்ஜையடைந்து காரணத்தை மறைத்துக்கூறினால் அதற்குடன்படாமல் மறுத்துவிடில் என்செய்வது? ஆகையால் உள்ளபடி உண்மைமொழிந்து காரியத்தை ஸாதகப்படுத்திக்கொள்ளவேண்டும். (பிரகாசமாக) ஏ உயர் குலவள்ளலே! யான் இதுவரை கிஞ்சித்து மறைவுதலாக மொழிந்தேன். இனி அவ்வாறு மறைப்பதில் பிரயோஜனமிலது. சொல்கிறேன்கேளும். யான்புத்திரனில்லாக் கவலையால் புராரியைக்குறித்து தவமியற்ற, அன்னவர் எந்தனுக்கோர் பெண்மகவை அனுக்கிரகித்தனர். அப்படியே யான் ஒரு பெண்மகவடைந்து அன்னவளுக்கு இந்திரலேகையென நாமஞ்சூட்டி சகலகலாவதியாகச் செய்விக்க, அன்னவள் தருணியானதறிந்து ஓராண்மனையில் சேடியர்சகிதம் தனிமையிலமர்த்த, அன்னவள் இரண்டுதினத்திற்குமுன் ஈராடச்சென்றவள் தமது எழிலைநோக்கி ஏக்கமுறும்வகையை யென் ஒரு நாவால்சொல்லும் தரமன்று. எவ்வளவோ ஆறுதல்சொல்லியும் அவள்மனம் தேறும்வழியிலது. இதுவரை உயிருடன் இருக்கின்றாளோ ஏதோ அறிகிலேன். அவளிறப்பின் என் உயிரும் அரசும்போம். ஆகையால் ஏ! சுந்தராங்கா! என்மீது கருணைசெய்து என்னரண்மனைகண்ணி துயர்க்கடலில் மூழ்கி இருக்கும் எனதருமைக்குமரியை மணந்து எனக்கு ஜீவதானம் கொடுக்கவேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

(இராஜன் எழுந்து இரண்டுகையும் எந்திநிற்றல்.)

விதூஷகன்:—அரசசிம்மமே! ஒருபெண்ணுக்கு மாப்பிளைதேட கஷ்டப்படுகிறீர்களே! நித்யதரித்திரனாகிய நான் எட்டுப்பெண்களை யன்று என்ன அவஸ்தைப்பட்டிருப்பேனென்று எண்ணுகிறீர்கள்? ஒருபைசா செலவில்லாமலும் கட்டுசோறுகட்டிக்கொண்டு தேசந்தேசமாய் அலையாமலும் உள்ளூரிலேயே உயர்ந்த மாப்பிளையகப்பட்டது உன்பாக்கியமல்லவா? சீக்கிரம் மாப்பிள்ளைகாலில் விழுந்தாவது விவாகத்தை முடியுங்கள். குடும்பசகிதமாய் பத்துநாள் விசாரமற்று புசிக்கிறேன்.

வீரசுந்திரன்.—(தனக்குள்) ஆஹா! இதுவென்ன கஷ்டமாயிருக்கிறது. நம்மைப்பார்த்து இவ்வரசன்மகள் காமுற்றதாயும் தனக்கு ஏகபுத்திரியாதலால் அவளைமணந்து தன்னைக்காப்பாற்றவேண்டுமென்றும் இப்புரவலர் இருகையுமேந்தி எழுந்துநிற்கின்றனரே. இதை மறுப்பது நமக்கழகன்றே. அப்படியேயாயினும் நமது விவாகத்தால் அப்பெண்மணிக்கு என்னசுகம் உண்டாகப்போகிறது? மறுக்கில் அரசர் மரிப்பார்போலும் தோன்றுகிறது. ஆகையால் இதுவும் நம்காலவேற்றுமையே. ஆயினும் அரசதர்மம்போல் நடப்பில் எவ்விதமாவது நமதுநாதரைத் தேடலாம். ஆகையால் நீக்கவேண்டிய காரணங்கள் பல புகன்றாலும் அரசர்கேட்பதாக காணவில்லை. ஆயினும் தெரிவித்துப்பார்ப்போம். (பிரகாசமாக) ஏ லோகேசா! தாம்மொழிந்தது மிக்கஆச்சரியமாயிருக்கிறது. தமது பெண்மணி எந்தனைப்பார்த்து மையல்கொண்டனள் என மொழிவதும் தாம் எந்தனை மணஞ்செய்துகொள்ளச் சொல்வதையும் கேட்க என்மனம் வருத்தமுறுகின்றது. அண்ணலே! யானே உத்தம க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவனென்பதற்கு ஐயமிலது. ஆயினும் யான் தேசாடனஞ்செய்யப் புறப்பட்டகாரணம் எனக்கு நேர்ந்த ஓர் மனவருத்தத்தாலல்லது வேறிலது. அவ்வருத்தம் இன்னதென்று இச்சமயம்

இராஜன், அமைச்சன், வீரசுந்திரன் மூவரும் பிரவேசித்தலும், இந்திரலேகை பிதா வீரசுந்திரன் முதலியவர்களைக்கண்டதும் லஜ்ஜையுற்று தலைகுனிந்து நிற்றல்.

விவேகசாதுரியன்.—எனதன்புள்ள பெண்மணியே! நின் மனதைக் கொள்ளைகொண்ட ஆடவர் இதோவந்திருக்கிறார். அவர் நின்னுடன் சம்பாஷிக்கஇச்சித்து அவாக்கொண்டிருக்கிறார் அம்மணி!

இந்திரலேகை.-பிதா! நமஸ்கரிக்கின்றேன். பிரபோ! நமஸ்கரிக்கின்றேன். (வந்தனம்செய்தல்.)

வீரசுந்திரன்.—ஏ சுந்தராங்கி! உயர்குடியிற்பிறந்த உத்தம வடிவழகுள்ள மங்கையே! நீ நினது சவுந்தரியத்திற்கும் பெருமைக்கும் ஏற்றபடி தகுந்த உத்தம லட்சணகுண சம்பன்னனை கிரீடாதிபதியினது குமாரர்மீது காதல் கொள்ளாது காரணவசத்தால் மிக வைராக்கியத்தை வகித்திருக்கும் பஞ்சைப்பரதியான வடிவழகற்ற என்மீது காதல்கொண்டனையாம்! அந்தோ! ஆரணங்கே! யானோ ஒருவிரதத்தைக் கடைப்பிடித்து அதுமுடியும்வரை காதலுக்கனுகுணமான வஸ்துக்களை அணிவதில்லையெனவும் தரித்த இவ்வாடையைத்தவிர வேறு ஆடைபுனைவதில்லையெனவும், நீராடுவதில்லையெனவும், காரிழையாரோடு கலப்பதில்லையெனவும் வைராக்கியம்கொண்டிருக்கிறேன். அது நீங்குவதற்கு இன்னம் இரண்டரை வருஷமிருக்கிறது. ஆகையால் ஆரணங்கே! என்மீது நினக்கு அவாவிருப்பின் அதுபயனிலது. ஆகையால் என்மீதுள்ள இச்சையைப்போக்கிவேறு நின்மனதிற்கிசைந்த ஆடவர் எவர்மேலாகிலும் காதல்கொள்வையேல் நினது பருவத்திற்கேற்ப சுகமடையலாகும். கல்விநிறைந்த காரிழையே! நின்கருத்தில் யோசனைபுரிந்து விடையளிப்பாய்.

இந்திரலேகை.-ஆஹா! எனதாசைப்பெருக்கத்திற் காதாரமானவிந்தே! தாம்மொழிந்தது எனக்காச்சரியமாயிருக்கிறது. நான் பருவமடைந்தபின் முதன்முதலில் தம்மைக்கண்டு காதல்கொண்டு தம்மைத்தவிர அன்னிய புருடரை நாடுவதில்லையெனவும் தம்மையே நாயகராக அடைவதெனவும் அவ்விதம் சேராவிடில் எனதுயிரை மாய்ப்பதென்றும் உறுதியுடன் இதுகாறும் அல்லலடைந்திருந்த என்னைப்பார்த்து தமக்குப் பிரியமில்லாததால் வேறு புருடர்மீது காதல்கொள்ளும்படி பணித்தீர்கள். காமனைவென்ற காதலரே! நான்மொழியும் உறுதியாதெனில் தாம் மொழிந்தபடி தமக்கு இரண்டரை ஆண்டு நோன்பிருப்பினும் நானும் கூடவே இருந்து அன்னோன்பையியற்றி தம்மோடுசேர்ந்து மருவிவாழ்வதல்லால் வேறு ஒருபுருடரை கண்ணெடுத்துப்பார்ப்பதும் இல்லை கருத்தில் நினைப்பதுமில்லை. அன்றி இதுசமயம் நீர்மறுப்பில் இதோ இச்சண்டாளியின் ஜீவனை நின்பாதத்தடியிலேயே நீக்கிவிடுகிறேன் பிரபோ! (மூர்ச்சித்தல்.)

வீரசுந்திரன்.—(தனக்குள்) இதென்ன கஷ்டமாயிருக்கிறது. முன்நேர்ந்த சங்கடத்தைக்காட்டிலும் இது பெரிதாயிருக்கிறதே. நல்லது, இப்பெண்மணி நம்மைப்போலவே அழகுபடைத்து நமது உறுதிபோலவே திடங்கொண்டிருக்கிறாள். நாம்வெறுப்பில் இவள் உயிர்துறப்பாளென்பதில் ஐயமில்லை. நன்று விப்பிரசுமங்கலிகளால் மாங்கல்யம்தரிப்பித்து அந்தரங்கத்தில் இவள் காதலைத் தணிக்கவேண்டும். பின் நமது நாதனை நாம்கண்டவுடன் இவளையும் நம்மைப்போல அவரதுமனைவியாகச் செய்யவேண்டியதுதான். என்செய்வது? ஒப்புக்கொள்ளவேண்டியதாகத்தான் இருக்கிறது. (பிரகாசமாக) ஏ ஆரணங்கே! நின் பிடிவாதம் வெகுநன்று. என்னைப் பிடித்தபாவம் நின்னையும்பிடித்து வாட்டவேண்டுமோ? அரசரே! தமது குமாரியின் விருப்பத்தின்படியும் தமது இச்சையின்படியும் நான் நடந்துகொள்கிறேன் பிரபோ!

மதிவதனு.—பத்மாக்ஷியைநோக்கி அன்னையே! நமது கண்மணியான இந்திரலேகை மகா புண்ணியவதி, ஆகையால் இப்பேர்ப்பட்ட சுந்தரநாயகன்மீது காதல்கொண்டனள். இவள் புத்திசாலியென்பதில் ஐயமிலது மாதா!

விவேகசாதுரியன்.—அமைச்ச! யான் தன்னியனாகினேன். இன்றுமுதல் நான்காவது தினமாகிய சுக்கிரவாரத்தன்று நமது குமரிக்கு விவாகமென நகரத்தோரெவர்க்கும் பறைசாற்றி அதற்கு வேண்டியகாரியங்களை ஆயத்தம் செய்யுங்கள்?

திடவான்.—ஆக்ஞாபனத்தின் வண்ணம் தயார்செய்கிறேன் பிரபோ!

எல்லோரும் நிஷ்கிரமித்தல்.

சுக்கிரவாரத்தன்று விவாகம் வெகு சம்பிரமமாகமுடிந்தது. இந்திரலேகை மிகுந்த சந்தோஷத்துடனும் ஆவலுடனும் அந்தப்புரம் செல்லுதல்.

வீரசுந்திரன்.—(தனக்குள்) ஜகதீசா! இதென்ன விந்தை! அத்தைய நல்லாளை நான் எவ்விதம் சமாதானம் செய்து என் வயப்படுத்திக்கொள்வேன். சகலத்திற்கும் நீயே துணை செய்யவேண்டும்.

(இந்திரலேகை சயனகிருகம் பிரவேசித்தல்.)

இந்திரலேகை.—காந்தா! நமஸ்கரிக்கின்றேன். வந்தனம் செய்தல்.

வீரசுந்திரன்.—கல்யாணம் பிராணப்பிரியே! வீற்றிரு.

இந்திரலேகை.—ரமணா! யான்நீராடவந்த அன்று தம்மைக்கண்டவுடன் அடங்காக் காதல்கொண்டேன். அதுமுதல் என்மனம் பதறுகிறது. ஆகையால் ஏ காந்தா! எந்தனை யாதரிக்கவேண்டும் பிரபோ!

வீரசுந்திரன்.—ஏ சுந்தராங்கி! இந்திரலேகா! நின்னை நின் அரண்மனையில் யான்பார்த்தபோது நின்மீதில் நின்னைவிட

யான் காதலாகினேன். ஆயினும் யான்நகரத்தைவிட்டு தேசாடனத்திற்கு புறப்பட்டது முதல் என்மனோபாவம் திருப்தியாகும்வரை நங்கையரைக் கனவிலும் நினைப்பதில்லையென்று உறுதி செய்துகொண்டேன். ஆனால் அது இன்னம் நெடுங்காலத்திற்கில்லை. இன்னம் இரண்டொருவருஷமே உள்ளது. அதுவரை எந்தனை நின்னைப்போன்ற பெண்மணியென நினைத்து சொற்பகாலம்பொறுத்திரு. எனதுகோரிக்கை நிறைவேறின பின் நீயும் யானும் குதூகலமாயிருக்கலாம். நங்கையே! என் மனதிற்கிசைந்த மங்கையே!

இந்திரலேகை.—காந்தா! தாம் அப்படி சம்பாஷிக்கலாமா? சருகு ஜலவாயுபக்ஷணம் செய்து அரிய தவம் இயற்றும் யோகிகள்கூட காமத்தை ஜயிக்க முடியவில்லையென்றால் என்னாலும் தம்மாலும் முடியுமா? இந்திரன் அகலிகையின்மீது காதல்கொண்டு சேரச்செல்ல அதனால் அவன் மகா தூர்த்தனெப் பெயரெடுப்பினும் சகலராலும் மதிக்கும்படி அமரேசனாயிருக்கவில்லையா? சந்திரன் குருபத்தினியான தாரையைச்சேர்ந்து சுகமநுபவித்ததால் களங்கம் ஏற்படினும் நிசாபதியென்றும் தமோநாசகன் எனவும் பெயர்பூண்டு பரிசுத்தனாக இருக்கவில்லையா? அதுபோல்தாம் வலியமோகித்து அணையுங்காலை கஷ்டம் ஏற்படினும் அதற்கிசைந்த சுகமும்கிடைக்கும். தவிர தாம் ஒரு பிரதிக்ஞை செய்துகொண்டதாக சொல்லுகிறீர்கள். இருக்கட்டும் எந்தனை இப்பொழுது அணைந்து சுகித்தால் அப்பிரதிக்ஞை தவறிப்போமென நினைக்கிறீர்கள். நான் இன்று தங்களைச் சேராவிடில் உயிர்துறப்பதென பிரதிக்ஞை செய்துகொண்டேன். அப்படி இன்றுதாம் எந்தனைக்கூடாவிடில் நான் உயிர் தரியேன். என்றால் யான்கொண்ட காமவெப்பம் சகிக்கலாற்றவில்லை. எப்படியாவது எந்தனைக் காப்பாற்றவேண்டும் காந்தா!

(நமஸ்கரித்தல்.)

வீரசுந்திரன்.—ஏ லலனா! நீமொழிந்தது மிக ஆச்சரியமாயிருக்கிறது. ஐயோ! பர்வம் வீணாக ஏன் உயிரைமாய்த்துக்கொள்ளப்போகிறாய். எவ்வளவுநீதிகள் புகன்றாலும் நின்னகத்தழுந்திலதே. ஏ ஹம்சகெமனா! எழுந்திருசொல்கிறேன். நின் மனதின்படி யான் நடக்கவேண்டுமென்று என்றனை இதுசமயம் பலவந்தஞ்செய்கிறாயே. நன்று, நான் இதுவரை நின்மனதை சோதிக்கவேண்டி இவ்வளவும் புகன்றதல்லது வேறன்று. ஏ பிராணப்பிரியே! நன்றாய்கவனி, நான் நின்னுடன்புகலும் அந்தரங்கங்களையும் நடத்தைகளையும் நான் எக்காலம் வெளியிடசொல்ல ஆக்ஞாபிப்பேனோ அதுவரை வெளியிடுவதில்லையென்றும், எந்தவிதத்தினாலும் என்கட்டளையை மீறுவதில்லையென்றும் பிரமாணஞ்செய்யின் நின்மனோபாவத்தின் வண்ணம் நடப்பதில் ஐயமிலது. என்னசொல்லுகிறாய் ரமணி!

இந்திரலேகை.—ஏ சுந்தராங்கா! இதுசமயம் தாம்மொழிந்தது உண்மையே. காந்தா! எதுசமயம் தாம் என்னை விவாகம் செய்தீர்களோ அப்பொழுதே தமதுகட்டளைக்கு கீழ்ப்பட்டு தமது இஷ்டம்போல் யான் நடக்கவேண்டியவளன்றோ? ஆகையால்தாம் என்னை பரவசஞ்செய்யச்சொல்லிக் கேட்பதால் சொல்கிறேன்கேளுங்கள்.

(பரவசம் செய்தல்.)

அகிலலோகேசனாய் ஷாட்குண்ணிய பரிபூர்ணனாய் எள்ளுள் எண்ணெய்போல் எங்குநிறைந்திருக்கும் சாக்ஷாத்ஸ்ரீயபதியினது பரிபூர்ணகிருபைநிறைந்த நிஜசரணாரவிந்த சாக்ஷியாகவும் தமது அருமைநிஜசரணாரவிந்த சாக்ஷியாகவும் தாம் எனக்கு எதுபணிக்கிறீர்களோ அதைதமது உத்திரவின்பேரிலல்லது யான்வெளியிடுவதில்லை; அப்படி வெளியிடுவேனாகில் கொண்டபுருஷனுக்கு துரோகஞ்செய்பவர் போகும் கதியிலேயும் அக்கினிசாக்ஷியாக மங்கிலியம்தரித்த நாதரது மனம்வருந்த நடக்கும்பாவிகள் போகும் கதியில் போவேன் மகராஜ்.

வீரசுந்திரன்.—ஆ என்னுயிர்க்குச்சிதமான இந்திரலேகா! வா என்மடியில் வீற்றிரு. கண்மணி யான் உன்னுடன் சொல்லப்போகும்சங்கதியானது நீ வியக்கத்தக்கதாகவே இருக்கும். ஆனால் அது எவ்விதமிருப்பினும் நினக்குதுயர் உறச்செய்வதாயினும் வெளிவிடலாகாது கண்மணி!

இந்திரலேகை.—காந்தா! மறுத்தும் கேட்கின்றீர்களே. தாம் சொல்லப்புகும் சங்கதி என்மனதுக்கு மிகத்துயர்விளைவிப்பதாயினும் பிறரிடமொழியேன், இதுசத்தியம் ரமணா!

வீரசுந்திரன்.—ஏ சுந்தராங்கி! காஸ்மீர தேசத்தரசனும் மந்திரியும் புத்திரரைவேண்டி சாக்ஷாத் கறைக்கண்டரைக் குறித்து தவமியற்ற, சந்திரசேகரர் அகமகிழ்ந்து அரசருக்கோர்பெண்மகவும் மந்திரிக்கோர் ஆண்மகவும் உண்டாமென கழறிக்கறைய, இருவரும் நகர்வந்தினிது இருக்கும் நாளில் அரசனுக்கோர் பெண்மகவும் மந்திரிக்கோர் ஆண்மகவும் ஜனித்தது. அரசகுமரிக்கு நளாகினியென்றும் மந்திரிகுமாரருக்கு சுந்தராங்கன் எனவும் நாமமியற்றி ஐந்துபருவத்தில் இருவரையும் பள்ளியிலமர்த்த இருவரும் படித்துவரும் காலமுதல் பிரியாவிடையாய் நேசித்துவர நின்னைப்போல் சகலவிதத்திலும் கருவடைந்த அந்நளாகினியும் மந்திரிகுமாரனும் தக்கபருவத்தராயினதுகண்டு அரசன் நளாகினியை தனியரண்மனையிலிருத்த, அதனால் நளாகினி சுலட்சணவந்தரான மந்திரிகுமரரை பிரிந்திருக்க சகிக்கலாற்றாது மிகக்காதல்கொண்டு தன்னின்னுயிர் தோழிமூலமாக மந்திரிகுமாரருக்கு லிகிதமொன்று அனுப்ப, ஏற்கனவே நளாகினிமீது காதலுற்றிருக்கும் அவ்வமைச்சர்மதலை லிகிதத்தைக் கண்ணுற்றதும் மிகக்காதல்கொண்டு அந்தரங்கமாக இரவில் நளாகினியினது அந்தப்புரம்வர, அன்னவள்மொழிந்த சூழ்ச்சியின் வண்ணம் இரண்டுகுதிரையுடனும் இரண்டு ஆளுடையுடனும் குறிப்பிட்ட இடம் காத்திருக்க நளாகினியான வந்தன

க்கு வேண்டியபொருள்களையும் பசியாற்றும் வஸ்துக்களையும் யெடுத்துக்கொண்டு மந்திரி குமாரிருந்த இடம் அடைய, அன்றிரவு அப்பொழுது இருவரும் பரியேறி முகம்விட்டவாக்கில் குதிரையை நடத்திக்கொண்டு சூரிய உதயமாகி பத்துநாழிகைக்குமேல் ஒரோடையையடைந்து ஸ்நானஞ்செய்து உண்டு தாம்பூலந்தரிக்கும் அமயத்து, நளாகினியானவள் சுந்தராங்கனின் வடிவழகைநோக்கி மிக்க காதல்கொண்டு பகற்பொழுதாயிற்றேயெனவும் பாராது காந்தர்வமாக அன்னவனைகூடி. அவ்விளைப்பினாலும் இராத்திரிவழிவந்த சிரமத்தினாலும் நளாகினியானவள் சுந்தராங்கனின் மடிமீது சயனித்து, பிறகு விழித்து சுந்தராங்கனை காணாது தவித்து சோர்ந்தனள்.

(மூர்ச்சித்தல்.)

இந்திரலேகை:—காந்தா! ரமணா! இது யென்னவிந்தை! தாம் ஒருகதை சொல்லிவரும்போது மூர்ச்சையானகாரணம் யாது? காந்தா! என்னுயிர் காதலரே! நான் இனியென்செய்வேன் ஜகதீசா.

(மூர்ச்சைதெளிந் தெழுதல்.)

வீரசுந்திரன்:—ரமணி! ஏன் அயரப்படுகிறாய்?

இந்திரலேகை.—காந்தா! தாம் அடியாளுக்குமிகவும் சாரமாகிய ஓர்கதை சொல்லிவரும் அமயத்து நளாகினி துயிலெழுந்து தனது நாதனைக்காணாது தவித்தனள் என்றுசொன்னவுடன் மூர்ச்சையாகினீர்கள். அதைப்பார்த்தவுடன் மனந்தாளாது அயருற்றனன் பிராணேசா!

வீரசுந்திரன்.—பிரியதமே! அவ்வளவு சுலட்சணவதியான நளாகினியே தனது மிக்கவடிவுடைய கருவமைந்த நாயகனைப்பிரிந்து தவிக்கின்றனளே. நீ இதுசமயம் யான் மொழிந்தபடி இரண்டரைவருடம் பொறுக்கலாகாதா ரமணி!

இந்திரலேகை.—பிராணகாந்தா! அன்னவள் நாதனை இழந்ததனால் அயருற்றனள். ஆனால் தாம்பிரத்தியக்ஷமாக என் சமீபத்திலிருக்க யான் எதற்கு வியாகூலப்படுவது?

வீரசுந்திரன்.—ஏ சுந்தராங்கி! இந்திரலேகா அந்த நளாகினி யாரென்றுநினைக்கிறாய்? தனது ஆசைநேச உல்லாச ரமணனை ஆபத்சகாவான நாயகனைப்பிரிந்து தவிக்கும் நளாகினி யான்தான் காந்தே!

இந்திரலேகை.—பிரபோ! கதைசொல்லிவருகையில் என் மனதை "நான்நளாகினியென்றுசொல்லி" ஏமாற்றநினைத்தீர்களா? நன்று ரமணா! தாம்மொழிந்தபடி நளாகினியென்னும் பெண்மணி தாமாகவே இருப்பின் யானும் அத்துயருக்கு பாத்தியப்பட்டு அனுபவிக்க வேண்டியதுதான். ஏன் என்னைப் பரிகசிக்கிறீர்கள்.

வீரசுந்திரன்.—சுந்தரி இந்திரலேகா! யான் நினக்கு அபத்தம்மொழிந்ததாக நினையாதே. இதோபார் என்வடிவத்தை.

திரைக்குப் பின்னால் தனது ஆடையைக்கழற்றி இந்திரலேகைக்கு தனது சுயரூபத்தைக் காட்டல்.

இந்திரலேகை.—ஆஹா! அம்மணி தாம்யார்? தேவருலகத்துறையும் அரம்பை - மேனகை - ஊர்வசி திலோத்தமையெனமொழியும் உத்தமாதர்களில் ஒருத்தியோ? அன்றேல் அரன் பாகத்தமர்ந்த அன்னபூரணியோ? அல்லது உந்திபூத்தோன் இருதயத்தமர்ந்த இரதியோ? காந்தனையீன்ற இலட்சுமியோ? அன்றேல் அயன்நாவில்வாழ்நாமகளோ? தாம் யாராக இருப்பினும் அடியாளாகிய எனக்கு அனுக்கிரகம்செய்ய வேண்டும் தாயே!

நளாகினி.—எனதாருயிர் சகோதரி! யான் நீ மொழிந்தபடியாருமல்லள். நின்னைப்போல் அரசகுலத்தில்ஜனித்தவள். நீ எனது ஆண்வேடத்தைக்கண்டு ஆடவனென ஆசைவைத்

ததுபோல் நளாகினி மந்திரிகுமாரர்மீது காதல்கொண்டு அன்னவருடன் நகரம்நீங்கி வெளிவந்து காட்டில் துயின்ற சமயம் நாதனை இழந்த நாரியாகிய நளாகினியென்பவள் யானே. கண்மணி! யான் காலவித்தியாசத்தால் எனதாருயிர்க் காதலரை, எனதாசைநேச உல்லாசரை, எனதருமை நாயகரைப்பிரிந்து தவிக்கிறேன். அப்பேர்ப்பட்ட மாபாவியான என்னுடைய போலிவேடத்தை உண்மையெனக் காதல்கொண்டு நான் மறுத்துரைத்த வசனங்களைக்கேளாது விவாகஞ்செய்து கொண்டனை. இனி எந்தனைப்போல் நீயும் அல்லலடைய நேர்ந்ததேயன்றி வேறிலது. ஏ சுந்தராங்கி! நான் என்செய்வேன்.

இந்திரலேகை.—அம்மணி! தமது நால்விரல் நகத்தழகிற்கும் ஈடாகாத யான் என்ன மொழியப்போகின்றேன். தாம் ஒருநாயகனை காதல்கொண்டு நகர்நீங்கி அழைத்துவந்து பிரிந்து துயருற்றீர்கள். தாமேகாதல்கொண்டணைந்த நாதன்தம்மைவிட தேஜோமயசுவரூபர் என்பதில் ஐயமிலது. அப்படியிருக்க நான்தமது ஆணுருவத்தைக்கண்டு காதலுற்றேன். இப்பொழுது தமது நாதரேயெந்தனுக்கும் நாயகரல்லவோ? ஆகையால் அதுவிஷயத்திற்கு நான் சந்தோஷப்படுவதைத் தவிர்த்து துயருற நியாயமில்லை. ஆயினும் தற்காலம் தமது நாதர் தமது சமீபத்திலில்லாது துயருறுவதால் அத்துயரையே யானும் அனுபவிக்க வேண்டுவதுதான். ஆனால்தாம் பெண்மணியெனத்தெரிவித்தசங்கதியை வெளியிடுவேனென நினைக்கிறீர்களோ அப்படி நினைக்கவேண்டாம். ஏனெனில் நானப்படி சத்தியம் மறந்து மொழிவேனாகில் என்னைப்போலொத்த நாரியால் நான் பெண்மகளிரைக்கண்டு காதலுற்றடைந்தவளென நிந்திக்கப்படுவதன்றி நீங்காத வசையுண்டாம். ஆகையால் ஏ எனது அருமைசகோதரியே! யான் தமது ஆக்ஞையின்படி நடக்கிறேன். தமக்கானகதி யெனக்கு மாகட்டும். தாம் ஆணுடையுடனிருந்து நமது நாதரை நண்ணும்வரை

இவ்விடமே இருந்து எந்தனை கண்ணியமாய் நடத்திவர பிரார்த்திக்கின்றேன்.

(வந்தித்தல்.)

நளாகினி.—புத்தியிலுயர்ந்த பூவையே! எனதாருயிர் நங்கையே! நின்வசனத்தைக்கேட்டு ஆனந்தித்தேன் எனினும் நமதாருயிர்கண்ணாளரை, புத்திசிகாமணியை, மேன்மையுள்ள திடவீரசிகாமணியைக்கண்டு நமது காமவெப்பம் நீறகலந்து வாழும் நாளென்றோ? மங்கையே! நீ ஆடவர் இன்பத்தை இதுகாறும் அடைந்தாயில்லை. ஆதலால் நின்மனம் ஒருவாறு தேறுதலடையலாம். ஐயோ! மாபாவியாகிய இச்சண்டாளியானவள் "மூன்றேமுக்கால்நாழிகை முத்துமழைபொழிய வாரியெடுப்பதற்குள் மண்மாரிபொழிந்ததாம்" என்பதுபோல் ஒருநிமிஷம் அச்சுகத்தையடைந்து அதன்சிரமத்தினால் பாழும் நித்திரை எந்தனுக்கு சத்துருவாக வர, ஐயோ மங்கையே! நமது இராஜ கண்ணாளரை இழந்து அவதிப்படுகின்றேன். ஆபத்பாந்தவனாகிய அருள்வள்ளலான ஆர்த்தத்ராணபரான கங்காதரன் எக்காலும்சேர்த்து வைப்பரோ? எப்பொழுது நாம் இருவரும் சந்தோஷத்தை யடைவோமோ? ஆயின் நாம் துயருறுவதில் பயனிலது. ஆகையால் இந்திரலேகா! நின்மனதின்படி யான் ஆணுடைதரித்துக் கொள்ளுகிறேன். நீ உதயத்தெழுந்து நினதரண்மனை சென்றவுடன் நின்மாதாவும் சகிமார்களும் நின்வரவை எதிர்பார்த்து "சுகமடைந்தனையா" என்று வினவுவார்கள். அதுகாலை அவர்களது கேள்விக்கிசைந்த விடையளித்து நமது அந்தரங்கத்தில் சந்தேகம் ஜனிக்காதிருக்கும்படி செய்து உடனே இவண்வரின் நாமிருவரும் கபடபந்தனஞ்செய்துகொண்டு அம்மானை கழற்சிகாய் முதலியவைகளாடி மகிழ்ந்திருக்கலாம். எனதாருயிர் நங்கையே! இதற்கென்ன சொல்லுகிறாய்?

இந்திரலேகை.—எனதன்புள்ள சகோதரியே! தாம் ஒன்றுக்கும் துயருறவேண்டியதில்லை. தாம் மொழிந்ததுபோல்

நமது நாதர்வரும்வரை தமது சித்தப்படியே நடந்துவருகிறேன். ஆகையால்தாம் ஆணுடைதரித்து மர்மம்விடாதிருக்க பிரார்த்திக்கிறேன்.

நளாகினி.—நங்கையே! நினது புத்தியை மெச்சினேன்; ஆகையாலிதோ-ஆணுடைதரித்துக் கொள்கிறேன்.

(உடனே ஆணுடை யணிதல்.)

இந்திரலேகை.—காந்தா! ஒரு காரியமிருக்கிறது. யாதெனில் தாம்பகற்பொழுதெல்லாம் ஆணுடையுடனிருந்து என்மனங்களிக்க சம்பாஷித்தும் இரவெல்லாம் நாம் இருவரும் மனமொத்த காதலர் காதலியர் இருவரும் மிகுந்த சரசசல்லாப அமளியில் விருப்பதுபோல் கட்டித்தழுவி சயனித்துக்கொண்டும் காலத்தை காதலர்வரும் காலம்வரை கழிப்போம். இப்பொழுது உதயமாகின்றது. அடியாள்சென்று எனது மாதா பிதாக்கள் மனமகிழ ஆடவரையணைந்த அரிவைபற்போல் அபிநயித்து அவர்கள்மனதை சந்தோஷிப்பித்து துரிதமாக இவண்வருகிறேன். அதுவரையில் தாம் இவண் இருக்கள். சென்றுவருகிறேன் சகோதரி!

வீரசுந்திரன்.—ஏ லோகசுந்தராங்கி! நன்றுமொழிந்தனை. ஆயினும் நினது மாதாபிதாக்கள் நினது வரவுக்கெதிர் பார்த்திருப்பர்கள் என்பதில் ஐயமிலது. ஆகையால்நீ ஆடவரைச் சேர்ந்ததாக அறிவிப்பதிலும் நின் சரீரத்திலும் அவ்விதச் சின்னங்கள் இருப்பின் அது அதிக உசிதமானது. ஆகையால் இதோ இங்கேவா? நினது பின்னலை அவிழ்த்துகலைத்தும் இடையில்தரித்த ஆடையை தலைப்புமாற்றி உடுத்தும், தாம்பூலம் தரித்துக்கொண்டும் கண்ணில் இட்டியமைகள் கொஞ்சம் கரைந்து முகத்தில் படிந்ததுபோல்செய்தும்; நின்கழுத்திலணிந்த ஆபரணங்கள் சிக்குப்பட்டதுபோல் மாற்றியும் வைத்திருக்கிறேன். ஆகையால் நங்காய்! சீக்கிரமேசென்று நின்

புத்தியை சிதறவிடாது என்மனமகிழ அதிதுரிதமாக வரவேண்டும். சென்றுவா?

(இந்திரலேகை நிஷ்கிரமித்தல்.)

சுகுணவதியும் விவேகசாதுரியனும் பிரவேசித்தல்.

விவேகசாதுரியன்.—பிரியாமணி பத்மாட்சி! நமது குமரி எவ்வளவு காதல் அடைந்தாளோ அவ்வளவு காதலுமடங்க சுகமனுபவிக்க இயலாது. நமதுமருமகன் இரண்டரைவருஷம் நோன்பிருப்பதாகவும் அதுவரை நாரியரைச் சேருவதில்லையெனவும் மொழிந்தனனன்றோ? அப்படியிருக்கையில் நமது குமரி நேற்று இரவு சென்றவள் என்ன சுகத்தை அடைந்திருக்கப்போகிறாள். அன்னவள் வந்தவுடன் துயரப்படுவதைப் பற்றி நாமும் துயரடைய வேண்டியதாய் லபிக்கது. என்ன செய்யலாம் காதலி!

சுகுணவதி.—தாம்மொழிந்தது உண்மையே யாயினும் நமது குமரியினது சாமர்த்தியத்தால் தன் காதலனை வயப்படுத்தி சுகம் அடைந்திருப்பளென்று நினைக்கிறேன். ஏதோ குழந்தைவந்தவுடன் விசாரித்து பார்ப்போம்.

(இந்திரலேகை பிரவேசித்தல்.)

இந்திரலேகை.—மாதா! நமஸ்கரிக்கின்றேன். பிதாவிருப்பதைக்கண்டு லஜ்ஜையுடன் மறைவாயிருத்தல்.

சுகுணவதி.—கண்மணி வா? நின்மனம் சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கி நின்மனதிற்கிசைந்த காதலருடன் கலந்துறவாடினையா?

இந்திரலேகை.—ஒன்றும் பேசாது புன்சிரிப்புடன் தலைகுனிந்து நிற்றல்.

சுகுணவதி.—கண்மணி! சகிமார்கள் நினக்கு மஞ்சனமாட்ட காத்திருக்கிறார்கள். ஜல்தியில் சென்று நீராடி போஜனம்செய்.

(இந்திரலேகை நிட்கிரமித்தல்.)

சுகுணவதி.—காந்தா! நமது செல்வகுமாரியின் சாமர்த்தியமே சாமர்த்தியம்! ஏனெனில் நமது மருமகன் இரண்டரை வருடம் நோன்பிருப்பதால் தான் நாரியரைச் சேருவதில்லையென புகன்றனரே. அப்படியிருக்க நமது கண்மணி அந்தப்புரஞ்சென்று அவரை எப்படியோ தன்வயப்படுத்தி சுகித்திருக்கிறாள் என்பதில் ஐயமிலது மகாராஜ்!

விவேகசாதுரியன்.—மடமானே! சபாஷ் நமது குழந்தை நீ வினவியதற்கு தலைகுனிந்து பேசாமல் நின்றாளென்கிற குறிப்பினால் சொல்லுகிறாயோ? அன்னவளது ஆயரை நம்மிடம் தெரிவிக்க வருத்தமுற்று நின்றவளேயன்றி வேறிலது காந்தே!

சுகுணவதி.—பிரியமணாளா! அப்படியன்று. அவள் நின்ற நிலையில் புன்சிரிப்புடன் நின்றாள். அதைத் தவிர்த்து அவளது கேசபாரங்கள் வெகு அலங்கோலமாய் கலைந்தும் கண்ணில் தீட்டிய அஞ்சனங்கள் சதிபதி இருவரது அவாவினால் யேற்பட்ட ஆலிங்கன வைபவத்தில் அவளது அழகிய கன்னமெல்லாம்படிந்தும், கழுத்திலிட்ட ஆபரணங்களெல்லாம் சிக்குண்டும் இடையிலுடுத்தியிருந்த ஆடையினதுமேல் முந்தானை அடியிலும் அடிமுந்தானை மேலுமாக புரட்டிக்கட்டியிருப்பதினாலும், புன்னகையுடன் தலைகுனிந்து பதில்உரைக்காததாலும் அவசியம் புருஷனை கலந்தணைந்தனள் என்பதற்கையமிலது. இனிநமது அயர்நீங்கிற்று நாம் செல்வோம் வாருங்கள் நாதா!

(இருவரும் நிட்கிரமித்தல்.)

விதூஷகன்.—(மனதிற்குள்) இராஜதம்பதிகளே! இந்திரலேகை புருஷனுடன் சல்லாபமாயிருந்ததற்காக வெட்கினாளோ அல்லது தான் பெண்பணியை விவாகஞ்செய்யநேர்ந்ததே என தலைகுனிந்தாளோ, அது ஈசன்தான் அறிவார்.

6-வது அங்கம்.

முதலாவது-களம்.

இராஜன் - மந்திரி இருவரும் பிரவேசித்தல்.

விவேகசாதுரியன்.--அமைச்ச! சகல லோகநாதராகிய ஜகதீசரது கருணையினால் சகல உத்தமலட்சணமுள்ள மருமகனையடைந்தோம். ஆனால் யென்மனதில் ஒரு விசாரமுள்ளது. அதுயாதெனில் நான்நேற்று இரவு துயில்கையில் நான் தைலாப்பியஞ்சனம்செய்துகொண்டு சிவப்புமாலையும் சிவப்பு உடையும் தரித்துக்கொண்டு தெற்கு முகமாய்ப் போவதுபோல கனவுகண்டேன். என் மனது தவிக்கின்றது யான் யென் செய்வேன்.

மந்திரி.— தாம்கண்ட சொப்பனம் மிகவும் பொல்லாததே. நாம் யென்செய்யலாம் பிரபோ!

(மகருஷி பிரவேசித்தல்.)

விவேகசாதுரியன்.— பிரபோ மகராஜ்! வந்தனஞ்செய்கிறேன். வீற்றிருங்கள்! ஜகதீசா! எனதுமுன்னோர்கள்செய்த புண்ணியமோ, நான்செய்தபாக்கியமோ, அன்றேல் தமது அடியனாகிய நானியற்றிய தவப்பேறோ, தமது திவ்விய தரிசனம் கிடைத்தது. நின்சரணாரவிந்தம் இவ்வரண்மனைபடிந்தது என்பாக்கியம். காப்பாற்றியருளவேண்டும் பிரபோ!

அத்திரி.—கல்யாணம் பூபாலசிகாமணி! யாம் சிலகாலம் நிஷ்டைபுரிந்து கலைந்தவுடன் கடவுளின் கருணை மிகுதியால் காவலராயிருக்கிற உமக்கு கருணைபுரியவேண்டுமெனக்கருதி எந்தன் கருத்திலு முன்னியுடன் மகா புண்ணியாத்துமாவாகிய நினதுஞாபகம் ஜனித்தது. உடனேயான் நின்னகரை நாடி நினக்கருள்புரியவேண்டி இவண்வந்து நின்முகத்தை அவலோகனஞ்செய்கையில் சந்திரனைக்கண்ட கஞ்சமலர் போல்வாடி இருக்கின்றகாரணம் யாது பக்தசிரோன்மணி?

விவேகசாதுரியன்.—ஜீவாதிர்நாதா! என்மனோ வியாகூலமானது அடியார்களுக் கருள்புரியும் தமது திருவுளம் அறியாததன்று. ஆயினும் தெரிவிக்கின்றேன். யாதெனில் யான் நேற்று இரவு துயில்கையில் என்னெண்ணெய்த்தலையுடன் சிவப்புவஸ்திரம் சிவப்புமலர் முதலியவைகளை தரித்துக்கொண்டு தெற்கு முகமாகச் செல்வதுபோல் சொப்பனங்கண்டு விழித்தேன். அதுமுதல் எனதுமனம் துக்கித்து துயருறுகின்றது பிரபோ!

அத்திரி.--சிஷ்யா! சபாஷ். திரிகாலஞானியாகியயான் இதை முன்னரேயுணர்ந்து அது நிமித்தமாகவே இவண்போந்தனம். அரசே! நீகண்ட சொப்பனம் மிகக் கொடுமையுடையதே. அந்தோ நீகண்ட சொப்பனம்போல் யாரேனும் காணுவரேல் ஆறுமாதத்தில் மரணமடைவர். அரசே! இச்சடலமோ சாசுவதமன்று. நீர்மேற்குமிழிபோல் நிலையில்லாதது. "அநித்யம்சரீரம்" என்று கூறப்பட்டிருக்கிறது. இச்சடலமானது மண்ணால் அமைந்தது. அழிந்தவுடன் மண்ணோடு மண்ணாக வேண்டியது. இந்தஜன்மத்தில் எவ்வளவு பெருமையாய் வாழினும் "அருளிலார்க்கவ்வுலகமில்லை" என்ற நீதியின்படி சாக்ஷாத் லோகநாதருடைய கிருபையில்லாவிடில் மறுமையிலடையும் முக்திகிடைக்காது. ஆகையினாலே நீ இனி இராஜ்ஜிய

ஆசையை ஒழித்து நகர்நீங்கி வானப்ரஸ்தாசிரமதர்மத்தை வகித்து நின் இல்லாளுடன் கானகஞ்சென்று தபசியற்றினால் வள்ளலான கங்காதரர் நினக்கனுக்கிரகித்து அடைதற்கரிய நித்தியானந்த பதவியை அளிப்பர். நீ உடனே நினது குமாரனுக்கு முடிசூட்டி சீக்கிரஞ்சென்று தவமியற்று.

விவேகசாதுரியன்.—பிரபோ! பாவியாகிய எந்தனுக்கு புத்திர சந்தானம் இலது மகராஜ்.

அத்திரி.—வள்ளலே! புத்திரனில்லாவிடில் புத்திரியிருக்கின்றனளா?

இராஜன்.—பிரபோ! புத்திரியிருக்கின்றாள்.

அத்திரி.—"புத்திராத் சதகுணம் புத்திரி" எனச்சொல்லப்பட்டிருக்கிறது. அவளுக்கு வயதென்ன? விவாகமாயிற்றா?

இராஜன்.—ஜகதீசா! அன்னவள் பிரவுடை யாகினவளாதலின் விவாகமாயிற்று பிரபோ!

அத்திரி.—சபாஷ்! நீ மகா உத்தமன். நினது ஜாமாதா எவன் இருக்கிறான்.

இராஜன்.—பிரபோ! இவண் இருக்கிறார்.

அத்திரி.—நன்று, பிரதிவீபதி! துரிதமாக அன்னவனுக்கு முடிசூட்டிச்செல்.

இராஜன்.—பிரபோ! ஆக்ஞாபனத்தின் வண்ணமே செய்கிறேன். சேவகா! நீ துரிதமாகச்சென்று எனது மருமகரான வீரசுந்திரனை யானழைத்துவரச் சொன்னதாக சீக்கிரம் அழைத்துவா?

இரண்டாவது களம்.

வீரசுந்திரனும் இந்திரசேனையும் பிரவேசித்தல்.

வீரசுந்திரன்-கண்மணி! நீ எந்தனை விவாகஞ்செய்து இஷ்டசல்லாபங்களை அடையவிடமில்லாது எந்தனைப்போல் தவிப்ப.

தை நோக்கில் என்மனம் நிரம்ப வருத்தமுறுகிறது; நமது துயர் எக்காலம் நீங்குமோ? நாம் எப்பொழுது சுகம் அனுபவிப்போமோ? தெரிகிலேன்.

இந்திரலேகை.—எனதாருயிர் அக்கா! தாம் துயருறவேண்டியதேதவிர எனக்கு யாதொருவியாகூலமுமிலது. தமது அருகில் நான் சதாசார்வகாலமுமிருந்து விளையாட சமயம் பெற்றதே மேன்மையன்றோ? எதற்காக விசனிப்பது? எப்படியும் நமதுநாதர் வாராதொழியார்.

(சேவகன் பிரவேசித்து நமஸ்கரித்தல்.)

வீரசுந்திரன்.—கல்யாணம் ஸேவகா! என்னவிசேஷம்?

சேவகன்.—பிரபோ! மகாராஜா தங்களையழைத்து வர பணித்தனர்.

வீரசுந்திரன்.—என்ன விசேஷம்?

சேவகன்.—மகாராஜ் அந்தவிஷயம் எனக்கொன்றும் தெரியாது. யாரோ ஒரு மகாருஷிவந்திருக்கிறார். அவருடன் ஏதோசம்பாஷித்துக் கொண்டிருந்து தங்களையழைத்துவரப் பணித்தனர்கள்.

வீரசுந்திரன்.—ஏ சேவகா! இதோ வருகிறேன்செல். கண்மணி! யாது காரணமோ ஒன்றும் தெரிகிலேன். புத்திமிகக்கலவரப்படுகின்றது. ஆகையால் இந்திரலேகா! வா இருவரும் செல்வோம்.

இந்திரலேகை.—எனதாருயிர் சகோதரியே! நீ எதற்கு மனசோவேண்டாம், யானிருக்கிறேன் வாருங்கள்செல்வோம்.

இருவரும் இராஜசபையில் பிரவேசித்தல்.

வீரசுந்திரன்.—ருஷிசிரேஷ்டரே! வீரசுந்திரன் நமஸ்கரிக்கின்றேன். குருமகாராஜ்! இந்திரலேகா நமஸ்கரிக்கின்றேன்.

அத்திரி.—சுபம்பவது வீரசுந்திரா! ஏ வீரசுந்திரா ஐயோ பாவம் நீ உலகில் கறைக்கண்டர் அருளால் ஜனித்து மிகத் துயருற்றனை உத்தமகுண ஸ்ரீமானே! நின் விவேகமும் வனப்பும் இன்னம் ஷோடசஸம்வத்ஸரத்திற்குள் மேன்மைப்படும். ஆயினும் நின்னைப்போலொத்த உத்தமகுண வல்லபமுடையாரை இவ்வவனியிற்கண்டிலேன். தாயுருமே—ஏ இந்திரலேகா! நினது விவேகத்தை யெடுத்துரைக்க இம்மாநிலம் தாங்கும் ஆதிசேஷனாலும் முடியாது. நீ முதலில் எவ்வளவு துயரப்படுகின்றனையோ அவ்வளவிற்கு பின்னால் மிகச்சுகத்தையும் சந்தோஷத்தையும் அடையப்போகிறாய் கண்மணி!

வீரசுந்திரன்.—எல்லாம் தமது திவ்யசரணாரவிந்ததெரிசனமகாத்மியமே அன்றிவேறிலது. யான் எத்துயரடையினும் இனி எந்தனுக்குத்துயரிலது. ஏனெனில் கங்காதரரை நிகர்த்த தமது திவ்விய சரணாரவிந்த தெரிசனம் எப்பொழுது ஈனனாகிய எந்தனுக்குலபித்ததோ அப்பொழுதே அவையெல்லாம் நான் இராஜ்ஜியத்தைவிட்டு புறப்படுகையில் கொண்டகோரிக்கைப்படி லபிக்குமென்பதற்கையமிலது பிரபோ!

அத்திரி.—அரசன்மனமுவக்கும் கண்ணே! நின்மனோபாவப்படி நின்கோருதல் நிறைவேறுங்காலஞ் சமீபித்திருக்கிறதென்பதற்கறிகுறியாய் இப்பொழுது நினக்கு ஒரு சுபம் பிராப்தமாகப்போகின்றது. அதனாலேயே பின்வருபவைகளை ஊகித்தறிவாய்.

வீரசுந்திரன்.—பிரபோ! ஈனன் நமஸ்கரிக்கின்றேன்.

விவேகசாதுரியன்.—கல்யாணம் எனதாருயிர்க் கண்மணியின் மனதைக்கவர்ந்த வள்ளலே! யான் வானப்பிரஸ்தாசிரம தர்மத்தை வகிக்கக்கருதி இவ்வரசை நமக்கு இப்பெரியவர் முன்னிலையில் முடிசூட்ட எண்ணினேன். ஆகையால் எனதன்புள்ள ஜாமாதா! என்மனதின்படி தாம் அங்கீகரித்து சுவீ

கரித்துக்கொண்டு எனதருமைப்புதல்வியாய அபலை இந்திரலேகை ஏதாவது தனது அறியாப்புத்தியினால் பிழைசெய்யினும் எந்தனது முகத்தைப்பார்த்து மன்னித்து ஸதிபதிகள் இருவரும் சுகமாக வாழக்கோருகின்றேன்.

வீரசுந்திரன்.--பிரபோ மகராஜ்! இதோவீற்றிருக்கும் பரமாத்துமாவினது பரிபூர்ண ஆசீர்வாதத்தினாலும் தமதுசரணாரவிந்த வைபவத்தாலும் தமது ஆக்ஞாபனத்தின் வண்ணம் நடந்துகொள்ளுகிறேன்.

(முடிசூட்டல்.)

விவேகசாதுரியன்.—ருஷிபுங்கவா! எனது ஜாமாதாவுக்கு முடிசூட்டி இராஜ்ஜியபாரத்தை இறக்கிவிட்டேன். எனது பத்தினி சகிதம் தமது கிருபைக்கு எதிர்பார்த்திருக்கின்றேன்.

அத்திரி.--அரசசிம்மமே! நன்றுரைக. ஜல்திவனஞ்சென்று உபதேசிப்போம். வாசெல்வோம்.

(மூவரும் நிட்கிரமித்தல்.)

வீரசுந்திரன்.-அமைச்ச! அகிலபுவனத்தையும் ஒருகுடையிலாண்டுவந்த தமது அரசரும் எனது மாமனருமான அரசர் எந்தனுக்கு இன்னகரை முடிசூட்டி வானபிரஸ்தாசிரமதர்மத்தை வகிக்க தனது நாயகியுடன் அத்திரி மகாருஷியின் சென்றனர். ஆகையால் அமைச்சரோறே! புராதனவரசர் சிம்மாதனத்திலிருந்து தம்மை அருகில்வைத்து மகாநீதியாக அரசியற்றி வந்தனர். யானோ அறியாதவன். ஆகையால் தாம் என் சமீபத்திலிருந்து எந்தசங்கதிகள் எப்படி நடக்கவேண்டுமோ அப்படியே நடத்திவர பிரார்த்திக்கிறேன் மந்திரி!

மந்திரி.--மகாராஜ்! தாம்மொழிந்தது உண்மையே! தமது குணமும் தீரவீரமும் யானறியாதவனன்று. ஆயினும் தமதிஷ்டம்போல் நடக்கத்தயாராக இருக்கின்றேன்.

வீரசுந்திரன்.—பிரபோ! நன்று மொழிந்தீர். அஸ்தமனகாலமாகிறது. நித்திய கர்மானுஷ்டானங்களுக்குச் செல்வோம்.

(இருவரும் நிட்கிரமித்தல்.)

மூன்றுவது-களம்.

வீரசுந்திரன் இந்திரலேகை இருவரும் பிரவேசித்தல்.

வீரசுந்திரன்.--கண்மணி இந்திரலேகா! நினது பிதாவானவர் எனதுண்மையறியாது இராஜ்ஜியபாரத்தை என்னிடம் ஒப்புவித்து வனம் சென்றனர். ஆயினும் யானும் நீயுமாக இந்த ஒருவருஷகாலமாக பேதமில்லாமல் குடிகள் சந்தோஷிக்க அரசியற்றி வந்தோம். ஆனால் பகற்பொழுதை இராஜசிம்மாதனத்திலும் இராப்பொழுதை நகர்ப்புறத்துள்ள ஓர் உத்தியானவனத்திலும் கழித்துவருகிறோம். அப்படி இருக்க இன்று உதயமுதல் இதுவரை இன்னமும் என் இடது தோளும் இடதுகண்ணும் துடிக்கின்றது. மனமானது யான் ஆதியில் என்காதலரைக்கண்டு வனத்தில் சேர்ந்தேன்பார் அப்பொழுது எந்த சந்தோஷத்தை யடைந்ததோ அவ்வித சந்தோஷத்தையடைகிறது; காரணம் ஒன்றும் தெரிகிலேன். இந்த சுபசின்னங்களால் நமதுநாதர் சீக்கிரமே இவண்வந்துநமது மனமகிழச்செய்வாரென நினைக்கிறேன். ஒருவருஷத்துக்குமுன் ருஷி சொன்னவாக்கும் ஞாபகம்வருகிறது. இப்பொழுது அஸ்தமித்து ஐந்து நாழிகையாயிற்று ஆகையால் உத்தியானவனம் செல்வோமா வா?

இந்திரலேகை.—தோழி! சுகமனுபவித்த உந்தனுக்கு அவ்விதச்சின்னங்கள் ஏற்படுகின்றனவென மொழிந்தனை. யானோ ஒன்றும் அறியாதவளாயிருந்தும் என்மனம் மிகுந்த ஆறுதலோடு சந்தோஷங்கொள்ளுவதைப்பார்த்தால் நமது நாயகர் சீக்கிரமே வருவர் என்பதில் ஐயமிலதென நினைக்கி

றேன். ஆகையால் எதுவரினும் நாம் அனுபவித்தே தீரவேண்டும். ஆனதால் நாம் இது சமயம் உத்தியானவனஞ் செல்வோம் வாருங்கள்.

(இருவரும் நிஷ்கிரமித்தல்)

சுந்தராங்கன் பைராகிவேஷத்தோடு பிரவேசித்தல்.

சுந்தராங்கன்.—ஆஜாநீசா! லோகநாதா! ஆனந்தநடனம் செய்யும் அருள் விளக்கே, ஜோதியே, சுடரே யான் இச்சிக்கத்தகாத பொருள்மீது இச்சைவைத்ததால் எந்தனை நன்றாய் சிக்ஷித்தீரோ? யான் செய்வதின்னதென தெரியாது அலைகின்றேன். ஏ என்மனமிசைந்த மங்கையே! மதனன் மயங்கும் நங்கையே! பாவியாகிய எந்தனைச்சதமென எண்ணி சகல வைபவங்களையும் மாதாபிதாக்களையும் துறந்து தொடர்ந்தனையே! ஆரிழையாளே! ஒரு நிமிஷங்கூடப் பின் பாதகனது மடியில் தலைவைத்து நித்திரை செய்த நின்னைச்சண்டாளனாகிய யான் பிரியும்படி நேர்ந்த கதியை நினைக்கில், ஐயோ காரிழையாளே! என் மனங்கலங்குகின்றதே. கண்மணி! நீ துயிலெழுந்து எந்தனைக்காணாது கலங்கித்தவித்தனையோ? ஐயோ சுந்தராங்கி! அன்றேல் வியோக துக்கத்தால் உயிர்துறந்தனையோ? இன்றி திரும்பி நகரம் சென்றனையோ? ஏ சந்திரவதனு! நீ நகரம் சென்றிராய் என்பது என்மனதில் திண்ணமாக இருக்கிறது. ஆயினும் நீ மகா விவேகசாலியாதலால் அவ்வனத்தில் எங்கனும் எந்தனைத்தேடி அழைத்தனையோ, பதரிக்கதறினையோ? சண்டாளனை எந்தனை நம்பிய உந்தனுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ! ஐயோ பிடி இடையாளே! நின்னைப்பிரிந்து ஏழரை வருடமாயிற்றே! நாம்பிரிந்தது சனீசுவரரின் மாய்கையாயினும் அந்த காலங்கழியும் சமயமாயிற்றே. என்கண்மணி! நின்னை யெங்கு காண்பேன், என்மனம் தேறுவேன், கவலையாறுவேன்? காரிழையாளே! இனி நின்னைக்காணும் காலமிலதுபோல் தோன்றுகிறது. மகாபாவியாகிய யான் இந்த நகரத்

திற்குள் சென்றுபார்க்கில் காரிழையாளைக் காணநேரினும் நேரிடுமாதலால் யான் இன்று இரவை இந்த உத்தியான வனத்தில் போக்கி காலையிலெழுந்து எங்கேனும் நகர்புரம்செல்வோம். ஆகையால் இந்த உத்தியானவனத்திற்குள் நுழைகிறேன்.

வீரசுந்திரனும் இந்திரலேகையும் பிரவேசித்தல்.

வீரசுந்திரன்.—கண்மணி இந்திரலேகா! இந்த உத்தியான வனத்தில் நீயும்யானுமாக தனிமையாயிருந்து கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. நமது நாதர்கூட இருந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? நமக்கு அவ்விதபாக்கியம் என்று லபிக்குமோ காண்கிலேன்.

இந்திரலேகை.—தாயே! நாம் துயரப்படுவதில் பிரயோஜனம்யாதுளது? கடவுள் நம்மீது கிஞ்சித்து இரக்கம் வைப்பராகில் நாம் தங்கள்மனதின்படி சந்தோஷமாயிருக்க வெகுகாலம் செல்லுமா?

வீரசுந்திரன்.—அன்ன நடையாளே! வருத்தம் ஒன்றுமிலது. கண்ணே! அதோபார் யாரோ ஒருமகாத்துமா அவ்விடம் யோகஞ்செய்துகொண்டிருப்பதுபோல் காணுகிறது. அங்ஙனம் சென்றவரைப்பணிந்து நமது துயரம் எக்காலம் நீங்குமோவென உசாவி அறிந்துவரலாம். மகாத்மாவினது தெரிசன மேன்மையால் நமது கஷ்டங்கள் எல்லாம் நிவர்த்தியாகும். செல்வோம் வா?

வீரசுந்திரன்.—பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

சுந்தராங்கன்.—இராஜவல்லபா! கல்யாணம்பவது.

வீரசுந்திரன்.—(தனக்குள்) ஆஹா! இதென்னவிந்தை! மகாத்துமாக்கள் இவ்விதம் ஆசீர்வதிக்கக் காண்கிலேன். இது ஏதோ புதுமையாயிருக்கிறது. இன்னும் இவரது சங்கதியை

நன்றாய் விசாரித்தறிவோம். பிரபோ! தாம் யார்? தாமிருப்ப
தெவ்விடம்? இவ்விடம்வந்த காரணம்யாது? மகா பிரபோ!

சுந்தராங்கன்.—ஏ ராஜசிகாமணி! நமக்கு இன்னவூரென
நிலையுண்டோ? நமக்கு உலகமுழுவதும் சொந்தந்தான். சற்று
நோக்கில் ஒன்றும்சதமன்று. ஏனெனில் பஞ்சபூதாத்மகமான
இச்சடலமானது மாதர் கெர்ப்பத்தில் தசமாதம் வளர்ந்து,
ஆணாகவும் பெண்ணாகவும் பிரிவுண்டாகி பூர்வஜென்மாந்திர
வாசனையின்படி பூஸ்பரிசமாகி வளர்ந்து, தங்களது இருவினைக்
கீடாக சதிபதிகளென் றேற்பட்டு, அற்பசுகத்தை யடைந்து
உடன் கர்மாநுசாரத்தால் சதிபதிகள் பிரிவுறநேரிடின்
அடையும் துன்பத்திற் களவுண்டோ? அவ்விததுன்பமடைய
வேண்டியே இச்சென்ம மெடுத்ததென நினைத்தேங்கி சற்
பதியையும் பதிசதியையும் காண இயலாது துக்கித்து பின்
இச்சடலத்தை ஒழிக்கும் நிலைமையுறுகின்றனர். அன்றியும்
உலகில் பிரமசரியம் கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாச
மென நான்குபதவிகள் உண்டு. அதில் மனிதஜன்மமடைந்த
உத்தமன் முதலில் பிரமசரியாசிரமம் வகித்து பின் சத்குலத்
துதித்த நாரியரை உற்றார் உறவின்முறையார் முன்னிலையில்
பெற்றோர்மனமகிழ அக்கினிசாக்ஷியாக மாங்கல்லியம் தரித்து
கிரகஸ்தனாகி, அன்னவளுடன் கூடி சுகாதிபோகங்களை யநுப
வித்து, அதன்பின் வானப்பிரஸ்தாசிரம தர்மத்தை வகித்து
சதியுடன் வனஞ் சென்று, அன்னவள் சிச்ருஷைபுரிய தவமி
யற்றி, பின்விரக்தியுற்று மூவாசையொழித்து துறவரம்பூண்டு
சுகதுக்கங்களை சமமாக எண்ணி எங்கும் தன் சொந்த இட
மாக பூவலம் சென்றுவருவதற்கு சன்னியாசி ஆசிரமம் வகிக்க
வேண்டுவது முறை. அந்தவறன்முறையின் கிரமப்படி யில்
லாது நாம் பிரம்மசரியத்திலிருந்துப் கிரகஸ்தனுமாகாமல் பிர
ம்மசாரியாகவும் இராது சன்னியாசத்தை யடையும்படி சந்
திரசேகரர் அருள்செய்தனர். அன்னவர் சோதனைக்குட்பட்டு

இதுசமயம்யாம் சன்னியாசிவேடம் பூண்டு ஜீவன் முக்தனாகி
இந்திர போகத்தையடைய அவாக்கொண்டு அதற்கநுகுண
மான ஒருலதையை இப்பஞ்சாசத்கோடி பூமண்டல முழுவ
தினும் ஏழரைசம்வத்ஸரமாகத் தேடியும் காணாது மிக்க ஏக்
கங்கொண்டு இவ்வத்தியானவனத்தில் கிஞ்சித்து சிரமபரிகா
ரஞ்செய்ய நினைத்து இவண் போந்தேன் மகராஜ்!

வீரசுந்திரன்.—(தனக்குள்) இதுவென்னவிந்தை! இம்
மகான்மொழிவது இருபொருளடங்கியதாய் ஒரு விதமாய்
ஸ்திரப்படுத்தக்கூடாதபடி வசனிக்கின்றார். நம்மனமோ ஏதோ
ஒருவிதமாகப் பதறுகின்றது. ஆயினும் இன்னம் அறிவோம்.
(பிரகாசமாக) பிரபோ! தாம் ஏதோ ஒருலதையைநாடித் தேடி
வருவதாக மொழிந்தீர்களே. அந்தலதை எப்பேர்ப்பட்டது?
அதை தெரிவிப்பின் என்னால்கூடுமாயின் யானேதமக்கு சிரம
மில்லாது கொணர்ந்தளிக்கின்றேன். அதன் அடையாளங்
களை சவிஸ்தாரமாகச்சொல்லவேண்டும் பிரபோ!

சுந்தராங்கன்.—ஏ ராஜன்! சர்வமங்கள மேலாளனாகிய நீ
எந்தனைப்போலொத்த வைராகிகள் வினவக்கூடிய காரியத்தை
அடிக்கடி வற்புறுத்தி வினவுகிறாய். யானோ இவ்வாசிரமத்தை
அடைந்ததுமுதல் ஏழரைவருடமாகத் தேடியும் அகப்படாத
தும் இருக்கும் இடம் சொல்வாரில்லாதவனுமாகவும் முடிவில்
இந்நாட்டில் கிடைக்குமோவென தேடிவந்த எந்தனை நிரம்ப
வும் வற்புறுத்தி வினவுகின்றனை. ஆயினும் தெரிவியாதிருப்
பதும் எந்தனைப்போலொத்ததுறவிகளுக் கழகன்று. ஆகை
யால் சொல்கிறேன்கேள். (லதை என்பதின் பொருள் கொடி.)
கொடியென்றால் எல்லாம் கொடியல்ல. அக்கொடியினது லட்
சணத்தை வினவின் சுந்தரமேலாளனான நின்மனம் விகாரத்தை
யடையும். எந்தனைப்போலொத்தவர் காணின்மனந்தேறுதலா
கும். ஆகிலும் சொல்வேன்கேள்.

ஏ! மகீபதே! வானில்தோன்றும் மின்னலானது எவ்வளவு பிரகாசத்தோடுகூடி இருக்குமோ அவ்வளவு தேஜஸை யுடையது அக்கொடி. அந்த லதையின் அடியினின்றும் வரன்முறையாக நுனிவரையில் சொல்வேன் கேள். அக்கொடியின் அடிப்பாகமானது இரண்டுபாகமாகி புத்தகத்தை அடுக்கியது போலவும் அதின்மேற் பக்கமானது ஆமை ஓட்டைப்போலவும் கொஞ்சம் நீண்டு அதன் அடிப்பாகமானது பந்தைப்போல் உருண்டும் அதன் அக்கிரபாகத்தில் பவழத்துண்டுகளைப் போல் ஐந்து கிளைகள் பிரிந்திருக்கும். அக்கிளைகளினுனியில் மரகதத்தினால் பொட்டுவைத்ததுபோல் புள்ளிகள் இருக்கும். அதிலிருந்து கொஞ்சதூரத்தில் தண்டுபோன்ற இரண்டுபாகங்கள் லதையோடு ஒட்டியிருக்கும் அதற்குமேல் வாழைமரத்தைப்போல் உருண்டு திரண்டிருக்கும். அதனிரண்டுபக்கத்தினும் உருண்டுதிரண்டு பார்ப்பதற்கு மனோக்குன்றென சங்கிக்கும்படி உயர்ந்திருக்கும். அதற்குமேல் அப்பிரிவுகள் ஒன்று சேர்ந்து உடுக்குப்போலவும் சிங்கத்தின் இடைபோலவும் ஒரு பிடியில் அடங்கக்கூடியதாய் இருக்கும். அதன்மேல் நீர்ச்சுழியைப்போன்ற ஒருவடு விருக்கும். அதன்மேற்புறத்திற்கு எறும்புகள் தாரை இட்டதுபோன்ற ஒரு கருரேகை இருக்கும். அதன்மேல் இரண்டுபர்வதங்களை நிகர்த்தும், இரண்டு புஷ்பச்செண்டுகளை வாட்டப்படுத்தியதுபோலவும், சுவர்ண கலசங்களையொத்த இரண்டுகரளைகள் பார்ப்போர் மனதை மயக்கும் விதமாயிருக்கும். அதிலிருந்து கமுகமரத்தைப் போன்ற இரண்டு கிளைகொடிகள் பிரிந்து உருண்டு நீண்டு நுனி அகன்று விரிந்ததாமரைமலர் ஒப்ப இருக்கும். அம்மலரின் நுனி ஒவ்வொன்றில் ஐந்து சிறுகிளைகொடிகள் பிரிந்து ஒவ்வொன்றும் ஏற்றத்தாழ்வாய் பார்க்க மனோகரமாய் இருக்கும். அக்கொடிகளின் மூலத்தில் வலம்புரிச்சங்கை நிகர்த்து கொடியானது வளர்ந்து அதன் நுனியில் சூரியனைக் கஞ்ச

மலர்போல் ஓர் மலர் புஷ்பித்தலர்ந்து இருக்கும். மலரென்றால் சாதாரண மலரன்று. அம்மலரில் இரண்டு நீலோத்பலமலரும் வெள்ளை மலரும் ஒரு எள்ளின்மலரும், அந்த நீலோத்பலமலரின் மேற்பக்கத்தில் இரண்டு தனுசுபோன்றரேகையும், முல்லை அரும்புகளைநிகர்த்த அநேக அரும்புகள் இரட்டைவரிசையாகவும், அம்மலரை மூடும் இதழானது புதிதாகத்தளிர்த்த இளந்தளிர்போன்று பவழத்தை நிகர்த்தவர்ணமும், அவ்விரண்டு நீலோத்பல மலரின் மேற்பக்கத்தில் மூன்றாம் பிறையை நிகர்த்துவளைந்த ஒருகோடும். அதன்மேல் சைலத்தையும் பாசிக்கொத்தையும் பழித்து நீண்டு வண்டைப்போல் கறுத்தபல கொடிகள் சிரீதாயமர்ந்து மிகப் பரிமளம்வீசும் அந்தலதையானது சகல சாஸ்திரங்களிலும் உள்ள சாரத்தை கிரகித்து விளங்குவதுபோலிருக்கும்.

அன்றியும் அந்த லதையை எவனொருவன் அடைவானோ அன்னவன் தேவேந்திரபோகத்திலும் மேலானபோகத்தை யடைவன். ஆனதால் மன்னவ! அந்தலதையை ஏழுவருஷத்தின்முன்னர் யான்கண்டு கிரகிக்கக் காதலுற்று சமீபம் நண்ணி கையாலும் ஸ்பரிசித்தேன். அப்பொழுது எனது தீவினை உந்தித்தள்ள அவ்விடம்விட்டகன்று பழையவினையை வென்று திரும்பும் அமையத்து, முன் கொடியிருந்தவிடம் தெரியாது மூன்றுநாள் அலைந்து, பின் ஏழுவருடமாக உலகமெங்குந்தேடி இப்பொழுது இவண் அடைந்தேன். வள்ளலே! யான் நாடிவந்த லதை இதுவே.

விதூஷகன்.—ஏ சன்னியாசி! நீ தேடிவந்த லதை நிஜமாகவே உன்முன்னிற்கிறதுவே.

வீரசுந்திரன்.—(தனக்குள்) மனமே பதறுநே! நினதாசை நாயகன் வேற்றுருவொடு நின்னைத்தேடி இவண்வந்தனர். நீ எவ்வாறு வேற்றுருவுடன் அன்னவனை ஆராய்கின்றனையோ அதுபோல் அவர் வேற்றுருவோடு நின்னையாராய்கின்றனர்.

ஆகையால் பதறாதகாரியம் சிதறாமலடிக்கும். (பிரகாசமாக) மகாப்பிரபு! தாம்மொழிந்தது ஒரு வனிதாவர்ணனைபோலு முளதே.

சுந்தராங்கன்.-தோன்றலே! சபாஷ்! நின்னைமெச்சினேன். ஆதியிலேயே நினக்கு தெரிவித்ததை மறந்தனைபோலும். அந்தலதையானது எங்களைப்போலொத்தவர்களுக்கு ஆஹ்லாதத்தையும் நம்மைப்போலொத்தவர்களுக்கு விகாரத்தையு மளிக்குமென்றது சரியாக முடிந்ததுபோலும் மன்னவா!

வீரசுந்திரன்.— பிரபோ! யான் தம்மிடம் விளையாட்டாக மொழிந்ததல்லது வேறன்று. என்னெனில் தமது வயதை நிதானிக்கில் தக்கயுவராயிருக்கிறீர். வேடமோ வார்த்திகத்தை நிகர்த்திருக்கிறது. ஆகையால் புகன்றேன். பிரபோ தாம் இச்சித்த லதையை நாம் நமது சிங்காரத்தோட்டத்தில் வைத்துப்பயிராக்கி நன்றாய் பரிபாலித்துவந்திருக்கிறேன். அந்த விசேடத்தால் அது தன்னைப்போல் மற்றொரு லதையை சேர்த்துக்கொண்டது. ஆகையால் தம் விருப்பம் நிறைவேறும். இச்சேவகனுடன்சென்று அவன் காட்டும் இடத்திலிருங்கள், நாளையதினம் தங்களுக்கு காண்பிக்கின்றேன்.

சுந்தராங்கன்.--இராஜன்! நான் தன்னியனானேன். அவ்விதமே செல்கிறேன்.

வீரசுந்திரன்.—புஷ்பவனக்காவலா! இம்மகானை அழைத்துச்சென்று நமதுமந்திரி திடவானிடம் ஒப்புவித்து ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ளும்படி பணித்து உதயத்தில் எங்களை வந்து பார்க்கும்படி மந்திரியிடம் தெரிவி? அழைத்துச்செல். பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

சன்னியாசி மந்திரிகிரகம் செல்லல்.

வீரசுந்திரன்.—என்னின்னுயிர் இந்திரலேகா! உதயத்திலெழுந்த பனியானது சூரியகிரணத்தைக்கண்டவுடன் எப்

படி நீங்குமோ அப்படியே நின்னையும் எங்களையும் பிடித்திருந்தகவலை இன்றொடொழிந்தது. நாளை இரவு நீயும் யானும் இந்திரபோகத்தைவிட மேலான சுகாதிபோகங்களைப்பெறலாம். ஏ அம்சகமனே! நீ நாளை உதயத்தில் நறுமலர் சம்பங்கி தைலத்தினால் ஸ்நானஞ்செய்து மேன்மையான வஸ்திராபரணங்கள் தயார்செய்து வைத்திருப்பின் யான் எது சமயம் கேட்பேனோ அது சமயம் அளிக்கவேண்டும். இனி துயரத்தை யகற்று.

இந்திரலேகை.—எனதாருயிர் அன்னையே! இதுவரையில்லாத சந்தோஷம் இன்று ஜனிக்க காரணம் யாது? இப்பொழுது நீ சம்பாஷித்த பெரியவர்யாவர்? அவரை மந்திரி வசம் ஒப்புவிக்கும்படி பணித்தீர்கள். இது சமயம் எங்களைப் பார்த்து காமச்சின்னங்களணிந்துகொள்ள ஆக்ஞாபித்தீர்கள். காரணம்யாது அன்னையே?

வீரசுந்திரன்.—கலாவதிநிகர் இந்திரலேகா! அது சங்கதியை நாளை இரவு தெரிவிக்கிறேன். அது பரியந்தம் என் சித்தம் என்னிடம் நிலைகொள்ளாது. எங்களை ஒன்றும் வினவ வேண்டாம் கண்ணே!

இருவரும் அரண்மனைசெல்லுதல்.

(வீரசுந்திரன் பிரவேசித்தல்.)

வீரசுந்திரன்.—சேவகா! அமைச்சர் ஏன் இன்னும் வரவில்லை, ஜல்தி சென்றழைத்துவா?

திடவான்.—அரசரேறே! வந்தனம் செய்கின்றேன்.

வீரசுந்திரன்.-கல்யாணம் அமைச்ச! வீற்றிரும். பிரபோ! நேற்று இரவு ஒரு பெரியவரை தம்மிடம் அனுப்பினேனே அவர் சுகமாயிருக்கிறார்களா?

திடவான்.—ஆம் சுகமாக எனதகமனையிலிருக்கிறார்.

வீரசுந்திரன்.— அமைச்ச! தம்மிடம் ஒரு அந்தரங்க மொழிகின்றேன். அதன்படி தாம் நடக்கவேண்டும். யாதெனில் யான் காஸ்மீரதேசத்தரசகுமாரன், எனது ஆருயிர்க்காதலியுடன் வனவேட்டைக்குவந்த இடத்தில் ஒரு அரசகுமாரன் எதிர்ப்பட்டு என்னுடன் தோழமைகொண்டு வேட்டையாடி முடிவுற்றதன்பின் நாங்கள் மூவரும் சைனியங்களை விட்டுப்பிரிந்து தனித்து ஸ்நானபானஞ்செய்து போஜனமருந்தி தாம்பூலந்தரித்திருக்கையில் எனக்கு மிகுந்த நித்திரைவந்ததால் கிஞ்சித்துநேரம் அவ்விடத்தில் சயனித்து துயின்றேன். பின்கொஞ்சநேரங் கிரமித்து துயிலெழுந்து நோக்க எனதாருயிர்க்காதலியையும் அவ்வரசகுமாரனையுங்காணாது யேங்கி நாலுபுறமுந்தேடி பின் அந்த நாயகியாவது அரசகுமாரனாவது கண்ணில் புலப்படும்வரை என் சரீரசுகாதி போகங்களை விரும்புவதில்லையென உறுதிகொண்டு கண்ணுக்குத்தோன்றிய வாக்கில் குதிரையைநடத்தி இந்நகர்ப்போந்து கடைவைத்திருந்தேன். பின் நிகழ்ந்தனவெல்லாம் தாமுணர்ந்ததே. நேற்று இரவு யானும் என் காதலியுமாக உத்தியானவனஞ் சென்றிருக்கையில் இம்மகானைக்கண்டு பணிந்து யாரென வினவ, அவர் ஒரு போக்காகதன் வரலாறுதனை மறைத்துக்கூறினர். ஆயினும் அவ்வரசகுமரனே இவ்வேடங்கொண்டுவந்திருக்கவேண்டுமென்று நினைத்து தாம் அவரிருக்கும் கோலத்தை முற்றிலுமாற்றி அவரது நிஜ சுவரூபத்திற்கேற்ற ஆடையாபரணங்களை யணிந்து இன்று இரவு நமது அந்தப்புரத்திற் கழைத்துவரவேண்டும். பின் மற்ற சங்கதிகளை தெரிவிக்கிறேன்.

திடவான்.—மகராஜ்! அவ்விதமே செய்கிறேன். சென்று வருகிறேன்.

(எல்லோரும் நிட்கிரமித்தல்.)

நான்காவது களம்.

(திடவானும், பைராகியும் பிரவேசித்தல்.)

திடவான்.—பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

பைராகி.—அமைச்ச! அகிலபுவன கர்த்தரால் மேன்மையுறுவீராக.

திடவான்.—பிரபோ! என்மனதில் ஒருசந்தேக முளது, அதை தெரிவிக்க அனுமதிகொடுக்கவேண்டுகிறேன்.

பைராகி. — அமைச்ச! நின்மனதிலுள்ள சந்தேகம் இன்னதென்று வெளியிடில் அதை நிவர்த்திசெய்வோம்.

திடவான்.—பிரபோ! இவ்வாசிரமம் தமக்கு விவேகந் தெரிந்ததுமுதலா அன்றேல் காரணவசத்தினால் ஏற்பட்டதா?

பைராகி.-அமைச்ச! எப்படி இருப்பின் என்ன? "வாழையடியும் வாழைக்குச்சேதம் குலைதள்ளியும் வாழைக்குச் சேதம் என்பதுபோல்" விவரந்தெரிந்தது முதலானாலென்ன, காரண வசத்தினாலேற்படின் என்ன? எப்படியும் வைராகியானதில் குறையில்லையே.

திடவான்.—பிரபோ! அதிலொன்று மிலது. தாம் எக்குலத்திற் ஜனித்தவர்? தமது நாமதேயம் யாது? தாம் என்னகரில் வசித்தவர் தமது பூர்வாசிரமத்தில்?

பைராகி.—மந்திரி! நாம் பூர்வாசிரமத்தில் காஸ்மீரதேசத்து மந்திரிகுமாரர். எனது பெயர் சுந்தராங்கன். எனது இன்னுயிர்க்காதலியை விட்டுப்பிரிந்ததுமுதல் இவ்வேடமாகினேன். வேடம்பூண்டு ஏழைவருடமாயிற்று.

திடவான்.—(தனக்குள்) ஓகோ! நமதரசர் இராஜகுமாரனென மொழிந்தனரே, இவரோ மந்திரிகுமாரன் என்கிறார். எப்படி இருப்பின் என்ன? இவரும் சுந்தராங்கியைப் பிரி

தனது முதல் பைராகியானதாக மொழிகின்றார். வருடமும் ஏழரையாயிற்றென்று நமதரசர் மொழிந்தது போலவே மொழிகின்றார். ஆயின் ஒருக்கால் மறைத்துப் புகன்றாலும் புகலலாம். (பிரகாசமாக) பிரபோ! தாம் இனி இந்த சுவரூபத்தோடேயே காலங்கழிப்பவரா அன்றேல் பூர்வாசிரமத்திற்கு திரும்பக்கூடியவரா?

பைராகி.—அமாத்தியாசிரேஷ்டா! தாம் வினவுவது மிக ஆச்சரியமாயிருக்கிறது. தூண்டித் தூண்டி வினவுகின்றீர். நன்று, யான் அரசனிடம் மொழிந்த கொடி கிடைக்கும் வரை இவ்வேடமே. கிடைப்பின் பின் பூர்வாசிரமமே. மேலும் யான் யாத்திரை காஷாயம் தரித்ததே தவிர சன்னியாசி காஷாயமல்ல. ஆகையால் யாத்திரைகாஷாயத்தை அது முடிந்ததும் நீக்கிவிடுவது வழக்கந்தானே.

திடவான்.—பிரபோ! நன்றாயிற்று. என் வினவியதெனில் தாம்மொழிந்த கொடி ஒன்றுக்கு இரண்டாய் எமதரசர் தருவித்து நம் பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார். தாம் பூர்வாசிரமத்தை யடையவேண்டும்.

பைராகி.—அமைச்ச! உண்மையே. அரசர் இரவில் மொழிந்த வசனப்படி தருவித்தனரா? சபாஷ்! அப்படியாயின் பூர்வாசிரமம் அடைவதில் யாதொரு தடையுமிலது.

திடவான்.—தங்களிஷ்டப்படி அதற்குவேண்டிய மனிதர்களையும் வஸ்துக்களையும் அழைப்பிக்கின்றேன்.

மந்திரி தன் நயமான பேச்சினாலேயே பைராகியின் அந்தரங்கத்தை கிரகித்து பைராகிக்கு க்ஷவரம் முதலியது செய்யச்சொல்லிப் பணித்து இராஜ அலங்கார பூஷணாதிகளையணிந்தபின் மந்திரி ஆலோசித்தல்.

திடவான்.—(தனக்குள்) இதென்னவிந்தை! பைராகியை மேன்மையாக அரசராணைப்படி அலங்கரித்ததில் நமது அர

சர்போலவே காணப்படுகின்றார். வயதும் நமதரசர்வயதே இருக்கும்போல் தோற்றுகிறது. நன்று, இப்பொழுது அஸ்தமித்து இரண்டு மூன்றுநாழிகையாயிற்று. இவரை அரசர் அந்தப்புரம் அழைத்துச்செல்வோம். பிரபோ! நாம் இருவரும் அரசரது அந்தப்புரஞ்சென்று வருவோம்வாருங்கள்.

சுந்தராங்கன்.—அமாத்தியா! அங்ஙனமே செல்வோம். (தனக்குள்) ஆஹா! இதென்னவிந்தை! இன்னகரத்தரசர் நமது வார்த்தையின் மூலமாக நமது மர்மத்தை யறிந்தன்றோ மந்திரிக்கு இவ்விதம் பணித்திருக்கிறார்போல் தோன்றுகிறது. ஆயினும் நமது இன்னுயிர்க்காதலியை இவண் காணலாமோ? எனது வலதுதோளும் வலது நேத்திரமும் துடிக்கின்றது. ஆம் செல்வோம் அந்தப்புரத்தைநாடி.

(இருவரும் நிட்கிரமித்தல்.)

ஐந்தாவது களம்.

வீரசுந்திரனும் இந்திரலேகையும் பிரவேசித்தல்.

வீரசுந்திரன்.—இந்திரலேகா! நின்னை இப்பொழுது நோக்கில் புதுமணப் பெண்போலிருக்கின்றாய். கண்மணி! நான் கொஞ்சநேரத்தில் ஸ்நானஞ் செய்ய நேருமென நம்புகிறேன். அப்படியாயின் சகலமும் சித்தமாயிருக்குமன்றோ?

இந்திரலேகை.—நங்கையே! தமது ஆக்ஞாபனத்தின் வண்ணம் சகலமும் தயார்செய்துவைத்திருக்கிறேன். ஆனால் இந்த வேடம் இன்னம் எதுவரையில்?

வீரசுந்திரன்.—கண்மணி! அவசரப்படாதே, இன்னம் ஒரு முகூர்த்தம்வரையில் தான்.

மந்திரி, சுந்தராங்கன் இருவரும் பிரவேசித்தல்.

மந்திரி.—மகாராஜ்! ஆக்ஞாபனத்தின் வண்ணம் இதோ பைராகியை அலங்கரித்தழைத்துவந்திருக்கிறேன்.

வீரசுந்திரன்.--நன்று அமைச்ச! அந்தப்பெரியவர் இவண் இருக்கட்டும், தாம் கிரகம் செல்லுங்கள். உதயகாலத்தில் மற்றதெல்லாம் தெரிவிக்கிறேன்.

(மந்திரி நிட்கிரமித்தல்.)

வீரசுந்திரன்.—பிரபோ மகராஜ்! வீற்றிருங்கள்.

சுந்தராங்கன்.—மகராஜ்! சகலமுந்துறந்த பைராகியாகிய எந்தனை அரசர்போலலங்கரித்து இன்று அந்தப்புரம் அழைத்த காரணம் யாது?

வீரசுந்திரன்.—பிரபோ! நேற்று இரவு உத்தியானவனத்தில் ஒருகொடியைநாடி வந்ததாக தெரிவித்தீரன்றோ? அதுமுதல் என்மனதில் பிராச்சந்தேகம் ஒன்று குடிகொண்டு வாட்டாநின்றது. அச்சந்தேகத்தை நிவர்த்திக்க அழைத்ததன்றி வேறில்லை.

சுந்தராங்கன்.—மகிபதே! அச்சந்தேகம் யாது? அதைத் தெரிவிப்பின் நிவர்த்திசெய்வோம்.

வீரசுந்திரன்.—பிரபோ! தாம் நிவர்த்திசெய்வதன்முன்னமே தெளிவடைந்தேன். நன்று தாம் இவண் இருங்கள், நான் தாம்கோறிய கொடியை கொண்டுவருகின்றேன். பிரியே இந்திரலேகா! சிறிதிவண் இம்மகாத்துமாவுடன் உரையாடிக் கொண்டிரு? நான் தயார்செய்யும்படி பணித்தவைகளெல்லாம் எவண் இருக்கிறது?

இந்திரலேகை.—காந்தா! தாம் விரும்பி யெந்தனுக்குப் பணித்தவெல்லாம் நமது மஞ்சனசாலையில் வைத்திருக்கிறேன். அவண் தாதியர் இருவரும் பிரவேசியார். சென்று வாருங்கள்.

வீரசுந்திரன்.—காதலி! காலினக்கு ஆக்ஞாபித்தபடி நீமுடித்து வந்தனையா? அந்தப்பலன்கள் எல்லாம் இம்மகானால் தீரும். இனி யான் தாளிலேன், இவணிரு. ஜல்திவருகிறேன்.

(வீரசுந்திரன் நிட்கிரமித்தல்.)

சுந்தராங்கன்.--(தனக்குள்) ஆஹா! இதென்னவிந்தையாயிருக்கிறது. இவ்வரசர் தனது காதலியை என்முன் நிறுத்தி தான் சென்றுவருவதாகவும் இனிதாளேன் என்று மொழிந்ததையும் என்மனம் பதறுவதையும் ஆலோசிக்கில், என் கண்மணியான நளாகினியே இவ்வாறு மறுவேடம்பூண்டு இவண் அரசியற்றுகின்றனளோ! நம்மைக்கண்டு வேடத்தை நீக்கச் செல்கின்றனளோ! அவ்வாறாயின் நாம் புனிதமுற்றோம். ஏதோ ஜகதீசனது கருணையைப் பார்ப்போம்.

நளாகினி தனது சுயவடிவத்தோடு பிரவேசித்தல்.

சுந்தராங்கன்.—(தனக்குள்) அதோ வருபவள் நமதுகாதலிபோலும். அவள் தானோ? ஆம் அவள் தான். சமீபம் வந்தவுடன் (பிரமைகொண்டு நிற்றல்) ஸ்வப்பனமா என்ன? இல்லை. நிஜமாகவே தாடி சடையெல்லாம் களைந்தாளே. பகற்பொழுதெல்லாம் மந்திரி கிரகத்திலிருந்து இரவு வந்தவுடன் இங்கே வந்தாளே. நாம் நல்ல ஞாபகத்தோடேதானிருக்கிறோம், சற்று நிதானித்துப்பார்க்கிறேன்.

நளாகினி.--(ஓடிவந்து சுந்தராங்கனை அணைந்துகொண்டு) ஆ பிராணேசா! காந்தா! ரமணா! பாவியாகிய எந்தனைவிட்டுப் பிரிந்து எவ்வளவு கஷ்டம் அடைந்தீர்களோ! எப்பாடுபட்டீர்களோ! மனம் எவ்விதமாய் தத்தளித்ததோ! சண்டாளியை நாம் இனிக்காணப்போவதில்லை யென எண்ணி பைராகி வேடம் புனைந்தீர்களோ? ரமணா! தாங்கள் எந்தனை யிட்டுப்பிரிய நேர்ந்த சங்கடமென்னோ? காந்தா.

சுந்தராங்கன்.—(நளாகினியை கட்டிக்கொண்டு) காதலி! மகாபாவியாகிய எந்தனைப்பிரிந்து எப்பாடுபட்டனையோ? எத்துயருற்றனையோ? பாவியாகிய இவனை ஆடவனென எண்ணி நாடுவிட்டுப்போந்து இக்கோலமாகினை யென்று நினைத்துச் சோர்ந்தனையோ? அழுதுகதறிப்பதறினையோ? அந்தோ! முன்

செய்ததீவினை உந்தியதால் நீ என் மடிமீது சயனித்துத் துயில்கையில் ஒரு வேங்கையானது நின்மீது பாயப்பதுங்குவதைநோக்கிய யான் அதைவதைக்க வெண்ணி நின்துயிலை நீக்கலாகாதென மெல்லென மணலைக்குவித்து நின்தலையை அதன்மீது தூக்கிவைத்து புலியை எதிர்த்துப்போக, அப்புலியானது எந்தனைக்கண்டு ஓட ஆரம்பித்தது; யானும் தொடர்ந்து வெகுதூரம் சென்று அப்புலியை வதைத்துப்பின் நாமிருந்த இடம் செல்ல விரும்பித்திரும்ப பாதையிலாது அப்பகற் பொழுது முழுதும் துயிருற்றலைந்து மிக்க வருத்த முற்று, இரவு பொழுதைக்கழித்து ஏங்கி, உதயத்திலெழுந்து வழிகாணாது தத்தளித்து, அன்றுபகல் முழுதும் தேடியும் காண வழியிலாது மனம் புண்ணாகி இனி நின்னைக்காண முடியாதென நிச்சயித்து உயிர் துறக்கப்போகும் அமையத்துவேறொரு நினைவுண்டாகி, நீ அறிவிற் சிறந்தவளாதலால் திரும்பி நகருக்குச்செல்வாய் உயிரும் துறவாய், என்னைக்காணவேண்டி தேடி வருவாயென துணிபுகொண்டு பைராகி வேடமணிந்து, ஏழரை வருட காலமாக சகல தேசங்களும் சுற்றி, முடிவில் இன்னகர் உத்தியானவனஞ் சேர்ந்தேன். காரிகையாளே! நின்துர்ப்பாக்கியத்திற்கு காரணமாகிய என்பிழையை பொறுத்துக் கொள்ள கோருகின்றேன்.

நளாகினி.—ரமணா! பாவியாகியயான் துயிலெழுந்து தம்மைக்காணாது பாதலித்து எங்கிபலதிக்குகளிலும் தேடிக்காணாது துயருற்று, நமது நாட்டிற்குச்செல்லமனமிலாது தமது உடையைத்தரித்து ஆணுருவாகி குதிரையேறி முகம் விட்ட வாக்கில் குதிரையை நடத்திச்செல்ல, அவ்வனத்தில் வேட்டையாட வந்திருந்த குச்சரநாட்டிறைவன் மசலையான வசுந்தரனும் அவன்தோழன் மந்திரிகுமாரனை மித்திராவசு என்பவனும் எந்தனைக்கண்டு ஸ்திரீஜாதியென சங்கைகொண்டு என்னைப் பயமுறுத்தி "நீ யாவனென்" வினவி வாளையுருவி அதட்ட,

யானும் அச்சமின்றி எனதுடைவாளை உருவ, அன்னவர் இருவரும் எந்தனைப்பணிந்து நகருக்கு வரவேண்டுமென்று வேண்ட, யான் உடன்பட்டு அவருடன் சென்று அன்னகரிலிருக்க, ஒருநாள் அரசகுமாரன் நீராடவேண்ட, ஜலதோஷத்தால் நீராடமுடியாதென்றும் சரீர அசௌக்கியம் எனவும் நான் மறுக்க, மறுதினம் வேட்டையாடவேண்ட யான் ஒத்துக் கொண்டு அன்று இரவுவனம் சென்று வேடர்களுக்கு நற்பரிசளித்து மிருகங்களைக்கொன்று ஒரு பக்கங்குவித்து மறுநாள் வந்து அரசகுமாரனிட மொழிய, அன்னவன் அன்று இரவு தாசிமார்களைத்தருவித்து நர்த்தன கானஞ் செய்யப்பணித்து முடிவில் எந்தனிடம் ஒரு தாசியை அனுப்ப, அன்னவள் வந்து தன்னைச் சேரவேண்டுமென்று வேண்ட, யான் அன்னவளுக்கு இசைந்தமொழி பகரி எனது ஆபரணங்களையெல்லாங்கொடுத்தனுப்ப, மறு நாள் உதயத்தில் வந்த அரசகுமாரன் மதுபானஞ் செய்யவேண்ட, அதற்கு யான் ஒத்துக்கொண்டு அன்று இரவு மதுபானம் செய்வதென நிச்சயித்து அவர்களுடன் கூட இருந்து நான் பானஞ் செய்வதுபோல் பாவனை பண்ணி அன்னவர்களறியாது ஒரு தோற்பையிற் நிரப்ப, அன்னவர்கள் பானம் செய்து மதிமயக்கங் கொள்ள, அவர்களை மானபங்கப்படுத்தி உடனே அந்நகர் நீங்கி இவண் வந்து கடைவைத்திருக்க, அதுகாலை இம்மாது நல்லாள் இந்திரலேகை என் மீது காதல் கொள்ள, அதனால் இவளது பிதாவும் இன்னகரத்தரசனுமான விவேக சாதுரியன் வந்து எந்தனைப்பலவாறு வேண்ட, நான் பலவித நிர்ணயத்தின் பேரில் இவண் வந்து மணம் புரிந்து அந்தப்புரம் செல்ல, என்னிடம் காதலுடன் வந்த இந்திரலேகைக்கு உண்மையுரைத்து என் மனதின்படி நடக்கப்பணிக்க, பின்பரசர் இவ்வரசாக்ஷியை எந்தனுக்களித்து வானப்பிரஸ்தாசிரமம் செல்ல, நான் அரசனாகிப் பகற்பொழுதை சிம்மாசனத்திலும் இரவில் தம்மை

நினைந்து தம்மை சந்தித்த உத்தியானவனத்திலுங் கழித்திருப்ப, தம்மைக்கண்டதும் தாம்தானென உறுதிகொண்டு தம்மை அந்தப்புரம் அழைத்துவரும்படி மந்திரியிடம் திட்டஞ்செய்தேன். ஆகையால் காந்தா! இவ்வளவும் எனது பதிவிரதா தர்மத்தைப் பாதுகாத்துக்கொள்ளச் செய்ததல்லால் வேறன்று. ரமணா! யான் செய்தபிழையைப்பொறுத்து இனியாவது என்னைவிட்டகலா திருக்க கோருகின்றேன். (பணிதல்)

சுந்தராங்கன்.—ஏ பிராணப்பிரியே! மகாபுத்திசாலியும் உத்தமகுடியிற் பிறந்த கற்புக்கரசியாகிய நினது சவுரியம் மகாராஜாக்களால் வியக்கத்தக்கதே. காதலி! இனி நாம் நமது நகரம் செல்லவேண்டாமா?

நளாகினி.—ஏ மதிவதனா! தாம் மொழிந்தது உசிதமே. ஆயினும் நாம் பிராதக்காலத்தில் மந்திரியையும் மற்றும் இன்னகருள்ள குடிகளையும் வருவித்து தம்மை அரசனாக்க சமாதானமொழி பகரி ஒப்புக்கொள்ளச்செய்து, இந்த இந்திரலேகையின்மனம் சந்தோஷிக்கச்சிலகாலம் இங்ஙனமிருந்து, பின் நமதுநகரம் செல்லலாம் காந்தா!

சுந்தராங்கன்.—ரமணி! நின்மனம்போல் நடக்க தயாராயிருக்கிறேன்.

நளாகினி.—காந்தா! தங்களை யான் ஒரு வரம் வேண்டுகிறேன். அது யாதெனில் என்தன்மீது தாங்கள் எவ்வளவுவிருப்பங் கொண்டிருக்கிறீர்களோ அதுபோல் தாங்கள் இந்த இந்திரலேகையின்மீது அன்புபடைத்து நெடுங்காலம் சுகத்தை விரும்பி இருக்கும் அடியாள்களுக்கு இன்று இரவு முழுவதும் இன்பசுகத்தை யளித்துக்காக்கவேண்டும் ரமணா!

சுந்தராங்கன்.—பிரியதமே! நின்கோருதல்வண்ணம் நடக்கக் காத்திருக்கிறேன். ஏ காதலி இந்திரலேகா! நின்னையான் வேறாக நினைக்கிலேன். ஆயினும் நீங்கள் இருவரும் உயர்குடி

யிற்பிறந்த உத்தமிகளாகையால் உங்கள் மனதின்படி நடக்கச் சித்தமாயிருக்கும் என்மீது கருணைசெய்து கருப்புவில்லொடு கடும்போர்புரியும்மதனனது பாதையை ஒழித்துக்காப்பாற்றுவீர்கள் காதலிகாள்!

இந்திரலேகை.—ரமணா! நமஸ்கரிக்கின்றேன் (பணிதல்) காந்தா! தமது திருவுருவத்தைக்காணாது இரண்டரை வருடகாலமாக நாளும் என் ஜேஷ்டபகினியான நளாகினியும் மனமொத்து எவ்வளவோவருத்தம் அடைந்திருக்க அதை தங்கள் சித்தத்தில் நினையாது எங்களைசிலாகிப்பது தர்மமன்று. கண்ணாளா! என் ஆசையே! அடியாளோ அனங்கன் பாணத்தினால் அங்கம்புண்ணாகி நெஞ்சு உலர்ந்து மிகத்துன்புற்றிருக்கிறேன். ஆகையால் என்னாசை தீர இச்சையுடன் எந்தனைக்கட்டியணைந்து காத்தருள்வாய் ரமணா!

சுந்தராங்கன்.—பிரியநாயகி! நினது சவுந்தரியத்துக்கும் எழிலுக்கும் யான் ஈடாகாதவனாகினும் நீங்களால் யான் நிரம்பவும் மதிக்கப்பட்டேனாகையால் கருணைசெய்து இன்று இரவு என்கவலை தீர்ப்பாய் சுந்தராங்கி!

இந்திரலேகை.—பிரியகாந்தா! தாம் இந்தப்படிசம்பாஷித்துக் கொண்டிருந்து இன்று இரவையும் வீணாக்கிவிடலாமென நினைத்தீர்கள்போலும். காந்தா! இனியான் தங்களைவிடேன், இம்மஞ்சத்தில்வீற்றிருங்கள். யாங்கள் அளிக்கும் தாம்பூலத்தை சுவீகரித்து எங்களை ஆண்டு ரக்ஷிக்கக் கோருகிறோம் காந்தா!

சுந்தராங்கன்.—காதலிகாள்! வீற்றிருங்கள்? உங்கள்மனதின்வண்ணம் நடக்க சித்தமாயிருக்கிறேன்.

(எல்லோரும் திரைக்குப்பின் செல்லல்.)

ஆறுவது-களம்.

நளாகினி.—காந்தா! நாங்கள் நேற்றிரவு அடைந்த சுகத்தினால் இதுவரை அடைந்த சிறுமைகளை மறந்துவிட்டோம். ஆயினும் ரமணா! இன்று சிம்மாதனஞ்சென்று தங்களுக்கு முடிசூட்ட மந்திரிகளுடன் சூழ்ச்சிசெய்ய வேண்டுவது அவசியமாகையால் யான் இச்சுவரூபத்துடன் மொழியில் ஒருக்கால் சம்மதியார்கள். நான் முன்னிருந்ததுபோல் ஆணுடை தரித்து அவர்களை நயத்தினால் சம்மதிக்கச்செய்து பின் என் சுய ரூபத்தைக்காட்ட நினைக்கின்றேன். காந்தா! தமதுகருத்து எதுவோ அதை தெரிவிக்கக் கோருகின்றேன்.

சுந்தராங்கன்.—அம்சகெமனா! நின் மனதின்படி செய்வதில் எந்தனுக்கு யாதொருவருத்தமுமிலது காந்தா! காரியம் எப்படிமுடியவேண்டுமோ அப்படியே செய்?

நளாகினி ஆண்வேடம் புனைந்து சுந்தராங்கனுடனும் இந்திரலேகையுடனும் கொலுமண்டபஞ் செல்லுதல்.

திடவான்.—இராஜபூபாலா! அமைச்சன் நமஸ்கரிக்கின்றேன்.

வீரசுந்திரன்.-கல்யாணம் அமாத்தியா! இன்று இராஜாங்க விஷயத்திலுள்ள சிலசங்கதிகளுக்கு குடிகளது மனோபாவத்தையறிய விருப்புற்றதுமன்றி யான் தம்மிடம் பகர்ந்த இரண்டாவருஷத்து நோன்பும் நேற்றோடுமுடிந்தது. அதுவிபரங்களையும் விபரமாய் குடிகளுக்குத் தெரிவிப்பது அவசியமாகையால் நமது நகரத்திலுள்ள குடிகளனைவரையும் அதிதுரிதமாக சபைக் கழைத்துவரும்படி ஆக்ஞாபனஞ்செய்ய வேண்டும்.

திடவான்.—சேவகா! துரிதமாகச்சென்று நமது நகரத்துக்குடிகளனைவரும் அரசரது கொலுமுகத்திற்கு இக்ஷணமேவரும்படி பறைசாற்றிவை?

சேவகன்.—ஆக்ஞா பிரபோ!

சேவகன் பறைசாற்ற குடிகள் பிரவேசித்தல்.

குடிகள்.—மகாராஜ்! குடிகள் வந்தனஞ் செய்கின்றோம். மந்திரிவர்யா! நமஸ்கரிக்கின்றோம்.

வீரசுந்திரன்.—குடிகாள்! எனதருமை அமச்சரே! இதுசமயம் எனது மொழிக்கு நீங்கள் நன்றாயாலோசித்து மறுமொழிபுகலவேண்டும். யாதெனில் இராஜாங்கத்திலுள்ள குடிகளுக்கு அந்நாட்டரசன் பிதா முறையன்றோ?

குடிகள்.—ஆம் மகாராஜ்! வாஸ்தவந்தான்.

வீரசுந்திரன்.—அப்படியாயின் அவ்வரசரது புதல்வரும் புதல்வியும் சகோதரரும் சகோதரியுமன்றோ?

குடிகள்.—ஆம் உண்மையே.

வீரசுந்திரன்.—அப்படியானால் அச்சகோதரர் சகோதரிகள் ஏதாவது ஒருகுற்றஞ் செய்வாராயின்?

குடிகள்.—இராஜபூபாலா! அவ்விதகுற்றம் செய்யின் குடிகள் பொறுத்துக்கொண்டு அரசரிடந் தெரிவித்து அவர்களால் அவ்விதகுற்ற மறுபடி நேராதபடி செய்து கொள்ள வேண்டும்.

வீரசுந்திரன். — அப்படி தெரிவித்துக் கொள்ளபட்டதரசன் இல்லாவிடிலோ?

குடிகள்.—இராஜசிங்கமே! அரசர் இல்லாவிடின் அரசகுமாரரையும் குமாரியையும் அவ்விதகுற்றம் இனி செய்யாமலிருக்கும்படி பிரார்த்திக்க வேண்டுவதுதான்.

வீரசுந்திரன்.--ஏ எனதன்புள்ளமந்திரி! விசுவாசம் நிறைந்த குடிகளே! யான் ஒருசங்கதி தெரிவித்துக்கொள்ளப் போகின்றேன். அது முடியும்வரை கார்த்திருந்து அதற்கு உசித

மறுமொழி புகலக் கோருகின்றேன். யாதெனில், காஸ்மீர தேசத்தரசனும் மந்திரியும் அரியதவமியற்றி கடவுளினது கருணையினால் அரசன் ஒருபுத்திரியையும் மந்திரி ஒருபுத்திரனையும் அடைந்து சந்தோஷித்திருக்குமமையத்து, இராஜபுத்திரியையும் மந்திரி குமாரனையும் ஒன்றாக ஒருபள்ளியிலோதுவிக்க அமர்த்தி சிலகாலம் சென்றபின் பிரித்துவைக்க, அதில் மந்திரிகுமாரன் அரசகுமாரிமேல் விருப்பமும் மந்திரி குமரன்மீது அரசகுமாரி காதலுங்கொள்ள இருவரும் சங்கேதப்படி நாட்டைவிட்டு வெளிவந்து நெடுந்தூரம் வனத்திற்சென்று, இருவரும் காந்தர்வ மணம்புரிந்து, பிறகு மந்திரி குமரன் மடிமீது அரசகுமாரி துயில, மந்திரிகுமாரனதுவேளை அரசகுமாரிமீது பாயப்பதுங்கும்புலியை சங்கரிக்கச்சென்றவர் அப்புலியினால் நெடுந்தூரம் வனத்தில் இழுத்துக்கொண்டு போகப்பட்டு முடிவில் அப்புலியைக்கொன்று அரசகுமரி இருக்கும் இடத்திற்குத் திரும்புகையில், வழிதெரியாது இரண்டு தினம் தத்தளித்து காணமுடியாமல் சன்னியாசிவேடந் தரித்து தேசாடனஞ் சென்றனர். பின் துயிலெழுந்த அரசகுமரி தனது ஆசைநாயகரான மந்திரிகுமாரனைக்காணாது அயருற்று தனதுநாட்டிற்குச் செல்லலாகாதெனும் உறுதியுடன் ஆண்வேடம்பூண்டு தனக்கு வழியில் நேரிட்ட அநேக இடுக்கண்களையும் கடவுளருளினால் தனக்கு நன்மையாகவே அடைந்து, வேறொருநகரம் நண்ணி, பூர்வஜன்ம கர்மவசத்தால் அந்நகரத்தரசன் புதல்வியை மணந்ததுமன்றி பின்னர் அவ்வரசுக்கும் அதிபதியாகினள். இஃதிங்ஙனமாக தேசாடனஞ் செய்யச்சென்ற மந்திரிகுமரன் பைராகிவேடத்துடன் வரக்கண்ட அவ்வரசகுமரி அவரது வாய்மொழியால் தனது காதலனென ஊகித்து, மந்திரியின் மூலமாய் அலங்கரித்து அழைத்துவரும்படி பணிக்க, பின் நாயகனும் நாயகியும் அவரவரடைந்த துயரங்களைச்சொல்லி வருத்தமுற்றுப் பின் தேறி

னர். ஆகையால் இப்பொழுது அவ்வரசகுமரியாண்ட நாட்டை யாருக்களிப்பது உசிதம்?

குடிகள்.—இராஜசேகரா! எப்படியிருப்பினும் தனது நாயகர் எப்பொழுது வந்துவிட்டாரோ அவரிடம் அரசையளித்து தான் அடங்கி நடந்துவர வேண்டியதுதான் ராஜமுறை.

வீரசுந்திரன்.—அன்புள்ள குடிகாள்! நீங்கள் மொழிந்தது சத்தியமே. மேலே மொழிந்த அரசகுமரியானே. இதோ வீற்றிருப்பவர் மந்திரிகுமாரரும் எனதாசைநாயகரும் அவரே. ஆகையால் யான் இதுவரை இராஜ்ஜியத்தை ஆணுடையுடனாண்டேன். ஆனால் இனிநாயகரிருக்க நான் அரசாளுவது நீங்கள் மொழிந்தவண்ணம் குறையே. ஆகையால் இவ்வரசாட்சியை இவருக்கு கொடுக்க யான் சம்மதித்ததுடன் எனது நிஜவடிவை உங்களுக்கு காண்பிக்கவும் கருதினேன். ஆகையால் சற்றுப்பொறுமையுடனிருங்கள்? இதோ அரைநொடியில் வருகின்றேன்.

வீரசுந்திரன் திரைக்குப்பின்சென்று ஆணுடைநீக்கி பெண்ணுடையுடன் பிரவேசித்தல்.

குடிகள்.—ஆஹா! இதோ வருகின்றவள் தெய்வமங்கை போலும் இருக்கின்றாள். ஆனால் இவள் மும்மாதர்களான சாரதை-பார்வதி-இலட்சுமி இவர்களில் ஒருத்தியாக இருக்கலாம். நமது ஜன்மம் ஈடேறிற்று. மாதா! நமஸ்கரிக்கின்றோம்.

நளாகினி.—ஏ குடிகாள்! எந்தனை நீங்கள் வேறாகநினைக்கலாகா. யானே ஆணுடையுடன் இதுவரை வீரசுந்திரனெனும் பெயருடனரசாண்ட நளாகினியென்பவள் யானே. இனி எனதாசைக் கண்ணாளரான இச்சுந்தராங்கருக்குமுடிசூட்டவிடையளிக்க கோருகின்றேன்.

குடிகள்.—அன்னையே! தமது நோக்கத்தின்படி செய்வீராக.

நளாகினி.—எனதன்புள்ள குடிகாள்! எங்கள்பெற்ரோருக்கு நாங்கள் ஏகபுத்திரனும் புத்திரியுமாகையால் எங்களது பிரிவால் மிகத்துயருறுவார்கள். ஆகையால் நாங்கள் சுதேசஞ் செல்லவேண்டியிருப்பதால் இந்நகரத்தமைச்சரானிடவானுக்கு முடிசூட்டி உங்கள் அரசகுமாரியும் எனது சகோதரியுமான இந்திரலேகையுடன் எங்களுக்கு விடையளிக்க கோருகின்றேன்.

குடிகள்.—அன்னையே! அப்படியேசெய்யுங்கள். ஆனால் தாயில்லா மதலைபர்போன்ற எங்களை யடிக்கடி இவண்போந்தாதரிக்க கோருகின்ரேம்.

நளாகினி.—அப்படியே யாகுக.

மந்திரிக்குமுடிசூட்டி தனது நகரத்துக்கு இந்திரலேகையுடன் செல்லுதல்.

ஏழாவது களம்.

(காஸ்மீரத்தரசனும் அவனது மந்திரியும் பிரவேசித்தல்.)

இந்திரவர்மன்.—எனதன்புள்ள சுமதி! சாக்ஷாத் கறைக்கண்டன் கருணையினல் யாமடைந்த புதல்வரும் புதல்வியும் நம்மையறியாது தேசாடனஞ்செய்யசென்றனரே. பரமசிவத்தின் வாக்கியப்படி நாம் நமது குமரன் குமரிகளுக்கு மாலைசூட்டாது யான்வேறு எண்ணங்கொண்டதாலன்ரே அன்னவர்களது வியோக துக்கத்திற் காளாகினேம். என்செய்வேன்? அமாத்தியா!

சுமதி.—பிரபோ! காலஞ்செய்யும் திருக்கூத்துக்கு யாம் என்செய்வது? ஆயின் இன்றுநிகழும் சுபச்சின்னங்களை ஆலோ

சிக்கில் நமது பாலர்கள் சீக்கிரம் நம்முன் பிராப்தமாவார்கள். மயங்கவேண்டாம் பிரபோ!

நளாகினி சுந்திராங்கன் இந்திரலேகை மூவரும் பிரவேசித்தல்.

சுந்தராங்கன்.—யாரடா சேவகன்?

சேவகன்.—ஆக்ஞா மகாராஜ்!

சுந்தராங்கன்.—அரசரிடம் தமது குமரியும், மந்திரிகுமரரும் வந்திருப்பதாகத் தெரிவி?

சேவகன்.—இராஜசேகரா! தமது திருமகளும் மந்திரி மைந்தனும் வந்திருக்கிரூர்கள்.

அரசன்.—(பரபரப்புடன்) எங்கே அவர்கள்? சீக்கிரமிங்கே வரச்சொல்?

சேவகன்.—உத்திரவு மகாராஜ்!

சுந்தராங்கன்.-பிரபோ! நமஸ்கரிக்கின்றேன். பிதா வந்தனஞ்செய்கின்றேன். இராஜசே[illegible]! [illegible]யான்செய்த குற்றத்தை மன்னிக்க கோ[illegible]

நளாகினி.—பிதா! [illegible]றன். அடியாள் அபலையாதலால் செய்தகுற்ற[illegible] மன்னிக்க கோருகின்றேன்.

இந்திரலேகை.—பிரபோ! நமஸ்கரிக்கின்றேன்.

இந்திரவர்மன்.—கண்மணி நளாகினி! என்னைப் பிரியவும் நின்மனமு வந்ததா? இந்தப்பெண்மணி யார்?

நளாகினி.—பிரபோ மகாராஜ்! நாங்கள் இருவரும் இந்நகரைவிட்டு வனப்பிரதேசவழியாகச்சென்று உதயமாகி-ஐந்துநாழிகைக்கு மேல் ஒருதடாகத்தை கண்ணுற்று நீராடி போஜனமருந்தி தாம்பூலந்தரித்து இருவரும் காந்தர்வமாக கூடிக் கலந்து பின் மந்திரிகுமரர் மடிமீது யான் சயனித்து துயில, அது காலை என்மீது பாயப்பதுங்கும் புலியைக கண்ணுற்று அந்த

ராங்கர் அப்புலியை வதைக்கக் கருதி என்தலையை அசையாது மன்னலைக்குவித்ததின்மீது வைத்து, பின் தூரத்திச்சென்று வதைத்து இருட்டு மயைத்து வழிகாணாது துயருற்று இரண்டு தினம் தேடியும் காணாததுயரத்தால் மிகவாடி, அந்தோ சன்னியாசியாகச்சென்றனர். பின் துயிலெழுந்த நான் சுந்தராங்கரைக்காணாது பிரமித்து துயருற்று பின் எங்காவது செல்வோமாகில் பதிவிருதா பங்கமுறுமோவென நினைந்து ஆணுடை தரித்து வீரசுந்திரனென்னும் காரணப்பெயர்கொண்டு குதிரையேறிச்செல்கையில், நடுவழியாய்கானகத்தில் குச்சாதேயத் தாசகுமாரனையும் மந்திரிகுமாரனையுங்கண்டு சந்தித்து அன்னவர்களது வேண்டுகோளால் அன்னவாரண்மனை செல்ல, அவர்கள் எந்தனைச் சோதிக்க ஏதேதோ சூழ்ச்சிசெய்தனர். அவற்றிற்கெல்லாம் தக்க சாதனங்கள்தேடி ஜாக்கிரதையுடனிருந்து அன்னவர்களை அவமானஞ்செய்த அன்னகர்நீங்கி சிந்து நாடடைந்து கடைவைத்திருக்கும் அமையத்து, அன்னகரத்தரசன் மகளாய இவ்விந்திரலேகை எந்தனைக்கண்டு புருஷனென காதலுற, அவர்பிதாவினது வேண்டுகோளுக்கு எவ்வளவோ தடுத்தும் அவர்களாது இப்பெண்மணியை நான் கோரியபடி விவாகஞ் செய்தளிக்க, அந்தப்புரம் சென்று இவ்விந்திரலேகையை என்வயப்படுத்தி உண்மையுரைத்து எனது சுய உருவங்காட்டி இருவரும் சந்தோஷித்திருக்குங்காலத்து அந்நகரத்தை எந்தனுக்கு முடிசூட்ட, யான் அரசனாகி பகல்பொழுதை சிம்மாதனத்திற் போக்கி, இரவை அன்னகரத்திலுள்ள உத்தியானவனத்தில் கழித்துக் கொண்டிருக்குங்கால், எனது நாதரான சுந்தராங்கர் பைராகி வேடத்துடன் அவண்குறுக, அன்னவரையான் கண்டு அவரது வாய்ப்பிறப்பால் நமது நாயகர்தானென [illegible], அவர் மொழிக்கிசைந்த விடைபகரி அவரை மந்திரிவசமனுப்பி மறுநாள் மந்திரியை அழைத்து அவரது சுயரூபத்துடன் அலங்கிருதஞ்செய்தந்தப்புரத்திற் கழைத்து வரப்பணிக்க, அவ்வாறே அமைச்சர் அழைத்துவர, அவரால் அழைத்து

168588

வந்த சுந்தராங்கர் வாய்ப்பிறப்பி[illegible], அன் வேடத்தைமாற்றி, இருவரும் தக்கித்து [illegible] சந்தோஷமடைந்து, இரவைப்போக்கி, மறுநாள் காலையிலாணுடையுடன் சிம்மாதனம் நன்னிருடிகளை அழைத்து, அவர்களது மனதை [illegible]ன்வயம் திரும்பி, மந்திரிக்கு முடிசூட்டிவைத்து, நாங்கள் மூவரும் இவண்வந்தனம். பிதா அச்சிந்து நாட்டரசன் மகளும் எனது சகோதரியுமான இந்திரலேகையென்னும் பெண்மணி இவள்தான்.

D-2 MS113,11
11/12

இந்திரவர்மன்.—கண்மணி! கடவுளது வார்த்தையை மறந்தமையால் இவ்வளவு துயரை நீ அனுபவிக்கும்படி நேர்ந்தது. ஆயினும் "விதிவலிது" அதைப்பற்றி நோவதில் பிரயோஜனமிலது. அமைச்ச! நமதருமைப் புதல்விகளுக்கும் நமது அருயிர்க்குமாரனுக்கும் நாளை விவாகமென பறையறைவித்து கல்யாணத்திற்கு வேண்டிய காரியங்களை சித்தஞ் செய்யுங்கள்?

சுமதி.—மகாராஜ்! தமது சித்தம்போல் நடத்துகின்றேன்.

விதூஷகன்.—நண்பா! என்ன நகரமெல்லாம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

சூத்திரதார். — விதூஷகா! நமதரசன் செல்வக்குமரி நளாங்கினிக்கும், மந்திரி குமாரன் சுந்தராங்கனுக்கும் இன்று விவாகமல்லவா!

விதூஷகன்.—அப்படியானால் தம்பதிகளை அசீர்வதிக்க இதோ கல்யாணமண்டபம் செல்கிறேன்.

விவாகம் வெகு கோலாகலமாய் வேதவிதிப்படி நடந்தது. பெரியோர்கள் ஆசீர்வதிக்க எல்லோரும் சுபம், சுபம். என்று மங்களகோஷம்செய்தார்கள்.

(எல்லோரும் நிஷ்கிரமித்தல்.)

சுபமஸ்து.

(இத்துடன் நாடகம் முடிகின்றது.)